A

# தென்னாட்டுக் கல்வெட்டுகள்

★

[சென்னைப் பல்கலைக் கழக வித்துவான், B.O.L., Group II(d)
தேர்வுகளுக்குப் பாடமான 20 கல்வெட்டுகள் அடங்கியது]

★

ஆசிரியர் :
மு. சிவகுருநாதன், B. A.,
தமிழ்ப் போதகாசிரியர், தேசியக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

★

திவான்பகதூர், திரு. சி. ஸா. ஸ்ரீனிவாசாச்சாரியார், M.A.,
டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A., Ph.D.,
இவர்கள் சிறப்புரைகளுடன் கூடியது.

பதிப்புரிமை] 1950 [விலை ரு. 2—0—0

சிட்டி பிரஸ்
மதுரை ரோடு
திருச்சி.

# முகவுரை

கல்வெட்டு என்ற சொல் நம் நாட்டில் அரசாண்ட மன்னர்களும் பிறரும் பல விடங்களில் கல்லில் வெட்டிவைத்தனவற்றைக் குறிக்கும். கல்லில் வெட்டப்படும் எழுத்துக்கள் 'சிலாலேகை' என அவற்றில் வழங்கப்படும். இவ்வாறு கல்லில் எழுதுதல் இந்திய நாட்டில் பல்லாண்டுகளாக வழக்கிலிருந்ததென்பது, வியாசர் பாரதக் கதையைச் சொல்ல, விநாயகர் மேருமலையில் அதை எழுதினர் என்று வழங்கும் பழங்கதையால் அறியலாகும். பிறநாடுகளான நாகரிக முதிர்ச்சிகொண்ட எகிப்து, மெசபட்டோமியா போன்ற நாடுகளிலும் அரிய செய்திகள் எல்லாம் முற்காலத்தில் கல்லிலே எழுதப்பட்டன. தொல்காப்பியம் கூறும், 'காட்சிகால்கோள் நீர்ப்படை நடுகல்-சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்' (தொல்-புறத். 60) என்ற அடிகளும், அதன் உரையும், புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களும், அக்காலத்தில் இறந்து பட்ட வீரர்களின் பெயர்கள் கல்லில் வெட்டப்படுவதைக் குறிக்கின்றன.

பல்லவர்கள் ஆட்சியில் வெளியிடப்பட்ட பிராகிருத கல்வெட்டுகளே தமிழ் நாட்டில் கிடைக்கும் மிகப் பழைய கல்வெட்டுகளாம். இக் கல்வெட்டுகளெல்லாம் சாசனங்களெனல் பொருந்தும். ஏனெனில், அவை யாவும் அரசரும், பிறரும் செய்த அறங்களுக்கு ஆதாரமாகவே வெட்டப்பட்டன.

இச் சாசனங்களின் எழுச்சி பெரும்பாலும் பின்வரும் காரணங்களைக் கொண்டது: அரசர் அல்லது தனிப்பட்ட மக்கள் செய்த அறச் செயல்களை வெளியிடுவன. அவை :—(i) கோயில்களுக்கு மானிய மளிப்பது. (ii) பார்ப்பனர்களுக்கு ஊர் அளிப்பது. (iii) அறச்சாலைகளுக்கு நிவந்த மளிப்பது. (iv) கோயில்கள் கட்டுவது அல்லது திருப்பணி செய்வது. (v) கோயில்களுக்கு நந்தாவிளக்களிப்பது. (vi) திருவிழாக்கள் கொண்டாட மானிய மளிப்பது. (vii) அரசர்கள் அல்லது பெரியோர்கள் இவர்களின் பிறந்த நாட்களைக் கோயில்களில் கொண்டாட

மானிய மளிப்பது முதலியனவாம். இவ்வறச் செயல்களைத் தவிர, பொது நலனை முன்னிட்டு பல உடன்பாடுகளையும், முடிவுகளையும், ஆட்சி ஆணைகளையும் தெரிவிக்கும் கல்வெட்டுகளும் பல உள்ளன. இவை அக்கால நிலவரி முறைகளையும், ஊர்ச்சபைகளின் தீர்மானங்களையும், அவை செய்வித்த சமாதானங்களையும், கொள்ளை, கொலை புரிந்தோருக்கு அளித்த தண்டனைகளையும், பல குறுநில மன்னர்களின் ஊர் எல்லைகளையும் கூறுவன. இவற்றைத் தவிர திருவிடைவாயிலில் கிடைத்த ஒரு கல்வெட்டு சம்பந்தரின் தேவாரம் ஒன்றைத் தெரிவிக்கிறது. மூன்றும் இராசராசன் பெற்ற இடையூறுகளும், ஓய்சல மன்னன் உதவியை அவன் பெற்றதும் அவனுடைய திருவெந்திபுரம் கல்வெட்டால் தெரிகிறது.

தமிழ் மக்கள் தாம் செய்யும் எக்காரியத்திலும் தம் மன்னனை வாழ்த்திப் புகழ்தல் தொன்றுதொட்ட வழக்காம். அதன்படி அவர்கள் இச்சாசனங்களின் முற்பகுதியில் அக்காலத்து அரசாண்ட மன்னர்களின் புகழைக் கூறுவராயினர். இப் புகழ்த் தொடர்கள் முதல் இராசராசன் காலத்தில் செய்யுள் வடிவில் ஆக்கப்பட்டு அவன் வெற்றிகள் யாவற்றையும் கொண்டிருந்தன. இவன் மகன் இராசேந்திரன் தன் வெற்றி ஒன்று மிகும்போதெல்லாம் அதனையும் சேர்த்து அச் செய்யுளை விரிவுடையதாக்கி வந்தான். இச் செய்யுட் தொடருக்கே மெய்க்கீர்த்தி என்று பெயர். அதனிலக்கணம், பேரரசன் புகழ்ச் செய்திகளைக் கூறி, அவன் தன் பெருந்தேவியுடன் நீடு வாழ்க என வாழ்த்தி அவன் இயற்பெயரோடு அவனது ஆட்சி யாண்டினைக் கூறுவதாம். ஆட்சிக்காலம் செல்லச் செல்ல அவற்றின் அளவும் பெருகிக்கொண்டே போகும். இத்தகைய மெய்க்கீர்த்திகள் தமிழ் நாட்டில் மட்டுமே காணப்படுகின்றன. இவை சிலசமயங்களில் ஒரு அரசன் கீர்த்தியை உயர்வு நவிற்சியாகக் கூறும்போதெல்லாம், இவை பொய்க்கீர்த்தியோ என்ற ஐயம் எழுகிறது. எனினும் ஒரு வரலாற்றிற்கு வேண்டிய காலமுறையுடன் கூடிய செய்திக் கோவையாக அவை நின்று ஒரு அரசன் கால வரலாற்று நிகழ்ச்சிகளை முறைப்படக் கூறுகின்றனவென்பதில் ஐயமில்லை.

இக்கல்வெட்டுகளால் நாம் அறிவன பல. அவை பண்டைத் தமிழக மன்னர்களின் வெற்றிகளையும் நாகரிகங்களையும் கால வரையறைகளையும், புலவர், புரவலர் அரசியல் தலைவர் இவர்களுடைய வரலாறுகளையும் தெரிவிப்பதன்றி, அக்காலத் தமிழ்ச் செய்யுட் சிறப்பையும் உரைநடைச் செறிவையும், பல வழக்கற்று மாய்ந்த அருஞ் சொற்களையும், அவற்றின் மரபுகளையும் அறிவிக்கின்றன. இவற்றின் உரை நடையும் சிந்திக்கத் தக்கது. இக்கல்வெட்டுகள், பலரும் நாடோறும் நடமாடும் பெருங் கோயிற் சுவர்களில் வெட்டிவைக்கப்பட்டு, கோயிலதிகாரிகளால், தட்ப வெப்ப நிலைகளால் அவை பழுதுருவாறு நெய் பூசப்பட்டுக் காக்கப்பட்டன. இன்னும் பல, செப்புப் பட்டையங்களில் படி செய்து வைக்கப்பட்டன. கோயில்கள் புதுப்பிக்கப்படும் போதும் அவை அழியாதிருக்க கவனம் செலுத்தப்பட்டது.

இந்நூலிலுள்ள கல்வெட்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வித்துவான், B. O. L., பரீட்சைகட்குப் பாடமாக வைக்கப்பட்டவை. மாணவர்கள் ஆறிலொருபங்கு எண்ணிக்கை பெற இது உறுதுணையாகுமாதலின், இதுபோன்ற நூல்கள் அவசியமாகின்றன. இந்நூலிலுள்ள செய்திகள் யாவும் இக்கல்வெட்டுகளைத் தொகுத்த டாக்டர் உல்ஷ், திருவாளர்கள் வெங்கையா, T. A. கோபிநாத ராவ் இவர்களின் குறிப்பு விளக்கங்களையும், அண்மையில் வெளியான பல ஆராய்ச்சி நூல்களையும் அடிப்படையாகக் கொண்டன. அவை விவரமாக அவ்வவ்விடங்களில் குறிக்கப்பட்டுள்ளன. மூல சாசனங்களுக்குப் பின்னணியாக நின்று விளக்கம் செய்ய ஆராய்ச்சிக் குறிப்புகள் இறுதியில் தரப்பட்டுள்ளன. தவிர, 'அடுதூசி மூன்விட்டு, என்று வரும் 6-ம் கல்வெட்டுத் தொடர் 'தேவாசுரமதில் கைத் தரித்து, (பக். 117, வரி, 2, 3.) மணியம்பலத்துளினிதிருந்து, (பக். 126, வரி, 8.), 'மறைபேர்த்து' (பக். 127, வரி, 1.)' 'தாயநல்லூர் அட' (ஷை பக், வரி, 5), 'தெலிங்கவீய்மங்குளங் கொண்டு' (128) 'கண்ணுறு' இவற்றின் பொருள்களும், வீர பாண்டியன் வரலாற்றின் கால நிர்ணயங்களும் என் சொந்தக் கருத்துக்களாம். அவற்றை அறிஞர் சிந்திக்க வேண்டுகிறேன்.

இந் நூல் மாணவர்களுக்காதலின் செய்திகள் பெரும்பாலும் தேர்வினை நோக்கமாகக் கொண்டதாயினும், இந் நூலைப் பயில்வோர் சிறந்த கல்வெட்டு ஆராய்ச்சிக்காகும் பயிற்சியைப் பெறுவர் என்னும் துணிபுடையேன்.

யான் விழைந்து வேண்டியவாறே இச்சிறு நூலுக்கு அணிந்துரையும், சிறப்புரையும் தந்து ஆசி கூறிய என் பேராசிரியர்களான, காஞ்சி, பச்சையப்பன் கல்லூரித் தலைவர், திவான் பகதூர், திரு. சி. ஸா. ஸ்ரீனிவாசாச்சாரியார், M.A., அவர்கட்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், டாக்டர், அ. சிதம்பரநாதச் செட்டியார் M.A., Ph D., அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியது.

இந் நூல் சிறப்புற அமைவதில் எனக்கு உறுதுணையாயிருந்தவர், என் உற்ற நண்பரும், சென்னை, சர்க்கார் கலைக்கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவருமான திரு. ப. முருகன், M. A., அவர்கள். அவர்கள் உதவிக்குரிய இடம் யான் கருதிய வண்ணம் அமைந்திருப்பின் இன்னும் சிறப்புடையதாயிருந்திருக்கும். இந் நூல் அச்சிடுங்கால் பலவகையிலும் உதவியவர், தேசியக் கல்லூரியில் என்னுடனிருக்கும் நண்பர் திரு. T. S. பாலசுப்பிரமணியம், M.A., அவர்கள். இவர்களுக்கும் என் நன்றி.

இதை ஒரு வரலாற்று நூலாகவே தமிழன்னையின் திருவடிகளில் பணிவுடன் வைக்கின்றேன். அறிஞருலகம் குற்றம் களைந்து, ஆதரவளித்து ஆசி கூற வேண்டுகின்றேன்.

தேசியக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி
5–8–1950.

மு. சிவகுருநாதன்.

மூன்ருவது தமிழ்விழாவின் சரித்திரப் பகுதித் தலைவரும்,
அண்ணுமலைப் பல்கலைக் கழக
ஓய்வுபெற்ற சரித்திரப் பேராசிரியரும்,
இந்திய சரித்திரக் கல்வெட்டுக் குழுவின்
(The Indian Historical Records Commission,)
உறுப்பினரும்
காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தலைவரும் ஆகிய

**திவான்பகதூர், திரு. C. S. ஸ்ரீனிவாஸாச்சாரியார், M.A.,**
அவர்கள் அன்புடன் அளித்த

## அணிந்துரை

திரு. மு. சிவகுருநாதன் அவர்களின் "தென்ஞட்டுக் கல்வெட்டுகள்" என்னும் நூல் சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் இறுதித் தேர்விற்காகத் திரட்டப்பட்ட இருபது கல்வெட்டுகளைக் கொண்டது.

இந் நூலில் விவரிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளின் சாராம் சங்களையும், மற்றுமுள்ள பல சரித்திரப் போக்கைத் தெளி வாகத் தெரிவிக்கும் அம்சங்களையும் மாணவர்களும் மற்றவர் களும் நன்கு கற்றுப் பயனுறுவார்கள் என்று நம்புகிறேன்.

இந்நூலாசிரியர் சில கல்வெட்டுகளை ஆராயுமிடத்து இது வரை வெளிவராத சில புதிய சரித்திர அம்சங்களைத் தெளி வாகக் காட்டியிருக்கிருர். இம்மாதிரி இடங்கள் சோழ பாண்டிய கல்வெட்டுகளின் ஆராய்ச்சிப் பகுதியில் காணப் படுகின்றன. இவைகளை எல்லாம் மாணவர்கள் நன்கு கற்றுப் பயன் அடைவார்கள் என்று திண்ணமாக நம்புகிறேன்.

இந்நூல் ஆசிரியர்க்குத் தமிழ்நாட்டின் நன்றி உரித்தாகுக.

பச்சையப்பன் கல்லூரி
காஞ்சிபுரம்
4–8–1950

C. S. ஸ்ரீனிவாஸாச்சாரி.

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்
Dr. அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A., Ph.D.,
அவர்கள் அன்புடன் அளித்த

# சிறப்புரை

---

திரு. மு. சிவகுருநாதன் (பி. ஏ.) அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்படும் தமிழ் வித்வான், பி.ஓ.எல். வகுப்புகட்கு உரிய இருபது கல்வெட்டுக்களையும் ஒருங்கு தொகுத்து, தாம் ஆராய்ந்தெழுதிய வரலாற்றுக் குறிப்புக்களையும், விளக்கங்களையும் சேர்த்து இந்நூலாக வெளியிட்டிருப்பது தமிழ் மாணவர்க்குச் செய்த தொரு சிறந்த நற்றொண்டு. ஒவ்வொரு கல்வெட்டின் அடியில், அவ்வப்பக்கத்தின் கண்ணே அச்சிடப்பட்டுள்ள விளக்கக் குறிப்புக்கள் படிப்போர்க்குப் பெரும்பயன் அளிக்குமென நம்புகிறேன்.

எனினும், "பல்லவர்களுள் ஒரு பிரிவினரான கங்கர்", என்பது போன்ற சில செய்திகளும், நுளம்பபாடி, வனவாசி என்பன போன்ற நாடுகளின் விளக்கக் குறிப்புக்களும், தேவ தானம், கழஞ்சு, கண்ணுறு, இவற்றின் பொருள்களும் மேலும் ஆய்ந்து படித்துக் கோடற்கு உரியன.

காந்தளூர்ச் சாலை கலமறுத்தல், இராமகுட நாடு ஆகியவற்றை இந்நூலாசிரியர் ஆராய்ந்து கண்டுள்ள முடிபுகள் பாராட்டத் தக்கன. இவர் தம் ஊக்கமும் உழைப்பும் நற்பயன் தருமென நம்புகின்றேன்.

புதியனவாக அடிக்கடி வெளியாகி வரும் ஆராய்ச்சிப் பனுவல்களிற் காணப்படும் கருத்துக்களோடும் முடிபுகளோடும் இயைத்து இந்நூல் போன்றவற்றைப் படித்து மாணவ ருலகம் பயன் எய்துக.

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணுமலை நகர்.
1—8—1950

அ. சிதம்பரநாதன்.

E

## பொருளடக்கம்


I. சோழர் சாசனங்கள் : பக்கம்

1. ஸ்ரீ ராஜராஜ கிணறு ... 1
2. திருப்பதியம் ... 11
3. ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் சாசனம் 16
4. கணவதிநல்லூர் சாசனம் ... 28
5. அமண்பாக்கம் சாசனம் ... 35
6. பாக்கூர் சாசனம் ... 45
7. மணிமங்கலம் சாசனம் ... 59
8. மணிமங்கலம் சாசனம் ... 71
9. சிறுபழுவூர் சபையோர் நில விக்கிரய பத்திரம் ... 76
10. வில்லவராயன் சாசனம் ... 86
11. அருளாளப்பெருமாள் கோயில் சாசனம் 92

II. பல்லவர் சாசனங்கள் :

12. திக்காலி வல்லம் கோயில் சாசனம் ... 99
13. மஹாவலி வாணராயர் சாசனம் ... 104

III. வாணமன்னர் சாசனங்கள் :

14. மாதவக்கிரமவித்தன் சாசனம் ... 108
15. வாணமகாதேவியார் சாசனம் ... 112

IV. பாண்டியர் சாசனங்கள் :

16. அதவோடு தோட்டம் சாசனம் ... 115
17. கன்னிபகவதியார் சாசனம் ... 124
18. அரிகேசரிதேவர் சாசனம் ... 132
19. பராக்கிரம பாண்டியதேவர் சாசனம் 144

V. விசயநகர மன்னர் அரசியல் தலைவன் :

20. வாலக்காமயர் சாசனம் ... 147

# தென்னிந்தியா ၇

## கி.பி. 6 முதல் 15-ம் நூற்றாண்டுவரை




1. .........முதற்குலோத்துங்கன் நாடு.
2. →→→→ →→→→ முதல் இராசேந்திரன் கங்கைகொண்டது.

|

# கல்வெட்டுகள்

## 1. ஸ்ரீ ராஜராஜ கிணறு

1. இக் கல்வெட்டு இருக்குமிடம் :—வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள செய்யாறு தாலுகா உக்கல் என்ற ஊரில் பாழடைந்த நிலையிலிருக்கும் திருமால் திருக்கோயிலின் மேல்ச்சுவற்றிலாகும்.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன் :— முதலாம் இராசராசன். இவன் ஆட்சிகாலம் கி. பி. 985 முதல் 1014 வரையாகும்.

3. இக் கல்வெட்டு தோன்றிய காலம் :— இவன் ஆட்சி எய்திய 29-ம் ஆண்டில் அதாவது கி. பி. 985 + 29 = கி. பி. 1014.

4. மெய்க்கீர்த்தியால் அறியப்படும் இவன் வெற்றிச் செயல்களாவன :—காந்தளூர்ச் சாலையிலுள்ள கலங்களை அறுத்தது. வேங்கை நாடு, கங்கபாடி, நுளம்பபாடி தடிகைபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழம், இரட்டப்பாடி, பழந்தீவுகள், உதகைக் கோட்டை இவற்றை வென்றது.

5. சாசனத்தின் நோக்கம் :-முதலாம் இராசராசனுடைய பணிமகனை, சோழமண்டலத்தில் தென்கரை நாட்டில், நித்தாவினோத வளநாட்டில், ஆவூர் கூற்றத்துள்ள ஆவூரில் உள்ள கண்ணன் ஆரூரன் என்பான், தான்பணி பூண்ட அரசனின் பெயரால் சயங்கொண்ட சோழமண்டலத்துக் காலியூர்க் கோட்டத்து, தனியூர் உசாலாகிய விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்தின் மேலைப் பெரு

வழியில் ஒரு கிணறும் தொட்டியும் அமைத்து அதில் நீரிறைப்பார் முதலியோருக்கு 6 மாதத்திற்கு நிவந்தமாக 60 கலம் 6 தூணி நெல்லை அளித்தமையாகும்.

*ஸ்வஸ்திஸ்ரீ[1] திருமகள்போல் பெருநிலச் செல்வியுந் தனக்கே உரிமைபூண்டமை மனக்கொள்க்[2] காந்தளூர்ச் சாலை[3] கலமறுத்தருளி[4] வேங்கை நாடும்[5] கங்கபாடியும்[6] நுளம்பபாடியும்[7] தடிகைபாடியும்[8] குடமலைநாடும்[9]

---

* S. I. I. Vol. III Part I P. 7.

[1] நலம் வளர்க. (Hail Prosperity) ஸ்வஸ்தன் என்றால் எல்லாவிதத்திலும் நலமுள்ளவன் என்பது பொருள். இதனின்றுமே ஸ்வஸ்திகா ஐ என்ற குறி தோன்றியது. ஸ்வஸ்திகா முறையில் மோஹஞ்சதோராவின் ஊர்கள் அமைக்கப்பட்டிருந்தமையை ஆராய்ந்த ஹிராஸ் பாதிரியார் பகைவரின் அழிவினின்றும் ஆங்குறைவோரை மீட்டு நலம் பெறும் (Welfare) பொருட்டே அவை அவ்வாறு அமைக்கப்பட்டதென்பார்.

[2] மனம் கொண்டு.

[3] இது ஒரு ஊர். திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாகிய வலியசாலை என்பதாகும், (T. A. S. II P. 4).

[4] மரக்கலங்களை அழித்தல் செய்து.

[5] இது கிருஷ்ணா, கோதாவரி என்ற நதிகட்கு இடையிலுள்ள நாடு. கீழைச்சளுக்கியர் இங்குதான் அரசோச்சினர்.

[6] இது மைசூர் நாட்டின் கீழ்ப்பகுதியாம். பல்லவர்களுள் ஒரு பிரிவினரான கங்கர்களது நாடாதலின் அப்பெயர் பெற்றது.

[7] இது சேலம், வட ஆர்க்காடு, பல்லாரி, கோலார், தும்கூர் ஆகிய ஜில்லாப் பகுதிகளைக்கொண்ட பிரதேசம். E. I., X, P. 57

[8] மைசூர் ஜில்லாவின் சில பகுதிகளைக்கொண்டது. கங்கபாடி, நுளம்பப்பாடி இவைகட்கு அருகிலுள்ளது. (I. A., XXX, P 109)

[9] குடகுமலையைச் சார்ந்த பிரதேசம்.

கொல்லமும்[10] கலிங்கமும்[11] முரட்டொழில்[12] சிங்களர் ஈழமண்டலமும்[13] இரட்டபாடி ஏழரை இலக்கமும்[14] முன்னீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும்[15] திண்டிறல் வென்றித் தண்டாற்[16] கொண்ட தன்னெழில் வளருழியு ளெல்லா யாண்டுந் தொழுதகை[17] விளங்கும் யாண்டே செழியரைத்[18] தேசு கொள்[19] ஸ்ரீகோராஜகேஸரி[19] வந்ம ரான ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு உ௰கூவது—

---

[10] சேரநாட்டின் பகுதி. தென்னிந்திய மேற்குக் கரையி லுள்ள இக்காலத்து கொயிலோன் (Quilon) பிரதேசமாகும்.

[11] கோதாவரி, மகாநதி இவைகட்கிடையே கீழ்க்கடற்கரை யோரம் நீண்டிருந்த நாடு.

[12] முரட்டெழில் என்று பின்வரும் 2-வது கல்வெட்டிலும், மற்றும் பலவற்றிலும் இருக்கிறது. இங்கு 'முரணுகின்ற தொழிலையுடைய' என்று பொருள்படும்.

[13] இலங்கை.

[14] பம்பாய் மாகாணத்தின் தெற்குப்பகுதி. இது மேலைச் சளுக்கியரின் நாடு. இது ஏழரை இலக்கம் வருவாயையுடையது.

[15] இப்போதைய 'மால்திவ்' தீவுகள். இத்தீவுகளின் அரசன் இப்பொழுதும் பன்னீராயிரம் தீவுகளின் அரசன் என்று தன்னைக் கூறிக்கொள்ளுகிறான்.

[16] சேனையால்.

[17] தொழத் தக்க நிலை. (விளக்கவுரை காண்க)

[18] பாண்டியரை. [19] ஒளி விளங்கும்; இந்த புகழுக்கா யிற்று. 'தான் உளக்காலத்து மிக்குத் தோன்றுதல் உடைமை' என்ற பரிமேலழகர் உரையை நோக்குக.

[19] அரசனாகிய ராஜகேசரி. ராஜராஜனின் பட்டப்பெயர். அரசர்களுள் ஏறு (சிங்கம்) போன்றவன் என்பது பொருள். ராஜகேசரிக்குப் பின் பட்டம் பெறுபவன் பரகேசரி என்று விருது புனைவான். இவ்வாறு ராஜகேசரி பரகேசரி என்பன, மாறி மாறி பட்டமெய்தும் முறையில் வரும்.

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து[20]க் காலியூர்க் கோட்டத்துத்[21] தனியூர் உசாலாகிய[22] ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்தின்[23] மேலைப் பெருவழியில்[24] ஸ்ரீ ராஜராஜ தேவர் திருநாமத்தால் கிணறும் தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் பணிமகன்[25] சோளமண்டலத்துத் தென்கரை நாட்டு[26] நித்தா விநோத வளநாட்டு[27] ஆவூர் கூற்றத்து[28] ஆவூருடையான் கண்ணனூரன்[29] இவனே ராஜராஜ

---

[20] தொண்டைமண்டலத்தை வென்றபிறகு முதலாம் ராஜராஜன் தனக்குள்ள வேறு பெயரான ஜெயங்கொண்டசோழன் என்பதைக்கொண்டு ஜெயங்கொண்ட சோழமண்டலமென்று பெயரிட்டான்.

[21] இது மண்டலத்தின் உட்பிரிவு. தொண்டைமண்டலத்தின் 24 கோட்டங்களுள் ஒன்று.

[22] இது 'உக்கல்' என்று இருக்கவேண்டும் என்பர்.

[23] உக்கலுக்கு வேறு பெயர். நான்கு வேதங்களை அறிந்த பார்ப்பனர்களுக்குத் தானமாக அக்காலத்து அரசர்களால் கொடுக்கப்பட்டது ஆதலின் அப்பெயர் பெற்றது.

[24] மேற்குப்புறமுள்ள அகண்ட சாலை (High Road).

[25] ஊழியம் செய்வோன்.

[26] சோழமண்டலத்தின் பகுதியான தென்கரை நாட்டிலுள்ள; தென்கரைநாடு காவிரிக்குத் தென்கரையில் தஞ்சையைச் சார்ந்த பிரதேசமாக விளங்கியது.

[27] வளநாடு நாட்டின் உட்பிரிவு. இது தஞ்சை தாலுகாவின் கீழ்ப்பகுதி, பாபநாசம் தாலுகாவின் மேற்பகுதி மன்னார்குடி தாலுகாவின் மேற்குப்பகுதி, அரிசிலாற்றின் தென்பகுதி இவற்றின் நடுவிலுள்ள நிலப்பரப்பாகும்.

[28] வளநாட்டின் உட்பிரிவு கூற்றம். இது இக்காலத்துப் பாபநாசம் தாலுகாவிலுள்ள ஆவூர் என்ற தேவாரத்தலத்தைச் சார்ந்த பிரதேசமாகும்.

[29] இவனே இராசராசனின் பணிமகன்.

கிணற்றில் தொட்டிக்கு நீரிரைப்பார்க்கு அருமொழி தேவன் மரக்காலால்[30] நிசதம்[31] நெல் ஐ.[32] உரு[33] ஆக திங்கள் சு-க்கு நெல்லு ருயிசும்[34] ஸ்ரீ ராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு நிசதம் நெல் ஐ. உரு ஆக திங்கள் சு-க்கு நெல்லு ருயிசு, இப் பந்தலுக்கு குசக்கலம்[35] இடுவார்க்கு திங்கள் க-க்கு நெல்லு தூ[36] ஆக திங்கள் சு*க்கு நெல் சக-ம் ஸ்ரீ ராஜன் கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும்[37] ஆட்டாண்டு தோறும் புதுக்குப் புறமாக வைச்ச நெல்லு உசு தூ[39] ஆக ஐ சுயிசு சுதூ[40] இந்நெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர் ஸபையோம் இறை திரவியமும்[41] கிரய திரவியமும்[42] கொண்டு இறை இழிச்சி[43]......

---

[30] முதலாம் இராசராசனின் மறுபெயர் அருண்மொழித் தேவன். அவன் காலத்து அறுதியிட்ட அளக்கும் கருவியாதலின் அவன் பெயரால் விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்தில் வழக்கிலிருந்தது.

[31] நாள்தோறும். [32] இது நெல்லைக் குறிக்கும் அடையாளம்.

[33] இது குறுணியைக் குறிக்கும் அடையாளம்.

[34] இது கலம் என்னும் அளவைக் குறிக்கும்.

[35] மண்பாத்திரம். குயவன் கலங்கள் என்றபடி.

[36] இரண்டு தூணியைக் குறிக்கும் அடையாளம். 1 தூணி = 4 மரக்கால்.

[37] பழுது (Repair).

[38] ஸ்ரீ ராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு — ஸ்ரீ ராஜராஜன் (பெயரால்) தண்ணீர் ஊற்றுபவர்கட்கு.

[39] இரண்டு கலம் இரண்டு தூணிக்கு அடையாளம்.

[40] அறுபத்தாறு கலம் இரண்டு தூணி.

[41] வரிப்பணம் (Land Revenue). [42] வாங்கிய விலை.

[43] வரி தள்ளி. * தண்ணீர்ப்பந்தல் வருடமொன்றுக்கு 6 மாத காலமே திறக்கப்படும் என்பது அறியத்தக்கது.

## விளக்கங்களும் குறிப்புகளும்.

1. **முதலாம் இராசராசன்.** இவன் கி. பி. 985 முதல் 1014 வரை சோழநாட்டை ஈடும் எடுப்புமின்றி சுமார் 30 ஆண்டு காலம் ஆட்சி செய்தான். இவன் காலம் முதற் கொண்டே சோழப் பேரரசு (Chola Imperialism) பரவத் தொடங்கிற்று. இவன் தன்கீழ் இளவரசனுயிருந்த முதலாம் இராசேந்திரன் உதவியால் வெற்றிகொண்ட நாடுகள் பல. இவனுடைய மெய்க்கீர்த்திகள் 'திருமகள் போல' என்று தொடங்குவன. இவன் ஆட்சியின் பெருமையை இன்னும் உலகறியச் செய்து நிலவுவது தஞ்சை இராசராசேச்சுரமாகும். தென்னிந்திய சிற்பக்கலையின் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குமிது, எக் கோணத்தில் நின்று நோக்கினும் ஒரேமாதிரியான காட்சியை அளித்துச் சிறக்கிறது.

இவனுடைய மனைவியருள் சிறந்தவள் தந்திசக்தி விடங்கி என்னும் உலோகமாதேவியாம். இவனுடைய ஒரே மகனான இராசேந்திரன் வானவன் மகாதேவி என் பாளுக்குப் பிறந்தவன். எவ்வாறு கிரேக்க நாட்டு பிலிப்ஸ் தன் மகன் அலெக்ஸாண்டரின் உலக வெற்றி களுக்கு அடிகோலினனே, அவ்வாறே இராசேந்திரனின் கடல்கடந்த வெற்றிகளுக்கு இராசராசன் அடிகோலி னன் என்று கூறுதல் மிகையாகாது.

2. **காந்தளூர்ச் சாலை.** 'காந்தளூர்ச் சாலை கலமறுத்த' இச் செய்தி இராசராசனின் 4-ம் ஆண்டு கல்வெட்டுகள் முதல் பேசப்படுகின்றது. ஆனால் பாண்டிய நாட்டிலும், கேரள நாட்டிலும் காணப்படும் இராசராசன் கல் வெட்டுகள் 8-ம் ஆண்டிற்குப்பின்னர் தோன்றியதாகவே காணப்படுகின்றன. காந்தளூர்ச் சாலை கலங்களறுத்த நான்காம் ஆண்டு முதல் 8-ம் ஆண்டு வரை அப்பிரதேசங்

களில் கல்வெட்டுகள் தோன்றுமைக்குக் காரணம் அந் நாடு கைக்கொள்ளப்பட்டு 4 ஆண்டுகட்குப் பின்னரே அமைதி நிலவிய பிறகு சோழமன்னரின் நேராட்சி தொடங்கியிருக்கக்கூடும் எனக் கருதவேண்டி யிருக் கிறது. அவ்வாறு சொல்லாது இவன் 8-ம் ஆண்டிற்குப் பின்னரே காந்தளூர்ச் சாலை வெற்றியைக் கொண்டான் (S. II. ii Int. P. 2) என்று கூறுவது பொருத்தமில்லை என்பார் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார்.

இது நிற்க, 'காந்தளூர்ச் சாலை கலமறுத்த' என்ற தொடரின் பொருள்பற்றி பல்வேறு சர்ச்சைகள் உள்ளன. 'காந்தளூரில் இருந்த அறச்சாலையில் உண்ணவேண்டிய வர்கள் எவ்வளவு என்பதை வறையறுத்த' செய்தியைக் கூறுகின்றது என்பர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை முதலியோர். சாலை, கலம் என்ற சொற்கள் முறையே 'உண்ணுமிடம்' (சத்திரம்), உண்ணும் கலம் (சட்டி) என்று பொருள்படினும் இவ்வாறுகொள்ளும் பொருள் இவ்விடத்திற்குப் பொருந்துவதாயில்லை. 'சாலை' என்ற சொல் பாட்டை, பெருவழி (Road) என்ற பொருளில் வழங்கினும், அந்த இடத்தினருகில் இருக்கும் பெருவழி யின் காரணமாக அப்பெயர் அவ்விடத்திற்கு ஆகியிருக்க லாம் என்று கொள்ளவேண்டுமே யல்லாது வேறுவித மாகக் கொள்வதற்கில்லை. காந்தளூர் உணவுச்சாலையில் உண்ணவேண்டியவர்களின் தொகையை 'வரையறை செய்த' என்று திரு. தேசிகவிநாயகம் பிள்ளை கூறுவதை ஒப்புக்கொண்டால், அது ஏன் மறுபடியும் முதலாம் இராசேந்திரனால் திரும்பச் செய்யப்பட்டது என்பதை ஆராயவேண்டும். பிள்ளையவர்கள் காந்தளூர்ச் சாலையில் கப்பல்களை அழித்தமை 'அருளி' என்று கூறப்பட்டிருப்ப தால் தருமச் செயலே 'அருளி' என்ற சொல்லால் வழங் கப்பட்டிருக்கிறதென்பர். ஆனால் இராசாதிராசன் கல்

வெட்டில், 'கடக்களிற்ருல் உதைத்தருளி' என்று பாண்டிய மன்னன் யானையால் உதைக்கப்பட்டமை கூறப்படுவதிலிருந்து 'அருளி' என்ற சொல் அந்தப் பொருளில் மட்டும் வழங்கவில்லை என்பதை அறியலாம். ஆதலின் காந்தளூர்ச் சாலையிலுள்ள கப்பல்களை அழித்து என்பதே இதன் சிறந்த பொருளாகக் கொள்ளப்படும்.

காந்தளூர்ச் சாலை என்ற ஊர் இப்பொழுது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாகிய வலியசாலை என்பதாகும்.

3. **பரகேசரியும் இராஜகேசரியும்.** பரகேசரி, இராஜகேசரி என்பன சோழ மன்னர்கள் அரியணை ஏறியதும் தரித்துவந்தப் பட்டப்பெயர்களாகும். பரகேசரியென்ருல் மற்றவர்களுக்குச் சிங்கம் போன்றவன் என்றும், இராஜகேசரி என்ருல் அரசர்களுக்கெல்லாம் சிங்கம் போன்றவன் என்பதும் பொருள். அரியணையிலிருந்து ஆட்சிசெய்பவன் இராஜகேசரி என்ற விருதைப் பெற்றிருந்து அவனுக்குப் பிறகு மற்ருெருவன் அரியணை ஏறிஞல் அவன் பரகேசரி என்ற விருதினைப் பெற்று ஆட்சி செய்வான். எடுத்துக்காட்டாக இராஜகேசரி இராஜராஜனுக்குப் (I) பின் பட்டத்திற்கு வந்தவன் பரகேசரி இரஜேந்திரன் I. இவ்விருதுகளால் யாருக்குப் பின் யார் பட்டமெய்தினர் என்ற செய்தி புலனுகும். இவ்வாறே பாண்டிய மன்னர்களும மாறவர்மன் சடைய வர்மன் என்ற பட்டப் பெயர்களை வைத்திருந்தமை அறியத் தக்கது.

4. **இராஜராஜனின் உதகை வெற்றி.** 'தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள்' என்று வரும் சாசனத் தொடரிலிருந்து உதகையை இராஜராஜன் வெற்றிகொண்டான் என்று அறியவேண்டியிருக்கிறது. காந்தளூர்ச் சாலை வெற்றிக்குப் பின் இராஜராஜன்

கொண்ட பெருவெற்றி கி. பி 1008-ல் மிக்கக் காவலை யுடைய உதகைக் கோட்டையைப்பற்றியமையாகும். மலைநாடு அல்லது குடமலைநாடு என்று கூறப்படும் மேற்கு திசையிலுள்ள மலைசெறிந்த நாடு தற்போதைய குடகு என்று கொண்டால், மேற்குத் தொடர்ச்சி மலையில் அதன் அருகிலேயே உதகை இருக்கவேண்டும். அல்லது சற்று தெற்கில் இருக்கலாம். இவனுடைய 16—17-ம் ஆண்டு கல்வெட்டுகள் உதகை வெற்றியைக் குறிக்க வில்லை. அக்கல்வெட்டு இராசராசன் பாண்டியரது நாட்டினைப் பிடித்தபோதிலும் உதகை புகழுடன் விளங் கியதாகவே கூறுகிறது. இதனால் இவன் அதற்குப்பின் ஒரு ஆண்டு கழித்தே உதகை வெற்றியைக் கொண்டான் என்று கொள்ளல் வேண்டும். 'உதகை விளங்கும் யாண்டே செழியரை வெற்றிகொண்டான்' என்பதே மெய் தொடரின் கருத்தாம். இன்னும், சதையத் திரு நாளைச் சேரநாட்டில் வழக்கிற்குக் கொண்டுவந்ததைத் தவிர இந்த உதகை வெற்றியைமட்டும் கலிங்கத்துப்பரணி குறிப்பதும், தன் தூதுவன் பொருட்டு பதினெண் காடுகளை இவன் கடந்துசென்று உதகையைத் தீயிட்டுக் கொளுத்தினன் என மூவருலாவில் ஒட்டக்கூத்தர் கூறுவ தும் இராசராசனின் உதகை வெற்றியை வலியுறுத்து வதாம்.

இனி, தொழுதகை என்ற பாடம் தவறென்றும் 'தொழுதக' என இரண்டாம் கல்வெட்டில் இருப்பது போன்றிருப்பதே சரியென்றும், தொழு+உதகை என்று "தொழுதகை" என்ற சொல்லைப் பிரிக்க இலக்கணமில்லை யாதலாலும், குடமலை நாட்டை வென்றபோதே உதகை யும் அதில் அடங்கிவிட்டமையாலும் உதகை வெற்றியை அது குறிக்கவில்லை என்பாரும் உண்டு. அது பொருந்து மாறின்மை மேற்காட்டிய இலக்கியச் சான்றுகளாலும் பிறவற்றாலும் அறிக.

5. **சோழநாட்டின் பிரிவுகள் :**—சோழநாடு பல மண்டலங்களாகப் பிரிந்திருந்தது. மண்டலங்களே சோழநாட்டின் மிகப்பெரிய உட்பிரிவாகும். இவ்வாறு சுமார் ஒன்பது மண்டலங்களாக சோழநாடு பிரிக்கப்பட்டிருந்தது. தொண்டைநாடு ஜெயங்கொண்ட சோழமண்டலமென்றும், பாண்டிநாடு இராஜராஜப் பாண்டி மண்டலமென்றும், இலங்கை மும்முடிச் சோழமண்டலமென்றும், கங்கவாடி முடிகொண்ட சோழ மண்டலமென்றும் நுளம்பபாடி நிகரிலி சோழ மண்டலமென்றும் பெயர் பெற்றன. ஒவ்வொரு மண்டலமும் பல வளநாடுகளாகவும், ஒவ்வொரு வளநாடும் பல நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. வள்நாடுகள், நாடு, கோட்டம் என்பன பெரும்பாலும் ஒன்றே என்ற கருத்துடையார் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் (Cholas II P. 242) தொண்டைமண்டலம் மட்டும் பழைய காலத்து முறைப்படி 24 கோட்டங்களாகப் பிரிவுற்றிருந்தது. வளநாடுகள் கூற்றங்களாகப் பிரிவுற்றிருந்தன. இக் கூற்றங்கள் தனியூர் அல்லது சதுர்வேதி மங்கலம் என்ற பிரிவினையுடையன. தனியூர்கள் பல கிராமங்களைக்கொண்டவை. தனியூர் என்பது சில இடங்களில் தானே ஒரு கூற்றம் என அழைக்கப்படும் அளவுக்கு விரிந்திருந்தது. 'தன் கூற்று' என்பதைக் காண்க (SII III p. 3 n. 7) சதுர்வேதிமங்கலம் பல கிராமங்களைத் தன்னகத்தே கொண்டது. இதற்கு மற்றொரு பெயர் தனியூர் என்பதாம், இப்போது வட்டம் என்று கூறப்படும் பிரிவுக்கு இது சமம் என்று கொள்ளலாம்.

6. **அக்காலத்து முகத்தலளவை.** எடுத்தல், முகத்தல், நீட்டல் ஆகிய அளவைகள் அக்காலத்தில் சிறந்த முறையில் வழக்கிலிருந்தன. இவ் வளவைகள் யாவும் அரசாங்கத்தாரால் முத்திரையிடப்பட்டு கண்காணிக்கப்

பட்டன. இரண்டாவது கல்வெட்டில் இராசகேசரி. ஆடவல்லான் என்ற பெயர் கொண்ட மரக்கால்கள் முகத்தலளவையாக வழக்கிலிருந்தமை தெரிய வருகிறது. அக்காலத்திருந்த முகத்தல் அளவை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 2 செவிடு | = | 1 படி |
| 5 செவிடு | = | 1 ஆழாக்கு |
| 2 ஆழாக்கு | = | 1 உழக்கு |
| 2 உழக்கு | = | 1 உரி |
| 2 உரி | = | 1 நாழி |
| 8 நாழி | = | 1 குறுணி |
| 2 குறுணி | = | 1 பதக்கு |
| 2 பதக்கு | = | 1 தூணி அல்லது காடி |
| 3 தூணி | = | 1 கலம் |

## 2. திருப்பதியம்*

1. இக் கல்வெட்டு இருக்குமிடம், தஞ்சாவூரிலுள்ள இராசராசேச்சுரம் என்னும் பெருவுடையான் கோயிலிலுள்ள வடபுறச் சுவரிலாகும்.

2. கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன், முதலாம் இராசராசன்.

3. இக் கல்வெட்டு தோன்றியகாலம்:—இம் மன்னன் அரியணை ஏறிய 29-ம் ஆண்டு, அதாவது கி. பி. 985+29= கி. பி. 1014-ல் ஆகும்,

4. இவன் மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள். (முதற்கல்வெட்டின் முகவுரை, குறிப்பு 4-ல் கண்டபடி கொள்க).

5. இச்சாசனத்தின் நோக்கம்:—முதலாம் இராசராச மன்னன், தஞ்சை இராசராசேச்சுரத்திலுள்ள

* S.I.I. Vol II, Part III, p 253.

இறைவனுக்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய பிடாரர்கள் 48 பேரையும், கொட்டிமத்தளம், உடுக்கை இவற்றை வாசிக்க இருவரும் ஆக 50 பேருக்கு நாள் தோறும் ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடு ஒத்துள்ள ஆடவல்லான் என்னும் மரக்காலால் மூன்று குறுணிநெல் நிவந்தம் பெற ஏற்பாடு செய்தான். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் இல்லாது போனல் அவர்கட்கு வாரிசு யாவர் என்பதையும் விளக்கி வைத்தான்.

[13]ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொள்க் காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி வேங்கை நாடுங் கங்கபாடியுந் தடிகைபாடியும் நுளம்பபாடியுங் குடமலைநாடுங் கொல்லமும் கலிங்கமும் முரட்டெழில்[14] சிங்களர் ஈழமண்டலமும் இரட்டப்பாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப்பழந் தீவு பன்னீராயிரமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியு ளெல்லாயாண்டுந் தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத் தேசுகொள் கோ ராஜகேஸரி வர்மரான ஸ்ரீராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையர் ஸ்ரீராஜராஜீஸ்வரம்[15] உடையார்க்குத்[16] திருப்பதியம்[17] விண்ணப்பஞ்

---

[13] இக் கல்வெட்டின் மெய்க்கீர்த்தி 1-ம் கல்வெட்டிலுள்ள மெய்க்கீர்த்தியோடு ஒத்து நடப்பது ஆதலின் பொருள் அங்கு காண்க.

[14] முரட்டொழில் என முன்னர் வந்தது. இங்கு முரட்டு குணமும் அழகும் வாய்ந்த என்று பொருள்.

[15] ஸ்ரீராஜராஜேஸ்வரம் என்னும் தஞ்சைப் பெரியகோவில்.

[16] உடையவருக்கு.

[17] தேவாரப் பதிகங்கள். பதியம் < பதிகம் = பத்து செய்யுட்கள் சேர்ந்த தொகுதி.

செய்ய உடையார்[18] ஸ்ரீராஜராஜ தேவர் குடுத்த[19] பிடாரர்கள்[20] நாற்பத் தெண்மரும் இவர்களில் நிலையாய்க் உடுக்கை வாசிப்பான் ஒருவனும் இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம்[21] வாசிப்பான் ஒருவனும் ஆக ஐம்பதின்மர்க்குப் பேரால்[22] நிசதம்[23] நெல்லு முக்குறுணி நிவந்தமாய்[24] ராஜகேஸரியோ[25] டொக்கும் ஆடவல்லா[26] னென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தேய்[27] பெறவும், இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனர்க்குந்[28] தலைமாறு[29] அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார்[30] தாந்தாம் யோக்யர் அல்லாது

---

[18] The Lord என்பார் அறிஞர் உல்ஷ்.

[19] கொடுத்த, சாசனகால வழக்கு.

[20] தேவாரம் பாடுகிறவர்கள்,

[21] பெரிய டமாரம்; கோலால் இயக்கும் மத்தளமும் ஆம்.

[22] ஆள் ஒன்றுக்கு (per person).

[23] தினசரி per day.

[24] கூலி.

[25] இது தஞ்சை அரண்மனையில் முதல் ராசராசன் பட்டப் பெயரில் வழங்கி வந்த நிலையானதொரு அளவுள்ள மரக்கால் (Standard Measure).

[26] இது கோயில் நிவந்தங்களை அளக்க கோயிலில் வைக்கப் பட்ட மரக்கால் கோயிற் கூலிகளுக்கு ஆடவல்லான் (இராச ரேச்வரக் கடவுள் பெயரால் அமைக்கப்பட்ட) மரக்காலும், அரசகாரியம் முதலியவற்றிற்கு ராஜகேஸரி மரக்காலும் பயன் படுத்தப்பட்டமை ஊகிக்கவேண்டியிருக்கிறது.

[27] உள்ளூரிலுள்ள கருவூலம் அல்லது பொக்கிஷச்சாலை அல்லது பண்டசாலை (Local Treasury)

[28] அந்நிய தேசம் சென்று விட்டவர்க்கும்.

[29] பதிலாக; மாருக.

[30] அடுத்த நெருங்கிய உறவுடையவர்.

விடில் யோக்யராயிருப்பாரை[31] ஆளிட்டுத்[32] திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந்நெல்லுப் பெறவும் அவ் வவர்க்கு அடுத்தமுறை கடவாரின்றி யொழியில் அந்த நியாயத்தாரே[33] போக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும், ஆக இப்படி உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது. பாலன் திருவாஞ்சியத்தடிக[34]ளான ராஜராஜ பிச்சனான[35] சதாசிவனுக்கு[36] நிசதம் நெல்லு முக்குறுணி......(இவ்வாறு மேற்சொன்ன ஐம்பதின் மருடைய பெயர்களும் வெட்டப்பட்டுள்ளன).

## விளக்கங்களும் குறிப்புகளும்.

1. திருப்பதியம். இது பத்து அழகிய பாடல்களைக் கொண்ட தொகுதியெனப் பொருள்படும். இப் பெயர் கொண்டு அழைக்கப்படுவன சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற சைவசமய ஆசாரியர்கள் அருளிய தேவாரத் திருப் பதிகங்களேயாகும். இவற்றுள் சம்பந்தரின் பதிகங்கள் 11 பாடல்களுடையவை. அப்பர் சுவாமிகளுடையவை

---

[31] குண நல ஒழுக்கங்களால் தகுதியுடையவராய் இருப்ப வரை.

[32] ஆளாக நியமித்து.

[33] அந்தத் தொழில் செய்வாரே.

[34] இயற்பெயர் - ஸ்ரீவாஞ்சியத்திலுள்ள இறைவனின் பெயரே இவனது இயற்பெயராயிற்று.

[35] இது இவனுக்குக் கொடுக்கப்பெற்றப் பட்டப் பெயர் (Title)

[36] இவன் சிவதீட்சை செய்விக்கப்பெற்றபோது இடப் பட்ட பெயர். இது தேவாரம் இசைக்க நியமிக்கப்பட்ட ஐம் பதின்மரிலுள்ள முதற்பிடாரனின் பெயர்,

D' 24.11.77



10 பாக்களுடையன, சுந்தரமூர்த்தியினது 10 பாடல்கள் கொண்டவையேனும் இவரது பத்தாவது செய்யுளும், சம்பந்தரது 11-வது செய்யுளும் அவரவர்களுடைய பெயர்தாங்கி நிற்பன.

இம் மூவரின் தேவாரங்கள் அனைத்தும் ஏழு திருமுறைகளாகக் இராசராசன் வேண்டுகோளின்படி நம்பியாண்டார் நம்பியால்த்தொகுக்கப்பட்டன. சம்பந்தரின் 384 பதிகங்களும் முதல் மூன்று திருமுறைகளாகவும், ஆளுடை அரசின் பதிகங்கள் 321 ம் மூன்று முதல் ஆறு திருமுறைகளாகவும், சுந்தரரின் செந்தமிழ்ப் பதிகங்கள் நூறும் 7-வது திருமுறையாகவும் வகுக்கப்பட்டன.

**இராசராசனும் திருப்பதியங்களும்.** திருமுறைகளை ஏழாக நம்பியாண்டார் நம்பியைக்கொண்டு வகுத்தவன் இராசராசன் என முன்னர்க்கண்டோம், திருமுறைகண்ட புராணம், "அலகில் புகழ்பெறு ராசராசமன்னன் அபய குலசேகரன் பாலெய்து மன்பர்·இலகு மொரு மூவரருள் பதிக மொன்றொன்றே யினிதினுரை செய்ய அன்பாற் கேட்டு"—என்றவாறு கூறுவதே இதற்கு ஆதாரமாகும். திருவாரூரில் அரசு செலுத்திய இராசராசன் முதலாம் இராசராசனென்றும், அவன் கி. பி. 985-1012 வரை அரசாண்டவனே என்றும் கொண்டு, இவனே திருமுறைகளை வகுத்தவன் என்பர் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள். (இலக்கிய வரலாறு, III Ed. 324-ம் பக்கம் பார்க்க) ஆனால் சோமசுந்தர தேசிகரவர்கள், இராசராசனே கோயிலில் தேவாரங்களை ஓத ஏற்பாடு செய்திருந்தமை இக் கல்வெட்டால் கூறப்படுவது கொண்டு அவன் காலத்துக்கு முன்னரே திருமுறைகள் வகுக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கூறுவார். வேறு பல காரணங்கள் காட்டி தேசிகரவர்கள் திருமுறை

வகுத்தவன் ஆதித்தன் II என்றும், இவனே திருமுறைக் கண்டவனென்றும் இத் திருமுறைகண்ட ஆதித்த கரிகாலன் கி. பி. 966 முதல் 970 வரை அரசாண்டவனென்றும் கூறுவார். (சைவசிகாமணிகள் இருவர் 49-ம் பக். பார்க்க).

## 3. ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் சாசனம்

1. இக் கல்வெட்டு இருக்குமிடம்: தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயமான இராஜராஜேஸ்வரத்தின் மூலத்தான கோயிலிலுள்ள தென்புறச் சுவரில் இக் கல்வெட்டு இருக்கிறது.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்படும் அரசன் முதலாம் இராசேந்திரன். இவன் கி. பி. 1014 முதல் 1042 வரை அரசாண்டவன்.

3. இக் கல்வெட்டு தோன்றியகாலம்:—இவன் அரியணையேறிய 19-வது ஆண்டிற்குப்பின் 242-வது நாளில் ஆகும். அதாவது 1014 + 19 = சுமார் கி. பி. 1033 ஆகும்.

4. இவனுடைய மெய்க்கீர்த்தியுள் இவன் கொண்ட வெற்றிகளாகப்பேசப்படுவன:—இடைதுறைநாடு, வனவாசி, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கடக்கம், ஈழம், பாண்டி நாடு சேரநாடு, முன்னீர்ப்பழந்தீவு, இரட்டைப்பாடி ஏழரை இலக்கம், சக்கரக் கோட்டம், மதுர மண்டலம், நாமணக் கோணை, பஞ்சப்பள்ளி, மாசுணிதேசம், ஒட்ட விஷயம், தண்டபுத்தி, தக்கணலாடம், வங்கம். உத்தரலாடம், கங்கைச் சமவெளி முதலியன 4-ம் ஆண்டு முதல் 11-ம் ஆண்டுவரைப் பெற்ற வெற்றிகளாம். பின்னர் 12ம் ஆண்டுமுதல் 19-ம் ஆண்டுவரை மலேயா தீபகற்பத்திலுள்ள கடாரம் சுமத்ரா தீவிலுள்ள விசயம், பண்ணை, மலையூர், மலேயாவிலுள்ள மாயிருடிங்கம் இலங்கா

சோகம், மாப்பப்பாளம், இலிம்பிங்கம், வலைப்பந்தூறு, தலைதக்கோலம், மாதமாலிங்கம், இலாமுரி தேசம் (சுமத்ராவிலுள்ளது) இவற்றைக் கைக்கொண்டான்.

5. சாசனத்தின் நோக்கம் :—கங்கைகொண்டசோழபுரத்துத் தன் மாளிகையிலிருந்து தஞ்சை இராசராசேச்சுரத்தில் இருந்த தன்னுடைய குருவாகிய சர்வசிவ பண்டிதருக்கும், அவருடைய சிஷ்யர்களாய் ஆர்யதேசம், மத்யதேசம், கௌடதேசம் இவற்றிலுள்ளவர்களுக்கும் சந்திர சூரியர் உள்ளவரை ஆடவல்லான் என்னு மரக்காலால் ஆண்டுதோறும் இரண்டாயிரம் கலம் நெல் கொடுக்குமாறு இராசேந்திரன் எழுதிவைத்தான்.

[1]ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர[2] இருநிலமடந்தையும்[3] பொற்சயப் பாவையும்[4] சீர்த் தனிச் செல்வியும்[5] தன் பெருந்தேவியராகி இன்புற நெடுதியல் ஊழியுள்[6] இடைதுறைநாடும் துடர் வனவேலி[8]ப்படர்[9] வனவாசியும்[10] சுள்ளிச் சூழ்மதிள்[11] கொள்ளிப்பாக்கையும்[12] நண்ணற்

[1] S.I.I. Vol II. Part I. p 106.

[2] இலக்குமி நிலைபெற்று வாழ. [3] பெரிய பூமிதேவியும்.

[4] வீர இலக்குமியும். [5] புகழுக்கு உரியவளும்.

[6] நெடுநாளாக இயல்பாய் வருகின்ற ஊழியுள்.

[7] வடக்கே கிருஷ்ணா நதிக்கும் தெற்கே துங்கபத்திரைக்கும் இடைப்பட்ட சமவெளி. அதாவது தற்காலத்து ரெய்ச்சூர் என வழங்கப்படும் ஜில்லா என்று கொள்ளலாம். (E I. XII pp 295-6).

[8] காட்டை வேலியாக உடைய. [9] விரிந்த.

[10] மத்திய பீராருக்குத் தென் பகுதியிலுள்ளப் பிரதேசம்.

[11] காட்டரணையுடைய மதில். [12] இது ஹைதராபாத் ராஜ்யத்திற்கு 45 மைல் வடகிழக்கே உள்ள 'கூல்பாக்' (Kulpack) என்னும் இடமாகும்.

கருமுரண் மண்ணைக் கடக்கமும்[13] பொருகடலீழத்[14]தரைசர்தமுடியும், ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும்[15] இந்திரனாரமும்,[16] தெண்டிரை ஈழமண்டல முழுவதும், எறிபடைக்[17]கேரளன்[18] முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர் மாலையும்,[19] சங்கதிர் வேலைத் தொல்பெருங் காவற் பலபழந்தீவும்,[20] செருவிற் சினவி[21] இருபத்தொருகாலரசு களைகட்ட[22] பரசுராமன்[23] மேவருஞ் சாந்திமத்தீவ[24]ரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும், பயங்கொடு பழிமிக முயங்கி[26]யில் முதுகிட்டொளித்த சயசிங்கன்[25] அளப்பரும் புக

---

[13] இது ஒரு காலத்தில் இராஷ்டிரகூடர்களுக்குத் தலைநகரமாயிருந்த மான்யகேடம் என்னும் பட்டணமாகும்.

[14] கடல் அலையால் மோதப்படும் இலங்கை.

[15] முற்கூறிய இலங்கை மன்னனிடத்தில் பாண்டியர் வைத்த அழகிய கிரீடம்.

[16] இந்திரன் பாண்டியனுக்கு வெகுகாலத்திற்கு முன் கொடுத்த முத்தாரமும்.

[17] சுட்டிப்புடை. [18] சேரன்.

[19] சிவந்து ஒளிவிடுகின்ற மாலை.

[20] மாலடிவ்ஸ் (Maladives) என்று வழங்கும் அராபிக் கடல் தீவுகள்.

[21] சண்டையில் சினமுற்று. [22] 21 முறை க்ஷத்திரியர்களாகிய (அரசர்)களைக் களைந்திட்ட. [23] இவன் சமதக்கினியின் புதல்வன்.

[24] மலைநாட்டுக்கு அருகிலிருந்த தீவு. அரண் கருதி அங்கு முடி இருத்தப்பட்டதென்க.

[25] இது பல்லாரி ஜில்லாவிலுள்ள உச்சங்கி துர்க்கம் என்பதே போலும்—Dr. உல்ஷ் S.I.I. II. pp 94-5.

[26] சயசிங்கன் மேலைச் சளுக்கிய அரசனான ஆகமவல்லனுடைய தந்தை. இடைத்துறை இரண்டாயிரத்தை ஆண்டவனும் அவனே.

ழொடும், பீடியல் இரட்டப்பாடி ஏழரை இலக்கமும்[27] நவநெதிக் குலப்பெரு மலைகளும்[28] விக்கிரம வீரர்[29] சக்கர கோட்டமும்[30] ......ல்லை மதுர மண்டலமும்,[31] காமிடை வள நாமணைக் கோணை[32]யும், வெஞ்சின வீரர் பஞ்சப்பள்ளியும், பாசடைப்பழன[33] மாசுணி தேசமும், அயர்வில் வண் கீர்த்தி ஆதிநகரை[34]யவையில் சந்திரன் தொல் குலத்திந்திர

[27] கல். 1 குறிப்பு 14 காண்க. [28] கூட்டமான மலைகளும். ஒன்பது வகையான நவரெத்தினங்களையுடைய சிறந்த மலைகளும் என்பர் சிலர்.

[29] வலிமை பொருந்திய வீரர்.

[30] இது விசாகப்பட்டணம் ஜில்லாவுக்கு மேற்கில் மத்திய மாகாண எல்லைக்குள் உள்ள பஸ்தர் (Bastar) சமஸ்தானத்தின் தலைநகரான இராஜாபுரத்திற்கு எட்டு மைல் தூரத்திலுள்ள சித்ரகோடா என்ற ஊராகும். E. I. IX pp 178-9.

[31] ஒரிஸாவில் உள்ள மதுபன் என்னும் சிறிய சமஸ்தானத்தை ஒட்டிய பகுதியாக இருக்கக்கூடும் என்பர் தி. நா. சுப்பிரமணியன். கங்கைகொண்ட சோழன். பக் 82. குறி. 1.

[32] பூங்கா பல செறிந்து வளப்பமுள்ள நாமணைக்கோணை என்னும் ஊர். இதுவும் மேலே கூறிய மதுரமண்டலமும், பின்வரும் பஞ்சப்பள்ளி, மாசுணி தேசம் என்பனவும், வெங்கி நாட்டைச் சேர்ந்த பிரதேசங்களாகும்.

[33] பசிய இலைகளும் வயல்களும் சூழ்ந்த.

[34] டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் இதனைச் 'சாதி நகர்' எனக்கொண்டு மஹாநதிக் கரையில் உள்ளதும் இப்பொழுது 'ஸோன்பூர் பிங்கா' என்று வழங்கப்படுவதுமான யயாதிநகர் ஆதல் வேண்டுமென்று கூறுவர். (See Sir Asutosh Mukharjee Com. Volume 3 p 550) ஆயினும், சாஸனங்களில் 'ஆதிநகர்' என்றோ, உடம்படுமெய்யான யகரம் சேர்ந்து 'யாதி நகர்' என்றோ காணப்படுகிறதே யன்றி, 'சாதி நகர்' எனக் காணப்படவில்லை.—தி. நா. சு. கங்கைகொண்ட சோழன் பக்கம் 82 குறிப்பு 2.

தனை வினை அமர்க்களத்துக் கிளையொடும் பிடித்துப் பல தனத்தொடு நிறைகுலதனக் குவையும்[35] கிட்டருஞ்[36] செறிமிளை[37] ஒட்ட விஷையமும்,[38] பூசுரர்சேர்[39] நற் கோசலைநாடும்[40] தன்மபாலனை வெம்முனை[41]யழித்து வண்டுறை சோலைத் தண்டபுத்தி[42]யும், இரணசூரனை முரணுகத் தாக்கித் திக்கணை கீர்த்தித் தக்கணலாடமும்[43] கோவிந்த சந்தன்[44] மாவிழிந்தோடத் தங்காதசாரல் வங்காள தேசமும்,[45] தொடுகழற் சங்குவொட்டல்[46] மயி

---

[35] நிறைந்துள்ள சிறந்த பொருட்குவியல்களையும்

[36] சேர்வதற்கரிய. [37] 'செறிமிளை' என்று பாடங்கொண்டால் செறிந்த காட்டரணை உடைய. [38] ஒரிஸ்ஸா தேசம். [39] பிராமணர். [40] இது ஒட்டர தேசத்துக்குப் பக்கத்திலுள்ள தென்கோசலம் அல்லது மகாகோசலம் என்று கூறப்படும் பகுதியாகும். [41] போர்முனை.

[42] தண்டபுத்தி என்பது பீரார் என்று சிலரும் பீஹார் என்று வேறு சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அது ஒட்டரதேசத்துக்கும், வங்காளத்துக்கும் மத்தியில் உள்ள நாடாக இருத்தல் வேண்டும் என்பார் R. D. பானர்ஜி (Palas of Bengal p 71) 'தண்டபுத்தி' என்பதைப் படைக்காப்பாக ஒரு தலைவனுக்குக் கொடுக்கப்பட்டு அவனால் அனுபவிக்கப்படும் நிலம் எனக் கொள்ளலாம். கங்கைகொண்ட சோழன். பக். 84

[43] அக்காலத்தில் வங்காளத்தின் ஒரு பாகத்திற்கு 'ராடா' (Radha) என்று வழங்கிவந்த நிலப்பரப்பே தமிழ்க் கல்வெட்டுகளில் லாடதேசம் என்று குறிக்கப்படுவதாகும்.

[44] கோவிந்தசந்தனைப் பற்றியும் முன்னர் கூறிய தண்டபுத்தி, லாடதேசம் இவற்றை முறையே ஆண்டுவந்த தன்மபாலன், இரணசூரன் இவர்களைப் பற்றிய செய்தி வேறொன்றும் கிடைக்கவில்லை. கிழக்கு வங்காளத்தில் கோவிந்த சந்தன் என்பவனைப் பற்றி கதைகள் வழங்குவதால் உண்மையில் அவ்வரசர்கள் இருந்தனரெனக் கொள்ளலாம்.

[45] இப்போதைய கிழக்கு பாகிஸ்தான் (East Bengal).

[46] காலுக்கு அணியும் கழலையும் கடகங்களையும் காதணியையும் அணிந்தவனை.

பாலனை[47] வெஞ்சமர் விளாகத் தஞ்சுவித்தருளி, யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திரலாடமும்[48] வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல்க்கங்கையும்[49] அலைகடல் நடுவுட் பல கலஞ்செலுத்திச்[50] சங்கிராம விசையோத்துங்க பன்மனாகிய கடாரத்தரைசனை[51] வாகயம் பொருகடல்[52] கும்பக்கரியொடு மகப்படுத்துரிமையில் பிறக்கிய பெருநெதிப் பிறக்கமும்,[53] ஆர்த்தவனகனகர்[54] போர்த்தொழில் வாச

---

47 மயிபாலன் > மஹீபாலன். 44-ம் குறிப்பிற் கூறிய மூவரும் இவன்கீழ் சிற்றரசர்களா யிருந்தவராவர். இவனை 'அஞ்சுவித்தருளி' என்று கூறுவதால் இவனைப் போரில் புறங்காணவில்லையோ என்ற ஐயம் எழுகிறது.

48 இது முன்கூறிய 'ராடா' என்ற பகுதிக்கு வடக்கே கடற்கரையோரம் இருந்திருக்க வேண்டுமென யூகிக்கவேண்டியுள்ளது. இக்காலத்து குஜராத் தேசம் என்பாரும் உண்டு.

49 எரிபுனல் கங்கை - ஓடுகின்ற நீரையுடைய கங்கை. வெறிமலர் தீர்த்தந்து - வாசனைமிக்க மலர் நிறைந்த புண்ணிய நீர். கங்கை புண்ணிய நதியாகக் கருதப்பட்டமை இத்தொடரால் தெளிவாம்.

50 அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்தி - இத்தொடர் சோழ மன்னர்கள் பெரும் கடற்படை யுடையவர் என்பதைக் காட்டும்.

51 கடாரத்து அரசனை சங்கிராம விஜயோத்துங்க பன்மனை. கடாரம் மலேயா தீபகற்பத்தின் மேற்குப்பகுதியிலுள்ள கெடா என்று வழங்கப்பெறும் இடமாகும். டாக்டர் உல்ஷ் இதை இராமநாதபுரம் ஜமீன்தாரியிலுள்ள ஒரு தாலூகாவின் தலைநகரமென்று கொண்டனர். கூறப்பட்ட மன்னன் பாண்டியன் என்பதும் அவர் கருத்தாம்.

52 வாகை கொண்ட பெரிய போர்க்களத்தில்.

53 உரிமையில் பிறக்கிய பெருநெதிப் பிறக்கமும் - உரிமை மனைவிகளைப்போல் விளங்கும் பெருஞ் செல்வத்தையும்.

54 ஆர்த்து அவன் அகனகர் - ஆரவாரம் செய்து அவனுடைய தலைநகரின் உள்ளே.

லில் விச்சாதிரத் தோரணமும்[55] மொய்த்தொளிர் புனை மணிப்புதவமும்[56] கனமணிக்கதவமும், நிறைசீர் விசையமும்[57] துறை நீர்ப்பன்னையும்[58] வன்மலையூரெயிற் றொன் மலையூரும்,[59] காப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும்[60] காவலம் புரிசை மேவிலிம்பங்கமும்[61] விளைப்பந்தூருடை வளைப்பந்தூறும்[62] கலைத்தக்கோர் புகழ் தலைத்தக்கோலமும்,[63] திதமாவல்வினை மாதமாலிங்கமும்,[64] கலாமுதிர்க் கடுந்திறல் இலாமுரிதேசமும்,[65] தேனக்கவார் பொழில்

---

55 வித்தியாதரத் தோரணம்.

56 புதவம் - கதவு. A small gateway in a larger door, a wicket—Prof K. A. N. Sastri.

57 ஸ்ரீவிஷயம் - இது சுமத்ரா என்னும் தீவிலுள்ள பாலம்பாங் என்னும் இராசதானியாகும். ஸ்ரீ விஜயம் என்றும் வழங்கும்.

58 இது சுமத்ரா தீவின் கீழ்க்கரையில் உள்ள பனி (Pani அல்லது Panei) என்ற ஊராகும்.

59 இது ஜம்பி (Jambi) என்னும் நாடென்று டச்சு ஆராய்ச்சியாளர்கள் முடிவுசெய்துள்ளனர்.

60 இது மகாவமிசத்தில் பப்பாளமா (Papphalama) என்று குறிக்கப்பட்டுள்ளது. இது 'க்ரா' பூசந்திக்குப் பக்கத்தில் இருக்கவேண்டும்.

61, 62 மலேயா தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள ஊர்கள்.

63 இது கிரா பூசந்திக்கு (Isthmus of Kra)த் தெற்கே மலேயா தீபகற்பத்தின் மேல்புறமாக இருந்தது.

64 மலேயா தீபகற்பத்தின் கீழ்புறத்தில் க்வாண்டன் நதியின் முகத்துவாரத்தில் உள்ள தெமிலிங் (Temiling) அல்லது தெம்பிலிங் (Tembeling) என்று கூறப்படும் இடமாகும்.

65 இது சுமத்ரா தீவின் வடபகுதியிலுள்ள தேசமாகும். மார்க்கோபோலோ என்பவர் லம்ப்ரி (Lambri) என்று இதைக் குறித்துள்ளார்.

மானக்கவாரமும்[66] தொடுகடல்க் காவல்க் கடுமுரட்[67] கடாரமும் மாப்பொரு தண்டாற் கொண்ட[68] கோப் பர்கேஸரி[69] பன்மரான் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கி யாண்டு ௧௯-ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால்[70] உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் கங்கைகொண்டசோழபுரத்துக் கோயிலினுள்ளால்[71] முடிகொண்டசோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக்கல்லூரி[72]யில் தாங்ஞ் செய்தருளா இருந்து உடையார் ஸ்ரீராஜ ராஜ ஈஸ்வரமுடையார் கோயிலில்[73] ஆசார்ய்ய போகம்[74] நம் உடையார் ஸர்வ்வசிவபண்டி த[75] சைய்வாசார்ய்யர்க்கும் இவ்வுடையார் சிஷ்யரும் ப்ரசிஷ்யருமாய் ஆர்ய்ய தேசத்தும் மத்திய தேசத்தும் கௌட[76] தேசத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கே ஆட்டாண்டுதோறும்

---

[66] நக்கவாரம்—நிக்கோபர் என்று இப்போது வழங்கும் தீவுகளைக் குறிக்கும்.

[67] கடுமுரண்—வலிமை பொருந்திய.

[68] திண்டாற்கொண்ட—சேனையால் கொண்ட.

[69] இறுதியிலுள்ள விளக்கக்குறிப்பு காண்க.

[70] இக்கல்வெட்டு தோன்றிய காலம் இராசேந்திரன் I அரியணையேறிய 19-வது ஆண்டு 242-வது நாளாகும்.

[71] கோயிலினுள்ளால்—அரண்மனையின் உட்பகுதியில்.

[72] தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி — பூசிப்பதற்கமைந்த இடம்.

[73] தஞ்சையிலுள்ள ஆடவல்லான் கோயிலான இராசராசேச்சுரம்.

[74] ஆதிசைவர் அனுபவிக்கவேண்டிய மான்யம்.

[75] சர்வ சிவ பண்டிதர்—கங்கைகொண்ட சோழனுடைய குரு. இக்கல்வெட்டினால் தருமம் பெறுபவர் (Donee).

[76] வங்காள தேசம்.

இத்தேவர் கொயிலில் ஆடவல்லானென்னும் மரக்காலால்[77] உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக்கல நெல்லு ஆட்டாண்டுதோறும் சந்திராதித்தவல் பெறத் திருவாய் மொழிந்தருளத் திருமந்த்திரி ஓலை[78] செம்பியன் விழுப்பரையன் எழுத்தினால்......த்திருவாய்க் கேழ்வி[79]ப்படி கல்லில் வெட்டித்து[80] இது இவ்வம்சத்துள்ள சைய்வ்வ ஆசார்ய்யர்களே, இத்தன்மம் ரக்ஷிக்க.

## விளக்கங்களும் குறிப்புகளும்.

1. முதலாம் இராசேந்திரன்:—இக்கல்வெட்டு குறிக்கும் சோழ மன்னனான இராசேந்திரன் I இராசராசனுக்குப் (I)பின் அரியணையேறியவன். தந்தையுடன் சேர்ந்திருந்து வளர்த்த சோழப் பேரரசைப் பட்டமெய்தியதும் பெரிய தனது கப்பற்படை வலியைக்கொண்டு கடாரம் வரை சென்று சோழராட்சியைப் பரப்பிப் பெருமை பெற்றவன் இவனே. இவன் கி. பி. 1014-முதல் 1042-வரை ஆட்சி புரிந்தான். வடக்கே கங்கை வரை சென்று வெற்றி கொண்டவன் ஆதலின் கங்கைகொண்ட சோழன் என சிறப்புப் பெயர் பெற்றான். இவன் ஆட்சிப் பெருமையை நமக்குத் தெரிவிப்பது இன்றுள்ள கங்கைகொண்ட சோழீச்சுரமாகும். இவனுடைய மெய்க்கீர்த்திகள் ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும் புதுப்பிக்கப்பட்டு எல்லா வெற்றிகளையும் விடாது தன்னுள் அடக்கித் திகழ்வன. அவை 'திருமன்னி வளர' என்று தொடங்குவன. இவனுடைய மனைவியர் திருபுவன அல்லது

[77] கல்வெட்டு 2 குறிப்பு 26 காண்க.

[78] அரசனுடைய ஆணையை எழுதுவோர்.

[79] அரசன் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டு வந்து திருமந்திர ஓலையிடம் அறிவிப்போர்.

[80] கல்லில் வெட்டப்பட்டது.

வானவன் மகாதேவியார், முக்கோக்கிழான், பஞ்சவன் மாதேவியார், வீரமாதேவி முதலியோராவர். இவனுடைய மக்கள் இவனுக்குப்பின் பட்டமெய்திய இராச திராசன், இராசேந்திரன், வீரராஜேந்திரன் என்னும் மூவராவர் பெண்கள் அருண்மொழி நங்கையும், அம்மங்காதேவியுமாவர். அம்மங்காதேவி கீழைச் சாளுக்கிய முதலாம் இராசராசனுக்கு மணம் முடிக்கப்பட்டாள். இவர்களுக்குப் பிறந்தவனே பின்னர் முதல் குலோத்துங்கன் என்ற பட்டத்துடன் சோழ அரியணை ஏறியவனுவன்

2. பரசுராமன் வரலாறு:-பரசுராமன் ஜமதக்னி முனிவரின் மகன். கார்த்தவீரியார்ச்சுனன் என்ற க்ஷத்திரியன் தன் தந்தையைக் கொன்ற காரணத்தால் க்ஷத்திரிய குலத்தையே அழிக்கத்தொடங்கி, 21 தலைமுறைகளாக அரசர்களைக் கொன்று, பின் புகார் நகர மடைந்து, அங்கு அரசனுயுள்ளவன் ஒரு வேசியின் மகன் என்றறிந்து, அக்குலத்தவர் எல்லோரும் அழிந்துவிட்டமையால் இச்சாந்திமத் தீவையடைந்து சினந்தணிந்தவனாய்த் தவமேற்கொண்டான்.

3. பாண்டியன் முத்தாரம் பெற்றது :—மூவேந்தவரின் தமிழ் நாடு வற்கடம் உற்றமையால், உக்கிரப் பாண்டியனென்பான், சேர, சோழ மன்னர்களுடன் அமராபதியடைந்து, இந்திரனை மழைவளம் வேண்டினன். இந்திரன் விருப்பப்படி சேரசோழர் அவனிட்ட இருக்கைகளில் அமர, பாண்டியன் மட்டும் அவர்களுடன் அமராது இந்திரனுடன் சமமாக அமர்ந்தனன். இதைக்கண்ட இந்திரன் சேர, சோழர்களுக்கு மழைவளம் அருளி, கர்வத்துடன் அமர்ந்திருந்த பாண்டியன் கழுத்தில், பலபேர் கூடித் தூக்கும், கனமிக்க ஒரு முத்துமாலையைப் பொய்யுரைகள்

பல கூறி, இட்டனன். பாண்டியன், மாலையின் பாரத்தைப் பொருட்படுத்தாது, அதை அணிந்தவனைத் தன் நாடு திருப்பினன்.

2. முதலாம் இராசேந்திரன் கடாரம் கொண்டது:—இம்மன்னனுடைய கப்பற்படைகள் கடல்கடந்து கடாரம் கொண்ட செய்தி முதன்முதல் இவன் ஆட்சியின் 13-ம் வருட கல்வெட்டில்தான் பேசப்படுகிறது. ஆதலால் இவன் கடாரம் கொண்டது சுமார் கி. பி 1024-ல் இருக்க வேண்டும். திருவாலங்காட்டுச் செப்பேடுகளின் வடமொழிச் சுலோகங்கள் இவன் கடாரம் கொண்டதைக் குறிப்பிடுகிறதே தவிர, அதைப்பற்றிய விவரங்கள் முழுவதும் தமிழிலுள்ள மெய்க்கீர்த்தியில்தான் அதிகம் காணப்படுகின்றன.

கலிங்கத்துப் பரணியில் 'குளிறு தெண்டிரைக்குரை கடாரம்' என்றும், 'பரக்குமோதக் கடாரம் அழிந்த நாள்' என்றும் வரும் அடிகள் கடாரம் கடற்கரையோரத்தில் உள்ளது என்பதைக் காட்டுகின்றன.

ஆனல் இராசேந்திரன் கல்வெட்டுகளைப் பொருத்தமட்டில் 1891-ல் தான் முதல்முதல் அவை டாக்டர் உல்ஷ் என்பவரால் வெளியிடப்பட்டன. அதற்கு முன்னரே லெய்டன் பட்டையம் வெளியாகிவிட்டது. அதனல் இக்கல்வெட்டை வெளியிட்ட உல்ஷ் (Dr. Hultzsch) இதில் கூறப்பட்ட சங்கராம விஜயோத்துங்கவர்மனை லெய்டன் பட்டையத்தில் கண்ட மார விஜயோத்துங்கவர்மனின் மகன் எனக் கொண்டனர். மேலும் கிடாரம் என்னுமிடத்தைக் குறித்த அவர் தமிழ்நாட்டின் தெற்கு ஜில்லாக்களில் ஒன்ருன மதுரை ஜில்லாவிலுள்ள இராமநாதபுரம் ஜமீன்தாரியிலுள்ள ஒரு தாலுகாவின் தலைநகரம் என்று குறித்துவைத்தார். ஆனல் கடாரம் என்

பது அலைகடல்களுக்கு அப்பால் உள்ளதாகவே கருதப்பட்டது என்பது லெய்டன் பட்டையங்கள் இதைக் 'கடாஹம்' என்று வழங்கினமையால் தெரியவந்தது. கடாரம சங்க காலத்தில் புகழ்பெற்றிருந்து பட்டினப் பாலையில் காழகம் என்று குறிக்கப்படுவதாயிற்று. "கங்கை வாரியும் காவிரிப் பயனும்—ஈழத்துணவும் காழகத்தாக்கமும்" என்று வரும் பட்டினப்பாலை 190-92 அடிகளைக்காண்க. இதற்குப் பொருள் கூறவந்த ஆசிரியர் நச்சினுர்க்கினியரும், "கடாரத்திலுள்ள நுகரும் பொருளும்" என்று எழுதிவைத்தார். இதன் மூலம், தமிழ் நாட்டின் கடல் கடந்த கிழக்கு திசையில் இருக்கும் ஓர் இடம் என இதைக்கொண்ட கனகசபைப்பிள்ளையவர்கள் கடாரம் என்பது (ஸ்ரீ) கெட்டாரா என்று வழங்கிய பழங்கால புரோம் (Ancient Prome known as (Sri) Khettara) என்று குறிப்பிட்டார்கள். எவ்வாருயினும் கீழ்க்கடலுக்கப்பால் கடாரம் அல்லது கிடாரம் என்ருெரு இடம் இருந்ததென்றும், தமிழர்கள் பழங் காலந்தொட்டே அவ்விடத்துடன் வாணிபம் செய்து வந்தனரென்பதும் தெளிவாயிற்று. பின்னர் கிடைத்த சீனதேசக் குறிப்புகள் Kie-teh என்று வழங்கிய தேசமே கடாரம் என்பது தெளிவாக்கவே, அது சீனுவிலிருந்து தென்னுட்டிற்கு வரும் வழியில் இருந்ததென்பதும், அங்கு I-tsing என்ற சீனன் இருமுறை தங்கினுன் என்பதைக்கொண்டு மலேயா தீபகற்பத்தின் மேல் கரையின் தென்பகுதியில் இப்பொழுது கெடா (Kedah) என்று வழங்கப்படும் இடமே நம் இராசேந்திரன் பிடித்த கடாரம் என்பதும், அது அக்காலத்தில் மிகப் புகழ் பெற்ற முக்கிய துறைமுகமாக இருந்ததென்பதும் தெரியவந்தது.

## 4. கணவதிநல்லூர் சாசனம்*

1. இக்கல்வெட்டு இருக்குமிடம்:—திருச்சிராப்பள்ளி ஜில்லா, கரூரிலுள்ள பசுபதீச்சுரர் கோயிலின் தென்புறச் சுவரிலாகும்.

2. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன்:—பரகேசரி இரண்டாம் இராசேந்திரசோழன். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 1052-முதல் 1062-வரையாகும்.

3. இக்கல்வெட்டுத் தோன்றிய காலம்:—இவன் ஆட்சி தொடங்கி 9 ஆண்டுகட்குப்பின் (கி. பி. 1052 + 9 =) கி. பி 1061-ல் ஆகும்.

4. இவன் மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்:—தன் தமையன் முதலாம் இராசாதிராசனுடன் தொடர்ந்து சென்று சாளுக்கியரின் இரட்டப்பாடியைப் பிடித்து, கிருஷ்ண நதிக்கரையிலுள்ள கொப்பம் என்ற இடத்தில் சோழர்களை எதிர்த்த சாளுக்கிய மன்னனை ஆகமவல்லன் என்பானுடன் போரிட்டு, அவன் சேனையை அழித்து, அவனுடைய யானை, குதிரை, பெண்டு, பொக்கிஷம், ஒட்டகம் இவற்றைப் பிடித்துக்கொண்டான். வீரர்களால் அப்போர்க்களத்திலேயே முடிசூட்டி வைக்கப் பட்டான்.

5. சாசனத்தின் நோக்கம்:—இரண்டாம் இராசேந்திரன் அதிராச மண்டலத்து வெங்காலநாட்டு கணவதி நலலூரில, கூறப்பட்ட நான்கு எல்லைக்கும் நடுவிலுள்ள நன்செய் புன்செய் நிலங்களைத் திருவாநிலை மகாதேவர்க்கு வேண்டும் நிபந்தங்களுக்குத் திருநாமத்துக் காணியாகக் கொடுத்தான்.

---

* S. I. I., Vol. III, Part I, Page 39.

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் மருவிய செங்கோல் வேந்தன் றன் முன்னோன்[1] சேனை பின்னதுவாக[2] முன்னெதிர் சென்று இரட்டைப்பாடி யேழரையிலக்கமுங்[3] கொண்டு எதிரமர் பெருது[4] எண்டிசை நகம் பறையது கறங்கப்[5] பேராற்றங்கரைக்[6] கொப்பத்து[7] வந்தெதிர்த்த ஆஹவ மல்லன்றன் பெருஞ்சேனை யெல்லாம் படப்பொருது பாரதுநிகழப்[9] பசும்பிணமாக்கி[10] ஆங்கவன[11]ஞ்சிப் புறக்கிட்டோட[12] அவனுனையுங் குதிரையும் பெண்டு[13] பண்டாரமும் ஒட்டகத்தொடு அகப்படப்பிடித்து திசையது நிகழ[14] வீரர் அவிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தருளிய கோப்பரகேசரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவற்கு[15] யாண்டு ௯-வது

---

[1] தன் தமையனாகிய முதலாம் இராசாதிராசன்.

[2] பின்வாங்கி செல்ல (புறங்காட்டித் தோல்வியுற)

[3] 2-வது கல்வெட்டு, குறிப்பு 14 காண்க.

[4] எதிர் அமர் பெருது—எதிரில் பகைவர் எதிர்ப்பாரின்றி.

[5] எட்டுத் திக்குகளிலும் உள்ள மலைகளில் போர்ப்பறை முழங்க

[6] பெரிய ஆற்றின் கரை--இது கிருஷ்ண நதியாகும்.

[7] கொப்பம்—அங்குள்ள ஒரு ஊர்.

[8] ஆகமவல்லன்—இவன் மேலைச்சளுக்கிய அரசன்.

[9] பாரது நிகழ—நிலப்பரப்பு நெடுகிலும்.

[10] பசும்பிணமாக்கி-புதிய பிணங்கள் கிடக்குமாறு செய்து.

[11] அவன்—ஆகமவல்லன். [12] தோல்வியுற்று ஓட.

[13] பட்டக் கிழத்தியர் அல்லாத பிறமகளிர்.

[14] எட்டு திசைகளிலும் புகழ் பரவ.

[15] கோப்பரகேசரி இரண்டாம் இராசேந்திரன்.

அதிராசராச மண்டலத்து[16] வெங்கால நாட்டு[17] கணவதிநல்லூர் கீழ்பாக்கெல்லை[18] எருத்துக் குளத்துக்கு[19] மேற்கும் வடபாக்கெல்லை நாட்டுப் பெருவழிக்கு தெற்கும், தென்பாக்கெல்லை ஆற்றுக்கு வடக்கும், மேல்பாக்கெல்லை இராஜமஹேந்திரன் வதிக்கு[19a] கிழக்கும் இன்னுன் கெல்லைக்குட்பட்ட நில நஞ்சை புஞ்சை திருவாநிலை மஹாதேவற்கு* வேண்டும் நிமந்தங்களுக்குத் திருனமத்துக் காணி[20] யாக உடும்போடி[21] ஆமைதவழ்புற்று[22] எழுந்த இடம் கற்றுப்புல்[23] பேரகர[24] முற்றாட்டும்[25] இறுப்பதாக[26] நம் ஓலை குடுக்க[27] திருவாய் மொழிந்

[16] கொங்குநாடு. இது இக்காலத்து கோயம்புத்தூர் சில்லாவும், சேலம், திருச்சி சில்லாக்களின் ஒரு பகுதியும் கொண்டதாகும்.

[17] அதிராசராச மண்டலத்தின் உட்பகுதியாகும்.

[18] கிழக்கு எல்லை. [19] ஒரு குளத்தின் பெயர்-இயற்பெயர் காரணப் பெயராகக்கொண்டு எருதுகள் குளிப்பாட்டும் குளம் என்பாரும் உண்டு.

[19a] வதி - வழி. *கருவூர் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர்.

[20] திருனமத்துக் காணி - சிவபெருமானுக்குரிய நிலம்.

[21] உடும்போடி - காடு பொருந்திய பகுதிகள்.

[22] ஆமைதவழ்புற்று - வளம் பொருந்திய பகுதி.

[23] கற்றுப்புல் > கன்றுப்புல் — கன்று புல் மேய்தற்குரிய இடம்.

[24] பேரகரம் - பார்ப்பனர்கள் குடியிருக்கும் பெரிய இடம்.

[25] முற்றாட்டு - சோதிடர், புலவர் இவர்கட்குக் கொடுக்கப்பட்ட இடம்.

[26] கொடுப்பதாக.

[27] நம் உத்தரவு கொடுக்க. ஓலை - உத்தரவு.

தருளினா ரென்று திருமந்திரவோலை[28] க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு[29] பனையூர் நாட்டு[30] நேர் வாயிலுடையான் தாழி[31] திருப்பனங்காடு உடையானு[32]ன வானவன் பல்லவதரையன்[33] எழுத்து. திருமந்திர ஓலைநாயகம்[34] இராஜராஜனுன தொண்டைமான்[35] எழுத்து. ஊரான் உத்தம சோழனுன இராஜராஜ பிரஹ்மாதிராயன்[36] எழுத்து. அரையன்[37] இராசராசனுன வீர ராஜேந்திர ஜெயமுரி நாடாழ்வான்[38] எழுத்து. உடன்கூட்டத்து அதிகாரி[39]களில் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டு ஜெயங்கொண்ட சோழநல்லூருடையார் உதைய திவாகரன் கூத்தாடியாரான வீர ராஜேந்திர மழவராயன்[40] எழுத்து. இவை பன்மாஹேச்வர ரக்ஷை.[41]

---

28 திருமந்திர ஓலை - அரசனது ஆணையை எழுதுவோர்.

29 இது தஞ்சை ஜில்லாவில் அரிசிலாற்றுக்கும் குடமுருட்டி ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். முதற் குலோத்துங்கன் காலத்தில் குலோத்துங்க சோழவளநாடு என்று பெயர் பெற்றதும் இதுவேயாகும்.

30 மேற்கூறிய க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டின் பதினெரு பிரிவுகளில் ஒன்று.

31 இது குடிப்பெயர்.

32 இது இயற்பெயர். 33 இது பட்டப்பெயர்.

34 அரசனது ஆணையை எழுதுவோர்க்குத் தலைவராய் இருப்பவர். 35 இது பட்டப்பெயர்.

36 இது பார்ப்பனர்களுக்குக் கொடுக்கப்பட்டப் பட்டப் பெயர்.

37 இது நாட்டின் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டப் பட்டப் பெயர்.

38 இது பட்டப்பெயர்.

39 அரசனது மந்திராலோசனைக்கு உரியவர்.

40 இது பட்டப் பெயர்.

41 பன்மாகேஸ்வர ரக்ஷை — பல சிவனடியார்கள் இதைக் காப்பார்களாக.

## வரலாற்று விளக்கங்கள்

1. **இரண்டாம் இராஜேந்திரன்:**—இரண்டாம் இராசாதிராசனைத் தொடர்ந்து இவன் சோழ மன்னனாய் விளங்கியவன். இவன் ஆட்சி காலம் கி. பி. 1054 முதல் 1062 வரையாகும். இவன் தலைநகரம் கங்காபுரியாகும். இவன் மனைவி பெயர் கிழானடிகள். மகள் மதுராந்தகி. மதுராந்தகி கீழைச் சளுக்கிய இளவரசனான இரண்டாம் இராசேந்திரனை மணம் புரிந்தாள். இந்த இரண்டாம் இராசேந்திரனே பின்னர் முதலாம் குலோத்துங்கன் என்ற பட்டத்துடன் சோழநாட்டு அரியணையில் அமர்ந்தான். இவனுடைய மெய்க்கீர்த்திகளெல்லாம் இரண்டாம் ஆண்டுமுதல் 'திரு(மகள்)மருவிய' என்றும், நான்காம் ஆண்டு முதல் ஒன்பதாம் ஆண்டு வரை 'திருமாது (அல்லது மாதர்) புவியெனும்' என்றும் தொடங்குவனவாம்.

இவன் செய்த போர்களில் முக்கியமானவை கொப்பத்திலும் (இது கித்ராப்பூர் என்று இப்பொழுது வழங்கும்.) கூடற் சங்கமத்திலும் மேலைச் சளுக்கியர்களை எதிர்த்து வெற்றி கொண்டவையாகும்.

2. **கொப்பத்துப் போர்:**—கொப்பம் என்பது பேராற்றங்கரை யென்னும் கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள ஊராகும். 'செப்பரும் தீர்த்தத்துக் கொப்பத்தகவையில்' என்னும் கல்வெட்டுப் பகுதியால் இது ஒரு புண்ணியத் தலமென்று தெரிகிறது இவ்வூர் கோலாப்பூருக்குத் தென்கிழக்கில் 30 மைலுக்கு அப்பால் இருக்கும் இக்காலத்து கித்ராப்பூர் (Khidrapur) என்பர். இங்குதான் (விசய) ராஜேந்திரன் II-ன் தமையனான முதலாம் இராசாதிராசனுக்கும் மேலைச் சளுக்கிய அரசனான ஆகமவல்லனுக்கும் பெரும்போர் மூண்டது. முதலாம் இராசாதிராசன் தானே ஒரு படையைத் திரட்டிக்

கொண்டு முதலில் தூசிப் படையுடன் போர்க்களம் புகுந்தான். தன் தம்பி இராசேந்திரனின் (II) படையைப் பக்க பலமாக அருகில் வைத்திருந்தான் வீராவேசங் கொண்ட சாளுக்கிய படை யானைமீதிருந்த சோழ மன்னனைக் கொன்றுவிடவே அவன் 'இந்திரலோகம் சென்று தேவர்களுக்கு விருந்தாயினன்'. அதனால் சோழர்களின் பெரும்படை தலைவனின்றிச் சிதறுண்டது. இதை அறிந்த இரண்டாம் இராசேந்திரன் போர்முரசு கொட்டிப் போர்க்களம் புகுந்த சோழப் படையினருக்குத் தைரிய மூட்டி, கடும்போர் புரிந்தான். அவ்வாறு மூண்ட பெரும்போரில் சோழ வீரர் பலர் இறந்தனர். எனினும் இராசேந்திரன் அஞ்சானாய் வீராவேசத்துடன் போர் செய்து ஜெயசிம்மன் உட்பட பல பெரும் சளுக்க வீரர்களையும், சளுக்கி மன்னனின் சகோதரன் தசபன்மனையும் கொன்று குவித்தான். சளுக்கப் படையினர் படுதோல்வியுற்று மேற்கு கடல் பக்கம் சென்று தப்பினர். இவ்வாறு போரில் வெற்றிகொண்ட இராசேந்திரன் கணக்கற்ற குதிரைகள், யானைகள், ஒட்டகங்கள் இவற்றையும் பகைவரது வராகக் கொடியையும், சத்தியவை, சங்கவை முதலான பகைவன் பெண்டுகளையும் கைக்கொண்டவனாய், அப்போர்க்களத்திலேயே வீராபிஷேகம் செய்து கொண்டான்.

3. க்ஷத்திரிய சிகாமணி வளநாடு :—இது தஞ்சை ஜில்லாவில் அரிசிலாற்றுக்கும் குடமுருட்டியாற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும். இதற்கு வடகடுவை நாடு என்றும் பெயர் உண்டு. இது அளநாடு, இன்கண் (எண்கண்) நாடு, (திரு) மருகல் நாடு, முறையூர் நாடு, பனையூர் நாடு, பட்டினக் கூற்றம், சேற்றூர்க் கூற்றம், தேவூர் நாடு, திருநறையூர் நாடு, திருவாரூர்க் கூற்றம், விளநாடு

என்னும் பதினொரு பிரிவுகளாயுள்ளது. இப்போதைய நன்னிலம் தாலுகாவின் பெரும்பகுதிகள் இதனுள் அடங்கியுள்ளன. இவ்வளநாடு முதல் இராசராசன் கால முதல் முதற்குலோத்துங்கன் தன் பெயரை இந் நாட்டிற்கு இடும்வரை இப்பெயருடனேயே விளங்கியது. முதற்குலோத்துங்கன் கால முதல் குலோத்துங்க சோழ வளநாடு என்னும் பெயரை இது எய்திற்று.

4. உடன்கூட்டம்:—சோழ அரசர்கள் தாங்களே ஆட்சியின் ஆணையாளராயிருந்து யாவற்றையும் செய்து வந்தனர். அவர்கள் விரும்பியவாறு செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு. எனினும் அவர்கள் தங்களுடைய அமைச்சர்களைக் கலந்தே ஆட்சி புரிந்து வந்தனர். இத் தகைய நிலையிலுள்ளவர்களையே 'உடன் கூட்டம்' என்று கருத வேண்டியிருக்கிறது. 'கூட்டம்' என்ற சொல் பெருங் குழுவைக் குறிக்கும். 'கூட்டப் பெருமக்கள்' என்று கிராம ஆட்சிக் குழுவினர் அக்காலத்து அழைக்கப் பட்டமையைக் காண்க. 'உடன்' என்ற சொல் 'சேர்ந்திருத்தல்' என்று பொருள்படும். முதல் குலோத்துங்கனின் ஒரு கல்வெட்டு 'உடன் கூட்டத்தி'ன் நிலவரிப் பிரிவைப்பற்றி கூறுகிறது. இதிலிருந்து நாட்டாட்சியின் அங்கமான ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு முதல்வர் இவ்வுடன் கூட்டத்தில் இடம் பெற்றிருந்தமை தெளிவாகிறது. இவ்வாறு இவர்கள் அரசனுக்கு வேண்டியவற்றை எடுத்துரைத்தும், அவர் தம் ஆணைகளை வெளியில் உள்ளோருக்கு விடுத்தும் வந்தனர். இவர்கள் வேலை இப்போதைய மந்திரி சபை (Cabinet) களை ஒத்திருந்தாலும், இவர்கள் 'பல்லவராயர்' என்ற முதன் மந்திரிக்கு உட்பட்டவர்களாகவே இருந்து வந்தனர்.

# 5. அமண்பாக்கம் சாசனம் *

1. இக் கல்வெட்டு இருக்குமிடம் :-செங்கற்பட்டு ஜில்லா மணிமங்கலம் என்ற ஊரிலுள்ள இராசகோபாலப் பெருமாள் கோயிலின் உட்பிரகாரத்து, கீழ்புறச் சுவராகும்.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன் :—நான்காம் கல்வெட்டில் குறிக்கப்பெற்ற இரண்டாம் இராசேந்திர சோழன். இவன் ஆட்சி காலம் கி. பி. 1052 முதல் 1062 வரையாகும்.

3. இக் கல்வெட்டு தோன்றிய காலம் :—இவன் அரியணையேறிய 4-வது ஆண்டு 82-வது நாள். அதாவது கி. பி. 1052-வது ஆண்டாகும்.

4. இவனுடைய மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகளாவன :—(1) இராசேந்திர சோழன் தன் கிளைஞர்களுக்குப் பட்டம் கொடுத்து, மகுடம் சூட்டியது. (இதன் விவரம் விளக்கம் 1-ல் காண்க) (2) சளுக்கிய மன்னனுகிய ஆகமவல்லன், இராசேந்திரன் இரட்டமண்டலத்திலுள்ள பல நதிகள், நகரங்கள், நாடுகள் இவற்றை அழித்துவிட்டானென்று கேட்டு சோழன்மீது போர் தொடுத்தான். ஆகமவல்லன் விட்ட அம்புகள் சோழன் பட்டத்து யானையின் முகத்திலும், சோழனுடைய துடையிலும் தைத்தன (இச்சோழன் இராசாதிராச னுதல் வேண்டும்) சோழனுடைய வீரர்கள் பலர் மடிந்தனர். சோழன் (இராசேந்திரன்) எய்த பல அம்புகளுக்கு, ஆகமவல்லனுக்குத் துணையாக வந்த ஜயசிங்கன், புலிகேசி முதலியோர் இறையாயினர். ஆகமவல்லன் தன் சேனுதிபதிகளான ஏவன் முதலியோருடன் ஓடிவிட்டான். இராசேந்திரன் அவனுடைய சத்துருபயங்கரன் முதலிய

* S. I. I., Vol III, Part I, p 59.

அரசு யானைகள், பரிசன், ஒட்டகநிரைகள், வராகக் கொடி, இராசபரிசந்தம் இவற்றுடன், அவன் மனைவியர், காமக் கிழத்தியரையும் கைக்கொண்டு அங்கேயே விஜயாபிஷேகம் செய்து கொண்டான் (3) இலங்கையில் தங்கியிருந்த கலிங்க தேசாதிபதி(?)யாகிய வீரசாலமேகனின் முடியைப் பிடுங்கிக்கொண்டு இலங்கை மன்னனாகிய மானாபரணனின் புதல்வர்கள் இருவரையும் பிடித்துக் கொண்டான்.

5. **சாசனத்தின் நோக்கம்:**—ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து, செங்காட்டுக் கோட்டத்து மாகனூர் நாட்டு ராஜசூளாமணி சதுர்ப்பேதி மங்கலத்து மகாசபையார் சேனாபதிகள் சயங்கொண்ட சோழ பிர்மாதிராயரின் தாயார் காமக்கவ்வையார் பக்கல் பொருள் பெற்று, அவ்வூரின் தென்பாலுள்ள அமண்பாக்கம் என்னும் சிற்றூரில் குறிப்பிட்ட நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலத்தை விலைக்கு வாங்கி காமகோடி விண்ணகர ஆழ்வார்க்குக் கொடுத்தனர்.

ஸ்வஸ்தி ஸ்ரீ திருமாது புவியெனும் பெருமாதர் இவர் தங் மாதேவியர்களாக மீதொளி[1] வெண்குடை யுயர்த்து[2] திண்கலி பெயர்த்து[3] தன் சிறியதாதை[4] யாகிய எறிவலி கங்கைகொண்ட சோழனை[5] பொங்கிதல்[6] இருமடி சோழ[7]

---

[1] மேலே ஒளி விடுகின்ற.

[2] வெண்குடை தன்முடிமேல் உயர்த்து (தன்னைக் கவிந்திருக்கும்படிச் செய்து.)

[3] வலிமையுடைய கலிகாலக் கொடுமையை நீக்கி.

[4] தந்தை.

[5] இவன் முதலாம் இராசராசனின் இரண்டாவது பிள்ளை.

[6] பொங்கிகல் என்பதும் பாடம் = போரில் வலிமைபெற்ற.

[7] இரு மடி இரு முடி அதாவது இரண்டு நாடுகளுக்கு அரசனென்று முடி சூட்டப்பட்டவன்.

னென்றும், பொரு முரட்டன்[8] றிருத்தம் பியர்[9] தம்முள் வென்றிகொள் மும்முடி சோழனை[10]த் தெம்முனை யடு திறற்[11] சோழபாண்டிய னென்றுங் கோழி மன்னெடு கழல் வீரசோழனைப்[12] படிபுகழ்க்[13] கரிகால சோழ னென் றும், பொருதொழில் வாள்வலித் தடக்கை[14] மதுராந்த கனை சோழகங்க னென்றுந் தோள்வலி மேவிகல்[15] பராந் தக தேவனை சோளவயொத்திய ராஜனென்றும்[16], துயரத் தன்போடு[17] கருது காதலருள்[19] இத்தலம் புகழ் ராஜேந் திர சோழனை உத்தம சோழனென்றும் தொத்தணி[20] முகையவி மலங்கல்[21] முடிகொண்ட சோழனை இகல்[22]

---

[8] போர் வல்லமை மிக்க (Warlike).

[9] இளைய சகோதரர்கள்.

[10] சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றிற்கும் அரச னென்று முடி தரித்தவன் மும்முடிச் சோழன்.

[11] தெற்கே உள்ளவர்களைப் போரில் வென்ற வலிமை யுடைய.

[12] கோழி மன்கொடு கழல் வீர சோழனை - உறையூர்க்கு அரசனுயிருந்த கட்டப்பட்ட கழலினை உடைய வீர சோழனை.

[13] பூமிபுகழும்.

[14] போர் செய்யும் தொழிலையுடைய வாளேந்தும் வலிமை யுடைய அகண்ட கையையுடைய.

[15] தோள் வலிமை பொருந்திய ஆற்றலுடைய.

[16] சோழ அயோத்திய ராஜனென்றும்,

[17] துயரத்தன்போடு - who regarded with kindness (their enemies) in distress. (பகைவர்களை ?) அவர்கள் துன் புற்ற காலத்தும் அன்போடு நடத்திய. 'துயதன் அன்போடு என்பது பொருந்து மாறில்லை.

[19] புதல்வர்களுள்.

[20] தொத்தணி - பூங்கொத்துகள்.

[21] அரும்புகள் மலரும் மாலையையுடைய.

[22] வலிமைமிக்க விசயாலயன்.

விசயாலைய னென்றும் புகர்முகத்[23] தேழுயர் களிற்று[24] சொழ கெரளனை[25] வார்சிலை சொழ கேரளனென்றும்[26]. திண்டிறற்[27] கடாரங்கொண்ட சோழனை தினகரன் குலத்து[28] சிறப்பமர்[29] சோள ஜனகராஜ னென்றுங், கனைகடல் படிகொண்ட[30] பலபுகழ் முடிகொண்ட[31] சோழனை சுந்தரச் சோழனென்றுஞ் செந்தமிழ்ப் பிடிகலி[32] ரட்டபாடி[33] கொண்ட சோழனை தோல்புவியாளுடைச் சோழ கன்னகுச்சியராஜ[34]னென்றும், பின்னுந் தன் காதலர் காதலர்[35] தம்முள் மேதகு[36] கதிராங்கனைகழல்[37] மதுராந்தகனை வெல்படைச் சோழ வல்லபனென்று மான சிலைக்கை[38] யொராளனைச் சேவகனை நிருபேந்திர சொழ னென்றும், பருமணிச்சுடர் மணிமகுடஞ் சூட்டிப் படி

---

[23] முகத்தில் புள்ளிகளோடு கூடிய.

[24] ஏழு முழம் உயர்ந்திருக்கும் யானை. இதுவே பட்டத்திற் குரிய யானை என்பர்.

[26] சோழ கேரளனை; முன்னர் சோழபாண்டியன் என்றது காண்க

[27] வலிமை மிக்க [28] சூரிய குலத்து

[29] சிறப்பு பொருந்திய

[30] ஒலி செய்யும் கடலால் சூழப்பட்ட உலகத்தை வென்ற

[31] பலபுகழ் முடிகொண்ட - புகழ்பெற்ற பல (அரசர் களின்) முடிகளைக்கொண்ட

[32] செந்தமிழ் பிடிகல் - (The Rock of support to Pure Tamil) செந்தமிழ் மொழிக்கு உறுதுணையான.

[33] இரட்டபாடி ஏழரை இலக்கம் முதல்சாசனம் பார்க்க.

[34] கன்னக்குச்சியராசன் - கன்னோசிராச்சியத்து அரசன்,

[35] தன் காதலர் காதலர் - பின்ளைக்குப் பிள்ளை; பெயரன் (grandson)

[36] சிறப்பு பொருந்திய

[37] ஒளிவிடுகின்ற ஒலிக்கின்ற வீரகண்டாமணியை அணிந்த

[38] பெருமை பொருந்திய வில்லைக் கையிலேந்திய

மிசை நிகழு நாளினு[39] ளிகல் வெட்டெழுந்து[40] செற்[41]றெண்டிற லிரட்ட மண்டல[42] மெய்தி நதிகளு நாடும் பதிகளு மநேக மழித்தனன் வளவனென்னு[43] மொழிப் பொருள் கேட்டு வேகவெஞ்சளுக்கி[44] ஆகமவல்லன்[45] பரிபவ மெனக்கிதென்[46] றெரிவிழித்தெழுந்து[47] செப்பருந் திரத்த கொப்பத்[48] தகவையில்[49] சென்றெதிரேன் றமர் துடங்கிய பொழுத[50]வன் செஞ்சரமாரி[51] தன் குஞ்சர முகத்தினுந்[52] தன் றிருத் துடையிலுந்[53] குன்றுறள் புயத்தினுந்[54] தைய்க்கவுந் தன்னுடன் களிறேறிய தொடுகழல் வீரர்கள் மடியவும் வகை யாதொரு தனியநேகம்

---

[39] உலகில் வாழுங்காலத்தில்

[40] போரை விரும்பி எழுந்து

[41] செற்று - சினந்து [42] இரட்டபாடி.

[43] நதிகளும், நாடும், பதிகளும் சோழமன்னன் அழித்தானென்று

[44] கோபங்கொண்ட சாளுக்கிய மன்னனாகிய (ஆகமவல்லன்)

[45] இவன் மேலைச் சளுக்கிய மன்னன்.

[46] இது எனக்கு அவமானம் என்று

[47] கண்களில் தீப்பொறி பறக்கும்படிப் பார்த்து எழுந்து

[48] சொல்வதற்கு அரிய திறம்வாய்ந்த கொப்பத்தில்

[49] அகவையில் - இடத்தில்

[50] சென்று எதிர் நின்று அமர் துடங்கியபொழுது - சென்று எதிரே எதிர்த்துப் யுத்தம் தொடங்கிய பொழுது. இப்படி போர் தொடங்கியவன் முதலாம் இராசாதிராசன்

[51] அவன் - ஆகமவல்லன்; வர்ஷித்த அம்பு மழை.

[52] தன் பட்டத்து யானையின் முகத்திலும்

[53] தன்னுடைய அழகிய துடையிலும்

[54] குன்றை ஒத்த புயங்களிலும்

பொருபடை[55] வழங்கி[56]யம், மொய்ம்பமர்சளுக்கி[57] தம்பி ஜயசிங்கனும் போர்ப்புலக்கேசி[58] யுந் தார்த்தசபன்மனு மான[59] மன்னவரில் மண்டலிக சோகனுமான[60] வண்புக ழாளு மாரையனுந்[61] தேனிவர் மட்டவிழலங்கல் மொட் டை யனுந்[61] திண்டிறல் நன்னி நுளம்பனு[62] மெனுமிவர் முதலியர் எண்ணிலி யரைசரை விண்ணகத்தேற்றி வன்னியரேவனும்[63] வயப்படைத்துத்தனுங் கொன்னவில் படைக்குண்ட மயனுப்[64] என்றின்ன வெஞ்சின வரை சரொ டஞ்சிய[65] சளுக்கி குல குல குலைந்து[66] தலைமயிர்

---

[55] வகையால் ஒரு தனி அநேகம் பொருபடை - பல வகை யாலும் ஒப்பற்ற நிறைந்த படைகளை. இப் படை தனியாக உதவிக்கு வைக்கப்பட்டிருந்ததென்பது (as Reserve) ஆசிரியர் கள் கருத்து. இப் படை வந்த பின்னரே சோழர் பக்கம் வெற்றி உண்டாயிற்று.

[56] வழங்கி - போரில் ஈடுபடுத்தி: இப்படி ஈடுபடுத்தியவன் இராசேந்திரன் II ஆவன்.

[57] அந்த வலிமை பொருந்திய சளுக்கியினுடைய

[58] போரில் வல்ல புலிகேசி

[58] மாலை யணிந்த தசபன்மன்

[59] மண்டலத் தலைவனான அசோகய்யனும்.

[60] மிக்க புகழுடன் அரசாளும் மாரையனும்

[61] தேன் துளிர்க்கின்ற மணம் கமழும் மாலையணிந்த மொட்டையனும்

[62] மிக்க வலியுடைய நன்னி நுளம்பனும்,

[63] வன்னியர் ஏவனும் - படைத்தலைவருள் ஏவன் என்று பெயர் உடையவனும்.

[64] பெருமையாகப் புகழப்படுகின்ற படையை யுடைய குண்டமயனும். அல்லது சொல்லுதலைச் செய்கின்ற குண்ட மயனும் ஆம்.

[65] கொடிய சினமிக்க அரசரோடு பயந்துவிட்ட சளுக்கி. இங்கு அரைசர் என்றது படைத்தலைமை வகித்த இளவரசர் களை.

[66] மிக நடுநடுங்கி.

விரித்து வெனுற* நெளித்துப் பின்னுற நோக்கி கால் பரிந்தோடி[67] மேல்கடல் பாய துரத்திய பொழுதச் செருக்களத்தவன் விடு சத்துரு பயங்யரன்[68] கரபத்திர[68] மூல பத்திர[68] ஜாதி பகட்டரை சநேகமு[69] மெட்டு நடை பரிகளு[70] மொட்டக நிரைகளும் வராக வெல்கொடி[71] முதல் ராஜபரிச்சந்தமும்[72] ஒப்பில் சத்தியவ்வை சாங்கப்பை யென்றிவர்முதல் தேவியர் குழாமும்[73] பாவையரீட்மு[74] மெனையன பிறவு முனைவையிற்கொண்டு விஜய அபிஷேகம்[75] செய்து தெந்திசை வயிர்ப் பொர்ப்படை நடாத்திக்[76] கார்க்கடலிலங்கையில் விறற்படைக் கலிங்கர் மன் வீரசலாமேகனைக் கடற்களிற்றொடு மகப்பட கதிர் முடி கடிவித்[77] திலங்கையற் கிறைவன் மாநாபரணங்[78] காதலரிரு வரைக்[79] களத்திடைப் பிடித்து மாப்பெரும்

---

* வெநுற - முதுகுகாட்டி.

[67] கால் பறித்து ஓடி - காலால் வேகமாக ஓடுதல்.

[68] சத்துரு பயங்கரன், கரபத்திரன், மூலபத்திரன் இவர்களை இவன் போரில் பிடித்தான்.

[69] நல்ல சாதியான அரச யானைகள் பலவும்

[70] மிக வேகமுடைய குதிரைகளும் (horses of lofty gait.)

[71] சளுக்கியர்களுடைய கொடி வராகக் (பன்றிக்) கொடியாகும்

[72] அரச முத்திரைகள் அல்லது அடையாளங்கள் (insigna of Royalty).

[73] மனைவியர் கூட்டம்

[74] உரிமைப் பெண்கள் கூட்டமும்

[75] அப் போரில் வெற்றிக்கொண்ட உடனேயே சோழ அரசனாக இவன் (இராசேந்திரன்) முடி தரித்துக்கொண்டான்.

[76] போர் செய்தற்குரிய படையை நடத்தி. தென் திசையில் திக் விஜயம் செய்ய தொடங்கினான் என்க.

[77] பறித்துக் கொண்டு.

[78] இவன் இலங்கை மன்னன். [79] புதல்வர்

புகழ் மிக வளர்த்த கோப்பர கெசரி பன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவர்க்கு யாண்டு நாலாவது நாள் அமஉ[80] ஜயங்கொண்ட சோழ மண்டலத்து[81] செங்காட்டுக் கோட்டத்து[82] மாகணூர் நாட்டு ராஜசூளாமணிச் சதுருப்பெதி மங்கலத்து மஹாஸபையொம். இவ்வாட்டை[83] ஸிம்ஹ நாயற்று[84] அபரபக்ஷத்து அஷ்டமியும் வியாழக் கிழமையும் பெற்ற ரொஹிணி நாள்[85] எம்மூர்ப் ப்ரஹ்மஸ்தான மண்டபத்தே கூட்டக் குறைவறக் கூடியிருந்து[86] எங்களூர் ஸ்ரீமத் த்வாராபதியான[87] ஸ்ரீ காமக் கோடி விண்ணகராழ்வாருக்கு குடுத்த நிலமாவது எங்களூர் தென்பிடாகை[88] அமண்பாக்கத்து நிலங்கீழ்பாற்கெல்லை மண்ணிக் காலுக்கு மேற்கும், தென்பாற் கெல்லை மண்ணிக்காலுக்கு வடக்கும், மேல்பாற் கெல்லை அரைசங் குட்டத்துக்கும் நங்காசி என்னும் புலத்துக்குங் கிழக்கும், வடபாற்கெல்லை பழுவூர் நக்கப் புத்தேரிக்[89] கரைக்குத் தெற்கும், இத்தேவற்கு முன்பு சிலாலேகை பண்

---

[80] இக் கல்வெட்டு இராசேந்திரன் I முடி தரித்த 4-ம் ஆண்டு 32-ம் நாள் எழுந்ததாகும்.

[81] இது தொண்டை மண்டலத்தை இராசராசன் I பிடித்த பிறகு வைத்த பெயர்.

[82] தொண்டை மண்டலத்தில் பண்டுதொட்டு கோட்டம் என்னும் பிரிவே வழக்கிலிருந்தமையால் அவ்வாறே அது விடப்பட்டது. இப் பிரிவு வளநாட்டுக்குச் சமம்.

[83] இந்த ஆண்டிலே

[84] சூரியன் சிம்ம ராசியில் பிரவேசிக்கும் ஆவணி மாதம்.

[85] ரோகிணி நட்சத்திரத்தில் (நாள்-நட்சத்திரம்)

[86] எல்லோரும் ஆஜராகி இருந்து - in full bench.

[87] கண்ணபிரான். [88] சிற்றூர்.

[89] பழுவூர் நக்கன் என்றும் சிவனடியாரால் வெட்டப்பட்ட ஏரி.

ணின நிலத்துக்குத் தெற்கும், ஆக இன்னாற் பாற் கெல்லைக்கும் நடுவுபட்ட நிலனும் ஓடையு முடைப்பும் மேனோக்கின மரமும் கீழ்நோக்கிய கிணறும்[90] இன் னாற்பாற் கெல்லைக்கும் நடுவு பட்ட தெல்லாம் சேனா பதிகள் ஐயங்கொண்ட சோழ ப்ரஹ்மாதி ராஜர்[91] தாயார் காமக்கைவ்வையள் பக்கல் ஸ்வம்[92] கொண்டு சந்த்ராதித்தவற்[93] இன் நிலத்துக்கு இறை இறுத்து[94]க் குடுப்போமானோம் மஹாஸபையோம். ஸபையுளிருந்து கரையிட்டுக்[95] கரைப்பொந்து பணித்த[96] காராம்பி செட்டு நாராயணக் கிரம வித்தனும் இராயூர் சந்திரதேவ அத்தாழிக் கிரமவித்தனும் ஸஹஸ்ண மாதவக் கிரம வித்தனும் பணிப்பணியால்[98] பணிகெட்டு எழுதினேன் இவ்வூர் ஊர்க்கரணத்தான் அலங்காரன் சீராமனேன். இவை என் எழுத்து.

---

[90] மண்ணுக்குக் கீழுள்ள நீரோட்டங்கள்,

[91] இவர் 'சேனாபதிகள்' என அழைக்கப்படுவதால் இவர் அக்காலத்தில் மிக மதிப்புடன் திகழ்ந்தவர் என்று தெரிகிறது. பிர்மாதிராயர் என்ற பட்டம் பிராமணர்களுக்கு உரியதாகை யால் இவர் பிராமணர் என்பது புலனும். மாணிக்க வாசகரும் தென்னவன் பிரம்மாதிராயன் என்று அழைக்கப்பட்டமை காண்க.

[92] ஸ்வம்-பொருள் (Fund). [93] சந்திர சூரியர் உள்ளவரை

[94] வரி நீக்கி. [95] வரப்பு (எல்லை) கிட்டு

[96] மேற்பார்வை யிட்டுவந்த

[97] இது பிராமணருடைய குடிப் பெயர்

[98] பணித்த உத்தரவால்.

இராசேந்திரன் தன் உறவினர்களுக்குச் சிறப்பு செய்தவாறு ;—

| உறவினர் | பெயர் | பட்டம் |
|---|---|---|
| சிறியதாதை :— | எறிவலி கங்கைகொண்ட சோழனுக்கு ... | பொங்கிகல் இருமுடிச் சோழன் என்றும் |
| தம்பியர்களுள் :— | (1) மும்முடிசோழனுக்கு ... | தெம்முனை அடுதிறல் சோழ பாண்டியன் |
| | (2) வீரசோழனுக்கு ... | படிபுகழ்கரிகால் சோழன் |
| | (3) மதுராந்தகனுக்கு ... | சோழகங்கன் |
| | (4) பராந்தக தேவனுக்கு ... | சோழ அயோத்திய ராசன் என்றும் |
| புதல்வர்களுள் :— | (1) இராசேந்திரசோழனுக்கு ... | உத்தம சோழன் |
| | (2) முடிகொண்ட சோழனுக்கு... | இகல் விசயாலயன் |
| | (3) சோழகேரளனுக்கு ... | வார்சிலை சோழகேரளன் |
| | (4) கடாரங்கொண்ட சோழனுக்கு | சோழ ஜனகராஜன் |
| | (5) முடிகொண்ட சோழனுக்கு... | சுந்தரசோழன் |
| | (6) இரட்டபாடிகொண்ட சோழனுக்கு ... | சோழ கன்னகுச்சியராஜன் என்றும் |
| பெயரர்களுள் :— | (1) மதுராந்தகனுக்கு ... | வெல்படைச் சோழ வல்லபன் |
| | (2) ஆனைச் சேவகனுக்கு ... | நிருபேந்திர சோழனென்றும் |

பட்டங்களைக் கொடுத்து மகுடங்களைச் சூடினன்.

## 6. பாக்கூர் சாசனம்*

1 இக் கல்வெட்டு இருக்குமிடம்:—திருச்சிராப்பள்ளி ஜில்லா கரூரிலுள்ள பசுபதீஸ்வரர் கோயிலின் தெற்குச் சுவராகும்.

2. இதில் குறிக்கப்பெற்ற அரசன்:—வீரராசேந்திரன் ஆவன். இவன் ஆட்சி காலம் கி. பி. 1063 முதல் கி. பி. 1:70 வரையாகும்.

3. இக் கல்வெட்டு தோன்றிய காலம்:—கி பி. 1067-ல் ஆகும.

4. இவனுடைய மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகளாவன: (1) உறவினர்கட்குச் சிறப்பு செய்தமை:—தன் தமையனுக்கு இராசராசனென்று பட்டங்கட்டி முடி சூட்டினன். தன் புதல்வருள் கங்கைகொண்ட சோழனுக்குச் சோழ பாண்டியன் என்ற பெயருடன் பாண்டி மண்டலத்தை அளித்தான்; முடிச் சோழனுக்குச் சுந்தர சோழனென்று சுடர் முடிசூட்டி பெருஞ் சிறப்பு செய்தான். தன் உறவினர்களுக்கும் வேறு வேறு இடம் அளித்தான். (2) சாளுக்கியப் போர் (i) முதல் முறையாக வீரராசேந்திரன் பெரும் படையுடன் இரட்டபாடி நாட்டை அடைந்து அங்கு தன்னை எதிர்த்து வந்த ஆகமவல்லனது இரண்டாம் மகனாகிய விக்கலனையும், அவன் சேனாபதியையும் கங்கபாடிப் போர்க்களத்திலிருந்து துங்கபுத்திரை நதிக்கரைக்குத் துரத்திவிட்டான். (ii) மீண்டும் ஆகமவல்லன் ஒரு படையை அனுப்ப அச்சேனை அழியும்படி தாக்கி அவன் சேனாபதியான சாமுண்டராயன் தலையை அறுத்து, அனுடைய ஒரே மகளாகிய

---

* S. I. I. Vol III. Part II. p. 168

நாகலை என்பாளை (இவள் இருகையன் என்பான் மனைவி) முகத்தோடு மூக்கு வேறுக்கினான். (iii) மூன்றாம் முறை ஆகமவல்லன் தன் மக்களான விக்கலன், சிங்களன் என்பவர்களுடன் கூடல்சங்கமத்தில் எதிர்த்தான். இப்போரில் அவர்கள் தோல்வியுற்று ஓடியதுடன், அவர்களுடைய சேனாதிபதிகள் பலர் உயிர்துறந்தனர். வீரராசேந்திரனும் சாளுக்கியருடைய தாரம், சங்கு, குலதனம், பேரி, சூகரக் கொடி முதலியவற்றைப் பறித்துக்கொண்டு திரும்பினான். (3) பிற போர்கள்: பொத்தப்பி வேந்தனையும், சேரனையும் வென்றான். சனநாதனுடைய தம்பியின் தலையை வெட்டினான். சிவல்ல பாண்டியன் மகனாகிய வீரகேசரியைத் தோற்கடித்தான்.

5. சாசனத்தின் நோக்கம்:—வீரராசேந்திரன் தன் ஆட்சியின் 4-ம் ஆண்டில் அதிராசராச மண்டலத்து, வெங்கால நாட்டுப் பாக்கூரில் பயிரிடும் குடிகளிடத்துள்ள நிலங்கள் நீங்கலாக அங்குள்ளோர் செலுத்தும் புரவு, சிற்றாயம், எலவை, உலவை ஆகிய வரிகளும், மன்று பாடு, தண்டம் குற்றம் ஆகிய மூன்று அபராத வகைகளும், காட்டுப் பகுதி, நீர்வளம் மிக்கப் பகுதி, கன்று புல் மேய்தற்குரிய இடம், பார்ப்பனர் குடியிருப்பு, புலவர்களுக்கு அளிக்கப்பட்ட இடம் இவை நீங்கலாகவும், இந்த பாக்கூரிலுள்ளவர் கட்டின காணிக்கடன் பொன் 303 கழஞ்சு ½ மஞ்சாடி ½ மா-வும், நெல் 3,531 கலம் ஒரு தூணியும் கருவூர் திருவானிலை மகாதேவற்கு இறையிலி தேவதானம் திருநாமத்துக்காணியாக, கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள தன் அரண்மனையிலிருந்து நீர் வார்த்துக் கொடுத்தான்.

ஸ்வஸ்திஸ்ரீ திருவளர்[2] திரள்புயத் திருநிலவலேயந் தன் மணிப்பூணெனத்[3] தங்கிப்[4] பன்மணி[5]க் கொற்ற வெண்குடை நிழற்குவலேயத் துயிர்களேப்[6] பெற்றதாயி லும் பெர[7] மற்றுள்ள வறைகழல[8]ரசர் தன்னடியினி லொதுங்க வுறை பிலத்துடைய்[9] கலியது வொதுங்க[10] முறைமையி லரும் பெறல் தமையனே[11] முன் வந்தானே யிரும்புவி புகழ் இராஜராஜனென் றுளிர் மணிமுடி சூட்டி, தன்றிரு மைந்தனுகிய கங்கைகொண்ட சோழனே யெழுயரியானேச் சேனேச்[12] சோழ பாண்டியனென் றுண்டுயர்[13] மணிமுடிப் பாண்டி மண்டலங் குடுத்தரு ளிய[14] வாட்கை வடிகொண்ட கதிர்வேல்முடி கொண்ட

---

[2] இலக்குமி வசிக்கின்ற.

[3] பெரிய பூமியாகிய வட்டத்தை தன் இரத்தினுபரணம் எனத்.

[4] தங்கி > தாங்கி = பாதுகாத்து.

[5] பல முத்துக்களேயுடைய; மணி-முத்து.

[6] பூமியிலுள்ள உயிர்களே.

[7] பெற்றதாயிலும் பெர - பெற்ற தாயைக் காட்டிலும் நன்கு பாதுகாத்து.

[8] அரை கழல் - ஒலிக்கும் வீரக்கழலேயணிந்த.

[9] உறைபிலத்திடை > பிலத்திடை உறை(ய) - பாதாள உலகத்தில் வசித்தல் பொருட்டு (பிலம் - பாதாளம்).

[10] வறுமையானது பதுங்கிக்கொள்ள.

[11] தமையனே - அண்ணனே, இவனுக்கு இராஜராஜன் என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

[12] மிக உயரமுடைய யானேகளின் படை (an army of very tall elephants)

[13] என்றுண்டுயர் > என்று ஈண்டு உயர்ந்த - என்றவாறு இவ்வுலகில் புகழால் உயர்ந்த.

[14] கொடுத்தருளிய.

சோழனை சுந்தர சோழனெனச் சுடர்முடி சூட்டி யந்தமில் பெருஞ் சிறப்பருளித் தன் கிளை வருலகத்தவற்குரிய வகலிடம்[15] வேறு வேறருளி இகல் விளை[16] விருதொடு மலைக்கும்[17] விக்கலன்[18] றன்னோடும் வெஞ்சிலைத் தடக்கை மாசா மந்தரைக்[19] கங்கபாடிக் களத்திடை நின்று துங்கபத்திரிக்கரை புகத்துரந்து[20] அங்கவர் வேங்கை னாட்டிடை[21] மிண்டவர் விட்ட[22] தாங்கரும் பெருவலித் தண்டு கெடத்தாக்கி[23] மாதண்ட நாயக்கன்[24] சாமுண்ட ராஜனைச் சென்றவன் சிரத்தினை யறுத்து மற்றவனொரு மகளாகிய விருகயத்தேவி நாகலை யென்றுந் தோகையம் சாயலை முகத்தொடு மூக்கு வேருக்கி பகைத் தெதிர் மூன்றும் விசையினும்[28] மேன்றெதிர்

[15] ஊர் அல்லது நாடு.

[16] பகையை விளைவிக்கின்ற [17] போர் செய்கின்ற.

[18] விக்கலன் - இவன்மேலைச்சளுக்கிய மன்னனாகிய ஆகமவல்லன் என்பானின் இரண்டாவது மகன். வரலாற்றில் ஆறும் விக்கிரமாதித்தன் என்று பேசப்படுபவன் இவனே.

[19] பெரிய சேனாதிபதிகளை. [20] புகத்துரத்தி.

[21] வேங்கை நாட்டிலே - வெங்கியிலே

[22] மீண்டு அவர் விட்ட - மீண்டும் அவர்கள் (சளுக்கியர்) அனுப்பிய.

[23] சேனை அழியும்படி போரிட்டு.

[24] மாதண்ட நாயக்கன் - பெரிய சேனாதிபதி

[25] சென்றவன் சிரத்தினை - செற்று (சினந்து) அவன் தலையினைக் கொய்து.

[26] இருகயன் என்பானின் மனைவி.

[27] நாகலை என்னும் பெயரையுடைய அழகிய மயில்போன்ற சாயலை உடையவளை. நாகலை என்பாள் இருகையனின் மனைவி; பெரிய சேனாபதியான சாமுண்ட ராஜனின் ஒரே மகள்.

[28] மூன்றுவது தடவையிலும். [29] அவமானம்.

பொருது பரிபவங்[29] தீர்வதெனக் கருதிப் பொருதபுனல் கூடல் சங்கமத்[30] தாகவமல்லன் மகனாகிய[31] விக்கலன் சிங்கள[32] னென்றிவர் தம்மொடும் மெண்ணில் சாமந் தரை[33] வென்றடு தூசி முன்விட்டுத்[34] தன்றுணை மன் னன் தானும்[35] பின்னடுத் திருந்து[36] வட கடலென்ன வகுத்தவந் தானையை கடகளி றொன்றால் கலக்கியுடல் புரிக் கோசலச் சிங்களக் கொடிப்படை முன்னூர்த் தூசி வெண்களிற்றொன் துணித்து[37] கேசவ தண்ட நாயக்கன்[38];

---

[30] பொருபுனல் கூடல் சங்கமத்து - மோதுகின்ற தண் ணீரையுடைய கூடல்சங்கமம் என்ற இடத்தில், இவ்வூர் துங்க புத்திரையும் கிருஷ்ணா நதியும் கூடும் இடத்தில் இருக்கிறது.

[31] மகனாகிய - 'மக்களாகிய' எனப் பன்மையிற் கொள்க.

[32] இவன் ஆகவமல்லனின் இரண்டாவது மகன்.

[33] கணக்கற்ற சேனைத் தலைவர்களை.

[34] அடுதூசி முன்விட்டு - (பகைவரை) அழிக்கும் பலம் பெற்ற தூசிப் படையை முன்னர் போக விடுத்து; தூசிப் படை - படையெடுப்பில் முன்னால் செல்லும் படை. "யாவிரா யினும் கூழை தார் கொண்டு யாம் பொருது மென்றல் ஓம்பு மின்" (புறம் 88) காண்க.

[35] 'தன் துணை மன்னனும் தானும்' என்று உம்மை வரு விக்க.

[36] பின்னால் தூசிப் படையுடன் தொடர்பு அறாமல் பின் னணியில் இருந்து. உத்தரசமுத்திரம் போன்ற பெரிய அணி வகுக்கப்பட்ட அவன் (சளுக்கப்) படையை.

[37] முன்னூர்த்தூசி வெண்களிற் றொன் துணித்து - முன்ன தாகச் சென்ற தூசிப் படையிலுள்ள வெண்களிறு ஒன்றினால் பிளவு படுத்தி. வகுக்கப்பட்ட பெரிய அணியை கடகளிறு ஒன் றால் கலக்கியவன், கோசல சிங்களப் படைகளை வெண்களிறு ஒன்றால் பிளவு படுத்தினான் என்க.

[38] கேசவன் என்னும் பெயரையுடைய சேனைத் தலைவன்.

கேத்தரசன் திண்டிறல் மாரயன்த்[39] திறற் போத்தயனிகல்[40] செய்ய பொற் கோதை மூவேந்தி[41] யென்றூர் தடுத்து[42] பிலனேக[43] சாமந்தரைச் சின்று பின்னஞ் செய்து பின்னை முதலி[44]யாகிய மதுவண[45] னொட விரித்த தலையொடு விக்கலனோடச் செருக் கெழிலழிந்து[46] சிங்களனோட அண்ணல முதலிக ளனைவருமமர் பொற் பண்ணின பகடிழிந் தோட[47] னண்ணிய[48] ஆகவமல்லனும் அவர்க்கு முன்னோட தன்வேக வெங்களிற்றினை விலக்கி வாகை கொண்டங்கவர்[49] தாரமும் மவர் குலதனமும்[50] சங்குமுன் தொங்கலுந்[51] தாரையும்*, பேரியும், மெகட

[39] மாராயன்த் - மாராயன் எனக் கொள்க.

[40] 'போத்தரையன் இரேச்சயன்' என்பதும் பாடபேதம். போத்தரையனும், இரேச்சயனும் ஆகவமல்லனுடைய துணை வேந்தர்கள்.

[41] அன்றி இக் கல்வெட்டுப் பாடத்தைக் கொள்வோமாயின், போத்தரையன், இகல்செய் பொற்கோதை, மூவேந்தி என்ற மூவரையும் ஆகவமல்லனின் துணைவேந்தர்களாகக் கொள்ளலாம்

[42] என்றூர்த் தடுத்து - என்றவர்கள் (மூவரும்) தடுத்து.

[43] பின் அனேக' என்றிருக்க வேண்டும்.

[44] முதலி - சேனாதிபதி.

[45] முதலியின் பெயர் [45] மதுவணன்.

[46] செருக்கும், அதனாலாகிய ஒளியும் மங்க.

[47] அண்ணலாகிய ஆகவமல்லனின் சேனாபதிகளனைவரும் அமர்போர்ப் பண்ணின (பொற் பண்ணின) (போரில் செலுத்தின) பகடுகளை விட்டு இறங்கி ஓட. [48] நெருங்கிய.

[49] வெற்றி கொண்டு அவ்விடத்து அவர்களுடைய (சளுக்கியருடைய) [50] மூலதனம்.

[51] சங்கும் தொங்கலும் என்பது பாடபேதம். * trumpets தாரை.

மயமும்[52], வெண்சாமரையும், காக்கைக் கொடியும்[53], மகர தோரணமும்[54], புஷ்பகப் பிடி[55], போர்க்களிற் றீட்டமும், பாய் பரித்தொரையொடும் பறித்து[56] செய் யொளிர்[57] விசையமணி மகுடம் மிசையெர்டுந் திசை தொறும் சினப்புலி செலுத்தி[58]க் குசை கொளுத்தும் புரவிப்[59] பொத்தப்பி வேந்தனை[60] வாரணை வணை கழல் தொன்றனைத் தாராசானு தன் றம்பியைப்[61] போர்களத் தலங்கல் சூழ்ப்பசுந் தலையறிந்து[62] பொலங்கழல்த் தென் னனை சீவல்லவன் மகன் சிறுவனை மின்னவில் மணிமுடி வீரகேசரியை[63] கதகடகளிற்று லுதைத் திட்டு மத

[52] மேகாடம்பரம்; canopies; விதானம்.

[53] சூகரக் கொடி என்பது பாடபேதம். அதாவது வராகக் கொடியாம் (Boar Banner.)

[54] மகரதோரணம் - மங்கல அலங்காரங்கள்.

[55] புஷ்பகம் என்பது பெண் யானையின் பெயர்.

[56] பாய்தல் செய்யும் குதிரைக் கூட்டங்களை அபகரித்து.

[57] சிவந்து பிரகாசிக்கின்ற.

[58] புலி இலச்சினையிட்ட சேனை (சோழ சேனை) யைச் செலுத்தி

[59] குசை கொளுத்தும் புரவி - பிடரி மயிர் விளங்குகின்ற புரவி; horses which chafed under the bridle - Dr. உல்ஷ்.

[60] காளத்தி மலையைச் சூழ்ந்துள்ள நாடு பொத்தப்பி நாடா கும். இந்நாட்டரசன் பொத்தப்பி வேந்தன் எனப் பட்டான். கண்ணப்பரது நாடும் இதுவே.

[61] வாரணை வணைகழல் தொன்றனைத் தாராசானுதன் றம் பியை—வாரணை வன்கழல் கேரளன் தனை ஜனநாதன் தன் தம்பியை - என்பது திருத்தப் பாடமாகும். கேரளன், ஜன நாதன்—இவை அரசர்களின் பெயர்கள்.

[62] உயிருள்ள தலையை வெட்டி.

[63] சீவல்லவன் என்னும் பாண்டியன் மகனை, சிறுவனை, மின்னலைப்போன்று ஒளிவிடும் கிரீடத்தையுடையை வீர கேசரியை.

கொடு[63]a செயித்து* வரப்பாகாச்[64] செங்கோல் செலுத்தி வேத நீதியை விளக்கி மீதுயர் வீரத் தனிக் கொடித் தியாகக் கொடியொடும் ஏற்பவர் வருகென்று நிற்றம்ப[65] போர்த் தொழி வாய்மையில் நெய்த வீற்றிருந்த[66] மேவரு மனுநெறி விளங்கிடக்[67] கோ இராஜகேசரி பர்ம்மரான உடையார் ஸ்ரீவீரராஜேந்திர தேவற்கு கெங்கை கொண்ட சொழ புரத்துக் கோயிலுள்ளால் திருமஞ்சன சாலையில்[68] எழுந்தருளியிருந்து உதகம் பண்ணி[69] அருளின அதிராஜ ராஜ மண்டலத்து வெங்கால நாட்டுப் பாக்கூர் வெள்ளான் வகையிலிறை முதல் தவிர்த்து[70] யாண்டு ௲ வதுக்கெதிராவது முதல்[71] இவ்வூர் இறையிலி[72]

---

[63]a மதகொடு - அரசனின் பெயர் (?) * வீரத்துடன் வென்று.

[64] எல்லையில்லாத. [65] நிற்றம்ப - 'நிற்ப' - என்பதே சரி.

[66] போர் தொழில் உரிமையில் எய்தி அரசு வீற்றிருந்த எனக் கொள்க.

[67] வீரராஜேந்திரன் மனுநெறி விளங்கிட அரசாண்டமையை நினைவிற் கொள்க. [68] நீராடும் இடம்.

[69] நீர் வார்த்துக் கொடுத்து.

[70] பயிரிடும் குடிகளிடத்துள்ள வரி செலுத்தப்படும் நிலங்கள் நீங்கலாக. (Excluding the tax paying land in the possession of the ryots.)

[71] யாண்டு ௲-வதுக் கெதிராவது - நான்காவது ஆண்டு. உண்டிகள் (Hundies) எழுதுவதில் இன்றும் இம்முறை உள்ளது. ரூ. 400 என்பதை நான்கு நூறு, நாற்பது பத்து என்று எழுதும் வழக்கைக் காண்க. இவ்வாறு பத்திரங்கள் எழுதுவதால் எண்கள் விஷமிகளால் மாற்ற முடியாத நிலையுடையதாகும் சட்ட நுணுக்கம் காண வியப்பளிப்பதாம்.

[72] வரியில்லாத.

தேவதானம்[73] திருநாமத்துக் காணியாக[74] இறை[75] புரவு[76] சிற்றாயம்[77] எலவை[78] யுகவை[79] மன்றுபாடு தெண்ட குற்றம்[80] உடும்போடி[81] ஆமைதவழ் புற்றும்[82] எழுவன முளைப்பன கற்றுப்புற்[83] பெரக் கரமுற் சூட்டும்[84] இவ்வூர் இறைகட்டின காணிக் கடன்[85] பொன்[86] முன்

---

[73] கோயில்களுக்கு விடப்பட்ட நிலம்,

[74] சிவபெருமானுக்குரிய நிலமாக. தேவதானம் என்பது சைவ வைணவக் கோயில்கள் இரண்டிற்கும் பொது; ஆதலின் சிவன் கோயிலுக்கென்பதை வலியுறுத்த 'திருநாமத்துக் காணியாக' என்று கூறப்பட்டது.

[75] இறை - Revenue; காணிக் கடன்.

[76] புரவு - வரிகள்; இறை என்பார் புறநானூற்று பழைய உரையாசிரியர் (புறம் 75 வரி 4 - பார்க்க) காணிக் கடன் நீங்க அரசன் கொள்ளும் பிற வரிகள் எனலாம்.

[77] சிற்றாயம் - சிறு வரிகள் (Small tolls)

[78] எலவை - வரி. நாடென்ற எலவைகளும் (No. 264 of Pudukkottah Ins.) என்று வரும் தொடர்கொண்டு, இது நாட்டுக் காவலுக்கு (Defence of the country) வசூலிக்கப்பட்ட வரியோ என கருதவேண்டியிருக்கிறது. (பாடி காவல்-ஊர்களைக் காப்பதற்காகும் வரிகளாவது சோழர் கல்வெட்டுகளில் வந்துள்ளது.)

[79] உகவை - இதுவும் ஒரு வரி வகையாகும்.

[80] மன்று பாடு, தண்டா, குற்றம் என்பன அக்காலத்தில் விதிக்கப்பட்ட மூன்று வகை அபராதங்களாகும். மன்றுபாடு என்பது மன்றத்துக்குக் கொடுக்க வேண்டிய அபராதம்.

[81] கல்வெட்டு 4 குறிப்பு 21 பார்க்க.

[82] ஷை குறிப்பு 22 பார்க்க. [83] ஷை குறிப்பு 23 பார்க்க.

[84] ஷை குறிப்பு 24 பார்க்க. [85] காணிக் கடன் - நிலவரி.

[86] பொன் - இது அக்காலத்தில் வழங்கிய பெருமதிப்புள்ள நாணயம்; சுமார் 72 குன்றிமணி எடையுள்ளது.

னூற்று முக்கழஞ்ச[87]ரையேமஞ்சாடி[88] அரைமாவும்[89] நெல்லு மூவ்வாயிரத்து அனூற்று முப்பத்தொரு கலனே தூணியும், இந்நாட்டுக் கருவூர்த் திருவாநிலை மஹாதெவற்கு இறுப்பதாக யாண்டுமுதல் இறையிலி தேவதானம் திருனாமத்துக் காணியாக வரியிலிடத்[89a] திருவாய் மொழிந்தருளினபடிக்கு, திருவாய் மொழிந்தருளினூறென்று திருமந்திர ஓலை[90] க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு நேர் வாயிலுடையான் தாழி திருப்பனங் காடுடையான் வானவன்ப் பல்லவரைய னெழுதினூனும் திருமந்திர ஓலை னூயகம்[91] அச்சுதன் இராஜராஜ ப்ரஹ்மாதிராயனும், அரையன் இராஜராஜனுன வீர ராஜேந்திர ஜெயமுரினூ டாழ் வானும் வீரராஜேந்திர மங்கலப் பேரரையனும் இவர்களுடன் ஒப்பிட்டுப் புகுந்த கேழ்விப்படியே[91a] நம் வரியிலிட்டுக் கொள்கவென்ன வீரபத்திரன் தில்லை விடங்கனூன வில்லவ ராஜராஜன் ஏவ இவன் ஏவின படியே உடன் கூட்டத்து அதிகாரிகள்[92] க்ஷத்திரிய சிகாமணி வளனூட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சோழநல்லூருடையான் உதைய திவாகரன் கூத் தாடுவானூன வீர ராஜேந்திர மழவராயரும் வீர

---

[87] கழஞ்சு - 20 மஞ்சாடிகள் கொண்டது.

[88] மஞ்சாடி - 2 குன்றிமணி அளவுள்ளது.

[89] மா - 10 மா கொண்டது ஒரு மஞ்சாடி. கொடுக்க வேண்டிய பொன் 303 கழஞ்சு ½ மஞ்சாடி ½ மா ஆகும்.

[89a] வரியிலிட - வரிப்புத்தகத்தில் பதிந்து கொள்ள.

[90] கல். 4 குறிப்பு 28 பார்க்க. [91a] ஒப்பிட்டுப் புகுந்த கேள்விப்படியே - பிறன் ஒருவனுடன் சரி பார்த்து அவன் சரி என்று சொல்லி அச்சொல்லைக் கேட்டப் பிறகு, Having unanimously approved of the document - Dr. Hultzscb.

[92] கல். 4 விளக்கம் 4 காண்க.

ராஜேந்திர ப்ரஹ்மாதி ராயரும் அருமொழி தேவ வளநாட்டு னென்மலிநாட்டு பெரிய குடையூர் அரங்கன் திருச்சிற்றம்பல முடையான் ஞன வானவன் மூவேந்த வேளானும் அதிராத ராச வளநாட்டு தேவூர்நாட்டு பணைக்குடியுடையான் காடன் வீதி விடங்கனான ஜயங்கொண்ட சோழ விழுப்பரையரும் விசையராஜந் தருவளர்நாட்டு புலியூர் நாட்டுப் பூண்டி யுடையான் அத்தாணிச் சீயாரூரன் முடிவிழுப் பரைய னும் ப...இராஜேந்திர பட்டரும் இராஜராஜப் பாண்டி குல வளநாட்டு உத்தமசோழ வளநாட்டு முள்ளிநாட்டு நிகரிலி சோழநாட்டு மதிமங்கலத்து கொச்சாக்காற் புறத்து விண்ணவ நாராயண பட்டனும் விடையில் அதிகாரிகள்[93] உய்யக் கொண்டானும் இப்படி...கத் திருவாய் மொழிந்தருளினபடிக்கு நம் வரியிலார்[94] வரியிலே இட்டு[95] இறையிலி தேவதானம் திருநாமத்துக் காணியாகத் திருவாநிலை மஹாதெவற்கு அவிப்பெலி* அற்சனை போகத்துக்குச் செம்பிலும் கல்லிலும் வெட்டிக் கொள்க.

இப்படிக்கு அர்சுதன் இராஜ நாராயணன் தொண்டைமான் எழுத்து. ஊரன் உத்தமசோழனான இராஜராஜ ப்ரஹ்மாதிராயன் எழுத்து. இப்படிக்கு அரையன் வீரராஜே...ன் ஜயமுரி நாடாழ்வான் எழுத்து. இப்படிக்கு வீரராஜேந்திர மங்கலப் பேரரையன் எழுத்து. இப்படிக்கு அதிகாரி க்ஷத்திரிய சிகாமணி

---

[93] விடையில் அதிகாரி - விடையதிகாரி என்றும் வழங்கும். இவர்கள் ஊர்ச் சபைகளினின்றும் வரும் ஓலைகளைப் படித்துப் பார்த்து விடை எழுதி அனுப்புவோர்.

[94] வரியிலார் - நிலவரி அதிகாரிகள் (Revenue Officers)

* அவிப்பலி - தேவபலி; வைச்ச வேதம் என்றும் கூறப்படும்.

[95] வரிப் புத்தகத்திலே பதிந்துக் கொண்டு.

வளநாட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சோழ நல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவான் வீரராஜேந்திர மழவராயன் எழுத்து. இப்படிக்கு வானவன் மூவேந்த வேளான் எழுத்து. இப்படிக்கு ஜெயங்கொண்ட சோழ விழுப்பரையன் எழுத்து. இப்படிக்கு அத்தாணி......விழுப்பரையன் எழுத்து. இப்படிக்குத் திருமந்த்ர ஓலை எழுதும் வானவன்ப் பல்லவரையன் எழுத்து. இப்படிக்கு விடையதிகாரி உய்யக் கொண்டான் எழுத்து. இது பன்மாஹேஸ்வர ரக்ஷை. இத் தன்மம் நோக்குவான் ஸ்ரீபாதம் என் தலைமேலே[96].

## குறிப்புகளும் விளக்கங்களும்.

1. வீரராஜேந்திரன்:—இவன் முதலாம் இராசேந்திரனுடைய நான்காவது மகனுவான். இவன் கி. பி. 1063 முதல் 1070 வரை வீரசோழன் என்ற பெயருடன் அரசாண்டவன். இவனுடைய மெய்க்கீர்த்திகள், "திருவளர் திரள் புயந்து", "வீரமே துணையாகவும்" என்று தொடங்குவன. இவன் மக்கள் மதுராந்தகன், கங்கை கொண்ட சோழன், அதிராஜேந்திரன் என்ற மூவர் என்றும், அவர்கள் இவன் புதல்வர்கள் அல்ல என்றும் உறவினர்களே என்றும் கூறுகின்றனர். இவன் இரண்டாம் இராசேந்திரனைத் தொடர்ந்து சோழநாட்டை ஆண்டவன்.

2. வீரராஜேந்திரனும் சாளுக்கியரும்:—வீரசோழன் முடிசூடியதும் இவர்களின் பகைவரான சாளுக்கிய நாட்டை ஆகமவல்லனே ஆண்டு வந்தான். ஆகமவல்லனை இவன் ஐந்துமுறை போரில் புறங்கண்டான் என்று கூறப்படுகிறது. (S. I. I III p 194) இக் கல்வெட்டில் கூறப்படும்

[96] இது இக்கல்வெட்டில் வந்துள்ள காப்புரை.

கூடல் சங்கமப் போர் இவன் மூன்றும்முறை சாளுக்கியரை எதிர்த்தபோது நடந்ததென்பர்.

ஆகமவல்லன் இறந்த பிறகு அவன் மகன் இரண்டாம் சோமேஸ்வரன் சாளுக்கிய அரியணை ஏறினன். இவனுடனும் சோழர் பகைமைகொண்டே இருந்தனர். ஆனல் சோமேஸ்வரனுடைய சகோதரன் ஆறும் விக்ரமாதித்தியன் என்பவன் தன் தமையனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி, சோழ நாட்டின்மீது படையெடுக்கத் துணிந்தான். அவ்வாறு துங்கபுத்திரை கரையில் அவன் வந்திருந்தபோது வீரசோழன் விக்ரமாதித்தனுக்குத் தன் மகளை மணம் செய்து தருவதாகச் சொல்லி அவனுடன் சமாதானம் செய்து கொண்டான். அவ்வாறே இந்த மணம் முடிந்தேறியவுடன் மேலைச் சளுக்கியருக்கும், சோழர்களுக்கும் இருந்த பகைமை ஒரு முடிவுக்கு வந்தது. பிறகு, அதிராசேந்திரன் அரியணை ஏறியபோது சோழநாட்டில் அவனுக்கு எதிராக ஏற்பட்ட கலகத்தை அடக்கி, அவனுக்கு விக்கிரமாதித்தன் பெருந் துணையும் செய்தான் என்று கூறப்படுகிறது.

3. கூடல்சங்கமப்போர் :—கூடல்சங்கமம் என்றஇடம் துங்கபுத்திரை நதி கிருஷ்ணு நதியில் சேருமிடத்தில் இருக்கிறது. இக்கூடல் சங்கமத்தில் சாளுக்கிய மன்னனை ஆகமவல்லன் எதிர்த்தது மூன்றுவது முறையாகும். இப்போரில் ஆகமவல்லன் தன் இளையப் புதல்வர்களான விக்கலன் (விக்கிரமாதித்தன் VI) சிங்களன் (அவன் தம்பி ஜெயசிம்மன்) என்ற இருவரின் கீழ், பெரும்படையை அனுப்பி இருந்தான். இங்கு நடந்த பெரும்போரில் சாளுக்கியப் படைகள் வடகடல் எனும் படி அணி வகுத்து நிறுத்தப்பட்டிருந்தது. அப்படையை ஒரு போர் யானையினைக்கொண்டு கலக்கி, குழப்பம் விளை

வித்தும், துணையாக வந்திருந்த கோசல சிங்களப் படைகளைத் தன் தூசிப் படையிலுள்ள ஒரு யானையைக் கொண்டு கலக்கியும், போத்தரையன், பொற்கோதை, மூவேந்தி என்ற துணைவேந்தர்களை மடக்கியும், பிறகு படைத்தலைவனான மதுவணன் என்பவனைத் தோற்கடித்தும் சோழன் போரில்வெற்றிகொண்டான். இவர்கள் எல்லோரும் போரில் தோற்றுஓடிவிட்டனர். பின்னர் சோழர் போரில் வாகை சூடி, எதிரிகளுடைய தாரம், குலதனம், சங்கு, தொங்கல், தாரை, பேரி, மேகடம்பம், சாமரை, காக்கைக் கொடி, மகர தோரணம், புஷ்பகப்பிடி, களிறுகள், குதிரைகள் முதலியவற்றைக் கைப்பற்றிக்கொண்டு திரும்பினார்கள்.

4 அரசிறை:—சோழர் காலத்தில் அரசிறை ஒரு பகுதி ரொக்கமாகவும், ஒரு பகுதி நெல்லாகவும் வசூல் செய்யப்பட்டதென்பது இக் கல்வெட்டால் தெரிகிறது. "இவ்வூர் இறைகட்டின காணிக்கடன் பொன் முந்நூற்று முக்கழஞ்சைரையே மஞ்சாடி அரை மாவும், நெல்லு மூவாயிரத்து ஐந்நூற்று முப்பது ஒரு கலனே தூணியும் இந்நாட்டுக் கருவூர் திருவானிலை மகாதேவற்கு இறுப்பதாக" என்று வரும் கல்வெட்டுப் பகுதியைக் காண்க.

இதன்மூலம் அக்காலத்தில் வழங்கிய பொன்னின் அளவுமுறை வருமாறு:—

1 மஞ்சாடி = 2 குன்றி = 10 மா = 40 காணி

20 மஞ்சாடி = 1 கழஞ்சு (சுமார் 68 முதல் 72 குன்றி மணி எடையுள்ளது.)

5. இக் கல்வெட்டினுல் தெரியவரும் உடன் கூட்டத்து அதிகாரிகளாவன :—

(1) உடன் கூட்டத்து அதிகாரிகள் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு ஜயங்கொண்ட சோழநல்லூருடையான் உதையதிவாகரன் கூத்தாடுவானுன வீரராசேந்திர மழவராயர்.

(2) அருமொழி தேவ வளநாட்டு நென்மலிநாட்டு பெரிய குடையூர் அரையன் திருச்சிற்றம்பலமுடையானுன வானவன் மூவேந்த வேளான்.

## 7. மணிமங்கலம் சபையோர் சாசனம்

1. இக் கல்வெட்டு இருக்குமிடம் :—செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலுகாவிலுள்ள மணிமங்கலம் என்ற ஊரிலுள்ள இராசகோபால சுவாமி கோயிலின் வடக்கு, மேற்குச் சுவர்களாம்.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்படும் அரசன் :—முதலாம் இராசாதிராசன். இவன் கி. பி. 1042 முதல் 1052 வரை அரசாண்டவன்.

3. இக் கல்வெட்டு தோன்றிய காலம் :—இவன் ஆட்சியின் 29-வது ஆண்டு முடிவிலாகும். அதாவது கி. பி. 1047.

4. இவன் மெய்க் கீர்த்தியால் அறியப்படுவன :—(I) உறவினர்களுக்கு மகுடம் சூட்டி நாடுகள் தந்தமை. தன் சிறிய தாதை, தமையன், தம்பிமார்கள், புதல்வர்கள் இவர்கட்கு வானவன், வல்லவன், மீனவன், கங்கன், இலங்கையர்க்கு இறைவன், பொலங்கழல் பல்லவன்,

கன்னக்குச்சியர் காவலன் என்ற பட்டங்களுடன் நாடுகளையும் கொடுத்தான்.

(II) **செய்த பிற போர்கள்**:— மானாபரணன் தலையை வெட்டி, வீரகேரளனைப் போர் முனையிற் பிடித்து தந்தி வாரணக் களிற்றால் உதைப்பித்து, சுந்தர பாண்டியனை முல்லையூர்க்குத் துரத்தினான். திருவாங்கூர் மன்னனை ஊரைவிட்டுத் துரத்தி, இராமகுட மன்னனைக் கொன்றான். சேர மன்னனைத் தோற்றோடச் செய்து, காட்டினுள் ஒளியச் செய்தான். காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தான்.

பிறகு மேலைச் சளுக்கியனான ஆகவமல்லனுடன் போர் தொடுத்து கொள்ளிப்பாகைக்குத் தீ மூட்டினான். (குறிப்பு 3 பார்க்க) இலங்கைமீது படையெடுத்துச் சென்று விக்கிரமபாகு என்ற ஈழமன்னன் முடியையும், அங்கு புகுந்திருந்த விக்கிரம பாண்டியன் முடியையும் கைக்கொண்டான். கன்னக்குச்சியனான வீரசாலமேகனோடு பொருது அவனைக் கொன்றான். கன்னரன் வழி வந்த சீவல்லவன் மதனராசனுடைய முடியையும் கொண்டான். (குறிப்பு 4-ல் காண்க) பிறகு இரண்டாம் முறை ஆகவமல்லன்மீது போர் தொடுத்துச் சென்று கம்பிலி நகரை எரித்தான். (3) இவ்வாறு வில்லவர், மீனவர், வேள்குலர், சளுக்கியர் முதலியோர் திறைகொடுக்க அரசுவீற்றிருந்தான்.

5 **சாசனத்தின் நோக்கம்**:—ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து, செங்காட்டுக் கோட்டத்து, மாகனூர் நாட்டு மணிமங்கலமான ராஜசூளாமணி சதுர்வேதி மங்கலத்துச் சபையார், அவ்வூர் காமகோடி விண்ணகர ஆழ்வார் பொக்கிஷத்திலிருந்து 100 காசை வட்டிக்குக் கொண்டு அக்காசு நூறினால் வந்த வட்டிக்கு இறை கரத்

தூட்டாக கூறப்பட்ட விவரப்படி 2,200 குழி நிலத்தைக் கொடுத்தனர்.

ஸ்வஸ்திஸ்ரீ[1] திங்களேர் தரு[2] தன்றொங்கல்[3] வெண்குடைக் கீழ் நிலமகணிலவ[4] மலர் மகட் புணர்ந்து[5] செங்கோலோச்சிக் கருங்கலி கடிந்து[6] தன் சிறிய தாதையையுந்[7] திருத்தமையனையுங் குறிகொள்[8] தன் னிளங் கோக்களையும்[9] நெறியுணர் தன் றிருப்புதல்வர் தம்மையுந் துன்றிய தெறுசில்[10] வானவன்[10a] வல்லவன்[10b] மீனவன் கங்க நிலங்கையற் கிறைவன், புலங்கழற்[11] பல்லவன் கன்னகுச்சியர் காவலனெனப்[12] பொன்னணிச் சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர் புகழாங்கவர்க்[13] கவர் நாடருளி பாங்குறு தென்னவர் மூவருள்[14] மானுபரணன் பொன்முடி ஆநாப் பருமணிப் பசுந்தலை[15] பொருகளத்தரிந்து[16]

---

[1] S. I. I., Vol III, Part I, p 53.

[2] சந்திரனைப்போல் அழகுபெற்ற. [3] மாலை (யணிந்த).

[4] பூமிதேவி விளங்க.

[5] இலக்குமியை உரிமை உடையவனாகக் கொண்டு.

[6] பெரிய கலிகாலக் கொடுமையை நீக்கி.

[7] தன் சிற்றப்பனாகிய எறிவலி கங்கைகொண்ட சோழனையும். [8] தன் மதிப்பிற்குரிய (distinguished).

[9] இளங்கோக்கள் - தம்பிமார்கள்.

[10] துன்று தெருசில் > துன்று எழில் - நெருங்கிய அழகுடைய. [10a] சேரன். [10b] சளுக்கி.

[11] புலங்கழல் > பொலங்கழல் - பொன்னாலாகிய வீரக்கழலையணிந்த. [12] தலைவன் என்று. [13] விரிந்த புகழுடைய.

[14] பக்கத்திலுள்ள பாண்டியர் மூவருள்.

[15] மானாபரணனுடைய பருத்த மணியாலாகிய பொன்முடி அணிந்த உயிரோடு கூடிய தலையை; பசுந்தலை - உயிருடைய தலை. [16] போர்களத்தில் கொய்து.

வாரளவிய கழல்[17] வீர கேரளனை முனைவயிற் பிடித்து தனத்திவாரணக[18] கதக் களிற்றுனுதைப்பித்தருளி அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தரபாண்டியன் கொற்றவெண் குடையுங் கற்றை வெண் கவரியும் சிங்காதனமும் வெங்களத்[19]திழந்து தன்முடி விழத்தலை விரித்தடி தளர்ந்தோடத் தொல்லை முல்லையூர்த்[20] துரத்தி ஒல்கலில்[21] வேணாட்டரசை[22] சேணாட்டொதுக்கி[23] மேவு புகழிரா மகுட[24] மூவர்கெட முனிந்து விடல் கெழு[25] வில்லவன்[26] குடர்மடிக் கொண்டு[27] தன்னாடு விட்டோடிக் காடு புக்கொளிப்ப வஞ்சியம் புதுமலர் மலைந்தா[28]ங் கெஞ்சலில் வேலைகெழு காந்தளூர் சாலை[29] கலமறுத்து[30] (ஆ)ஹவமல்லனு மஞ்ச, கேவு[31] தன்னுங் கரும்படையாலங்கவன் சேனையிற் கண்டப் பயனுங்[32] கங்காதரனும்[33] வண்டமர் களிற்றோடு[34] மடியத் திண்டிறல் விரு

---

[17] வாரால் இறுக்கப்பட்ட வீரகண்டா மணியை யுடைய.

[18] தனத்திவாரணம் > அத்திவாரணம் - யானையின் பெயர்.

[19] கொடிய போர்க்களம். [20] முல்லையூருக்கு.

[21] சுருங்குதல் இல்லாத. [22] திருவாங்கூர் அரசனை.

[23] சுவர்க்க லோகத்திற்குத் துரத்தி.

[24] இராமகுடம் - எலி மலைக்குப் (Mt. D'Eli) பக்கத்திலிருந்த ஒரு சிறு இராச்சியம். (T. A. S. II p. 87 ff).

[25] விடல்கெழு > அடல்கெழு - வலிமை பொருந்திய.

[26] சேரன்.

[27] வயிறு மடிக்துக்கொண்டு அஞ்சி நடுங்கியவனாய்.

[28] வஞ்சி மாலை சூடி (மலைந்து - சூடி).

[29] அங்கு ... சாலை - அவ்விடத்து அழிவில்லாத கடற்கரைக்கு அருகிலுள்ள காந்தளூர்ச் சாலை. [30] கப்பல்களை நாசம் செய்து.

[31], [32], [33] கேவுதன், கண்டப்பய்யன், கங்காதரன் இவர்கள் ஆகவமல்லனின் சேனாபதிகள்.

[34] வண்டுகள் மொய்த்து உட்காரும் ஆண் யானைகளோடு (மதநீர் ஒழுகும் இடங்களில் வண்டுகள் மொய்த்தல் இயற்கையாம்).

தரை விக்கியும்[35] விசையாதித்தனும்[36] கருமுரட் சாங்கமயனும்[37] முதலினர்[38] சமரபீரு[38] வொத்துடைய விரிசுடர்ப் பொன் னோடையங்கரிப்[39] புரவியொடும் பிடித்து தன்னுடையிற் ஜயங்கொண்[40]டொன்னார் கொள்ளிப்பாக்கை உள்ளெரி மடுப்பித்[41] தொருதனித் தண்டா[42]ற்பொரு கடலிலங்கையர் கோமான் விக்கிரம பாஹுவின் மகுடமுமுன்றனக் குடைந்து[43] தெண்டமிழ் மண்டல[44] முழுவதுமிழந் தேழ்கட லீழம் புக்க[45] விலங் கேசுரனாகிய விக்கிரம பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு[46] தன்னதாகிய கன்னக்குச்சியினும்[47] மார்கலி யீழஞ் சீரிதென் றெண்ணி உளங்கொள் தன்னொடு தன்னுறவோடும் புகுந்து[48]

---

[35] விக்கி - இவன் ஆகவமல்லனுடைய மகன் விக்ரமாதித்தன்

[36] விசயாதித்தன் - விக்கியின் துணைவன்; போர் புரிய வந்தவன்.

[37] சாங்கமய்யன் - இவனும் விக்கியின் துணைவனே.

[38] முதலியோர்கள். [38] சமரபீரு வொத்துடைய - சமரில் புறங்காட்டி ஓட (Retreated like cowards).

[39] நெற்றிப்பட்டத்தை யுடைய இலக்கணத்தால் அழகு பெற்ற யானைகள்; ஓடை - நெற்றிப் பட்டம்.

[40] தன் பக்கத்தில் வெற்றியைப்பெற்று.

[41] அவர்களுடைய கொள்ளிப்பாகை என்னும் ஊரைத் தீயிட்டுக் கொளுத்தி.

[42] ஒரு தனித் தண்டு - ஒப்பற்ற படைபலம்.

[43] முன் தனக்கு உடைந்து - முன்னே தனக்கு தோல்வியுற்று. [44] பாண்டி நாடு.

[45] எழு கடல் ஈழம்புக்க - அலைகள் எழும்புகின்ற கடல் சூழ்ந்த இலங்கையில் புகுந்திருந்த. [46] அழகு வாய்ந்த.

[47] தன்னுடைய கன்னக்குச்சி இராச்சியத்தைக் காட்டிலும்.

[48] தான் விரும்பும் தன் நாட்டிலுள்ள உறவினர்களோடும் புகுந்து.

விளங்கு முடிகவித்த வீரசலாமேகன்* பொருகளத் தஞ்சி தன்கார் களிறிழந்து கவ்வையயிறனடிக்[49] காதலியோடுந் தன்றவ்வையைப்[50] பிடித்து தாயை மூக்கரிய ஆங் கவமானம் நீங்குதற்காக மீண்டும் வந்து விட்டொழில் புரிந்து வெங்களர்த்துலர்ந்த[51] வச் சிங்களத் தரைசன் பொன்னணி முடியுங் கன்னரன்[52] வழி வந்துறை கொள வீழத் தரைசநாகிய சீர்வல்லவன் மதனராஜன் மெல்லொளித் தடமணி முடியுங் கொண்டு வடபுலத் திரு காலாவதும்[53] பொருபடை நடாத்தி கண்டர் தினகரன் நாரணன், கண

---

[49] கவ்வையயிறனடி > கவ்வையுற்றேட—துன்புற்று ஓட:

[50] தன்னுடைய தமக்கையை.

[51] வெங்களத்துலர்ந்த—கொடிய போர்க்களத்து இறந்த.

[52] கன்னரன்—கிருஷ்ணன் III. இவன் ராஷ்டிர கூட மன்னன். இவன் சோழநாட்டின் மீது படையெடுத்து, அப்போதைய சோழமன்னனுகிய முதலாம் பராந்தகனின் மகன் இராஜாதித்தனைக் கொன்ருன். கன்னரன் வழிவந்து உறை கொள்ள வீழத் தரைசனுகிய" இவ்வரிகளை டாக்டர் உல்ஷ் "who had come to (Krishna) Kannaran and taken up (his) abode (with him)" என்று மொழி பெயர்த்துள்ளார். திரு K A நீலகண்ட சாஸ்திரியார் 'உறை கொள்ள' என்ற தொடரை pride அல்லது glory எனக் கொள்ளுவார். இவ் வடிகளின் கருத்து, (Vide The cholas Vol p297n) கன்னரன் வழிவந்து ஈழத்தின் பெருமை கொண்ட அரசனுக வாழ்ந்த ஸ்ரீ வல்லபன் மதனராஜன் முடியையும் இராஜாதிராஜன் கொண்டான் என்பதாகும். மகாவம்சத்தில் இவ்விடத்தில் கூறப்பட்டிருப்பவன் விக்கமபண்டுவின் மகன் எனப்படும் பராச்கமன் (பராக்கிரமன்) ஆவன்.

* வீரசாரலமேகன் — இவன் கன்னக்குச்சியினின்றும் இலங்கைக்கு ஓடி உறவினர் பலரோடு அங்கு குடியேறியவன். இவனும், மகாவமிசத்தில் வரும் ஜகதிபாலனும் ஒருவர் எனக் கொள்ளலாம்.

[53] வடதிசையில் இரண்டாவது முறையும்.

வதி வண்டலர் தெரியல்[54] மதி சூதனறெனப் பலவரை யரை முனை வயிற்றுரத்தி[55] வம்பலர் தரு பொழில் கம்பிலி[56] நகருள் சளுக்கியர் மாளிகை தகபித்திளகதமில்[57] வில்லவர்[58] மீனவர் வேழுதுலர்[59] சளுக்கியர் வல்லவர்[60] கோசலர் வங்கணர் கொங்கணர் சிந்துரர்[61] ஐய்யணர் சிங்களர் பங்களர்[62] அந்திரர்[63] முதலிய வரைசரிடு திறைகளு மாறிலொன்[64] றவனியுள்[65] கூறு கொள் பொருள்களு முகந்து[66] நான்மறையவர்[67] முகந்து கொளக் குடுத்து விஸ்வலோகத்து விளங்க[68] மனு நெறியின் றஸ்வமேதஞ் செய்தரைசுவீற்றிருந்த[69] ஜயங்கொண்ட சோழனு[70]யர்ந்த பெரும்புகழ் கொவிராஜ கேஸரி வந்மரான உடையார் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டு

---

[54] வண்டுகள் சூழ்ந்தமாலை.

[55] போர் முனையினின்றும் விரட்டி.

[56] புதிய மலர்களை யுடைய மரங்கள் நிறைந்த சோலையை யுடைய கம்பிலி என்னும் நகரம். இவ்வூர் பல்லாரி ஜில்லாவில் உள்ளது.

[57] தகர்பித்திள கதமில் > தகர்ப்பித்து இளக்கமில்; தகர்ப்பித்து - இடித்து. இளக்கதமில் > இளக்கமில்—கீழ்ப்படியாத.

[58] சேரர். [59] கங்கர் (?) [60] பல்லவர் [61] சிந்துநாட்டு அரசர்.

[62] பங்காள நாட்டரசர். [63] ஆந்திரர்.

[64] மாறுபாடு இன்றி(வந்து) சேர. தவறுமல் திறைகள்வர.

[65] இராச்சியத்துள். [66] முகந்து—பெற்று.

[67] பிராமணர்கள். [68] எல்லா உலகத்தும் விளங்க

[69] இராசாதிராஜன் மனு கூறிய நெறியில் நின்று அஸ்வமேதயாகம் செய்து அரசாண்டவன் என்பதை அறிக.

[70] ஜெயங்கொண்ட சோழனென்பது இராசாதிராஜனின் வேறு பெயர்.

௨௰௯ ஆவது[71] ஜயங்கொண்ட சோழமண்டலத்து சேங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு மணிமங்கலமான ராஜசூளாமணிச் சதுர்வ்வெதி மங்கலத்து மஹாஸபையோம் எம்மூர் ப்ரஹ்மஸ்தானத்தே[72] தனுநாயற்று[73] பூர்வ்வபக்ஷத்து த்விதீயையும்[74] புதன்கிழமையும் பெற்ற திருவோணத்தி[75] நாள்க் கூட்டக் குறைவறக் கூடியிருந்து பணிப்பணியால் பணித்த[76] இவ்வூர் ஸ்ரீமத் த்வாராபதியான[77] ஸ்ரீகாமக் கோடி விண்ணகர் ஆழ்வார்க்கு[78] திருவமுதுக்கும் அர்ச்சனா போகத்துக்கும்[79] இத் தேவர் பண்டாரத்தே நூறுகாசு பொலிசைக்கு[80] கொண்டு இக்காசு நூற்றாலும் வந்த பொலிசைக்கு இறைகரத்தூட்டாக[81] இறையிழிச்சிக்[82] குடுத்த நிலமா

---

71 இராசாதிராசனின் 29-வது ஆண்டில் இச்சாசனம் எழுந்தது.

72 பிர்மஸ்தானம்—பஞ்சாயத்துக் கூடுமிடம்,

73 தனு நாயிறு—மார்கழி மாதம். ஞாயிறு—மாதம் என்ற பொருளில் வந்தது,

74 இரண்டாவது திதி.

75 திருவோண நட்சத்திரம் (நாள்—நட்சத்திரம்.)

76 பணிப்பணியால் பணித்த-இட்ட கட்டளைக்குப் பணிந்து.

77 துவாரகைக்குத் தலைவனான கண்ணன்.

78 மணிமங்கலம் என்னும் இராசசூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து எழுந்தருளியுள்ள திருமாலின் பெயர். இப்போது இராசகோபாலப் பெருமாள் என்று இக்கடவுளின் பெயர் வழங்குகிறது.

79 அர்ச்சனா போகம்—அர்ச்சனை.

80 பொலிசைக்கு—வட்டிக்கு.

81 இறைகரத்தூட்டாக—வரியைக் கையில் கொடுத்து விடுவதாக with the enjoyment of Revenue and Taxes—Dr. Hultzsch.

82 வரி இல்லாமல்.

வது. பெருநல்வதிக்கு வடக்கு, பாதிரிக் கழனி மேலைக் காலுக்கு[83] கிழக்கு, விளை நிலங்குழி முன்னூறும் பாதிரிக் கழனி நடுவிற்காலுக்கு மேற்கு, விளை நிலங்குழி இருனூறும் பெருநல்வதிக்கு தெற்கு, ஆலேமேட்டில் மனையறுதி வாய்க்காலுக்கு கிழக்கு, விளை நிலங் குழி நூற்றெண்பதும், ஆலேமேட்டில் நந்தவன தோட்டக்காலுக்கு மேற்கு, விளை நிலங் குழி நானூறும் இக் காலுக்கு கிழக்கு விளை நிலங்குழி இருனூறும், தெந்தரிய மரத்தின்[84] மேலைக் காலுக்கு மெற்கு, விளை நிலங் குழி முன்னூறும் சுண்டிலேரி வதிக்கு கிழக்கு விளை நிலங்குழி நானூறும் பாவை துறை வாய்க்காலுக்கு வடக்கு, திருவையோத்தி தெவர்[85] நிலங்குழி இருனூற்றைம்பதுக்கு கிழக்கு, தடி[86] யிரண்டிநால் குழி இருநூறும் ஆகத் தேவர் நிலங் குழி இரண்டாயிரத் திருனூறும்[87] இறைகரத் தாட்டாக சந்திராதித்தவர் நிற்பதாக திருவமுதுக்கும் அர்ச்சனா போகத்துக்கும் இறையிழிச்சி சிலாலேகை செய்து குடுத்தோம்.[88]

## குறிப்புகளும் விளக்கங்களும்

மூலாம் இராசாதிராசன் :—இவன் முதலாம் இராசேந்திர சோழனின் மூத்த மகன் ஆவான். இவன் கி. பி. 1018-ல்

---

[83] மேலை வாய்க்கால்.

[84] தெந்திரியமரம்—புளியமரம் ; Croton tiglium.

[85] ஸ்ரீ இராமபிரான். [86] தடி—வயல் (தளை என்று இப்போது வழங்கும்.

[87] கல்லில் வெட்டிக்கொடுத்தோம்.

[88] 2,200 குழிகள். மொத்தம் இதில் கூறியபடி 2,180 குழிதான் வருகிறது. டாக்டர் உல்ஷ் முழு எண்ணைக இருக்க வேண்டி (for rounding up) 20 குழி சேர்த்துக் கூறப்பட்டது என்பர்.

இளவரசுப் படடம் சூட்டப்பட்டவன். இவன் உண்மையில் ஆண்டகாலம் கி. பி. 1042 முதல் 1052 வரையாகும். இச்சாசனம் இவன் ஆட்சியின் 29-வது ஆண்டில் தோன்றியதாகும். எனவே இவன் இளவரசுப் பட்டம் சூட்டப் பட்டபிறகு 29-வது ஆண்டில் இக்கல்வெட்டு தோன்றிய தெனலாம். அதாவது கி. பி. 1047-ல் தோன்றியது

இவன் 25 ஆண்டுகள் வரை தன் தந்தையுடன் சேர்ந்திருந்து ஆட்சிசெய்து, இராசேந்திரன் கி. பி. 1044-ல் உயிர்நீத்தபிறகு சோழநாட்டின் முடிமன்னன் ஆனன். இவனுடைய முற்காலக் கல்வெட்டுகள் எல்லாம் 'திங்களேர் பெற வளர்' என்றும், பிற்காலத்தன 'திங்களேர் தரு' என்றும் தொடங்குகின்றன. இவனுக்குத் 'திங்கள்' (வளர்பிறை) உவமையாகக் கூறப்படுவதினின் றும் இவன் இளம்பருவத்திலேயே புகழ்பெற்றமை விளங்கும்.

இவனுடைய ஆட்சியின் பெரும் பகுதியும், இவனுடைய சகோதரர்களின் ஆட்சியும், சளுக்கியப் போரிலேயே கழிந்தன எனலாம். இவனுடைய பிற்கால மெய்க்கீர்த்திகள், "திருக்கொடியோடு தியாகக்கொடி", "வீரபாண்டியன் தலையும்" என்று தொடங்குவனவாம்.

2. இராமகுடம்:—இராமகுடமென்பது எலிமலைக்குப் (Mount D'Eli) பக்கத்திலுள்ள ஒரு சிறு இராச்சியமாகும். திரு. ச. சோமசுந்தர தேசிகரவர்கள் இராமகுடம் என்ற சொல்லை இரா, மகுடம்-என்ற இரு சொற்களாகக் கொண்டு, அத்தொடர் மகுடம் இழந்த (இரா-இல்லாத, மகுடம்-முடி) இலங்கையரசன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகிய மூவரையும் குறிக்கும் என்று செந்தமிழ்ப் (XXII P 65) பத்திரிகையில் எழுதியுள்ளார்

கள். எனினும் ராமகுட மூவர் திருவடி என்பது மூஷிகநாட்டு அரசன் பெயர் என்பது ஒரு கல்வெட்டினால் ஐயமறப் புலனாகிறது. (M. E. R., 1930 p 86 காண்க). இந்த நாட்டை மூஷிக வம்சத்து மன்னர்கள் ஆண்டுவந்தார்கள். இந்த இடத்தில் இராமகுட மூவர் திருவடியாகிய கண்டன் காரிவர்மன் என்னும் மூஷிக அரசனின் 5-ம் ஆண்டு கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இக்கல் வெட்டு இராசேந்திர சோழ சமைய சேனாபதி என்பவனைப்பற்றிக் கூறுவதால், இராசாதிராசனால் வெற்றி கொள்ளப்பட்டவன் கண்டன் காரிவர்மனே எனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

3. முதல் சாளுக்கியப் போர்:—கி. பி. 1042-ல் மேலைச் சளுக்கிய மன்னனான ஜயசிம்மன் இறக்கவே அவன் மகன் சோமேஸ்வரன் திரைலோக்கியமல்லன், ஆகவமல்லன் என்ற பட்டங்களைக்கொண்டு முடிசூடினான். இவனுடைய தந்தை காலத்திலேயே சாளுக்கியர்கள் துங்கபுத்திரை நதியைக் கடந்து தெற்கே சிறிது சிறிதாக தங்கள் ஆட்சியைப் பரப்பினர். ஆகவே ஆகவமல்லன் பட்டத்திற்கு வந்ததும் அப்பகை முற்ற சோழர் சாளுக்கியருடன் போருக்குச் சென்றனர்.

4. ஈழத்துப்போர்:—முதலாம் இராசேந்திரன் இலங்கையை வென்று அந்நாட்டு மன்னனான மஹீந்தனைச் சிறைகொண்டு சோழநாட்டில் காவலில் வைத்தான். எனினும் சிங்களர் தங்கள் உரிமையைப் பெற நாள் பார்த்திருந்தனர். மஹீந்தன் சிறையில் இறந்தபிறகு அவன் மகன் காசிபன் சோழர்களுக்கு எதிராக 6 மாதம் போர் செய்து இலங்கையின் தென்கிழக்குப்பாகமான ரோஹணநாட்டை வென்று கி. பி. 1029-ல் விக்கிரமபாகு என்ற பெயருடன் முடிசூடிக்கொண்டான். அவன்

12 ஆண்டுகள் ஆட்சி செய்தபிறகு, இராசாதிராசன் I கி. பி. 1041-ல் ஈழத்தின்மீது படையெடுத்துச் செல்ல, அப்பொழுது நடந்த போரில் விக்கிரமபாகு இறந்தான்.

இரண்டாவதாக இலங்கையில் வெற்றிக்கொள்ளப் பட்டவன் 'தென்டமிழ்மண்டல முழுவதுமிழந்து எழு கடல் ஈழம் புக்க' இலங்கேசுரனுகிய விக்கிரமபாண்டிய னுகும். இவ் விக்கிரமபாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டுவந்தவன். அக்காலத்தில் பாண்டிய கேரளர்க ளும், இலங்கையரசர்களும் தங்களுக்குள் மண உறவு பெற்று தங்கள், பொதுப் பகைவனுன சோழரை வென்று தங்கள் நாடுகளை மீட்க நேசங்கொண்டு வாழ்ந்தனர். இவ்வாறு தன் நாட்டை இழந்து இலங்கையில் ஒளிந்துக் கொண்டிருந்த விக்கிரமபாண்டியனை இராசாதிராசன் வெற்றிகொண்டான்.

மூன்ருவதாக நம் சோழ மன்னனுல் வெற்றிகொள் ளப்பட்டவன் வீரசலாமேகனுகும். இவன் கன்னக்குச்சி யிலிருந்து இலங்கைக்குச் சென்றவன். இவன் இராசாதி ராசனை எதிர்க்க பயந்து யானையினின்றும் இறங்கி ஓடி விட்டான். இதையறிந்த சோழன் அவன் தாய், தமக்கை இவர்களைச் சிறைப்பிடித்து, அவன் தாயின் மூக்கை யறிந்து அவமானப்படுத்தினுன். இதையறிந்த வீரசலா மேகன் மறுபடியும் வந்து சோழர்களுடன் போரிட்டு உயிர் நீத்தான். இறுதியாக இராசாதிராசன் இராஷ்டிர கூட மன்னனுன மூன்ரும் கிருஷ்ணன் என்பான் சந்ததி யில்தோன்றியவனுன ஸ்ரீவல்லபன் மதனராஜன் என்ப வனை வெற்றி கொண்டான்.

5. இரண்டாவது சளுக்கப்போர்:—இம்முறையும் சோமேஸ் வரனை எதிர்த்தே சோழன் சென்ருன். இப்போர் கி. பி. 1044-46 இவைக்கிடையே நடந்ததென்பர். இப்போது

கம்பிலி நகருள் புகுந்து அந்நகரைத் தீயிட்டுக் கொளுத்தி, பல வீரர்களை வென்றான்.

6. சோழர் கால வரி விகிதம் :-அக்காலத்தில் ஆறில் ஒரு பங்கு வரி வாங்கிவந்தனரென்பது, 'ஆறிலொன்று அவனி யுள் கூறுகொள் பொருள்களு முகந்து' என்று வரும் தொடரால் தெளிவாகிறது.

## 8. மணிமங்கலம் சபையோர் சாசனம்

1. இக்கல்வெட்டு இருக்குமிடம் :-செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சிபுரம் தாலூகா, மணிமங்கலத்திலுள்ள இராச கோபாலசுவாமி கோயில் மண்டபத்து மேல் சுவர்.

2. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன் :—இராசகேசரி முதற் குலோத்துங்கன். இவன் ஆட்சிக்காலம் கி. பி. 1070 முதல் 1120 வரையாகும்.

3. இக்கல்வெட்டுத் தோன்றிய காலம் :—இவன் ஆட்சியின் 48-வது ஆண்டு, அதாவது கி. பி. 1118.

4. மெய்க்கீர்த்தியால் அறியப்படுவன :-மீனவர் நிலைகெட, வில்லவர் குலைதர, ஏனையவர் இரியலுற்று இழிதர, சோழ ஆட்சியை உரிமையால் பெற்றான். உலகுடையா ளோடு சேர்ந்து ஆட்சிபுரிந்தான். திக்கனைத்தும் தன் சக்கரம் நடாத்தி விஜயாபிஷேகம் செய்துகொண்டான்.

5. சாசனத்தின் நோக்கம் :—மணிமங்கலத்திலுள்ள கண்ணன் கோயிலில் பூசை செய்யும் இருவர், ஷெ பெரு மானை அமாவாசைதோறும் சந்திரசூரியருள்ள வரை எழுந்தருளுவிக்க, சாசனத்துள் கண்ட மூவரிடத்தில் 1,050 குழி நிலம் விலைக்கு வாங்கி, அவ்வூர் மகாசபையா

ரிடம் அங்கிலத்தையும், அங்கிலத்திற்கு அரசாங்க வரி செலுத்த, கிரயமாக, வேண்டும்பொன்னையும் கொடுத்தனர்.

[1]ஸ்வஸ்திஸ்ரீ. புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப[2] நிலமகள் நிலவ[3] மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி[4] சூடி, மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர[5] ஏனை மன்னவ[6]ரிரி தரிற்[7] சூழிதரத்[8] திக்கனைத்துந் தன் சக்கர நடாத்தி[9] விஜயாபிஷேகம் பண்ணி[10] வீரஸிம்ஹாஸநத்து உலகுடையாளொடு[11] மன்னி[12] வீற்றிருந்தருளிய கோவிராஜ கேஸரி பந்மரான திரிபுவன சக்ரவர்த்திகள்[13] ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு

---

[1] S. I. I., Vol III, Part I, p 71.

[2] வீர இலக்குமி விருப்பங்கொள்ள. [3] நிலவ-பிரகாசிக்க.

[4] உரிமையின்படி வந்த சிறப்புடைய (சோழர்களின்) அழகிய முடியை அணிந்து. முதற்குலோத்துங்கள் தன் தாயாகிய அம்மங்காதேவி (முதலாம் இராசேந்திரனின் மகள்) மூலம் சோழ அரியணை ஏறும் உரிமை பெற்றுளதலின் உரிமையிற்கொண்டான் எனப்பட்டது.

[5] சேரர் குலைந்து ஓட. [6]மற்ற மன்னர்கள். கல் 7ல் குறிப்பு மேல் இவர்கள் விவரம் காண்க.

[7] இரிதரிம் > இரியலுற்று—தோற்று, [8] சுழிதர.

[9] ஆச்ஞாசக்கரத்தை நடத்தி. [10] வெற்றி முழக்குக் கொண்டு.

[11] உலகுடையாள் என்பது குலோத்துங்கன் மனைவியின் பெயர். [12] சேர்ந்து.

[13] மூன்று நாட்டுக்கும் சக்கரவர்த்தி: சேர, சோழ, பாண்டிய நாடுகளான தென்னாட்டின் மூன்று நாடுகளுக்கும் சக்கரவர்த்தி என்ற பட்டத்தை இவன் முதலில் மேற் கொண்டான்.

சமஅ-வது[14] குலோத்துங்க சோழவளநாட்டு[15]க் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான பாண்டியனை இருமடி வென் கொண்ட[16] சோழ சதுர்ப்பெதி மங்கலத்து மஹா ஸபையோம் எழுத்து நம்மூர் வண்டுவராவதி எம்பெருமான்[17] கோயிலில் ஸ்ரீ காரியஞ் செய்கிற[18] அள்ளூர்க் கெசவ பட்டனும், அரணை புறத்து திருவாய்க்குல பித்தனுங் கண்டு[19] யாண்டு சமஅ-வது[20] கும்ப நாயற்

---

[14] முதல் குலோத்துங்கன் ஆட்சியில் 48-வது ஆண்டில் கி. பி 1118-ல் இக் கல்வெட்டு தோன்றியது.

[15] 7-ம் கல்வெட்டில் இதே மணிமங்கலம் ராஜசூளாமணி சதுர்வேதிமங்கலம் என்ற பெயருடன் மாகணூர் நாட்டில் செங்காட்டுக் கோட்டத்தில் (செங்கற்பட்டு ஜில்லாவில்) இருந்தது. இக் கல்வெட்டுப்படி மணிமங்கலம் இருமடி வெங்கொண்ட சோழச் சதுர்ப்பேதி மங்கலம் என்னும் பெயரைப் பெற்று குன்றத்தூர் நாட்டில், குலோத்துங்க சோழவள நாட்டில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதனல் செங்காட்டுக் கோட்டமானது குலோத்துங்க சோழவளநாடு என்ற பெயரை முதல் குலோத்துங்கன் காலத்துப் பெற்றிருந்தது. இதற்குக் காரணம் இச் சோழன் சோழமண்டலத்தின் நிலப்பரப்பை அளந்து (Survey) வரையறை செய்ததனல் ஆகும். (Ancient Dekkan P. 338).

[16] இரண்டுமுறை புறங்கண்ட (பாண்டியனை இருமுறை புறங்கண்ட வெற்றியை நினைவுகொள்ள இப் பெயர் மணிமங்கலத்திற்கிடப்பட்டது.)

[17] வந்துவராவதி எம்பெருமாள் — வண்மை மிக்க துவாரகைக் கிறையாகிய கண்ணன்.

[18] கோயில் காரியம் பார்த்து வருகிற.

[19] அள்ளூர்......பித்தனும் கண்டு—அள்ளூர் கேசவபட்டனும், அரணைப் புறத்து திருவாய்க்குலப் பித்தனும் (வண்துவரைப் பெருமாள் அமாவாசை தோறும் எழுந்தருளாமல் இருப்பதைப்)பார்த்து.

[20] 48-வது ஆண்டு: இது முதல் குலோத்துங்கன் ஆட்சிப் பெற்ற 48-வது ஆண்டில் என்று பொருள்படும்.

று[21]ப்பூர்வ்வபக்ஷத்து த்வீதீயையும்[22] வெள்ளிக்கிழமையும் பெற்ற சதையத்து நாள். இவ்வாண்டு முதல் அமாவாஸி சந்திராதித்தவரை[23] எழுந்தருளுகைக்கு ராஜேந்திரசோழ வளநாட்டு அம்பத்தூர் நாட்டு நுளப்பியாற்று நுளப்பி யாறு கிழான் வேளான் பேராயிரமுடையானான தண்டக நாடுடையாந் குண்டூர் தோணயக்கிரமவித்தன் பக்கல் ஆலேமேட்டில் விலை கொண்டுடைய குழி நூற்றிருபத் தஞ்சும், இங்கே மத்தியஸ்தன்[24] உறப்போந்தானும் தம்பி மாரும் பக்கல் விலை கொண்டுடைய[25] குழி நூற்றெருபத் தஞ்சும் இராயூர் திருப்பொரிக் கிரமவித்தந் பககல் பாதிரி கழநி மேலேகாலுக்குக் கிழக்கு, விலை கொண் டுடைய குழி நூற்று இருபத்து மூன்றும், இங்கே இரா யூர் விஷ்ணு திருவேங்கடக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றெருபத்தேழும், இங்கே ஐயக்கி வண்டுவராபதி பிச்சர்[26] பக்கல் விலை கொண் டுடைய குழி நூற்றெருபதும், இங்கே இராயூர் யஜ்ஞ நாராயணக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றிருபத்தேழும், ஆலவதிக்கு வடக்கு இரண் டாங் கண்ணாற்று[27] வீரவலி திருவரங்கமுடையான் ஸஹஸ்ரன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றிரு பதும், இங்கெய் மூன்றுங் கண்ணாற்றில், இராயூரான் னந்திக் கிரமவித்தன் பக்கல் வடக்கடைய கொண் டுடைய குழி நூற்றெட்டும், அரிவாள் வதிக்குக் கிழக்கு

---

[21] கும்ப நாயற்று—மாசிமாதத்தில். [22] த்வீதியை—இரண் டாம் திதி.

[23] அமாவாஸி சந்திராதித்த வரை— அமாவாசை தோறும் சந்திரசூரியர் உள்ள வரை. [24] கணக்கப்பிள்ளை.

[25] விலேக்கு வாங்கின. [26]பிச்சர்-பக்தர்; ஈடுபாடு உடையவர்.

[27] கண்ணாற்றில் > நாற்றுங் கண்ணில்-நாற்றுவிடுமிடம். group of fields என்று கொண்டார் டாக்டர் உல்ஷ்.

முதற் கண்ணுற்று...க்கராம்பிச்செட்டு[28] நாணமாலைக் கிரமவித்தன் பக்கல் விலை கொண்டுடைய குழி நூற்றிருபத்தஞ்சும், ஆக குழி ஆயிரத்தைம்பதும் அமாவாஸிப்புறம் சந்திராதித்தவற் செல்வதாக இறை விழுத்துகைக்கு[29]க் கிரயமாக[30] இவர் பக்கல் ஸபையோமாக வேண்டும் பொன்கொண்டு இந்நிலத்துக்கு வந்த இறை ஸபையோமெ இறுக்கக் கடவோமாக இசைந்து இறை இழிச்சிக்[31] குடுத்தோம். இப்படி கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிச் சந்திராதித்தவற் செல்வதாக இறை இழிச்சிக் குடுத்தோ மஹாஸபையோம். ஸபையுள் நின்று ஐயக்கி[32] வண்டு வராபதி பிச்சர் பணிக்க பணியால் எழுதிநேந், இவ்வூர் மத்யஸ்தந் மணிமங்கல முடையாந் வேளான் பெரான்[33] [இவை என ?] எழுத்து.

## குறிப்புகளும் விளக்கங்களும்

1. முதலாம் குலோத்துங்கன் :—இவன் வெங்கி மன்னன் இராசேந்திரனுவன். அதிராசேந்திரனுக்குப் பிறகு சோழர்களின் ஆண் வழி வாரிசு முற்றுப் பெற்றது. எனவே முதல் இராசேந்திரன் மகள் அம்மங்கா தேவிக்கும் வெங்கி அரசன் ராஜராஜ நரேந்திரனுக்கும் பிறந்த இராசேந்திரன், முதற் குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ மன்னனுனுன். இவன் ஆட்சிக் காலம் கி.பி. 1070 முதல் 1120 வரை யாகும். திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பெயரை முதலில் தரித்தவன் இவனே. இவனுடைய மெய்க்கீர்த்திகள், 'புகழ் மாது விளங்க',

---

[28] காராம்பிச் செட்டு-வைணவர்களுக்குரிய குடிப்பெயர்.

[29] இரை விடுத்துகை—வரி செலுத்தும் தொகைக்கு.

[30] விலை. [31] அரசாங்க வரி நீக்கி. [32] ஐயக்கி > இயக்கி.

[33] பேரான் > பேராயிரமுடையான்.

திருமன்னி வளர அல்லது விளங்க', 'பூமேல் அரிவையும்', 'பூமியும் திருவும்' 'பூமருவிய திருமடந்தையும்', 'புகழ் சூழ்ந்த புணரி,' 'பூமேவி வளர', பூமாது வளர' 'திருமகள் ஜயமகள்' என்றெல்லாம் தொடங்குவன. இவன் ஆட்சித் தொடங்கி இதுவரை மேலைச் சளுக்கப்போர்களால் நலிவுற்ற சோழ அரசு வீறுற்றது. இவனுடைய மனைவியர் மதுராந்தகி, ஏழிசை வல்லபி, தியாகவல்லி என்போர் இவனுடைய மக்கள் எழுவரென்பர். கலிங்கத்துப் பரணி' பாடி, இவன் கலிங்க வெற்றியைச் சிறப்பித்த செயங்கொண்டார் இவனது அவைப்புலவராவர்.

2. சோழர்-சளுக்கியர் மண உறவுமுறை வருமாறு:—

முதலாம் இராசராசன்
- முதலாம் இராசேந்திரன்
  - இராசேந்திரன் II
    - மதுராந்தகி × சளுக்கிய இரண்டாம் இராசேந்திரன் (சோழ முதற் குலோத்துங்கன்).
  - அம்மங்காதேவி × இராசராச நரேந்திரன்
- குந்தவை × விமலாதித்தன் (கீழைச் சளுக்கியன்)

## 9. சிறு பழுவூர்ச் சபையோர் நில விக்கிரய பத்திரம்

1. இக் கல்வெட்டு இருக்குமிடம்:—திருச்சிராப்பள்ளி ஜில்லா, கீழப் பழுவூரிலுள்ள வடமூலேஸ்வரர் கோயிலின் இரண்டாம் பிரகாரத்து மேற்குச் சுவர்.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள அரசன் :—முதற் குலோத்துங்கனுகும். இவன் ஆட்சிக்காலம் கி. பி. 1070 முதல் 1120 வரையாகும்.

3. இக் கல்வெட்டுத் தோன்றிய காலம் :- இவன் ஆட்சியின் 20-வது ஆண்டில் ஆகும். அதாவது கி. பி. 1090-ம் ஆண்டு.

4. இவன் மெய்க்கீர்த்தியால் அறியப்படுவன :—(i) இளங் கோப் பருவ வெற்றி. இவன் தன் இளங்கோப் பருவத்தில் சக்கரக் கோட்டம் சென்று அங்கு ஆண்டு வந்த அரசனைத் தோற்கடித்தான். வயிராகரத்தில் எண்ணிறந்த யானைகளைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு சளுக்கிய மன்னனது சேனையைப் புறங்கண்டான். (ii) சோழ ஆட்சியைப் பெற்றது. சோழநாடாகிய பெண், தனக்குத் தலைவனில்லாமல் இருப்பதைக் கண்டு, சோழர் முடியை உரிமையால் சூடி, முன்னை மனுநெறி பெருகவும், வறுமை நீங்கவும், செங்கோல் திசையெங்கும் செல்ல, இருநில வளாகம் எங்கணும் தனது நல்லாட்சி திகழ, ஒப்பற்ற மேரு மலையில் புலி விளையாட, வார்கடல் தீவாந்தரத்துப் பூபாலர் திறைவிடுத்த களிறு வரிசையாக நிற்க ஆண்டு வந்தான். (iii) பாண்டியனேடு போர். தன்னேடு மாறுபட்ட பாண்டியனது பெரிய தலையைக் கொண்டுவந்து தன் அரண்மனை வாயிலில் இட்டு அதனைப் பருந்து அலைத்திடச் செய்தான். (vi) மேலைச் சளுக்கியப் போர். குலோத்துங்கன் ஆறும் விக்கிரமாதித்தனேடு நங்கிலி என்ற இடத்தில் போர் செய்து, சாளுக்கியரைத் தோல்வியுறச் செய்தான். தோல்வியுற்ற அவனை, துங்கபுத்திரை நதிக்கு அப்பாலும் துரத்திச் சென்ருன். அவ்வாறு ஓடிய விக்கிரமாதித்தனை மறுபடியும் மணலூரில் தாக்கி, தோற்கடித்து, பகைவருடைய பல களிறுகளைக் கைக்

கொண்டான். (v) கங்க மண்டலத்தையும், சிங்கணத்தையும் கைக்கொண்டான். (vi) பாண்டியர்களோடு இரண்டாவது போர். பாண்டியர்கள் வீரராசேந்திரன் இறந்த பிறகு நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் நாட்டை ஐந்தாகப் பிரிவு செய்து ஒரு பிரிவுக்கு ஒருவராக ஐவர் ஆட்சிபெற்று சுயேச்சையடைந்தனர். அவர்களுடைய சுயேச்சையைப் பறிக்க குலோத்துங்கன் அவர்கள்மீது போர் தொடுத்தான். பாண்டியர் ஐவரும் தோல்வியுற்று காடுகளில் ஒளிந்துக் கொண்டனர். சேரர், ஒளிந்துக்கொண்ட பாண்டியர்களைப் பிடித்து அவர்களைச் சிறுமலையிலுள்ள காட்டில் விட்டான். இதன்மூலம் முத்துக்குளிக்கும் மன்னார் வளைகுடா, அதைச் சார்ந்த நாடுகள், யானைகள் மிக்க மேற்குத் தொடர்ச்சி மலை, கன்னியாகுமரி இவற்றைக் குலோத்துங்கன் கைப்பற்றினான். (vii) சேரருடன் நடத்திய போர். சேர மன்னனை குலோத்துங்கன் எதிர்த்து கோட்டாறு என்னுமிடத்தில் பெரும்போர் நிகழ்த்தினான். சேரன் தோல்வியுற, மலைநாட்டார் பலர் இறந்தனர். மறுபடியும் சேரன் போருக் கெழாவண்ணம் கோட்டாற்றில் ஒரு நிலைப் படையைச் (Standing Army) சிறந்த தலைவர்களின் கீழ் நிறுவினான். இதற்குக் 'கோட்டாற்று நிலைப்படை' என்று பெயர் வழங்கிற்று (S. I. I. Vol III p 144 ff).

5. சாசனத்தின் நோக்கம் :—உத்தொங்க தொங்க வளநாட்டில், குன்றக் கூற்றத்துள்ள, சிறு பழூர்ச் சபையோர், விருதராசபயங்கர வாணகோவரையர் என்பாரது தாயார் சோழகுல சுந்தர விச்சாதிரி ஆழ்வார்க்கு ஒருமா நிலத்தை ஒரு காசுக்கு விற்று விலையாவணம் செய்து கொடுத்தனர்.

*ஸ்வஸ்தி ஸ்ரீ புகழ்சூழ்ந்த புணரி[2] அகழ்சூழ்ந்த புவியில் பொங்நேமி யளவும் தங்நேமி நடப்ப[3] விளங்கு ஜெய மகளை இளங்கோப் பருவத்து[4]ச் சக்கரகோட்டத்து[5] விக்கிரமத் தொழிலால்[6] புதுமணம் புணர்ந்து மதவரையீட்டம்[7] வயிராகரத்து[8] வாரி[9] அயிநுளை[10]க் கொந்தள வரைசர்[11] தந்தளமிரிய[12] வாளுறை கழித்துத்[13] தோள்வலி காட்டிப் போர்ப்பரி நடாத்தி கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகைசூடி தெந்திசை தேமருகமலப்பூமகள்[14] பொதுமையும்[15] பொங்நி யாடையும் நங்நிலப்பாவை

---

* S. I. I., Vol III, Part II, p 152.

[2] புணரி-கடல். [3] மேருமலை யளவும் தன் ஆணையாகிய சக்கரம் நடக்க

[4] இளவரசனா யிருந்தகாலத்தில்.

[5] பக்கம் 19 குறிப்பு 30 காண்க.

[6] பராக்கிரமச் செயலால். [7] மதத்தையுடைய யானைக் கூட்டம்.

[8] இதுவும் மத்திய மாகாணத்தில் சக்கரக் கோட்டத்தின் அருகில் இருக்கிறது. வயிராக ரத்தில் யானைகளும் வைரச் சுரங்கங்களும் முற் காலத்தில் மிகுதியாக இருந்தன என்று 'அயினி அக்பரி' கூறுகின்றது (E. I., Vol X No. 4) சோழன் இவ்வூரைத் தீயிட்டழித்தான். (க. பரணி. 239. S. I. I., III No. 68).

[9] மிகுதியாகப் பிடித்து. [10] அயிநுளை > அயிர்முனை - போர் முனையில்

[11] சாளுக்கிய அரசர். [12] தண்கள் சேனை ஓட.

[13] வாள் உறைகழித்து-வாளை உறையிலிருந்து எடுத்து.

[14] இலக்குமி. [15] பொதுமையும் (தவிர) - எல்லார்க்கும் பொது என்பது நீங்கவும்.

தனிமையும் தவிர[16] வந்து புநிதத் திருமணி மகுடம் உரிமையிற் சூடி தந்நடி இரண்டும் தடமுடியாகத் தொந்நில வேந்தர் சூட முன்னை மனுவாறு பெருக[17] கலி யாறு வறுப்ப[18] செங்கோல் திசைதொறும் செல்ல வெண் குடை இருநில விளாகம்[19] மெங்கணுந்தனது திருநிழல் வெண்குடை வெண்ணிலாத் திகழ[20] ஒருதனி மேருவிற் புலி விளையாட[21] வார்கடல் தீவாந்தரத்து பூபாலர்[22] திறைவிடுத்த கலஞ் சொரிகளிறு முறைமுறை நிற்ப[23], விலங்கிய தெந்நவந் கருந்தலை[24] பருந்தலைத்திட தந் பொன்னகர்ப்[25] புறத்திடைக் கிடப்ப இஞ்ஞான்[26] பிற் குலப் பிறைபோல்[27] நிற்ப்பிழை யென்னும் சொல்லெதிர்க் கோடிற் றல்லது[28] தங்கை வில்லெதிர் கோடா[29] விக்க

[16] பொன்னி......தவிர—காவிரியை ஆடையாகக் கொண்ட சோழ மண்டலமாகிய பெண் (தனக்குத் தலைவன் இல்லாமல்) தனிமையாக இருப்பது நீங்கவும், பொந்நியாடையும் என்று உம்மை மிக்கது.

[17] முன்னிருந்தபடி மனுவழி தழைக்க.

[18] கலியாறு-வறுமை. வறப்ப > வறுப்ப-நீங்க.

[19] பெரிய பூமியாகிய இடம். (விளாகம் > வளாகம்)

[20] வெண்மையான ஒளி வீச. [21] ஒப்பற்ற மேருமலையில் புலிக்கொடி பறக்க.

[22] பலதீவுகளிலுள்ள அரசர். [23] கப்பலிலிருந்து கொண்டு வரப்பட்ட யானைகள் அணி அணியாக நிற்க.

[24] விலங்கிய தென்னவன் கருந்தலை—(அவ்வாறு கப்பங் கட்ட) மாறுபட்ட பாண்டியனது பெரியதலை.

[25] தன் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்தில்.

[26] இந் நாள். [27] தேய்பிறைச் சந்திரனைப் போல,

[28] உன் பிழைதான் என்ற சொல்லானது எதிரே வளைந்த தல்லாது (போரில் தோல்வி என்பது கருத்து).

[29] வில் வளையாத

லந்[30] கல்லதர்[31] நங்கிலி[32] துடங்கி மணலூர் நடுவிந் துங்க பத்திரை யளவுற்று எங்கணும் பட்ட[33] வெங்களிறும் விட்ட தந்மானமுங் கூறிய வீரமுங் கிடப்ப எறிந மலை களும் முதுகு நெளிப்ப இழிந்த நதிகளும் சுழந்றுடைந் தோட விழுந்த கடல்களும் தலை விரித்தல மர, குட திசைத் தந்நாளுகந்து[34] தானும் தானையும் பந்நாளிட்ட மும் பலபல முதுகும் பயந்தெதிர் மாறிய ஜயப்பெருந் திருவும் வாளாரொண்கண் மடந்தயரீட்டமும் மீளாது குடுத்த வெங்கரி நிரையும் கங்கமண்டலமும்[35] சிங்கண[36] மெந்தும் பாணி[37] இரண்டும் ஒரு விசைக்[38] கைக்கொண்டு இணைவியப் புகழொடும்[39] பாண்டிமண்டலங் கொள்ள திருவுளத் தடைத்தருளி[40] வெள்ளவரு பரிதரங்கமும்[41] பொருகரிக் கலங்களும் பொல் தந்திர வாரியும் முடைத்தா[42]யி வந்து வடகடல் தெந்கடல் படர்வதுபோல் தந் பெருஞ் செனையை ஏவி பஞ்சவ ரைவரும்[43] பொருத

---

[30] விக்கிரமாதித்தன் VI.

[31] மலைவழியையுடைய. [32] நங்கிலி-இது கோலார் ஜில்லா விலுள்ள ஒரு ஊர்.

[33] இறந்தபோன [34] சேரநாட்டில் தான் பிறந்த நட்சத்திர மாகிய பூசநாள் விழாவை நடத்தி.

[35] இது மைசூர் நாட்டின் கீழ்ப் பகுதி.

[36] இது கங்கநாட்டின் அருகிலிருந்ததென ஊகிக்கவேண்டி இருக்கிறது.

[37] பாணி-தேசம். [38] ஒரு தடவையில்.

[39] இணைவியபுகழ்—செறிந்த புகழ். [40] மனங்கொண்டு.

[41] வெள்ளம்போல் வருகின்ற குதிரைப் படையும்.

[42] சேனை சமுத்திரம் உடையதாய். [43] பாண்டியர் ஐந்து பேரும். இவன் காலத்தில் பாண்டியர் ஐந்து பேர் அரசாண்ட னர். ஆரும் விக்கிரமாதித்தன் உதவியால் அதிராசேந்திரன் அரியணை ஏறியபோது நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்

போர்களத்தஞ்சி வெருவி நெளித்தோடி[44] அரணைநப் புக்க காடறத் துடைத்து நாட்டடிப் படுத்து[44] மற்றவர் தம்மை[45] வனசரர்[46] திரியும் பொச்சை[47] வெஞ்சுரமேற்றி[48] கொற்ற விசைய ஸ்தம்பம்[49] திசைதொறும் நிறுத்தி முத்திங் சிலாபமும்[50] முத்தமிழ் பொதியிலும் மத்த வெங்கரி படுமையச் சைய்யமும்[51] கந்நியும்[52] கைக் கொண்டருளி தெந்நாட்டெலை காட்டி குடமலை நாட்டுள்ள[53] சாவெறெல்லாந்தநி விசும்பேற[54] மாவேறிய தந்வருதினித்தலைவரை[55] குறுகலர் குலைய[56] கோட்டாறு[57] ள்ப்பட நெறிதொறும் நிலைகள்[58] ளிட்டருளி திறல்கொள் வீரஸிம்ஹாஸநம் திரிய விட்டருளி பொங்கொளியார

படுத்திக்கொண்டு பாண்டியர் சுயேச்சையடைந்து தங்கள் நாட்டை ஐந்து கூறுகப் பிரித்துக்கொண்டு அரசாண்டு வந்தனர். மார்க்கோபோலோவும் பாண்டியர் ஐவரென்றே குறித்தனர்.

[44] பாண்டியர் முதுகுகாட்டி ஓடி காட்டில் ஒளிய அவர்களைத் தேடிப் பிடித்து அவர் தம் நாட்டையும் சோழன் கைப்பற்றினன்.

[45] பாண்டியரை [46] வேடர் [47] பொச்சை > பொத்தமலை-இக்காலம் சிறுமலை என்று அழைக்கப்படும்.

[48] கொடிய காட்டிற்குத் துரத்தி. [49] வெற்றிக்குறியான தூண்கள்.

[50] முத்திங் சிலாபமும் > முத்தின் சலாபமும். முத்துக் குளிக்கும் இடம் மன்னர் வளைகுடாவாகும்.

[51] மேற்குத் தொடர்ச்சிமலை. [52] கன்னியாகுமரி முனை.

[53] சேரநாடு [54] சாவே......ஏக—வீரர்கள் எல்லாம் ஒப்பற்ற விண்ணுலகம் போக.

[55] யானைகளில் ஏறியிருந்த சேனைத் தலைவரை.

[56] பகைவர் அழிய. [57] நாஞ்சில் நாட்டிலுள்ளதொரு ஊர். குமரிமுனைக்கு 10 மைல் வடக்கிலுள்ளது.

[58] நிலைகள்—நிலைப்படைகள் (Standing Army).

மும் திருப்புயத்தலங்களும் போல் வீரமும் தியாகமும் விளங்க பார்மிசை மேவலர் வணங்க வீரஸிமஹாஸநத்து அவனிமுழுதுடையாளொடும்[59] வீற்றிருந்தருளிய கொ ராஜகெசரி வந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ கொலத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு இருபதாவது[60] உத்தொங்க தொங்கவளநாட்டுக்[61] குன்றக் கூற்றத்து[62] ப்ர ஹ்மதேயம் சிறுபழுவூர்[63] ஸபையோம். விருதராஜ பயங்கர வாணகோவரையர் தங்கள்ளாச்சி[64] சோழகுல சுந்தரந் விச்சாதிரி யாழ்வார்க்கு[65] ஸபை விலையாக விற்றுக்குடுத்த நிலமாவது ராஜேந்திர சோழவாய்க்

---

[59] குலோத்துங்கன் பட்டத்தரசியான மதுராந்தகி. பட்டத்தரசியாகிய இவளுடன் சேர்ந்து உறைவதாக சாசனங்கள் கூறுவதிலிருந்து இவளாலும் குலோத்துங்கன் சோழநாட்டுக்கு உரிமை கொண்டாடினன்.

[60] குலோத்துங்கன் ஆட்சியின் 20-ம் ஆண்டில் இக்கல்வெட்டுத் தோன்றியதாகும்.

[61] உடையார்பாளையம் தாலுகா பழுவூரைச் சேர்ந்த நிலப்பரப்பாகும் இது.

[62] குன்றக் கூற்றம். இதுவும் திருச்சி ஜில்லா அரியலூருக்கருகிலுள்ள குன்றம் என்ற ஊரைத் தலைநகரமாகக் கொண்ட ஒரு கூற்றமாகும்.

[63] சிறுபழுவூர். ஷை ஜில்லா ஷை தாலுகாவிலுள்ள தேவாரம் பெற்ற பதியான பழுவூரே சிறுபழுவூர் ஆகும். இது கீழப்பழுவூர் என்று இப்போது வழங்குகிறது. இதற்குரிய தலவிருட்சம் ஆலமரமாகும். பழு என்ற சொல் ஆலமரத்தைக் குறிப்பதாகலின் இவ்வூர் இப்பெயர் பெற்றது. ஆலந்துறை என்றும் இது பெயர் பெறும். தீர்த்த விசேடமுடைமையின் துறை என்று அழைக்கப் பெற்றது. ஆலந்துறை ஈசர் என்பது இக்கோயிலிலுள்ள சிவபெருமானுக்குப் பெயராகும்.

[64] தங்கள் தாயார்.

காலுக்கு வடக்கு, பவித்திர மாணிக்கவதிக்குக் கிழக்கு முதல் கண்ணாற்று இரண்டாம் சதுரத்து நிலம் நாலுமாவில் வடக்கடைய் நிலம் ஒருமாவில் கீழ்க்கடைய் நிலம் அரைமாவும் இவ்வதிக்குக் கிழக்கு, இவ்வாய்க்காலுக்கு வடக்கு, இரண்டாங்கண்ணாற்று இரண்டாஞ் சதிரம் நிலம் நாலுமாவில் வடக்கடைய் நிலம் ஒருமாவில் மேற்கடைய் நிலம் அரைமாவும், ஆக நிலம் ஒரு மா. இந்நிலம் ஒரு மாவும் இவருக்கு விற்றுக் கொள்வதாக எம்மிலிசைஞ்ச[66] விலைப்பொருள் அன்றுடு னல்க்காசு[67] ஒன்று. இக்காசு ஒன்றும் ஆவணக்களியெ[68] கைச்செல்லறக்[69] கொண்டு விற்று விலையாவணம் செயிது குடுத்தோம் ப்ரஹ்மதேயம் சிறுபழுவூர் ஸபையோம். இந்நிலம் ஒரு மாவுக்கும் இதுவே விலையோலை யாவதாகவும்[70] இதுவே பொருள் மாவறுதிப் பொருள்ச் சிலவோலையாவதாகவும் இது வல்லது வேறு பொருள் மாவறுதிப் பொருள்ச்சிலவோலை காட்டக் கடவர் அல்லாதாராகவும். இப்படி இசைஞ்சு[71] இக்காசு ஒன்றும் கொண்டு இந்நிலம் ஒரு மாவும் விலைக்கற விற்று[72] பொருளறக்[73] கொண்

---

[65] சோழகுல சுந்தரன் விச்சாதிரி ஆழ்வார்—சோழகுல சுந்தரன்—இயற் பெயர்; விச்சாதிரி-இசைவல்லோன், ஆழ்வார்—உயர்குலப் பெண்களுக்குத் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர். இது இக் காலத்தில் ஆயாள் என்ற வழக்குபோலும்!

[66] நாங்கள் சம்மதித்த. [67] அப் பொழுது வழங்கும் நாணயத்து நல்ல காசு;

[68] ஆவணக்களரி-ஆவணம் பதிவு செய்யும் இடம். (Registration Office).

[69] கொடுக்க. [70] சாசனம் ஆவதாகும் [71] ஒப்புக்கொண்டு.

[72] முழுவிலைக்கு விற்று. [73] முழுப்பொருளையும் கொண்டோம்.

டோம் சிறுபழுவூர் ஸபையோம். இவர்கள் பணிக்க இப் பிரமாணம் எழுதிநேந். மந்தியஸ்தந் பழுவூருடையாந் ஆயிரத்திரு நூற்றுவந் முடிகொண்டாநேந் இவை எந் நெழுத்து. இப்படிக்கு பழுவூர் சவாந்தி நாரணநேந் இவை எந்நெழுத்து. இதுசாந்தி பலாசிரியந் வீரநாரா யணநது. இது சவாந்தி நாராயணந் மாறந் யிப்படி அறிவேந் இவ்வூர் வீரசோழ விண்ணகராழ்வார் கோயில்[74] திரு வாராதனை பண்ணும் நாராயணந் திருவாயிக் குலமுடையாநேந். இப்படி அறிவேந் இவ்வூர் கருமாந். இது பந்மாஹேஸ்வர ரக்ஷை[75] உ.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. ஆவணக்களரி:—இது இக்காலத்து பதிவுச்சாலை (Registration Offices) களுக்கு ஒப்பாகும். நிலத்தைக் கிரயம் செய்வோரும் வாங்குவோரும் ஆவணத்துடன் அங்கு சென்று நிலத்தின் விலையையும், நான்கெல்லையையும் தெரிவித்துத் தம் உடன்பாட்டிற்கும் உறுதி மொழி கூறி ஆவணம் காப்பிடப் பட்ட பின்னர்த் திரும்புவர். இந்த ஆவணம் பொதுப்பயனுக்காயினும், என்றும் நிலைத்திருப்பதாயினும் அவ்வூரிலுள்ள கோயிற் சுவற்றில் அதைப் பொறித்துவைப்பது வழக்கம்.

2. இதுவே பொருள் மாவறுதிப் பொருள் சிலவோலை ஆவதாகவும், இது வல்லது வேறு பொருள் மாவறுதிப் பொருள் சிலவோலை காட்டக்கடவர் அல்லாதா ராகவும்:— பணம் பெற்றமைக்கு இதுவே மூலசாஸனமாகும்; இதைத்தவிர நிலம் கிரயம் பெற்றோர் முழுத் தொகையும் கொடுத்தமைக்கு வேறு

---

[74] இது பழுவூரிலுள்ள திருமால் கோயிலின் பெயராகும்; மணவாளப் பெருமாள் கோயில் என்று இப்போது பெயர் பெறும்.

[75] இது இக் கல்வெட்டின் காப்புரை.

சாசனம் வேண்டுவதில்லை. (Dr. Hultzsch's translation: This alone shall be the record of the final payment of the money viz., the purchasers shall not be bound to produce another record of the final payment of the money herewith.)

## 10. வில்லவராயன் சாசனம்*

1. இக்கல்வெட்டு இருக்குமிடம், திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள திருவானைக்காவிலுள்ள கோயிலின் இரண்டாம் பிரகாரத்துக் கீழ்ச்சுவரிலாகும்.

2. இதில் குறிக்கப்பட்ட அரசன், முதலாம் குலோத்துங்கன். (விவரம் 9-ம் கல்வெட்டில் காண்க)

3. இக் கல்வெட்டுத் தோன்றியகாலம், இவ்வரசன் ஆட்சியின் 47-வது ஆண்டிலாகும்; அதாவது கி. பி. 1117-ல்

4. மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்:—9-ம் கல்வெட்டின் மெய்க்கீர்த்தியும் இக் கல்வெட்டின் மெய்க்கீர்த்தியும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. முன்னைய கல்வெட்டின் இறுதியில் குலோத்துங்கன் மனைவி அவனி முழுதுடையாள் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்க, இக் கல்வெட்டில் (i) தியாகவல்லி உலகமுடையாள் (ii) ஏழிசை வல்லபி ஏழுலகமுடையாள் — என்ற இருவரோடும் (iii) உலக முழுதுடையாள் குறிப்பிடப்படுகிறாள்.

5. சாசனத்தின் நோக்கம். பாண்டிகுலாசனி வளநாட்டிலுள்ள, மீக்கோழை ஆளிகுடியில், பயிர் செய்யப் பெறுமல் மேடுபள்ளமாய்க் கிடந்த $4\frac{3}{4}$ வேலி நிலத்தை, திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் திரிபுவன பதிக்குப் பழைய அடிமை பூண்ட சண்டேஸ்வரன் உள்ளிட்ட கன்மிகள், ஜயசிங்க குலகால வளநாட்டு மீச்செங்கிளி நாட்டு வளம்ப குடி

---

*S. I. I., Vol III, Part II, p 168.

என்னும் ஊரிலுள்ள அரையன் மகன் அருமொழித் தேவனை வில்லவராயனுக்கு நாலேமாகாணி காசுக்கு விற்று, அக்காசை கோயில் பண்டாரத்தில் ஒடுக்கி வைத்தனர். இந்நிலத்தைப்பண்படுத்திப் பயிரிட்டுவரும் வருவாயான இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணி நெல்லையுங் கொண்டு, இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இடங்கை நாயகருக்கும், அவர் பிராட்டியாருக்கும் திருமஞ்சனப்படி, திருவமுதுப்படி, இரண்டு திருநாளிலும் இரண்டுநாள் எழுந்தருளிகைப்படி இவற்றிற்குப் பயன்படுத்திக்கொள்ள வில்லவராயன் நிபந்தம் செய்து கொடுத்தான்.

[1]ஸ்வஸ்திஸ்ரீ. புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியில் பொங்நேமியளவுந் தந்நேமி நடப்ப விளங்குசய மகளை யிளங்கோப்பருவத்து சக்கரகோட்டத்து விக்கிரமத் தொழிலால் புதுமணம் புணர்ந்து மதவரையிட்டம் வயிராகரத்து வாரி அயிர்முனைக் கொந்தளவரசர் தந்தளமிரிய வாளுறைகழித்து தோள்வலி காட்டிப் போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி வடதிசை வாகை சூடித் தெந்திசைத்தேமரு கமலப்பூமகள் பொதுமையும் பொங்நியாடை நங்நிலப் பாவையின் தனிமையுந் தவிரப் புனிதத் திரு மணிமகுடம் உரிமையிற் சூடித்தங்நடி யிரண்டுந் தடமுடியாகத் தொங்நிலவேந்தர் சூட முன்னை மனுவாறு பெறுக கலியாறு வறுப்ப செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை யிரு நில வளாகம் எங்கணுந் தனது திருநிழல் விண்ணிலாத்திகழ ஒருதநி மேருவில் புலி விளையாட வாற்கடற் றீவாந்தரத்துப் பூபாலர் திறைவிடு

---

[1] இக் கல்வெட்டின் மெய்க்கீர்த்திப் பகுதி பெரும்பாலும் 9-ம் கல்வெட்டின் மெய்க்கீர்த்திப் பகுதியை ஒத்திருப்பதால் அக் கல்வெட்டின் குறிப்புரைகளை இதற்கும் கொள்க.

தந்த கலஞ்சொரி களிறு முறை நிற்ப விலங்கிய தெங்கவர் கருந்தலை பருந்தலைத்திட தங் பொங்னசர்ப் புறத்திடைக் கிடப்ப விநாள்பிற்குலப் பிறைபோல் நிற்பிழை எங்னுஞ் சொல்லெதிர் கோடிற்றல்லது தங் கைவில்லது கோடா வெழுகுலத்தரசர் அளத்தியலிட்ட களிற்றின திட்டமும் பட்ட வெம்பரியும் விட்டதங்மானமும் கூறிந வீரமும் கிடப்ப ஏறின மலைகளு முதுகு நெளிப்ப, யிழிந்த நதிகளும் சுழன்று சுழன்று விழுந்த கடல்களுந் தலைவிரி தலமரக்குடதிசைத் தங்நாளுகளுந் தானும தாரையும் பங்காளிட்ட பல பல முதுகும பயங்தெதிர் மாறின ஜயப் பெருந்திருவும் பழியுகந்து குடுத்தபுகழிங் செல்வியும் வாளாரொண்கண் மடந்தையரீட்டமும் மீளாதுகுடுத்த வெங்கரிநிரையும் கங்கமண்டலமும் சிங்கணமெங்னும் பாணியிரண்டும் ஒரு விசைக் கைக்கொண்டெண்டிய புகழொடு பாண்டிமண்டலங்கொள்ளத் திருவுளத் தடைந்து வெள்ளவரு பரித்தரங்கமும் பொருபரிக் கலங்களும் தந்திரவாரியுமுடைத்தாய் வந்து வடகடல் தென்கடல் படர்வதுபோலத் தங்பெருஞ்சேனையை யேவிப் பஞ்சவர் ஐவரும் பொருத போர்க்களத்தஞ்சி வெருநெளித்தொடி அரணைநட்புக்க காடறத்துடைத்து நாட்டடிப் படுத்து மற்றவர் தம்மை வனசரர் திரியும் பொச்சைவெஞ்சுரமேற்றிகொற்ற விசயஸ்தம்பந் திசைதொறு நிறுத்தி முத்திங் சலாபமும்முத்தமிட் பொதியிலுமத்தவெங்கரி படுமய்யச்சய்யமுங் கங்நியுங் கைகொண்டு புநிதத் தெங்நாட்டெல்லை காட்டிக்குடமலைநாட்டுள்ள சாவெறெல்லாங் தநிவிசும்பேற மாவேறிய தங் வருதினித்தலைவரைக் குறுகலர் குலையக் கோட்டாறுட்பட நெறிதொறும் நிலைகளிட்டருளித்திறல் கொள்

வீரஸிம்ஹாஸனந்திரிய விட்டருளிப் பொங்கொளி யாரமுந் திருபுயத் தலங்கலும் பொல் வீரமுந்தியாகவும் விளங்கப் பார்தொழச் சிவனிடத்துமையெனத் தியாக வல்லி உலகுடையாளிருப்ப அவளுடன்கங்கை வீற்றிருந் தென மங்கையர் திலதம் ஏழிசைவல்லபி ஏழுலகமுடை யாள் வாழிமலர்ந்திருப்ப திருப்ப ஊழியுந் திருமாலாகத்துப் பிரியாதென்று திருமகளிருந்தென வீரஸிம்ஹாஸனத்து உலகுமுடையாளொடும் வீற்றிருந்தருளிய கொவிராஜ கேஸரி பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத் துங்க சோழ தேவர்க்கு யாண்டு ௪௰௭ ஆவது[2] பாண்டி குலாசனிவளநாட்டு[3] மீகொழை தேவதானப்ரஹ்மதேயம் திருவானைக்காவில் திருவெண்ணுவல்கீ[4]. ழிநிதமர்ந் தருளிய த்ரிபுவனபதிக்கு[5]மூலப்ருத் த்யநாகிய[6] சண்டெ

---

[2] இக் கல்வெட்டு குலோத்துங்கன் ஆட்சியின் 47-ம் ஆண் டில் வெளியிடப் பட்டதாகும்.

[3] பாண்டி குலாசனி என்னும் தொடர் பாண்டியர் குலத்துக்கு இடியை ஒத்தவன் என்று பொருள்படும். இது முதலாம் இராசராசனின் விருதுப் பெயர்களுள் ஒன்றாகும். இவ் விருதுப் பெயரே இந் நாட்டிற்கும் வைக்கப்பட்டது. இந் நாடு காவிரிக்கு இருமருங்கும் தெற்கு வெள்ளாற்றிற்கு வடக்கு, உறையூருக் குக்கிழக்கு—இந்தப் பிரதேசத்தில் உள்ளதாகும்.

[4] மீக் கோழை. இது மேற் கூறிய பாண்டி குலாசனி வள நாட்டின் ஒரு பகுதியாகும். இது மீக்கோழை கீழ்க்கோழை என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது. திருச்சி ஜில்லாவில் உள்ளது.

[5] இது திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமா னின் பெயராகும்.

[6] பழைய அடியானாகிய.

ஸ்வரன் ஆதேசம்[7] ஜயசிங்க குலகாலவளநாட்டு[8] மீசெங்கிளிநாட்டு[9] வளம்பகுடி அரயமகந்மூனையந் அருமொழிதேவநான வில்லவராயனுக்கு நாம் விற்றுக்கொடுத்த நிலமாவது. உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாந் தேவதாநம் தெந்கரை ஊர்களில் பாண்டி குலாசநி வளநாட்டு மீகொழை ஆளிகுடியில் இவனுக்கு விற்றுக்குடுத்த நிலத்துக் கிசைந்த கீழ்ப்பார்க்கெல்லை பிள்ளை கொள்ளிவாய்க்காலுக்கு மேற்கும், தெந்பார்க்கெல்லை களத்தில் வடக்கிலகைய் வாய்க்காலுக்கு வடக்கும், மீபார்க்கெல்லை உத்தமசீலிச் சருப்பெபதிமங்கலத்து

---

[7] சண்டேஸ்வரர் ஆதேசம். சண்டேஸ்வரரின் உத்தரவுபடி இக்கோயில் நிலம் வில்லராயனுக்குக் கொடுக்கப்பட்டதாகும். நம் நாட்டுச் சிவன்கோயில்களில் இருக்கும் சண்டேஸ்வரக் கடவுளே அக்கோயிலுக்குரிய எல்லாப் பொருள்களையும் காப்பவர் என்பது ஒரு ஐதிகமாகும். அதனால் கோயில் நிலத்தை மக்கள் வாங்குவதாயிருந்தாலும், அல்லது நிலத்தை அக்கோயிலுக்குத் தானம் செய்வதாயிருந்தாலும் அதைச் சண்டேஸ்வரர் பெயரால் செய்வது பண்டைக்காலத்து வழக்கம் என்பதற்கு, இக் கல்வெட்டு சான்றாகும்.

[8] ஜயசிங்க குல கால வளநாடு :—இது இப்போதைய புதுக்கோட்டை இராச்சியத்திலுள்ள வாராப்பூர், குளத்தூர் தாலூகா, திருவேங்கை வாசல், கீரனூர் ஆகிய ஊர்களைத் தன்னகத்தே கொண்ட பிரதேசமாகும். (Ins. of Pudukkottai State 116).

[9] மீசெங்கிளிநாடு இப்போதுள்ள டை இராச்சியத்தின் குளத்தூர் தாலூகா மலையடிப்பட்டி என்னும் ஊர் மீச்செங்கிநாட்டுக்கு உட்பட்ட ஊர் என்று தெரிகிறது. இச் செங்கிளி நாடு மீச்செங்கிளி நாடு, கீழ்ச்செங்கிளி நாடு என்று இரு கூறுகப் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது. (Ins. of Pudukkottai State No. 116).

தென்பிடாகை[10] புதுக்குடி[11] எல்லைக்கு கிழக்கும், வடபார்க் கெல்லை தென்நாற்றங்கரைப் பெருவழிக்கு தெற்கு ஆக இவ்விசைந்த பெரு நான்கெல்லையுள்பட நிலம்[12] ௪௰ இந் நிலம் நாலெழுக்காலும் இத் தேவர்க்கு[13] யாண்டு நாற்பத் தேழாவது வரை பயிரிலி[14] புஞ்செய்யாய்க்குட்டமு[15] மண்ணுமிட்டு கிடந்தமையிலந் நிலம் முனையந் அருமொழி தேவனான வில்லவராயனுக்கு விற்றுக் குடுத்துக் கொள்வதாக எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு[16] ௪௰. இக்காசு நாலே மாகாணியுங் கைக் கொண்டு திருவானைக்காவுடைய எம்பெருமாந் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கி முனையந் அருமொழி தேவனான வில்லவராயனுக்கு விற்றுக்குடுத்து இவந் உடையார் திருவானைக்காவுடைய எம்பெருமாந் கொயிலில் இடங் கை நாயக[17] ரென்று எழுந்தருளுவித்த இஷபவாஹந தேவர்க்கும் நம்பிராட்டியார்க்குந்[18] திருமஞ்ஜநங்களுக்கு திருவமிர்துபடிக்கு இரண்டு திருநாளிலும் இரண்டுநாள் திருவிழா எழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வெண்டும்

---

[10] தென் திசையிலுள்ள சிற்றூர்.

[11] உத்தமசீலிச் சதுர்ப்பேதிமங்கலம், புதுக்குடி என்பன பாண்டி குலாசனி வளநாட்டில் உள்ள ஊர்கள். முன்னையது இப்போது உத்தம சீலி என்று வழங்கப்படுகிறது.

[12] நிலம்: இது ஒரு வேலி நிலத்தைக் குறிக்கும். 'நிலம் $4\frac{3}{4}$' என்பது, 'நிலம் $4\frac{3}{4}$ வேலி' என்று பொருள்படும்.

[13] குலோத்துங்க சோழ தேவர்க்கு. [14] பயிர் செய்யாமல்.

[15] குட்டை - சிறு நீர் நிலை.

[16] அப்பொழுது வழங்கும் நல்ல நாணயம்,

[17] இடங்கைநாயகர். இவருக்கு இடபவாகனதேவர் என்றும் பெயர் உண்டு. இவர் திருவானைக்காவிலுள்ள ஒரு கடவுள்.

[18] இடங்கை நாயகரின் அம்மன்.

நிமந்தங்களுக்கு இந்நில சுதெ கல்லித்திருத்தி ஸ்ரீபண்டாரத்து புன்செய் வரிசையால் வேலி ஒன்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேஸரி மரக்காலால் இந்நிலம் நாலே முக்காலுக்கும் அளப்பதான ஐ *உ௰. ௩சுவதங இந்நெல் இருபத்து முக்கலனே இருதூணிக் குறுணியும் அளக்குமிடத்தில் கார்பாதி பசாநம்பாதி அளப்பதாகவும்[19]. இதில் மிகுதி கொண்டு இவந் இடங்கை நாயகரெந்று எழுந்தருளுவித்த இஷபவாஹந தேவர்க்கும் நம்பிராட்டியார்க்கும் திருமஞ்சனப்படிகளுக்கும் திருவமுது படிக்கும் இரண்டு திருநாளிலும் இரண்டு நாளெழுந்தருளுகைக்கு உள்ளிட்டு வேண்டு நிமந்தங்களுக்கு நிமந்தஞ் செய்து குடுத்தோம். முனையந் அருமொழிதேவனான வில்லவராயநுக்கு திருவானைக்காவுடைய எம்பெருமாநுக்கு மூலப்ருத்த்யநாகிய சண்டெஸ்வரந் உள்ளிட்ட கந்மிகளோம்[20] இது பந்மாஹெஸ்வர ரக்ஷை.[21]

## 11. அருளாளப்பெருமாள் கோயில் சாசனம்[1]

1. இக்கல்வெட்டு இருக்குமிடம்:— சின்னக்காஞ்சிபுரத்திலுள்ள அருளாளப் பெருமாள் கோயிலில், மலை (Mountain) என்று அழைக்கப்படும் கல்தளத்தின் மேற்குச் சுவரிலாகும்.

---

* நெல்லைக் குறிக்கும் அடையாளம்.

[19] கொடுக்கவேண்டிய நெல்லில், கார் என்னும் நெல் விளையுங் காலத்தில் பாதியும், சம்பா நெல் விளையுங் காலத்தில் பாதியும் அளப்பதாக.

[20] தேவ காரியம் பார்ப்பவர்கள்.

[21] பல சிவனடியார்கள் இதைக் காப்பாராக - இது இக் கல்வெட்டில் வந்துள்ள காப்புரை.

[1] S. I. I., Vol. III, Part II, p 187.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன்:—பரகேசரி விக்கிரம சோழன். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 1120 முதல் 1136 வரையாகும்.

3. இக் கல்வெட்டுத் தோன்றிய காலம்:—இவன் அரியணை ஏறிய 9-ம் ஆண்டிலாகும்; அதாவது கி. பி. 1129.

4. இக் கல்வெட்டின் மெய்க்கீர்த்தியால் தெரியும் செய்திகள்:—தன் இரு அடிகளையும் பிற அரசர்கள் சூட, உரிமையால் சோழர் முடியை அணிந்து திசைகளனைத்தும் ஆட்சி பரவ, வறுமையை நீக்கி, தருமம் தழைக்க, தென்கலிங்கம் விழ போர்நடத்தி, யானைப்படையை நடத்தி மகா மேருவை நடுவிற் கொண்ட பூமியைச் சுற்றிவர, சூரிய சந்திரர் உள்ளவரை ஒப்பற்று ஆட்சி விளங்க இவன் வீற்றிருந்தனன்.

5. சாசனத்தின் நோக்கம். பூதத்தாழ்வாரும், பொய்கையாழ்வாரும் அவதரித்த, கேட்டை நட்சத்திரத்தில் அருளாளப் பெருமாளுக்கு மாதந்தோறும் 81 திருமுழுக்கு செய்வித்தும், பெரும் திருவமுது வைத்து நிவேதித்தும் எழுந்தருளச் செய்வதற்காக, கேட்டை நட்சத்திரம் ஒன்றுக்கு 30 கலம் நெல் ஆக ஆண்டு ஒன்றுக்கு 390 கலத்திற்கு, மாதம் ஒன்றுக்கு 6 மரக்கால் வட்டி வரக் கூடியதாயுள்ள 780 கல நெல்லை வெங்காடன் ஆதித்ததேவனான வங்கத்தரையன் மூலதனமாக வைத்தான்.

ஸ்வஸ்தஸ்ரீ பூமாதுபுணர[2] புவிமாது வளர[3] நாமாது விளங்க[4] ஜயமாது விரும்ப[5] த்தன் நிருபதமலர்[6]

---

[2] இலக்குமி தன்னைச் சேர. [3] பூமிதேவி செழிப்புற.

[4] கலைமகள் விளக்கமடைய.

[5] வீர இலக்குமி விருப்பங்கொள்ள.

[6] தன்னுடைய இருபதங்களாகிய மலர்களை.

மன்னவர்சூட மன்னிய உரிமையால்[7] மணிமுடிசூடிச் செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப வெங்கலி நீங்கி மெய்யறந்தழைப்பக் கலிங்கமிரியக்[8] கடமலை நடாத்தி[9] வலங்கொளாழி வரையாழிதிரிய,[10] இருசுடரளவு,[11] மொருகுடை நிழற்ற[12] விஜயாபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து முக்கோக்கிழாநடிக[13]ளொடும் வீற்றிருந்தருளிய கோப்பரகேசரி பந்மராந த்ரிபுவநச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்ரம சோழதேவர்க்கு யாண்டு ஒன்பதாவது[14] ஜயஙகொண்ட சோழமண்டலத்து[15] எயிற் கொட்டத்து[16] எயில் நாட்டுத்[17] திருவத்தியூரா[18]ழ்வாரைப்பாடி யருளின ஸ்ரீபூதத்தாழ்வாரும் ஸ்ரீபொய்கையாழ்வாரும்[19] பிறந்த திருக்கேட்டைநாள்[20] அருளாளப் பெருமாள் புறப்பட்டருளி ஏகாசீதி திருமஞ்சநமும்[21] பெருந்திருவமுதுஞ்[22] செய்தருளத் திரு மஞ்சநத்துக்குத்

---

[7] நிலைபெற்ற உரிமையால். [8] கலிங்கநாடு அழிய.

[9] பெரிய மலைபோன்ற யானைகள். ஆகு பெயர்.

[10] மகாமேருவை நடுவனாகக் கொண்ட பூவுலகைச் சுற்றிவர.

[11] சூரியசந்திரர் உள்ளவரையும். [12] தண்ணளி செய்ய.

[13] இவள் விக்ரமசோழன் மனைவி. [14] இக் கல்வெட்டு விக்ரமசோழன் ஆட்சியின் 9-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

[15] கல்வெட்டு 5, குறிப்பு 81 காண்க.

[16] எயில் கோட்டம் தொண்டை மண்டலத்தின் 24 கோட்டங்களுள் ஒன்று.

[17] இது ஷை கோட்டத்து நாடுகளில் ஒன்று.

[18] அத்தியூர் காஞ்சிபுரத்தின் ஒரு பகுதி.

[19] இவர்கள் முதல் மூன்று ஆழ்வார்களில் இருவர்.

[20] கேட்டை நட்சத்திரத்தில்.

[21] எண்பத்தொரு திரு முழுக்கு (ஏக + அசீதி. ஏகம் - ஒன்று ; அசீதி - எண்பது.)

[22] வடை, பாயசம், பல கறி வகைகள் இவற்றுடன் கூடிய உணவு.

திருமுளைச் சார்த்த[23] திருமுளைப்பாலிகை[24] முப்பத்தாறுக்குப் பாலிகை ஒன்றுக் கடிக் கிழட்ட நெல்லு உரி[25] யாக நெல்லுப் பதக்கிருநாழியும[26] திருமுளைப் பீசங்[27] கொள்ள அரிசிஞநாழியும்[28] புண்ணியாஹ தக்ஷிணைக்கு[29] அரிசி அறுநாழி உழக்கும்[30] பலித்ரவ்யத்துக்கு[31] அரிசி இருநாழி உரியும்[32] திருமுளைக்குத் திருநந்தாவிளக்குக்கு[33] நாளொன்றுக்கு எண்ணை உழக்காக நாளஞ்சுக்கு எண்ணை நாழி உழக்குங் க்ருதஹாரோஹணத்துக்கு[34] நெய் மூவுழக்காழாக்கும் திருமஞ்சநத்துக்குக் கலசம் எண்பத்தொன்றுக்கு அடிக்கீழ் நெல்லு ஐங்குறுணி உரியும் கும்பநாலுக்கு நெல்லு நாநாழியும் திருச்சுண்ணக்[35] கலசமொன்றுக்கடிக்கீழரிசி இருநாழியுங் கலசங் சூழக்காண[36] விலையின் புடவை[37] பதிங்மூன்றுங் கலசங் தூலரைப் பலமும் திருமஞ்சநத்துக்கு நெய் முன்னாழியும் தேநாழியும்[38] பால் முன்னாழியும் தயிர் முன்னாழியும் ஸ்நபந த்ரவ்யங்கள்[39] வெண்டுவநவும் பஞ்சலோக

---

[23] முளைகளை உண்டுபண்ணக்கூடிய - தேவகாரியத்துக்காதலின் திரு என்று அடைகொடுக்கப்பட்டது.

[24] முளைக்க வைப்பதற்குப் பாத்திரம்.

[25] உரி - அரைப்படி. [26] இரண்டு மரக்கால் இரண்டுபடி.

[27] விதை முளைக்கவைக்க பாலிகைப் பாத்திரம் வாங்க.

[28] அரை மரக்கால். [29] புண்ணியா ஹததக்ஷிணை—வேதம் ஓதும் அந்தணர்களுக்குக் கொடுக்கும் பொருள். அந்நாளைப் புண்ணிய (தூய) நாளாக கூறப்படுவது (ஹத) ஆதலின் இப்பெயர் பெற்றது.

[30] முக்கால் மரக்காலும் கால்படியும்.

[31] பலிதிரவியம்—நவதானியம். [32] இரண்டரைப்படி.

[33] தூண்டா விளக்கு. [34] நெய்யால் அலங்கரிப்பதற்கு.

[35] வாசனைப் பொடி. [36] கலசத்தைச் சூழக்கட்ட.

[37] புடவை: இங்கு துணியைக் குறித்தது.

[38] தேநாழி—தேன் ஒரு படி.

மும்[40] பஞ்சரத்நமும்[41] திருச்சுண்ணத்துக்கு நடன் மஞ்சள்[42] நாற்பதிங் பலமும் திருவிளக்கெண்ணை உரியும் ஹோமத்துக்கு நெய்யுரியும் சார்த்தி அருளச் சந்தநமுக் கசும் கற்பூர மாறு மாவும் அகிலரைக் கழஞ்சுங்[43] கஸ்தூரி மஞ்சாடியு மிரண்டுமாவும[44] புழுகு நெய் * யிரண்டு மஞ்சாடியு[45] நாலுமாவு மாத்திரைக்கரிசி [46] நாநாழியும் பெருந் திருவமுதுக்கு அரிசி முக்கலனே குறுணியும் பருப்புப் பதக்கிருநாழி உரியும் பல வற்கத் துக்கறி[47] நிறை எண்ணூற்றிருபத்தைம்பலமும் கறி யமுதுக்கு உப்பு நாநாழியு மிளகு உரியும் கடுகு ஆழாக்கே இரு செவிடரையும் சீரக மாழாக்குஞ் சற்கரை இருபதின் பலமும் நெய்யுரியும் அமுதில் படைக்க சற்கரை முப்பத் திருபலவரையும் நெய் பதிநொரு நாழி ஆழக்கும் வாழைப் பழமைம்பத்தஞ்சும் தயிர் தூணியும் கண்ட சற்கரை[48] முக்கசும் திருக்கண்ணமடைக்கரிசி இருநாழியு நெய்யுழக் கும் சற்கரை இருபதின் பலமும், வாழைப்பழம் பத்தும், அப்ப அமுதுக்கரிசி பதக்கும் நெய்யிரு நாழி உரியும் சர்க்கரை எண்பதிங் பலமுமிளகாழாக்கும் சீரக மிரு செவிடரையும், விறகு கட்டு மூன்றும், குசக்கல உருவுக்கு நெல்லுக் கலமும், தண்ணீரமுதுக் கேலமொரு செவிடரையும் அடைக்காய் அமுதுக்கு[49] பாக்கு நாநூற்

---

[39] குளிப்பாட்டும் நீருக்குவேண்டிய வாசனைத் திரவியங்கள்.

[40] பஞ்சலோகம்—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

[41] பஞ்சரத்தினம்—முத்து, நீலம், பவளம், வைரம், மாணிக்கம்.

[42] கஸ்தூரி பஞ்சள். [43] கழஞ்சு—ஒரு கழஞ்சு எடையைக் (நிறுத்தல் அளவை) யைக் குறிக்கிறது. இப்போது ஒரு ரூபாய் எடை ஒருதோலாவைக் குறிப்பதைக் காண்க.

[44] ஒரு மா = $\frac{1}{20}$ கழஞ்சு. [45] ஒரு மஞ்சாடி = 2 குன்றுமணி எடை.

[46] சூர்ணம் [47]. பலவகைக் கறிகள் [48] கட்டி சர்க்கரை—வெல்லம். [49] பாக்கு.

றைம்பது வெள்ளிலைப் பற்றொன்பதும்[50] திருவிளக் கெண்ணை நாழி உரியும் திருவிளக்குடையார்கள்[51]குழாய் பந்திரண்டுக் கெண்ணை முந்நாழியும் பாவை விளக்குக்[52] கெண்ணை இருநாழியும் ஆக இவையிற்றுக்கு நிமந்த மாகச் செல்லதாக இட்டசமவிலைப்படி யாலிக் கோயில் சில வளக்குமருமொழிநங்கை மரக்காலால்[53] திருக் கேட்டை நாளொன்றுக்கு நெல்லு முப்பதிங்கலமாக ஓராட்டை நாளைக்கு வேண்டுவதாக நெல்லு முன் னூற்றுத் தொண்ணூற்றுக் கலத்துக்கும்[54] சோழ மண்டலத்து விருதராஜபயங்கர வளநாட்டு[55] மண்ணி நாட்டு[56] வங்கமுழையூர் முழையூருடையாந் வெண்காடந் ஆதித்த தேவநாந வங்கத்தரையந் இத்தேவர் பண்டா

---

[50] வெள்ளிலை பற்று ஒன்பது—வெற்றிலைக் கட்டு ஒன்பது.

[51] தீவத்திப் பிடிப்பவர்கள். [52] பெண் உருவங்கள் ஏந்தியிருக்கும் விளக்குகள். 'பாவை விளக்கும் பணிவுடன் பரவுமின்' என்ற மணிமேகலை அடிகளைக் காண்க.

[53] அருமொழி நங்கை என்பது வீரராசேந்திர சோழன் மனைவியின் பெயராகும். இவ்வரசியின் பெயரே அருளாளப் பெருமாள் கோயிலில் வழங்கிய மரக்காலுக்குப் பெயராயிற்று.

[54] திருக்கேட்டை......கலத்துக்கும்—கேட்டை நட்சத்திரம் ஒன்றுக்கு 30 கலமாக ஒரு ஆண்டில் 13 கேட்டை நட்சத்திரம் வருவதால் ஒரு ஆண்டிற்கு 390 கலம் நெல் ஆயிற்று.

[55] விருதராச பயங்கர வளநாடு:—முதற் குலோத்துங்கன் தன் நாட்டை அளந்து கணக்கிடுமுன் இது இராசேந்திர சிங்க வள நாடு என்று பெயர் பெற்றிருந்தது. இது சோழநாட்டில் காவிரி நதிக்கும், சிதம்பரத்துக்கு வடக்கேயுள்ள வெள்ளாற் றிற்கும் இடையிலிருந்த பெரு நாடாகும்.

[56] மண்ணி நாடு:—இது மேற் கூறிய வளநாட்டின் ஒரு பகுதியாகும். தற்காலமுள்ள கும்பகோணம் தாலுகாவின் கீழ்ப் பகுதியும், மாயவரம் தாலுகாவின் மேலைப் பகுதியும் கொண்டதாயிருந்தது.

ரத்துச் சில வளக்கு மருமொழிநங்கை மரக்காலாலளந்த நெல்லு எழுநூற்றெண்பதிங் கல மிந்நெல் லெழுநூற்றெண்பதிங் கலத்துக்கு மாஸந்தொறும் நெல்லு முப்பத்திருகலநே தூணிப்பதக்காக[57]யாண்டுவரை[58] ௬ அரெப்பொலிசையால்[59] பலிசை பொலிவதாந[60] நெல்லு முன்னூற்றுத் தொண்ணூற்றுக் கல மிந்நெல்லு முந்நூற்றுத் தொண்ணூற்றுக் கலத்துக்கும் அருளாளப் பெருமாள் மாஸந்தொறும் திருக்கோட்டைநாள் புறப்பட்டருளி திருமஞ்சனமும்பெருந்திருவமுதும் செய்தருளவேண்டுவநவையிற்றுக்கு[61] இந்நிமந்தப்படியே பண்டாரத்திலே விட்டுச் சந்த்ராதித்தவத் நிமந்தமாகச் செய்யக்கடவதாகச் சிலாலேகை செய்வித்துக்[62] குடுத்தோம் இக்கோயிலில்[63] ஸ்ரீகோயில்[64] வாரியம்[65] புண்டவத்தநத்து ராஜராஜக் கிரமவித்தநும் தூதஹரி[66] நின்ற நாராயணக் கிரமவித்தநும் ம்ருஹ ஸ்தலத்து பாண்டவதூதக் கிரமவித்தநும் புண்டவத்தநத்து இளைய கோக்கிரம வித்தநும் தூதஹரி வெண்ணைக் கூத்தக் கிரம வித்தநும் தூதஹரி இளையருளாளக் கிரம வித்தநும் கோயிற் கணக்கு உத்திரமேலூருடையாநாந எட்டி[67] திருக் காளத்தி உடையானும் இவ்வனைவோம். இப்படிக்கு இவை உத்திரமேலூருடையான் எட்டி திருக்காளத்தியுடையான் எழுத்து. உ

---

57 32½ கலமாக. 58 ஆண்டு வரை-ஒரு ஆண்டிற்கு.

59 அரை வட்டியாக. உ-ம் :—ஒரு கலம் நெல்லுக்கு 6 மரக்கால் வட்டி.

60 வட்டி வருவதான. 61 வேண்டுவனவற்றிற்கு.

62 கல்லில் வெட்டுவித்து. 63 சுவாமிகோவில்,

65 அம்மன் கோயில். 66 கண்காணிப்பாளர்.

66 குடிப்பெயர். 67 வணிகர் பெறும் பட்டம்.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. **விக்கிரம சோழன்:**—இவன் முதற் குலோத்துங்கனின் மகன். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 1120 முதல் 1136 வரையாகும். இவனுடைய மெய்க்கீர்த்திகள், "பூமாது புணர", "பூமாலை மிடைந்த" என்று தொடங்குவன. இவன் முதலில் வெங்கிநாட்டு இளவரசனுயிருந்த போது தென்கலிங்கத்தின் மீதுபடையெடுத்துச் சென்ருன். இவன் மனைவியர் முக்கோக்கிழானடிகள், தியாக பாதகை, நம்பிராட்டியார் நேரியன் மாதேவி என்னும் மூவர் ஒட்டக்கூத்தர் இவன் மீதே விக்ரமசோழன் உலா பாடியுள்ளார்.

2. **கலிங்கத்துப் போர்:**—டாக்டர் உல்ஷ் இவன் கலிங்கத்தின்மீது படையெடுக்கவில்லை யென்றும், இவன் தந்தையின் வெற்றியே இவன் மெய்க்கீர்த்திகளில் காணப் படுவதென்றும், இதற்கு ஆதாரமாயுள்ள ஒட்டக்கூத்தர் பாடிய 'பரணி' என்று விக்ரம சோழன் உலா கூறுவது, செயங்கொண்டாரின் பரணி என்றும். கூறுவார். (S. I I., III p 180) ஆனுல் நீலகண்ட சாஸ்திரியாரவர்கள் இது இவன் வெங்கியிலிருந்த போது இளங்கோப் பருவத்தில் நிகழ்ந்த வெற்றி யென்பார்.

3. **அக்கால நிறுத்தலளவைகள்:**— இவை பலம், கழஞ்சு என்னும் இருவகையினுள் அடங்கும். 'கண்ட சர்க்கரை முக்கழஞ்சு', 'பலவகைக் கறி நிறை 825 பலமும்' என்று வருவன காண்க. இதனுல் பலம் என்பதே பெருமெடையுள்ள அளவென்பதும், பலத்துக்குக் குறைந்த எடை, கழஞ்சு என்பதும் தெரிகிறது.

# 12. தீக்காலி வல்லம் சாசனம்[1]

1. **இக்கல்வெட்டு இருக்குமிடம்:**—செங்கற்பட்டு ஜில்லாவில் பாலாற்றின் உபநதியான நீவா நதியின் மேல் கரை

---

[1] S. I. I., Vol. III, Part I, p 98.

யில் திருவல்லம் என்றொரு சிற்றூரிலுள்ள பில்வ நாதீஸ்வரர் கோவில் மகா மண்டபத்தின் வட சுவரி லுள்ளது.

2. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன்:— விசயநந்தி விக்ரமவர்மன் என்னும் மூன்றும் நந்திவர்மனுகும். இவனுடைய ஆட்சிக் காலம் கி. பி. 826 முதல் 849 வரை யாகும்.[2]

3. இக்கல்வெட்டுத் தோன்றிய காலம்:— மூன்றும் நந்தி வர்மன் ஆட்சியின் 17-ம் ஆண்டில், அதாவது கி. பி. 1843.

4. சாசனத்தின் நோக்கம்:—பில்வநாதீஸ்வரருக்கு முன் பே உரியதான அமருன்றியம்மங்கலத்துடன். ஜம்பூணி, விளத்தூர் என்ற இரு ஊர்களையும் சேர்த்து, விடேல் விடுகு விக்கிரமாதித்திய சதுர்வேதிமங்கலம் என்று பெயரிட்டு அக்கோயிலுக்குக் கொடுத்து, அமருன்றி மங்கலத்தினின்றும் பெறப்படும் 2,000 காடி நெல்லையும், 20 கழஞ்சு பொன்னையும் அவ்வூர்ச் சபையாரே ஏற்று, இக்கல்வெட்டில் கூறியபடி செலவிட்டுவர, காடு வெட்டித் தமிழப் பேரரையன் கட்டளை இட்டான்.

ஸ்வஸ்தி ஸ்ரீ. திருமண்டபமிழிச்சி யெடுப்பதற்கு[3] முன்புள்ள சிலாலேகைப்படி[4] கோவிஜயநந்தி விக்கிரம

---

[2] R. கோபாலன் 'பல்லவர்' பக். 136 பார்க்க. திரு P. T S. அவர்கள் இவன் ஆட்சிக்காலம் கி. பி. 830-854 என்று குறித் தனர்.

[3] இடித்து (மறுபடியும்) கட்டுவதற்கு.

[4] கல்லில் வெட்டிய எழுத்துப்படி.

பன்மர்க்கு[5] யாண்டு ௰எ ஆவது[6] படுவூர்க் கோட்டத்து[7] மீயாறு நாட்டுத்[8] திக்காலிவல்லமுடையபரமேஸ்வரர்க்கு இன்னாட்டு ஐம்பூணியும்[9] விளத்தூரும்[10] இத்தேவர் தேவதானம் அமருன்றிமங்கலமும்[11] விடெல்விடுகு[13] விக்கிரமாதித்தச் சதுர்வ்வேதிமங்கல மென்னும் பேரால் ஏகக் கிராமமாக மாவலி வாணராயனை விக்கிரமாதித்த வாணராயன்[13] விண்ணப்பத்தாலும் காடுபட்டித்[14]

---

[5] மூன்றும் நந்திவர்மனின் வேறு பெயர்.

[6] இக் கல்வெட்டு இவ் வரசன் ஆட்சியின் 17-ம் ஆண்டில் வெட்டப்பட்டது

[7] படுவூர்க் கோட்டம்-தொண்டைமண்டலத்தின் 24 கோட்டங்களில் ஒன்று. இது இப்போதைய செங்கற்பட்டு ஜில்லாவின் ஒரு பகுதியாகும்.

[8] மீயாறு நாடு - இது படுவூர்க் கோட்டத்து உட்பகுதியாகும்.

[9] ஐம்பூணி - இது இப்போது திருவல்லத்தின் அருகிலுள்ள அம்முண்டி என்னும் சிற்றூராகும். இதை அடுத்தே விளத்தூரும்.

[10] அமருன்றி மங்கலமும் இருந்தன.

[11] அமருன்றி மங்கலம் முன்பே திக்காலி வல்லக் கடவுளுக்குத் தேவதானமாக அளிக்கப்பட்டது.

[12] விடேல் விடுகு - இது பல்லவரின் ஆணை முத்திரை.

[13] மகாபலியின் வழியில் தோன்றிய விக்கிரமாதித்த வாணராயன். இவன் பல்லவர் ஆட்சிக்கு உட்பட்ட குறுநில மன்னன். பாணர் என்றும் வரலாற்றில் அழைக்கப்படும் இவர்கள் வாணநாட்டை ஆண்டு வந்தனர்.

[14] ஐம்பூணி, விளத்தூர் இரண்டையும் அமருன்றி மங்கலத்தோடு சேர்த்து, அதற்கு விடேல் விடுகு விக்ரமாதித்த சதுர்வேதி மங்கலமெனத் தன் பெயரை இட விரும்பி வேண்டியதாலும்.

தமிழப் பேரரயன் ஆணத்தியாலும் ஏககிராமமாக்கி[17] இவ்வமரூன்றி மங்கலமுன்னித்[18] தீக்காலிவல்லமுடைய பரமேஸ்வரர்க்கு இறுத்துவருகின்ற ஜ[20]இரண்டாயிரக் காடியும் பொன்னிருபதின் கழஞ்சு மிவ்விடேல்விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வ்வெதிமங்கலத்துச் சவையார்[19] இறுப்பாராகவும் மின்னெல்லில்த் திருவமிர்துக்கு[21] நெல்லுஅறுநூற்றுக் காடியும் திருவுண்ணுதிழிகை யுள்ளாராதித்துப் பாசரிக்கும்[22] சிவ ப்ராஹ்மணர்க்கு[23] நெல்லு ஐஞ்ஞூற்றுக் காடியும் ஸ்ரீபலி கொட்டுவார்க்கு நெல்லு ஐஞ்ஞூற்றுக் காடியும் திருப்பள்ளித்தாமம்[24]

---

[15] காடு வெட்டி என்பது பல்லவருக்குரிய பட்டப் பெயராகும். தமிழப் பேரரையன் - இது இவனுடைய இயற் பெயர். இவனே விக்கிரமாதித்தனுடைய மொழியைக் ஏற்று அவ்வாறே மூன்று ஊர்களையும் ஒரு கிராமமாக்க உத்தரவு இட்டான்.

[16] ஆணத்தியாலும் (ஆக்ஞாபதி என்பதன் சிதைவாம்)— உத்தரவாலும்.

[17] ஒரே ஊராக்கி. [18] முன்னதாக. [19] சவையார் > சபையார் [20] நெல்லைக் குறிக்கும் அடையாளம்.

[21] சோற்றுக்கு; கடவுளுக்காதலின் திருஅமிர்து எனப் பட்டது.

[22] திருவுண்ணுழிகை யுள்ளாராதிப் பாசரிக்கும் > திருவுண்ணுழிகையில் உள்ளாரை ஆராதித்து உபசரிக்கும். திருவுண்ணுழிகை உள்ளார் - கர்ப்பகிரகத்தில் இருக்கும் பில்வநாதேஸ்வரர். டாக்டர் உல்ஷ் திருவுண்ணுழிகையை Store Room of the Temple என்று கொண்டார். "உண்ணுழிகை யாருமையாளோடும்" என்று வரும் அப்பர் தேவாரத்தைக் காண்க.

[23] ஆதிசைவர் எனப்படும் கோயில் பூசை செய்வோர்.

[24] கடவுள் அர்ச்சனைக்காகும் மலர்.

பறிப்பார்க்கும் திருப்பதியம்[25] பாடுவாருள்ளிட்ட பல பணிசெய்வார்க்கு நெல்லு நானூற்றுக்காடியும் திருநொந்தாவிளக்குக்கும்[26] திருமெய்ப்பூச்சுக்கும்[27] சிதாரிக்கு மற்றும் கண்டஸ்புடித நவகன்மாதிகளுக்கும்மாகப் பொன் இருபதின் கழஞ்சும் ஆக இன்னெல்லும் இப்பொன்னும் இத்தேவற்கு சந்த்ராதித்தவல் விறுப்பார்களாகவும். இப்பரிசு[30] நிவந்தமாகச் செய்து குடுத்தோம். இத்தர்மம் பன்மாஹேஸ்வரர் ரக்ஷை.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. பழங்காலத்தில் கல் வெட்டுகள் பாதுகாக்கப்பட்ட வரலாறு :- கோயிற் சுவர்களின்மீது எழுதப்பட்ட சாசனங்கள் பல

---

[25] தேவாரம். இக்கல்வெட்டுத் தோன்றியகாலம் கி பி 843. எனவே இது மூவர் தேவாரத்தையும் குறிப்பிடுமா என்பது ஆராய்ச்சிக்குரியது. சம்பந்தரும் அப்பரும் முதலாம் மகேந்திர வர்மன் காலத்தவர் (கி. பி. 600-30) சுந்தரர் காலம் கி பி 9-ம் நூற்றுண்டு என்பது அறிஞர் முடிவாம். (டாக்டர் ஸி மீனுட்சி, பல்லவர், பக். 299-305). இச் சுந்தரரின் நண்பரான சேரமான் பெருமாள் காலம் கி. பி. 825-ல் முடிவதாகத் தெரிகிறது. (இலக்கிய வரலாறு, III Ed., P. 343) அதுவே கொல்லமாண்டின் தொடக்கமாகும். சேரமான் காலத்திலேயே சுந்தரரின் புகழ் நாடெங்கும் பரவிவிட்டது. அதற்கப்பால் இக் கல்வெட்டுத் தோன்றிய காலம் வரை 18 ஆண்டுகள் கழிந்திருப்பதால் மூவர் தேவாரமும் இதுபோது ஓதும் வழக்கிலிருந்ததெனக் கொள்ளலாம்.

[26] நந்தாவிளக்கு. [27] மேனியில் பூசவேண்டிய சந்தனத்துக்கும். [28] சிதாரி > சீதாரி - அகிற் கட்டைக்கும்.

[29] கண்டஸ் புடித நவகன் மாதிகளுக்குமாக - உடைந்த இடங்களையும், வெடித்த இடங்களையும் பழுது பார்க்க. (For repairing breaks and cracks-Dr. Hultzsch) கண்டஸ்புடித - வெடிப்புகளை ; நவகன்ம - புதுப்பித்தல். [30] இந்த விதமாக.

வழிகளிலும் காக்கப்பட்டதென்பது இக் கல்வெட்டால் தெரிகிறது. இடிந்த நிலையில் உள்ள கோயிலை மறுபடியும் புதுப்பிப்போர் முதலில் அக்கோயிற் சுவர்களில் வெட்டப்பட்டிருக்கும் சாசனங்களைப் படி செய்து கொண்டு, பிறகு கோயிற் திருப்பணி முற்றும் முடிந்த பிறகு படி செய்து வைத்திருந்த சாசனங்களை உள்ளவாறே புதுச் சுவற்றில் வெட்டி வைப்பர். இச்செய்தி. "திருமண்டபம் இழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலா லேகைப்படி" என்று வரும் இக் கல்வெட்டுத் தொடராலும், "ஸ்ரீ விமானம் இழித்துவதற்கு முன்புள்ள சிலா லேகைப்படி" என்று வரும் 15-ம் கல்வெட்டுத் தொடராலும் தெரிகிறது.

2. மூன்றும் நந்திவர்மன்:—'தெள்ளாறு எறிந்த' நந்திவர்மனாகிய இவன் தந்திப் போத்தரையனின் மகனாவன். தெள்ளாற்றில்வரகுணபாண்டியனைப் புறங்கண்டவனாதலின் இப்பெயர் பெற்றான். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 826 முதல் 849 வரையாகும். நந்திக் கலம்பகம் என்னும் நூல் இவனைத் தலைவனாகக் கொண்டது. பாரதம் பாடிய பெருந்தேவனாரும் இவன் காலத்தவர். இவ்வாறு "வண்மையால், கல்வியால், மாபலத்தால்—" சிறப்பாக ஆட்சி புரிந்தவனாக இவன் போற்றப்படுகிறான்.

## 13. மஹாவலி வாணராயர் சாசனம்[1]

1. இக் கல்வெட்டு இருக்குமிடம்:—செங்கற்பட்டு ஜில்லாவில் பாலாற்றின் உபநதியான நீவா நதியின் மேல்கரையிலுள்ள திருவல்லம் என்ற ஊருக்கு வடகிழக்கு திசையில் ஒரு மைல் தொலைவில், மேற்கூறிய நீவா நதியின் படுகையிலுள்ள ஒரு பெரிய பாறையில் வெட்டப்பட்டுள்ளது.

[1] S. I. I., Vol III, Part I, p 91.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன் :—விஜயநந்தி விக்கிரம பன்மன் என்னும் இரண்டாம் நந்திவர்மன் ஆவான். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 710 முதல் 775 வரையாகும்.[2]

3 இக் கல்வெட்டுத் தோன்றிய காலம் :- இரண்டாம் நந்திவர்மன் ஆட்சியின் 62-வது ஆண்டிலாகும். அதாவது கி பி. 772-ம் ஆண்டு.

4. இச் சாசனத்தின் நோக்கம் :—தொண்டை மண்டலத்திலுள்ள ஊற்றுக் காட்டுக் கோட்டத்து, 'அளிங்கணப் பாக்கத்து,கிழகத்துக் குடி இருந்த மாதன் மகன் அரிதீரன் என்னும் பொற்கொல்லன் வாணபுரத்திலுள்ள வட சிகரக் கோயிலைப் புதுப்பித்து, அக்கோயிலுக்கு இளங்கிழவர் மகன் மன்றுடி என்பானிடத்தில் அழிஞ்சிற்களம் பட்டி என்னும் ஊரை விலைக்கு வாங்கி, தேவதானமாகக் கொடுத்தான்.

ஓம் நமச்சிவாயம்.[3] ஸ்வஸ்திஸ்ரீ. கோவிசைய நந்தி

---

[2] திரு R. கோபாலன், பல்லவர் வரலாறு, பக். 119 காண்க. பி தி. ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் இவன் ஆட்சிக்காலம் கி. பி 717 முதல் 779 வரை என்பர். பல்லவர் சரித்திரம். மூன்றாம் பாகம். பக், 1, பார்க்க.

[3] இக் கல்வெட்டு இவ்வாறு ஓம் நமச்சிவாயம்' என்று தொடங்குவதைக் கொண்டு இதில் வரும் நந்திவர்வன் || சைவனெனல் பொருந்தாது. நந்திவர்மன் வைணவன் என்பது பல ஆழ்வார்களின் பாசுரங்களால் தெரிகிறது. தண்டன்தோட்ட சாசனம் "முகுந்தன் திருவடிகளைத் தவிர அவன் வேறொன்றிற்கும தலைவணங்கவில்லை" என்று கூறியிருப்பதையும் காண்க. இக் கல்வெட்டு இவ்வாறு தொடங்கக் காரணம், இதன்படி தேவபோகமாகக் கொடுக்கப்பட்ட நிலம் சிவன் கோயிலுக்காதலின் என்க.

விக்கிரம பருமற்கு யாண்டறுபத்திரண்டாவது ஸகல[4] ஜகத்த்திரயாபி வந்தித ஸுரா ஸுராதீச பரமேஸ்வர பிரதிஹாரீகிருத மஹாவலி குலோத்பவ ஸ்ரீமாவலி வாணராயர் வடுகவழி பன்னீராயிரமும்[5] ஆள வாணபுரத்து[6] வடசிகர கோயில்[7] புதுக்குவித்து[8] இதற்கு இளங்கிழவர் மகன் மன்றாடிடை[9] அழிஞ்சிற்களம் பட்டி விலைக்கு கொண்டு குடுத்தேன்[10] ஊற்றுக்காட்டுக் கோட்டத்து அளிங்கண பாக்கத்து[11] கீழகத்து[12] தட்டான்[13] மாதந்[14]

---

[4] இவ் வடமொழித் தொடருக்குப் பொருள் வருமாறு: ஸகல - எல்லாமாகிய, ஜகத்த்ரய - மூன்று உலகத்தில் (உள்ளவர்களாலும்) அபிவந்த்த - வணங்கப் பெற்றவனும், ஸுர - தேவர்கள், அஸுர - அரக்கர்கள் (இவர்களின்), அதீச - தலைவர்களுக்கு, பரமேஸ்வர - (சிறந்த தலைவனாகிய) சிவபெருமானுக்கு, பிரதிஹாரீ கிருத - வாயில் காவலனாக இருந்த, மஹாவலி குலோத்பவ - மகாபலி குலத்தில் பிறந்த, ஸ்ரீ மாவலிவாணராயன் - இவன் வாண சிற்றரசன்; பல்லவர்க்கு உட்பட்டவன்.

[5] வடுக வழி பன்னீராயிரம் என்பது வாணர்களுடைய இராச்சியமாகும். இது பன்னீராயிரம் ஊர்களைக் கொண்டதென்பது முடியனூர்ச் சாசனத்தால் தெரிகிறது. வாணர்களின் நாடு பாலாற்றின் வடக்கிலிருந்து, மேற்கே புங்கனூர், கிழக்கே காளஹஸ்தி இவற்றினிடையே தென் திசையிலும் பரவி யிருந்தது (Cholas, Vol. I, p 150).

[6] திருவல்லம் வாணபுரம் என்ற மற்றொரு பெயருங் கொண்டது. வாணர்களின் தலைநகராக இது பல்லாண்டுகள் இருந்தது (பல்லவ சரித்திரம். பாகம் 3. பக்கம் 28)

[7] வட திசையில் கோபுரத்தை யுடைய கோயில்.

[8] புதுபிக்கச் செய்து. [9] மன்றாடி என்பவனிடத்தில்

[10] விலைக்கு வாங்கி ஊரைக் கொடுத்தேன்,

[11] கடற்கரையை யடுத்துள்ள ஊர் பாக்கம் எனப்படும்.

[12] கிழக்கு வீட்டி லுள்ள. [13] பொற்கொல்லன். [14] மாதன் என்பது இத் தானம் செய்தானான அரிதீரனுடைய தந்தையின் பெயர்.

மகன் அரிதீரன் குடுத்த தேவர் போகம்[15] மஹாவலி வாணராயர் பிடாகை[16] வலஞ் செய்து கொடுத்தார்[17] இது காத்தார் அடி யென்முடி மேலன.[21] இது அழித்தான் கடிகை[18] எழா இருவரையும்* கொன்ற பாவத்து படுவான். இது அழித்தான் இப்பாவத்துக்கு அஞ்சானுயில் அன்றுள் கோயிலுக்கு ஆயிரம் காணம் தண்டப்படுவோம் வாணபுரத்தோம்.

[22]பஹுபிர் வஸீதா தத்தா ராஜபி : ஸகராதிபி :।
யஸ்ய யஸ்ய யதாபூமி: தஸ்ய தஸ்ய ததா பலம்॥

---

[15] தேவதானம். [16] பிடாகை - சிற்றூர். [17] தான சாசனத்தைப் பெண் யானையின் மீது வைத்து ஊரின் எல்லையை வலம் வரச் செய்து கொடுத்தலாம்.

[18] கடிகை—ஊர்ச்சபை. அறிஞர் கீல்ஹான் (Kielhorn) அவர்கள் கடிகையை, கோஷ்டி என்ற சொல்லோடு ஒப்பிட்டு, அது மிக்க பாண்டித்தியமும் பத்தியுமிக்க பார்ப்பனர்களின் குழு என்று கூறுவார். (E I. VIII, p. 26 n.1) டாக்டர், ஸி. மீனுட்சி அவர்கள் 'கடிகை' என்ற சொல் வடமொழியில் எவ்வாறெல்லாம் பொருள் படுமென்று ஆராய்ந்து அது பண்டிதர்களும், மாணுக்கர்களும் ஒன்று கூடி நூல்கள் பல ஆய்ந்து, உண்மைகளை அறிய முயன்ற இடமாகுமென்பார்கள்.

* இக்கடிகை ஏழாயிரம் பேரைக் கொண்டது. சிதம்பரத்தில், கூத்தனைப் பூசிக்கும் அந்தணர் 'தில்லை மூவாயிரவர்' என்று கூறப்படுவது மரபை யொட்டி வழங்குவது போல இந்த 'ஏழாயிரவரும்' உளராதல் வேண்டும்போலும்! இவ்வாறு கடிகையிலுள்ளோர் 'ஆயிரக் கணக்கில்' கூறப்படுவது பிற கல்வெட்டுகளாலும் தெரிய வருகிறது (Dr. ஸி. மீனுட்சி, பல்லவர்கள் பக். 189) 'எழா இருவர்' எனக்கொண்டு நிரந்தர இரு அங்கத்தினர் என்பாரும் உண்டு.

[19] அரசன் மனைக்கு. [20] ஆயிரம் பொன். [21] இது காப்புரை.

[22] ஸகராதிபி - சகரன் முதலிய, பஹுபிர் - பல, ராஜபி - அரசர்களால், வஸுதா - பூமி. தத்தா - தானம் கொடுக்கப் பட்டது. யஸ்ய யஸ்ய - யார் யாருக்கு பூமி, யதா - எப்படியோ, தஸ்ய தஸ்ய - அவ்வவனுக்கும் ததாபலம் - அப்படியே பலன். பல்லவர்களுடைய கல்வெட்டுகள் பெரும்பாலும் இச் சுலோகத்தை இறுதியில் பெற்றிருக்கும்.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. இரண்டாம் நந்திவர்மன்:- இவனே இக்கல்வெட்டில் கோ விசையநந்தி விக்கிரமபன்மன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இவன் நந்திவர்ம பல்லவமல்லன் என்றும் அழைக்கப்படுவான் முன்னைய கல்வெட்டில் வந்த மூன்ரும் நந்திவர்மனுகிய, தெள்ளாறு எறிந்த நந்திவர்மனுக்கு இவன் பாட்டனுவான். பிள்ளையில்லாத பரமேஸ்வரன் கடவுள் தியானத்திலேயே தனக்குப் பிறகு வாரிசு யாரையும நியமிக்காமல், இறந்து விட்டான். அதன் பிறகு அமைச்சர், கடிகையிலுள்ளோர், ஆன்ருேர்கள் முதலியோர் கூடி இந்நந்திவர்மனைத் தேர்ந்தெடுத்தனர். நந்திவர்மனுக்கு எதிராக சித்திரமாயன் என்பவன் அரசுக்கு உரிமை கொண்டாடினுன். அவனைப் போரில் வென்று விக்கிரமபன்பன் என்ற சிறப்புப் பெயரை இவன் பெற்ருன். இதை இவன் காலத்தவரான திருமங்கையாழ்வார் பல பாசுரங்களில் பாடியுள்ளார்.

# 14. மாதவக் கிரம வித்தன் சாசனம்[1]

1. இக்கல்வெட்டு இருக்குமிடம் —செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள திருவல்லம் என்னும் ஊரிலுள்ள பில்வநாதேஸ்வரர் கோயில் மகா மண்டபத்திலுள்ள வடபுறச் சுவரிலாகும்.

2. இதில் குறிக்கப்பட்ட அரசன்:—வாண அரசனுன மகா பலிவாணராஜர்.

---

[1] S. I. I., Vol III, Part I, p 95.

3. இக்கல்வெட்டுத் தோன்றிய காலம்:—சக ஆண்டு 810. அதாவது 810+78=கி. பி. 888-ம் ஆண்டி லாகும்.[2]

4. இச்சாசனத்தின் நோக்கம்:—வன்னிப்பேடு என்கிற இரணவிக்கிரமச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார், திக்காலிவல்லத்திலுள்ள பில்வநாத சுவாமிக்கு, சந்திராதித்தர் உள்ள வரைக்கும் ஒரு திருநந்தா விளக்கு எரிப்பதற்கு, தினம் ஆழாக்கு எண்ணெய் தருவதற்கு காவேரிப் பாக்கமாகிய அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலத்துக் கீழ்வடசேரி எட்டுக்கூர் மாதவகிரமவித்தன் என்பவனிடமிருந்து 25 கழஞ்சு, துளைப் பொன்னைப் பெற்றுக் கொண்டு சந்திர சூரியர் உள்ள வரை அத்தருமத்தைச் செய்ய உடன் பட்டனர்.

ஸ்வஸ்திஸ்ரீ. ஸகல ஜகத்திராயபிவந்தித ஸுரா ஸுராதீசபுர பரமேஸ்வர பிரதிஹாரீகிருத மஹாபலி குலொத்பவ[3] மகாபலி வாணராஜர் சகர்யாண்டு எண்ணூற்றொருபதாவது[4] படுவூர்க் கோட்டத்து[5] காரை

---

[2] சகர் ஆண்டு: சகவாண்டு என்பதும் சாலிவாகன சகாப்தம் என்பதும் ஒன்றேயாகும். சாலிவாகன சகாப்தத்தின் தொடக்கம் கி. பி. 78-ம் ஆண்டிலாகும். ஆதலால் சாலிவாகன சகாப்தத்தில் ஆண்டுகள் குறிக்கப்பட்டிருந்தால் குறிக்கப்பட்ட ஆண்டுகளுடன் 78 ஆண்டுகளைக் கூட்டிக்கொண்டால் கி. பி. எத்தனையாவது ஆண்டு என்பது தெரியவரும். இதன்படியே இங்கு கி. பி. ஆண்டு குறிக்கப்பட்டது.

[3] இந்த வடமொழித் தொடருக்குப் பொருள் 13-ம் கல்வெட்டுக் குறிப்பு, 4 காண்க.

[4] சகவாண்டு 810-ம் ஆண்டு.

[5] படுவூர்க்கோட்டம் - இது தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதி. இப்போதைய செங்கற்பட்டு ஜில்லாவின் ஒரு பகுதியாக இருந்தது.

நாட்டு[6] வன்னிபெடாகிய[7] இரணவிக்ரமச் சதுர்வ்வேதி மங்கலத்து ஸபையோம், இக்கோட்டத்துமீயாறு நாட்டுத் திக்காலிவல்லத்துத் திருத்திக்காலிப் பெருமாநடிகளுக்கு[8] சந்த்ராதித்தவல் ஒரு திருதுந்தா விளக்கு எரிப்பதற்கு[9] நிசதம் உழக்காழக் கெண்ணை யட்டுவதற்கு[10] இக்கோட்டத்துக் காவிரிப் பாக்கமாகிய அவநிநாராயணச் சதுர்வ் வேதிமங்கலத்துக் கீழ் வடசேரி எட்டுக்கூர்[11] மாதவக் ரமவித்தன்[12] பக்கல் தன்ம கட்டளைத் துலை நிறை இருபத்தைங் கழஞ்சு[13] பொன்கொண்டு சந்த்ராதித்தவல்

---

[6] காரை நாடு - இராணிப் பேட்டைக்கு வடக்கில் காரை என்றொரு ஊர் உள்ளது. அதைச் சேர்ந்த பிரதேசமாக இக் காரை நாடு இருக்க வேண்டும்.

[7] வன்னிப்பேடு - இப்போதைய வாலாஜாபாத்துக்குத் தெற்கே ஒரு மைல் தூரத்தில் இவ்வூர் இருக்கிறது.

[8] திருக்காலி வல்லத்தில் கோயில்கொண்டுள்ள பில்வ நாதீஸ்வரர்.

[9] சந்திர சூரியர் உள்ளவரை ஒரு திருநந்தா விளக்கு எரிந்து வரும் பொருட்டு.

[10] ஊற்றுவதற்கு. [11] ஊரின் பெயர்.

[12] மாதவக்கிரமவித்தன் - மாதவன் என்னும் பார்ப்பனன்.

[13] தன்மகட்டளைத் துலைநிறை இருபத்தைங் கழஞ்சு பொன் - தருமமாகக் கொடுத்த கட்டளையினது துலையிடப் பட்ட பொன்னின் நிறை 25 கழஞ்சு. டாக்டர் உல்ஷ் "தன் மகட்டளைத்துலை நிறை" - என்று கொண்டு weighed by the balance of Charitable edicts என்று பொருள் எழுதினர். துலைப் பொன் (Punchmarked Coin) அக்கால வழக்கிலிருந்த தென்பது பல சோழர் கல்வெட்டுகளால் தெரிகிறது. இது காய்ச்சி உருக்கினும் மாற்றும் நிறையும் குறையாது என்பதற்கு அரசாங் கத்தாரால் உறுதி செய்யப்பட்டு, அதற்கு அடையாளமாக துலையிடப்பட்டதாகும்.

எரிப்பதாக இத்தன்மம் முட்டாமை செலுத்துவோமானோம். ஸபையோ மித்தன்மம் முட்டில் தன்மாஸநத்திலெ[14] நிசதம் ஐங்கழஞ்சு பொன் பந்மாஹெஸ்வரரே[15] மன்றப்[16] பெறுவதாகவும் இம்மன்று பாடி[17]றுத்தும் இத்திருநுந்தாவிளக்கு முட்டாமைச் செலுத்துவோமானோம். வன்னிபெடாகிய ரணவிக்கிரமச் சதிர்வ்வேதிமங்கலத்துச் சவையோம். இதற்கு விரோதஞ் செய்தார் கெங்கையிடைக் குமரி[18] யிடைச் செய்தார் செய்த பாவங் கொள்வார். இது பந்மாஹேஸ்வரர் ரக்ஷை.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. வாண அரசர்கள் :— இவர்கள். பெரும்பாணர் என்ற பெயருடன் கி. பி. 4-ம் நூற்றுண்டிலிருந்தே யிருந்து வந்தனர். இந்நாட்டுக்குப் பல்லவ மல்லன் காலத்தில் மகதநாடு என்று பெயர் உண்டு. இவ்வரசர்களுக்கும் மகதேசர் என்றும், ஆறைக்காவலரென்றும் வாணதிராயரென்றும் பெயர்களுண்டு. இவர்கள் ஆண்டுவந்த நாட்டிற்குப் பெரும்பாணப்பாடி என்றும், வடுகவழி பன்னீராயிரம் என்றும் பெயர்களாகும். இந்நாடு பாலாற்றிற்கு வடக்கிலும் மேல் திசையில் புங்கனூர், கிழக்கே காளஹஸ்தி இவற்றுக்கிடையே தெற்கிலும் உள்ள பிரதேசமாகும். இதற்குத் தலைநகர் செங்கற்பட்டு ஜில்லாவில்

---

[14] நியாய மன்றம் ( Court of Justice ).

[15] சிவனடியார்களே. [16] நிச்சயமாக. [17] மன்றுபாடு - நீதி மன்றத்திற்குத் தரும் அபராதம்.

[18] கன்னியாகுமரி.

[19] கங்கையிலும், குமரியிலும் நீராடி மக்கள் தங்களுடைய பாபச் செயல்களைத் தீர்த்துக்கொள்வது வழக்கம். அங்குசென்று தீர்த்துக்கொண்ட அவ்வளவு பாபங்களையும் இத் தர்மத்திற்கு விரோதம் செய்வார் கொள்வாராக என்பது கருத்து.

பாலாற்றின் உபநதியான நீவா நதியின் மேல்கரையி லுள்ள திருவல்லம் என்ற ஊராகும். அதற்கு வாண புரம் என்ற பெயரும் பழங் காலத்தில் உண்டு. முதலில் இவ்வாணர்கள் பல்லவர்களின் கீழ் சிற்றரசர்களா யிருந்து அவர்களுடைய வலிமை குன்றியதும் கி. பி 9-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுயேச்சை பெற்றனர். இறுதியில் 'பறிவி' என்று அக்காலத்தில் அழைக்கப் பட்ட அனந்தப்பூர் ஜில்லா, ஹிந்துபூர் தாலுகா, பரிகையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். இந்த வம்சத்தில் கடைசி அரசனான மூன்றாம் விக்கிர மாதித்தன், மூன்றாம் கிருஷ்ணனின் நெருங்கிய நண்பனா வான். கி' பி. 909—916 இவைகட்கிடையில் முதலாம் பராந்தகன் இவர்களை வெற்றி கொண்டு அந்நாடுமுழுதும் தன்னடிப்படுத்தினான். பிறகு ஸ்ரீபுறம்பயம் போரில் உதவியாக இருந்த கங்க அரசனான இரண்டாம் பிரித்வீ பதிக்கு வாண நாட்டைக்கொடுத்து, அவனுக்கு 'செம் பியன் மாவலி வாணராயன்' என்ற பட்டத்தையும் சூட்டினான். பிறகு மூன்றாம் கிருஷ்ணன் தக்கோலப் போரில் சோழரைப் புறங்கண்ட பிறகு, வாணர்கள் தலையெடுத்தனராயினும் அவர்கள் பெருமை முன் போலச் சிறக்கவில்லை எனலாம்.

## 15. வாண மஹாதேவியார் சாசனம்[1]

1. இக்கல்வெட்டு இருக்குமிடம் :— செங்கற்பட்டு ஜில்லா விலுள்ள திருவல்லம் பில்வநாதிஸ்வரர் கோயிலின் மேற்குச் சுவரிலாகும்.

2. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டவர் :— வாணகுலத்தரசி யான வாண மகாதேவியார் ஆவார்.

[1] S. II., Vol III, Part Page 99.

3. இக்கல்வெட்டுத்தோன்றிய காலம், எப்பொழுது என்று குறிக்கப்படவில்லை. இக்கல்வெட்டைப் பதிப்பித்தவர்கள், வாண அரசர்களின் ஆட்சியின் வரலாற்றைக் கொண்டு கி. பி. 9-ம் நூற்றாண்டு என்பர்.

4. இச்சாசனத்தின் நோக்கம் :— வாண மகாதேவியார் தீக்காலிவல்லத்துக்கோயிலிலுள்ள பில்வநாதீஸ்வரருக்கு விளக்கு ஒன்றுக்கு தினசரி உரி நெய் அட்டுவதற்கு தீக்காலி வல்லத்துச் சபையாரிடம் இருபது கழஞ்சு பொன்னைக் கொடுத்தனர். அச்சபையார் அப்பொன்னை ஏற்று அதற்கு வரும் வட்டித் தொகையைக் கொண்டு அவ் விளக்குக்கு நெய் ஊற்ற ஒப்புக் கொண்டனர்.

ஸ்வஸ்திஸ்ரீ ... இழித்துவதற்கு[2] முன்புள்ள சிலாலேகைப்படி[3] ஸகல ஜகத்த்ரயாபி வந்தித ஸுரா ஸுரா தீச பரமேஸ்வர ப்ரதிஹாரிக்ருத[4] மஹாவலி குலொத்பவ வாணவித்தியாதரராயரான வாண ராயர் மஹாதேவியார்[5] கொங்குணி தர்ம்ம மஹாராஜ[6]

---

[2] இடிப்பதற்கு. இக்கல்வெட்டும் இம்மண்டபம் இடித்துக் கட்டுவதற்கு முன்புள்ள சாசனத்திலிருந்து பிரதி செய்யப் பட்டதாகும். [3] கல்லில் வெட்டிய எழுத்துப்படி.

[4] இந்த வடமொழித் தொடருக்குப் பொருள் 13-ம் கல் வெட்டின் குறிப்பு 4-ல் காண்க.

[5] வாண அரசனின் மனைவியார். இவ்வரசியின் இயற் பெயர் குந்தவை என்பதாகும்.

[6] கொங்குணி நாட்டின் அரசர். மேலைக்கங்கர் இப்போதுள்ள குடகு நாட்டுப் (Coorg) பிரதேசத்தைக் குணிலபுரம் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தனர். அவ் வரசனின் மகளே இவ்வாண மன்னன் பட்டத்தரசியாவள். கொங்குணி மகாராஜா என்பது மேலைக்கங்க அரசர்களின் பட்டப் பெயராகும்.

குணிலபுர பரமேஸ்வரரான[8] ஸ்ரீநாத[9] ஸ்ரீமச் சிவ மஹாராஜப் பெருமானடிகள்[10] மகனார் ப்ரதிபதி[11] அரையர் மகளார் வாண மஹாதேவியார் தீக்காலிப்பெருமானடிகளுக்கு நொந்தா விளக்கு ஒன்றினுக்கு இத் தீக்காலிவல்லத்து ஸபையார்க்குக் குடுத்த செம்பொன் இருபதின் கழஞ்சு இப்பொன்னுக்குப் பொலியூட்டு[12] நிசதம் உரிய் நெய்[13] ஒரு விளக்குக்கு அட்டுவோமானோம் ஸபையோம். இந்நெய் சந்த்ராதித்தவற் முட்டாமை[14] அட்டுவோமானோம்,[15] முட்டில்[16] பந்மாஹேஸ்வரரே[17] நிசதி ஐங்கழஞ்சு பொன் மந்றவொட்டிக் குடுத்தோம்[18]. இத் தண்டப் பட்டும் நெய் முட்டாமை அட்டுவோமானோம் ஸபையோம். இதன்றென்றோம்[19] கெங்கையிடைக் குமரி[20]

---

[7] குணிலபுரம். இது [illegible] அரசர்கள் வெகுகாலமாகத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த இடமாகும். [illegible] குவலாளபுரம் என்பதன் திரிபு. இக்காலத்தில் கோலார் என்று வழங்கும். சீவகசிந்தாமணியும், நன்னூலும் இங்கிருந்தே வெளி வந்தன. [8] (குணிலபுரத்திலுள்ளவர்களுக்குத்) தலைவனான.

[9] ஸ்ரீநாத - இது சைன சமயப் பெயர்களுக்கு முன்னர் மரியாதைக்காக வழங்கப்படுவதாகும்.

[10] இது கங்க மன்னனான முதலாம் பிரிதிவி பதியின் தந்தையின் பெயராகும்.

[11] இவன் பிருதிவிபதி I. திருப்புறம்பயம் போரில் பாண்டியரை எதிர்த்து வெற்றிகொண்டு அப்போரில் இறந்தவன்.

[12] பொலியூட்டு - வரும் வட்டிக்காசைக்கொண்டு.

[13] தினசரி அரைப்படி நெய்.

[14] சந்திர சூரியர் உள்ள வரையில் தவறாமல்.

[15] ஊற்றிவருவோம். [16] தவறினால்.

[17] அடியார்கள் பாதுகாவலில். [18] தினம் ஒன்றுக்கு 5 கழஞ்சு வீதம் சேர்த்துக்கொடுப்போம்.

[19] இதன்றென்றோம் > இதனை அன்று என்றோம் - இதனை நற்செய்கை அல்ல என (நீக்கினோம்.) [20] குமரிமுனை.

யிடைச் செய்தார் செய்த பாவங் கொள்வார். இத தர்ம்மம் பந்மாஹேஸ்வர ரக்ஷை[21] இத்தர்ம்மம் ரக்ஷித் தாரடி யென் முடி மேலன.[21]

## 16. அதவோடு தோட்டம் சாசனம்[1]

1. இக்கல்வெட்டு இருக்குமிடம் :—திருவாங்கூர் இராச்சியத்தின் சுசீந்திரத்திலுள்ள ஸ்தாணுநாதசுவாமி கோயிலின் முதற்பிரகாரத்தில், இயற்கையா யமைந்த ஒரு பாறையின் மீதாகும்.

2. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன் :—திரிபுவனச் சக்ரவர்த்தி வீரபாண்டிய தேவர்.[2] இவன் ஆட்சிக்காலம் சுமார் கி. பி. 1169 முதல் 1180 வரை.

3. இக்கல்வெட்டுத் தோன்றியகாலம் :—கி. பி சுமார் 1175-ம் ஆண்டு[3].

4. இதில் வரும் மெய்க்கீர்த்தியால் தெரிவன :—இவன் பராக்ரமத்தால் முடிசூடி மலை நாட்டை வென்றான். சிவபெருமான் திருவிளையாடல்களைக் கண்டு மகிழ்ந்தான். மகாபாரதப் போரில் பாண்டவர் பக்கம் போரிட்டான். தேவாசுரப் போரினைத் தவிர்க்க, தூது சென்றான். வடவரையில் கயல் பொறித்தான். தேவர்கோனின் ஆரத்

---

[21] இவை இக்கல்வெட்டில் வந்துள்ள காப்புரைகள்.

[1] Travancore Archaelogical Series, Vol. II, Part. I p 18.

[2] நீலகண்டசாஸ்திரியாரின் இக்கருத்தே கொள்ளத்தக்கது. அவர் கூறுவது :—Mr. Gopinatha Rao in editing this record mixes up this Vira Pandya with the Conquerer of Ilam and Kongu (acc. A. D. 1253) and the Kulasekhara of this Civil war with Mar-Kulasekhara (acc. 1268) - Pandyan Kingdom, P. 130 ff.

[3] இக்கல்வெட்டு வீரபாண்டியன் முடி சூடிய உடனே வெட்டப்பட்டதென்பது "ஸ்ரீவீரபாண்டியதேவர் அபிஷேக காலத்தில்" என்று வரும் தொடரால் அறியலாம். (See also Cholas II, P. 120. Pandyan Kingdom, P 130 ff.)

தைப் பூண்டான். திடவாசகக் குறு முனிபால் செந்தமிழ் நூல் தெரிந்தருளினான். திரைலோக்ய முழுதுடையாள் என்ற தன் மனைவியுடன் வீர அபிஷேகம் செய்து கொண்டான்.

5. இச்சாசனத்தின் நோக்கம்:—வீர பாண்டியன் தான் நெடுநாள் வாழ்தற்பொருட்டு, சுசீந்திரமுடைய நாயனார்க்கு, தென் கூற்றுப்புறத்தாய நாட்டுப் பூசன் குடிக்குப் பக்கத்தில் அதவோடு தோட்டத்தில் ஏழுவேலி நிலத்தைக் கொடுக்க என்று கூறினான்.

ஸ்வஸ்திஸ்ரீ. பூமடந்தையும். ஜயமடந்தையும்[4] பொலிந்து திருப்புயத்திருப்ப பார் முழுதும் குடை நிழற்ற பராக்ரமத்தால் முடிசூடி[5] தென் மதுராபுரித் திருவிளையாட்டத்திற் கண்டு,[6] மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மலை நாடு கொண்டருளி[7] மாபாரதம்

---

[4] திருமகளும் வீர இலக்குமியும்.

[5] தன்னுடைய புயபலத்தால் இவ்வீரபாண்டியன் முடி சூடிக்கொண்டான் என்பதாகும். இவ்வாறு கூறப்பட்டது அக்காலத்தில் நடந்த பாண்டியரின் வாரிசுரிமைப் போரா லாகும்.

[6] மதுரையில் சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல் களைக் கண்டு வணங்கி. இதுவும், அடுத்துவரும் ஏழு நிகழ்ச்சி களும் புராணகால பாண்டியர் செயல்களாம். அவர்கள் வழி வந்தவனாதலின் அது இவனுக் காயிற்று.

[7] மாபாரதம் மன்னவற்குப் பொருதருளி—பாரதப்போரில் பாண்டவருக்காகப் போரிட்டு.

பொருதருளி மன்னவற்கு தூது சென்றருளி தேவாசுர மதுகை தரித்தி[8] தேனுருமாயுங் கொண்டருளி[9] வட வரையிற் கயல் பொறித்து[10] வானவர் கோனாரம் பூண்டு[11] திடவாசகக் குறுமுனி பால்செந்தமிழினால் தெரிந் தருளித்* தளிரிருங்கை மாதுரிமைச் செங்கோ[12] லெங்குந் திசை நடாத்தி மன்னிய வீர ஸிம்ஹாஸநத்திற் த்ரை லோக்ய முழுதுடையாரோடும்[13] வீற்றிருந்தருளி மாமுதல் மதிக்குலம் விளக்கிய[14] கோமுதல் கொற்ற வன்மரான

---

[8] இத்தொடரை, தேவாசுரமதில் கைத்து (=தேவாசுரப் போர் நேருவதில் வெறுப்புற்று), அரித்துத் தூதுசென்றருளி (=பகைவராகிய அரக்கரிடத்து தூதுசென்று) என்று மாற்றிப் பொருளும் கொள்க. அரி-பகைவன். தூதுசென்றவன், பாண்டியன் மாகீர்த்தி.

[9] தேனுருங்கொண்டருளி > தேனுறும் மறைகொண் டருளி—தெய்வமணங் கமழும் வேதங்களைக் கற்றருளி.

[10] மேருமலையில் கெண்டைமீனின் அடையாளத்தைத் தீட்டி.

[11] இந்திரனின் ஆரத்தைக் கொண்டு. *தெளிந்த வாசகத் தையுடைய அகத்திய முனியிடம் தமிழ் நூல்களைக்கற்று.

[12] தளிர் போன்ற அகண்ட கையையுடைய உமாதேவி யாரது உரிமை மூலமாகக் கிடைத்த பாண்டியர் செங்கோலை. இங்கு குறிப்பிடப்பட்டவர் தடாதகைப் பிராட்டியாவர்.

[13] இவள் வீரபாண்டியன் பட்டத்தரசி.

[14] பெருமையை முதலிலிருந்தே உடைய சந்திரகுலத்தை விளங்கச் செய்த. பாண்டிய குலத்தை விளங்கச் செய்தா னென்றது, விக்ரம பாண்டியனை எதிர்த்துப் போரிட்டு பாண்டிய குலத்தில் பிறந்தவன் தானே என்பதை நிலை நிறுத்தியதாலென்க.

த்ரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்ட்ய தேவர் அபிஷேககாலத்தில்[15] ராஸிதா கோத்ரத்து ஆஸ்வலாயந[16] ஸூத்ரத்து நராயணன் சேந்தனுன[17] இடையாற்று மங்கலத்து நம்பியும் திருப்புத்தூர் ஆழ்வாரும் பிள்ளையார் வீரகேரள தேவரும்[18] உத்தரமந்திரிகள் வீரகேரள பாண்டியக் கோனும் நிக்க இடையாற்று மங்கலத்து நம்பியோடும் திருவாய் மொழிந்தருளி பெருமாளுக்கு[19] திருவாயுஷ்யார்த்தமாக[20] ஸூசிந்த்ர[21] முடைய நாயனுற்கு பெருமாள்[19] தாநம் பண்ணிக் குடுத்தருளின பூமி தென்கூற்றுப் புறத்தா நாட்டுப் பூசன்குடிப் பாலதவோடு தோட்டம்[22] இவ்வதவோடு தோட்டத்துக்கு பெருநான் கெல்லை. கீமெல்லை பாதிரித் தோட்டத்து நீர் நக்கல்,[23] தென்னெல்லை கல்க்குழிக்கு வடக்கு, மேலெல்லை புல்லாங் குறிச்சிக் கர்கறை வயலில் ஒற்றுவாயல் கிணற்றுக்கு கிழக்கு, வடவெல்லை கறடிகும்பல் கடம்புக்கு[24] தெற்கு,

---

[15] முடிசூட்டிக்கொண்ட அமயத்தில், இவன் முடி தரித்தவுடன் இத்தருமம் செய்யப்பட்டதென்பது இதனுல் தெரிகிறது. [16] ஒரு முனிவனின் பெயர்.

[17] நாராயணன் மகன் சேந்தனுன என்று கொள்க.

[18] பிள்ளையார் வீரகேரளதேவர் என்றது, இவன் மகன் வீரகேரளன் என்ற பெயருடையவன் என்பதைக் காட்டிற்று.

[19] அரசனுன வீர பாண்டியனுக்கு.

[20] நெடுநாள் வாழும்பொருட்டு.

[21] சுசீந்திரம் :—இது நாஞ்சில் நாட்டில் குமரிமுனைக்கு வடதிசையில் எட்டுமைல் தூரத்தில் உள்ள ஊராகும்.

[22] அதவோடு தோட்டம். இது வீரபாண்டியனுல் சுசீந்திர முடையார்க்குத் தேவதானமாக அவன் ஆயுள் பெருகும் பொருட்டுக் கொடுக்கப்பட்ட நிலத்தின் பெயராகும்.

[23] நீர் நக்கல்—நீர்க் கால்வாய். [24] காடு

ஏரி இரண்டினுல் விளை நிலமும் காடுமுள்ப்பட நிலம் ஏழுவேலி. இன்னில மேமுழுவேலியும் இறையிலி[25] காராண்மையு முட்பட[26] ஸுசீந்த்ரமுடைய நாயினுற்கு தானம் பண்ணினுர் பெருமாள்[19] முன்னுடையாரும் பழம் பேரும் நீக்கி[27] இப்படிக்கு பெருமாள் கல்லிலும் செம்பி லும் வெட்டிக் குடுக்கவென்று திருவாய் மொழிந்தருளி திருமந்திரவோலை[28] முரப்பு நாட்டு மறவனூரம்பலவன் வேளாணுன[29] நித்தவினேத மூவேந்த வேளாரெழுத் தினுல் ப்ரஸாதஞ் செய்தருளிய[30] ஸ்ரீ முகத்தினுலும்* ஸேனுபதிகள் வெண்பைக் குடி நாட்டு இளவெண்பைச் சந்திரசேகரனுன வீர பாண்டிய மூவேந்த வேளார் கடையீட்டினுலும்[31] புரவுவரி திணைக்கள நாயகம்[32] மலைகூற்றத்து விளத்தூர் நாராயணன் கேசவனுன தென்னவ சிகாமணி மூவேந்த வேளா ரெழுத்தினுலும் முகவெட்டி நாயகம்[33] செம்பில் நாட்டு அரையனேரி தாயன் பொன்னனுன குறும்பிலுடையா னெழுத்தினு லும் கூற்றுக்கு கூறு திருவழுதி வளநாட்டு[34] கோட்டூர்ப்

---

[25] வரி செலுத்தாத (உரிமை).

[26] காராண்மை-நிலத்தைப் பயிரிடும் குடி உரிமை.

[27] முன்புயாருக்கு உரிமையாயிருந்ததோ, அதைப் பொருள் கொடுத்து நீக்கியும், அதன் பழம் பெயரை நீக்கியும்.

[28] அரசனது ஆணையை எழுதுவோர்.

[29] வேள் என்ற பட்டத்தை உடையவனுன.

[30] கொடுத்தருளிய. * கட்டளை [31] கையெழுத்தினுலும்.

[32] புரவுவரி திணைக்களநாயகம்-அரசிறை (Land Revenue) நீங்கிய ஊர்களினின்றும் வருவதற்குரிய பிறவரிகளுக்குக் கணக்கு வைத்திருப்பவர்களுக்குத் தலைவர்.

[33] புரவுவரித் திணைக்களத்தில் அடங்கிய முகவெட்டிக்குத் தலைவராய் இருப்பவர். [34] பாண்டிய நாடு.

பேரருளாளன் கற்றங்குடியான் வானவன் வழுதிக்கோன் ெ......ட்டின் உள்வரிபடியாலும் நித்த விநோத மூவேந்த வேளாரெழுத்தினால் ப்ரஸாதஞ் செய்தருளிய ஸ்ரீமுகத்தாலும் வீரபாண்டிய மூவேந்த வேளார் கடையீட்டாலும் புரவு[35] வரியாரெழுத்திட்ட உள்வரியாலும் இக்கால முதல் திருப்படி மாற்று[36]ள்ளிட்டன செலுத்துவாராகச் சொன்னோம் ஸுசீந்த்ர முடைய நாயனாற்கு.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. **வீரபாண்டியன்**:—இவன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரபாண்டியன் என்று இக்கல்வெட்டில் கூறப் படுவான். ஆதலால் இவன் கி. பி. 1253-ல் ஆட்சி பெற்ற ஜடாவர்மன் வீரபாண்டியன் அல்ல என்பது தெளிவாகிறது. இவன் பராக்கிரம பாண்டியனின் புதல்வன். இவனுடைய சரித்திர நிகழ்ச்சிகள் சுமார் கி. பி. 1169-ல் தொடங்கி, கி. பி 1182 வரை பல வெற்றி, தோல்விகளில் கரையேறி அப்பால் பாண்டி நாட்டின் ஒரு பகுதிக்கு அரசனாவதுடன் முடிந்து விடுகிறது. வீர பாண்டியன் தன் வாழ்வில் நான்கு முறை மதுரையில் முடிசூட்டப் பட்டு நான்கு முறையும் முடி இழக்கிறான். இறுதியில் பாண்டி நாட்டின் ஒரு பகுதியை, குலோத்துங்கன் III கொடுக்க, அதைப்பெற்று ஆளுவதே நிரந்தரமாகிறது. இக் கல்வெட்டு வீர பாண்டியன் மூன்றும் முறை சோழர்களுடைய படைத்தலைவனால் கி. பி. 1175-ல் முடிசூட்டி வைக்கப்பட்டபோது தோன்றியது. (K. A. N., Cholas II p. 120-காண்க.)

வீர பாண்டியன் பாண்டி நாட்டை எங்ஙனம் நான்கு முறை பெற்று இழக்க நேரிட்ட தென்பதைக்

[35] புரவு-கொடை.

[36] திருமடிப்பாற்று—கடவுளுக்குள்ள படிக்கட்டளை.

காண்போம். இவன் தந்தையான பராக்கிரமன் முதலில் குலசேகரனுக்கு உட்பட்ட மன்னனுயிருந்து பின்பாண்டி மண்டலம் முழுமைக்கும் உரிமை வேண்டியதால் இவ்விருவரிடையே போர் மூண்டது. இதில் பராக்கிரமன் ஈழ மன்னனுன பராக்ரம பாகுவின் உதவியை நாடினுன். ஈழப்படைகள் இவன் உதவிக்கு வருவதற்கு முன்பே குலசேகரன், பராக்கிரமனை அவன் மனைவிமக்களுடன் பிடித்து எல்லோரையும் கொன்றுவிட்டு மதுரையைக் கைப்பற்றினுன். இதன் பிறகு ஈழப்படை இலாங்காபுரி யின் தலைமையில் வந்தது. இவ்வாறு 'பிரமாதம்' நேரிட்டதை அறிந்த இலங்காபுரி பராக்கிரமனின் மகனுன, திருவாங்கூரிலிருந்த நம் வீர பாண்டியனை மதுரையில் முடிசூட்டி, குலசேகரனை விரட்டி விட்டான். நாடு முழுமையும் படைபலத்தால் கைப்பற்றிய பிறகு, இலங்காபுரி மாளவச்சக்கரவர்த்தி என்பானை பாண்டி நாட்டில் இருந்துவர நியமித்து ஈழம் திரும்பினுன்.

இச்சமயம் குலசேகரன் தன் படையுடன் கொங்குப் படைகளின் உதவியையும் கொண்டு மறுபடியும் போரிட்டான். இலங்காபுரியால் நியமிக்கப்பட்ட சிற்றரசர்களெல்லோரும் சொல்லாமலே குலசேகரன் பக்கம் சேர்ந்து கொண்டதால் அவன் எளிதில் வெற்றி பெற்ருன். இதனுல் வீர பாண்டியன் மறுபடியும் மதுரையை இழக்க நேரிட்டது.

தன்னுடைய திட்டங்கள் முழுதும் பாழாயிற்று என்பதை அறிந்த இலங்காபுரி, பராக்ரம பாகுவிடமிருந்து ஜகத்விஜையன் தலைமையில் மற்ருெரு படையை உதவியாகப்பெற்று மறுபடியும் வீரபாண்டியனை மதுரைக் கரசனுக்கினுன். சிங்கள மன்னன் ஆணைப்படி வீர பாண்டியனுக்கு முதன் முதலாக மகுடாபிஷேகமும் செய்து வைத்தான்.

நாடிழந்த குலசேகரன் இது போது சோழமன்னனான இராசாதிராசனைக் (1163–1179) சரணடைந்து உதவி வேண்டினான். அவனும் ஈழ மன்னன் படைபலத்தை ஒடுக்க விரும்பியதால் உடனே போரில் இரங்கினான். முதலில் ஈழப்படையே பலம் பெற்று இருந்ததாயினும், இறுதியில் சோழர்கள் வெற்றி பெற்றனர். குலசேகரனும் மதுரைக்கரசனானான். வீரபாண்டியன் மறுமுறையும் அரசிழந்து ஓடினான்.

இதை அறிந்த பராக்கிரமபாகு குலசேகரனைத் தன் பக்கம் பல பரிசில்கள் அளித்துத் திருப்பி, சோழர்களை எதிர்க்க ஆயத்தம் செய்தான். இதையறிந்த சோழன் ஒரு படையை அனுப்பி, நன்றி கெட்ட குலசேகரனை நாட்டைவிட்டு விரட்டி, மறுபடியும் நம் வீரபாண்டியனை மதுரை யரசனாக்கினான். இந்த நிகழ்ச்சி கி. பி. 1175-ல் நடந்தது. இப்போது தோன்றியதே இக் கல்வெட்டாம்.

பின்னர் நான்கு ஆண்டுகட்குப்பின் இராசாதிராசன் இறந்து விடவே கி. பி. 1178-9-ல் மூன்றும் குலோத்துங்கன் முடிசூடினான். இப்போது குலசேகரனும் இறந்து விடவே, அவன் மகன் (?) விக்ரமன் குலோத்துங்கனைச் சரணடைந்து பாண்டி நாட்டை அவனுக்களிக்க வேண்டினான். இதுவே நீதியாகும் (?) என்பதை உணர்ந்த சோழனும் ஒரு படையுடன் இவனை மதுரைக்கு அனுப்பி விக்ரமனுக்கு முடி சூட்டி வைத்தான். வீர பாண்டியன் நான்காமுறையும் அரசிழந்தான். இதைப் பொருத வீர பாண்டியன் சேரமன்னன் உதவிய ஒரு பெரும் படையுடன் விக்ரமனை எதிர்த்தான். சோழர்களும் ஒரு பெரும் படையை அனுப்பினர். நெட்டூர் என்ற இடத்தில் நிகழ்ந்த போரில் வீர பாண்டியன் படுதோல்வியடைந்து சேரனிடம் ஓடி ஒளிந்தான்.

இதனுல் தனக்கும் சோழனின் பகை நேருமோ என்று அஞ்சிய சேரன் வீர பாண்டியனுடன் சோழன் அவைக்களம் புகுந்து சரணடைந்தான். இவ்விருவரையும் குலோத்துங்கன் சிறப்புகள் பல செய்து ஏற்று, வீர பாண்டியனுக்கு அவன் தந்தைக்குரிய ஒரு பகுதி பாண்டிய நாடும், முடியும் அளித்துச் சிறப்பித்தான். வீரபாண்டியனும் அப்போது தனக்குப் பிறந்த மகனைச் சோழன் முன் நிருத்தி 'பருதிகுலபதி' என்று பெயரிட, அவனும் மனமகிழ்ந்து 'இரு நிதியும் பரிசட்டமும் இலங்கு மணிக்கலனும்' நல்கினுன்.

2. இந்நிகழ்ச்சிகளின் காலநிர்ணயம்:— இராசாதிராசன் ஆட்சி பெற்றது, கி. பி. 1163-ல்; பல்லவராயன்பேட்டை சாசன காலம். கி. பி. 1171. இக்கல்வெட்டு இராசாதிராசனின் ஆட்சியின் 8-ம் ஆண்டில் தோன்றியது. இது இலங்காபுரியின் ஈழப் படையெடுப்பைப் பற்றிக் கூறுவதால், இது தோன்றிய 8 ஆண்டுகட்கு முன் அப்படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாம். ஆதலின், அப்படையெடுப்பு நடந்தகாலம் கி. பி. 1169. நன்றி கெட்ட குலசேகரனை ஆட்சியினின்றும் நீக்கி, வீர பாண்டியனுக்கு முடி சூட்டிய நிகழ்ச்சி; இச்சோழனது 12-ம் ஆட்சியாண்டில் நடந்தது. (V. R. R. தீட்சதர், 3-ம் குலோத்துங்கன், பக். 33) இந்த சாஸனம் கல்வெட்டு இவ்வாறு முடிசூட்டிய உடன் தோன்றியது. ஆதலின், இக்கல்வெட்டின் காலம் (1163+12) கி. பி. 1175-ம் ஆண்டு. இராசாதிராசன் இறந்தது கி. பி. 1179. மூன்றும் குலோத்துங்கன் ஆட்சித் தொடக்கம் கி. பி. 1178-9. குலோத்துங்கன் வீர பாண்டியனை நீக்கி, விக்ரமனுக்கு முடி சூட்டியது; நெட்டூரில் வெற்றி பெற்றது முதலியன இவனது 2-ம் ஆட்சி யாண்டில் அமைந்த திருவக்கரைச் சாசனத்தால் தெரிகிறது. அதனுல் வீரபாண்டியன் கடைசி முறையாக

விரட்டப்பட்டது கி. பி. 1180-1ம் ஆண்டில். (நீலகண்ட சாஸ்திரியாரவர்கள் இந்நிகழ்ச்சி 1189-ல் என்பர். அது பொருந்துமாறில்லை.)

## 17. கன்னி பகவதியார் சாசனம்[1]

1. இக் கல்வெட்டு இருக்குமிடம்:— திருவாங்கூர் இராச்சியத்துக் கன்னியாகுமரி முனையிலுள்ள கோயிலின் முதற்பிரகாரத்துச் சுவரிலாகும்.

2. இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன்:—ஜடாவர்மன் பராந்தகதேவ பாண்டியன். இவனுடைய ஆட்சிக்காலம் கி. பி. 1120 முதல் 1132 வரையாகும்[2]

3. இக் கல்வெட்டுத் தோன்றிய காலம்:—இவனுடைய ஆட்சியின் 9-ம் ஆண்டிலாகும், அதாவது கி. பி, 1129-ம் ஆண்டில்.

4. இக் கல்வெட்டின் மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்:

(i) தன் முன்னோர் செயல்களைத் தனக்காக்கிக் கொண்டது:— தேவேந்திரனோடு இனிதிருந்தது. வடிம்பலம்ப நின்று மால் கடலை எறிந்தருளியது. மேருமலையில் கயல் பொறித்தது.

(ii) தன்னுடைய வீரச் செயல்கள்:—சேரமன்னனை வென்று சிறை கொண்டான். கடல் துறைப்பட்டினமான விழிஞத்தைக் கைக்கொண்டான். காந்தளூர்ச் சாலையில் கலமறுத்தான். தெலுங்கவீமனுடைய கொலனு (Kolanu) என்ற ஊரைப் பிடித்தான். தென்கலிங்க நாட்டை அடிமை கொண்டான்.

---

1 Travancore Archaelogical Series, Vol. I., p 22.

2 See Pandyan Kingdom by Prof. K. A. N. Sastri, p. 258.

(iii) அறச்செயல்கள் :—மதுரையிலுள்ள வெள்ளியம்பலத்திலுள்ள ஆயிரத்தெண்மர் வேண்ட அங்கு வேத பாராயணம் மறுபடியும் நடக்கச் செய்தான். திருவனந்தபுரத்து அநந்தசயனமுடையார்க்குப் பொன் விளக்கொன்று அளித்து அது நின்றெரிய சில விளை நிலங்களை அளித்தான். தன் குலதெய்வமாகிய கன்னி பகவதியாருக்கு, புறத்தாயநாட்டினை அளித்தான். தான்பிறந்த விழாவாகிய தைப்பூசத் தன்று தன்னிடம் இரந்தவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்தருளினான்.

(iv) பிற செயல்கள் :—கூபக மன்னனான தென் திருவாங்கூர் நாட்டு அரசன் மகளை மணந்துகொண்டான். அளப்பனவும் நிறுப்பனவுமான கருவிகளை நிலைப்படுத்தி அடையாளமாக கயல் முத்திரையை அவற்றின் மீது இட்டான். தாயநல்லூர் என்ற ஊரினை அடைந்து அவ்வூரார் பராந்தகனைத் தங்கள் மன்னனென்று அறிந்து சிறப்புச் செய்ய அதனை ஏற்று மகிழ்ந்தான்.

5. இச்சாசனத்தின் நோக்கம் :—பராந்தக தேவ பாண்டியன் தான் பிறந்த நாள் விழாவாகிய தைப்பூச தினத்தன்று தன் குலதெய்வமான கன்னி பகவதியார்க்கு அமுதுபடிக்கும், சாந்துபடிக்குமாகவும், சந்தனங் கற்பூரத்துக்கும், தான் பிறந்த தைபூசத் திருநாள் செலவுக்குமாக பாண்டிமண்டலத்து, உத்தம சோழ வள நாட்டு, புறத்தாய நாட்டினை நான் கெல்லை குறிப்பிட்டு அப்பகவதியார்க்குத் தேவதானமாகக் கொடுத்தான்.

ஸ்வஸ்திஸ்ரீ. திருவளரச்[3] செயம் வளரத்[4] தென்னவர்தம் குலம் வளர[5] வருமறை நான்கவை வளர[6] வனைத்

---

[3] இலக்குமியின் அருள் பெருகவும். [4] வெற்றி பெருகவும்.

[5] பாண்டியர் குலம் வளரவும். [6] நான்காகிய அரிய வேதங்கள் வளரவும்.

துலகுந்துயர் நீங்கத் தென் மதுராபுரி தோன்றித் தேவேந்த்ரனோ டினிதிருந்து[7] மன்னர்பிரான் வழுதியர் கோன் வடிம்பலம்ப நின்றருளி[8] மால் கடலை எறிந்தருளி[9] மலையத்துக் கயல் பொறித்துச்[10] சேரலனைச் செருவில் வென்று திறைகொண்டு வாகை சூடிக் கூபகர்கோன்[11] மகட் கொடுப்பக் குல விழிஞங்[12] கைக்கொண்டு கன்னிப் போர்[13] செய்தருளிக் காந்தளூர்ச் சாலை கலமறுத்து[14] மன்னுபுகழ் மறையவர்தம் மணியம்பலத்து[15] ளினிதிருந்து

---

[7] இவ்வாறு தேவேந்திரனோடு சமமாக இருந்தவன் உக்கிர குமாரன் [8] கடல் தன்னை வணங்க நின்றருளியவன் உக்கிர குமார பாண்டியன்.

[9] இவ்வாறு கடல் சுவற வேலைவிட்டவனும் அவனே.

[10] மேரு மலையில் கெண்டை மீன் அடையாளத்தைப் பொறித்த—இதுவும் இப்பாண்டியனுடைய முன்னோன் செய லாகும்.

[11] தென் திருவாங்கூர் நாட்டு அரசன். இவன் பாண்டிய னுக்குத் தன்மகளை மணம் செய்து கொடுத்தான்.

[12] விழிஞம். இது திருவனந்தபுரத்திற்குத் தென் திசையில் 10 கல் தொலையில் உள்ளது. இதை உண்மையில் வெற்றி கொண்டவன் முதற் குலோத்துங்கன். அவனுக்குதவியாக இப் பாண்டியன் நின்றமையின் அவன் வெற்றி இவனுக்காயிற்று. முதற் குலோத்துங்கன் கோட்டாறு முதலிய இடங்களில் நிலைப்படைகளை நிறுவினமை காண்க.

[13] கன்னிப்போர் முதலில் செய்யும் போராகும்.

[14] காந்தளூர்ச்சாலை கலமறுத்ததும் முதற் குலோத் துங்கனே.

[15] மதுரையின் கண்ணுள்ள வெள்ளியம்பலம். மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின்கண்ணுள்ளது. தில்லை, பொன்னம் பலமென்றும், மதுரை வெள்ளியம்பலமென்றும் பெயர் பெற்றிருந்தமை தொன்று தொட்டாகும்.

ஆயிரத்தெண்மர் அவிரோதம் பணிப்பணியால்[16] மறை பேர்த்துக்[17] கல்நாட்டிப்[18] பண்டுள்ள பேர்தவிர்த்து[19] நிறுப்பனவும் மளப்பனவும் கயலெழுதி[20] அனந்தபுரத் தெம்மாற்கு[21] நிலவிய பொன்மணிவிளக்கு நின்றெரியப்[22] பத்தமைத்து[23] ஆங்கமைந்த தாயநல்லூர் அட.[24]

---

[16] வெள்ளியம்பலத்துப் பூசைசெய்யும் அந்தணர் 1,008 பேர் போலும்! இவர்கள் விரோதமின்றி ஒற்றுமையாக வேண்டிக்கொள்ள.

[17] வேதங்களை ஒலிக்கச் செய்து; ஒலிக்கச் செய்தலாவது ஓதச் செய்தலாம்.

[18] இத்தன்மத்துக்காகும் செலவினுக்கு மான்யமளித்து அத்தன்மத்தைக் கல்லில் வெட்டி நாட்டுவித்ததாம். இச்செயல் சுசீந்திரம் கோயிலில் அவ்வந்தணர் வேண்ட இப்பாண்டியனால் செய்யப்பட்டதென்பாரும் உளர்.

[19] முன்புள்ள பெயர்களை நீக்கி.

[20] நிறுக்கும் கற்களுக்கும் அளக்கும் மரக்கால்களுக்கும் பாண்டிய முத்திரையான கயல் மீன் அடையாளத்தை இட்டான். சோழர்கள் காலத்தில் நிறுப்பனவற்றிற்கும் அளப்பனவற்றிற்கும் இருந்த பெயரையும் நீக்கினான். இச் செயலால் இவன் பெயரளவில் சோழமன்னனுக்குக் கீழிருந் தானே ஒழிய மிக மதிப்புடனும் தன்னாட்டில் சுயேச்சையுடனு மிருந்தவனாகிறான். பராந்தக வளநாடு என்றொரு நாட்டின் பெயரை இராசராசப் பாண்டிநாட்டில் இட்டு சோழன் வழங் கினமை முதற்குலோத்துங்கனின் 44, 47-ம் ஆண்டு கல்வெட்டு களால் தெரியவருகிறது. இதனால் சோழமன்னனும் இவனைக் கௌரவித்தமை தெளிவாம். (Pandyan Kingdom, p. 125 காண்க)

[21] திருவனந்தபுரத்திலுள்ள அனந்தசயனப் பெருமாளுக்கு.

[22] என்றும் எரியவேண்டி.

[23] தேவபத்திகளைக் கொடுத்து; தேவபத்தியாவது கோயிற் செலவுக்கான விளை நிலங்கள்; ஊர் எனலும் ஆம்.

[24] அதன் அருகு அமைந்த தாயநல்லூர் என்னும் ஊரைச் சேர்ந்தடைய. (அட—சேர).

தென்னாட்டரையனென அறிவகையால் அறிந்துணர்த்து[25]
தென்னவர் தங்குலதெய்வம் தென்குமரி கன்னியார்[26] தம்
திருநாள் விளாவதனிற்[27] தைப்பூசப் பிற்றை நான்று[28]
வந்திரந் தொரெல்லாற்கும் மாற்றாதே தியாகம் இட[29]
அறத்தால் விளங்கிய ஆய்ந்த கேள்விப்புறத்தாய நாடு[30]
பூமகட்களித்துத்[31] தெலிங்க வீய்மங்குளங் கொண்டு[32]

---

[25] தென்னாட்டு அரையனென அறிவகையால் அறிந்துணர்ந்து. (ஆங்குள்ள மக்கள் இங்கு வந்துற்றவன்) பாண்டி நாட்டு மன்னன் என்பதை அறியும் வகையால் தெரிந்து, அவனுக்கான சிறப்புக்களை உணர்ந்து (செய்ய). பாண்டி நாடு, தென்னாடு என்றும், தமிழ் நாடென்றும் பெயர் பெற்றிருந்தது.

[26] தென் குமரியிலுள்ள கன்னித் தெய்வம் பாண்டியர்களின் குலதெய்வமாவாள் என்பது இதனால் அறியத்தக்கது. கன்னியார் - கன்னியார்க்கு என 4-ம் வேற்றுமை விரிக்க.

[27] தம் திருநாள் விளாவதனில் - நம் (பாண்டியன்) பிறந்த திருநாளாகிய விழாவிலே.

[28] தைப் பூசமாகிய பின்னை நாளில். இவன் பிறந்தது தைப்பூசத்திலாகும்.

[29] மாற்றாதே தியாகம் இட - மறுத்துக் கூறாது விரும்பினவற்றைக் கொடுக்க.

[30] புறத்தாய நாடு:— இது ராஜராஜப் பாண்டி நாட்டு உத்தமசோழ வளநாட்டில் அடங்கியுள்ளதொரு நாடாகும். நாஞ்சில் நாட்டுக்குத் தெற்கில் இருந்தது போலும்.

[31] பூமகளுக்கு அளித்த-கன்னிபகவதியார்க்கு அளித்து.

[32] தெலிங்க வீய்மன் குளங்கொண்டு-குளம் என்ற ஊரைத் வீமன் என்று பெயருள்ள தெலுங்கு நாட்டுக் குறுநில மன்னனிடம் வெற்றியால் பெற்று. இவ்வெற்றியும் விக்ரமசோழன் செய்த போரில் இப்பாண்டியன் உதவியதன் காரணமாக இவனுக்காயிற்று. குளம் என்று இக்கல்வெட்டில் குறிக்கப்

தென்கலிங்க மடிப்படுத்து[33] திசை அனைத்து முடனாண்ட[34] ஸ்ரீ பராந்தக தேவற்கு யாண்டு ௯-தாவது ராஜராஜப் பாண்டி நாட்டு[35] உத்தம சொழவளநாட்டுப்[36] புறத்தாய நாட்டுக்[37] குமரிக்கன்னியா பகவதியார் தேவதானத்

---

படுவது இக்காலத்தில் கொலெயீர் (Colair) ஏரிக்கு அருகிலுள்ள எல்லூர் (Ellore) ஆகும். அதற்கு அக்காலத்தில் கோலனு (Kolanu) என்று பெயராகும். வீமன் என்பது இக்குலத்தாருக்குப் பெரிதும் வழங்கி வந்த பெயராகும். இப்பெயர் சரோநாத மன்னர்களாலும், கொலானுவை ஆண்ட தலைவர்களாலும் முதலாம் இராசராசன் காலத்திலிருந்து கி. பி. 13-ம் நூற்றாண்டு வரை தரிக்கப்பட்டு வந்தது. (Cholas Vol. II, p. 34.)

[33] தென் கலிங்க நாட்டை அடிமைப்படுத்தி. தென்கலிங்கம் கோதாவரி நதிக்கும், மகேந்திர மலைக்கும் இடையிலுள்ளது. இப்படையெடுப்பு முதற்குலோத்துங்கன் காலத்தில், அவன் மகன் விக்ரம சோழன், வெங்கியை ஆண்டுவந்தபோது, (ஜம் படைப் பருவத்தில் ?) இப் பாண்டியன் உதவியுடன் நடத்தியதாகும். இப்போர் ஜயங்கொண்டார் பாடிய 'பரணி'யில் வருணிக்கப்படும் இரண்டாவது கலிங்கப் போருக்கு முந்தியதாகும். (Cholas, Vol., II, p. 34).

[34] எல்லாத் திசைகளிலுள்ள நாட்டையும் சோழ மன்னனுடன் இருந்து ஆண்ட. உடன் ஆண்ட - என்ற தொடர் இவன் சோழனுக்குட்பட்டு அரசாண்டவன் என்பதைத் தெரிந்துக் காட்டும்.

[35] ராஜராஜப் பாண்டிநாடு - இது பாண்டி மண்டலத்தை முதலாம் இராசராசன் வெற்றிகொண்ட பிறகு அதற்கு அவனால் இட்டப்பட்ட பெயராகும்.

[36] உத்தம சோழ வளநாடு - இது ஷி பாண்டி மண்டலத்தின் ஒரு உறுப்பு.

[37] குறிப்பு 30 காண்க.

துக்குப் பெருநான்கெல்லை.[38] வடவெல்லை நாஞ்சிநாட்டு[39] அதியனூரும் மின்னாட்டுப் பெருங்குடி மலையுட்பட பணைகுடி நீங்கலாக மூன்றுங்கூடின மலையிற் சந்தேச தேசப் பிரமாணம்[40] ஆனைமலையும் மனுத்திரப்பாறையும் தோரணகுழியும் பிடாரனேரிக் கொழுக்குத்தும்[41] கண்டனேரிக் கொழுக்குத்தும் வாழையாற்று வடவாறும் நாவாயும் கோடிக்களாவும் விறகடுகுப்பையும் ஒழுக்கந்தாழ்வும் இன்னாட்டு வடகீழ் மூலை கருங்குளமும் அவ்வியூரும் பூசன்குடியும் கூடின பிரமாணமான புக்கூழ்குழியும் இராரத்திக் குளமும் சிதற்றைப் பாறையும் நெடுவாலி குழியும் மேற்கு நோக்கின நீர்வீழ் தாழ்வும்[42] விளக்கன்குழி நீர் கொள்ளியும்[43] இரட்டைக் கிணறும் ஆதனூர் துறை நீர்வீழ் தாழ்வும் பால்பாடும் நெடுங்களரும் உசிலோடு குழியும் ஆனை அடிப்பாறையும் கறடி மணலும்[44] இரட்டைநுரம்பும் கறிம்பாடும் ஆனைக்கல்லும். இவ்வெல்லையில் கிழக்குக் கருங்குள வளநாட்டு[45] விசாபுரியும் இருக்கந்துறை

---

[38] இனிக் கூறப்படுவது இவன் கன்னிபகவதியார்க்கு அளித்த தேவதானப் பிரதேசத்தின் நாற்கெல்லையாகும்.

[39] நாஞ்சில் நாடு:— இது திருவாங்கூர் இராச்சியத்தின் ஒருபகுதி. [40] குறிக்கப்பட்ட நாட்டின் அளவு.

[41] கொழுக்குத்து - இது எல்லையைக் குறிப்பதற்கு பூமியில் புதைக்கப்பட்டு எல்லோரும் அறிய வைத்திருக்கும் ஒரு மூலையாகும்.

[42] நீர்வீழ்தாழ்வு நீர் வீழ்ச்சி.

[43] நீர்க்கொள்ளி - வாய்க்கால். [44] கறடி மணல் - பெரு மணல்.

[45] கருங்குள வளநாடு:—இது திருநெல்வேலி ஜில்லாவின் தென்மேற்குப் பகுதியாகும். விசாபுரி என்னும் ஊரும் இந்நாட்டிலிருப்பதாக இக் கல்வெட்டு கூறுகிறது.

க்குந் தென்கீழ் மூலையும் தென் எல்லை கிழக்குப் பாருசமே போந்து இந்நாட்டுத் தென்மேல் மலை கேரளன் குறிச்சியான கேரளன் குடியும் நாஞ்சி நாட்டு மணற்குடியும் கூடின சந்தேசப் பிரமாணம் கேரளங்குடிக்குத் தென்மேல் மூலை பெ......மையும் கட......மபன்றிதலை விளை...... ற்கும்...... நடுவிளையும் மாணுக்கன் குழிக் கீழ்விளிம்பும் நங்கை கிணறு...... தாகச் சுசீந்திரமும் கேரளன் குறிச்சியும்...... வழியும் தேவிகுளத்தில் நீர்கொள்ளியும் ஆறுண்ணி வடகோம்பில்...... க்குப் பாறையும்...... பாப்பான் குழியும்......பாறையும் வடக்கு நோக்கின நீர் வீழ்க்காரடு வெள்ளெலுப்பைத்தாழ்வும் பள்ளிச் சந்த நீங்கலாக குருந்தோ......ளற்பொற்றையும் மலையே யொழுங்காகப் போந்து தோவாளைக்குக் கீழெல்லைக...... ளையும் உருண்டப் பொற்றையும் ஒழுங்காக ஊசிமலையும் ஒழுங்காகப்போந்து ஆணைமலையாக இவ்விசைந்த பெருநான்கெல்லையுட்பட்ட......தங்களும் அமிர்துபடி சாந்துப்படியுஞ் சந்தனங் கற்பூரத்துக்கும் நாம் பிறந்த தைப்பூச திருநாளுக்கும் செல்விதாக இறையிலி[46] தேவ தானமாக நமக்குடையபடி நீர்வார்த்துக் குடுத்தோம் குமரிக்கன்னிப் பகவதியார்க்கு.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. பராந்தகதேவ பாண்டியன். இவன் விக்ரமசோழன் காலத்தின் பெரும் பகுதியிலும் அவன் தந்தை முதற் குலோத்துங்கன் காலத்திலும் சோழராட்சிக்கு உட்பட்டு பாண்டி நாட்டை ஆண்டவன். இவன் ஜடாவர்மன்

---

[46] வரி நீக்கி. [47] தடித்த எழுத்துக்களிலுள்ளன யாவும் ஊர்களின் பெயர்களாம். இவை நாஞ்சில் நாட்டிலும், திருநெல்வேலி ஜில்லாவின் தென் மேற்குப் பகுதியிலும், மேலைக் கடற்கரை ஓரமாகவும் உள்ளன.

பராந்தக பாண்டியன் என்றும் பெயர் பெறுவான், இவனைப் பற்றிய செய்திகளை அறிவதற்கு இக்கன்னியாகுமரிக் கல்வெட்டொன்றே ஆதாரமாகும். இவனுடைய மெய்க்கீர்த்தி 'திருவளரச் செயம்வளர' என்று தொடங்குகிறது. இப் பராந்தக தேவன் தன் முதாதையரான புராண காலப் பாண்டியர்களின் வெற்றியை எல்லாம் தன்னுடையதாகக் கூறிக் கொள்ளுகிறான். இவன் தான் கொண்ட வெற்றிகளாகக் கூறும் மெய்க்கீர்த்திப் பகுதிகள் விக்ரமசோழன் மெய்க்கீர்த்திப் பகுதிகளோடு ஒத்து அவனுடைய வெற்றிகளையே திருப்பிச் சொல்வதால், பராந்தகன், ஒன்று விக்கிரசோழனைத் தொடர்ந்து போருக்குச் சென்றிருக்க வேண்டும், அல்லது அவனுக்கு அப்படையெடுப்பில் மிகுந்த உதவி செய்திருக்கவேண்டும் என்பர் திரு. நீலகண்டசாஸ்திரியார்.

2. வடிம்பலம்பநின்ற பாண்டியன் வரலாறு:— முன்னொரு காலத்தில் மதுரையை அழித்தற்கு வந்த கடலை உக்கிரகுமாரப் பாண்டியனென்பவன் சோமசுந்தரக் கடவுள் அருளியவேலை யெறிந்து வற்றச் செய்து, அக்கடல் தன்னுடைய காலின் வடிம்பை அலம்பும்படி உயர்ந்து நின்றமையால், அவன் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ற பெயர் பெற்றான்.

## 18. அரிகேசரிதேவர் சாசனம்[1]

1. இக்கல்வெட்டு இருக்குமிடம்:— திருநெல்வேலிஜில்லாவிலுள்ள தென்காசி விசுவநாதர் கோயிலிலுள்ள கர்ப்பகிரகத்தின் அடிப்பகுதி.

[1] Travancore Archaelogical Series, Vol. I, p. 91.

2. இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன்:—அரிகேசரி பராக்கிரம பாண்டியன். இவன் கி. பி. 1422 முதல் 1462 வரை 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

3. இக்கல்வெட்டுத் தோன்றிய காலம்:—அரிகேசரியின் ஆட்சியில் 29-ம் ஆண்டு. அதாவது கி. பி. 1451-ம் ஆண்டில்.

4. இக்கல்வெட்டின் மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்;—(i) வீரச்செயல்;—அரிகேசரி சிங்கை, அனுரை, இராசை, சண்பை, விந்தை, அறந்தை, முதலே, வீரை, வைப்பாறு என்ற இடங்களில் தன்பகைவரை வென்ருன். பதினெண்பாஷைப் பார்த்திபர் அனைவரும் திரையும் சின்னமும் வரிசையாகக் கொணர்ந்து, குறை பல இரந்து குரைகழல் இறைஞ்ச அவரவர்கள் விரும்பியதை அவரவர்களுக்கு அருளினன்.

(ii) அறச்செயல்:—அந்தணர் செந்தழல் ஓம்ப விந்தை முதலான ஐந்து ஊர்களில் பார்ப்பனச் சேரிகளை அமைத்தான். திருப்புடைமருதூர்க்கோயிலில் மண்டபம் எடுத்தான். திருநெல்வேலிச் சிவபெருமானுக்கு அர்த்தயாம வழிபாட்டிற்குப் பொற்காலத்தில் அமுது செய்வித்தருளினன். திருக்குற்ருல நாதருக்கு மண்டபம் கட்டி, மணிமுடி சூட்டி விழா நடத்தினன். நாட்டில் வற்கடம் ஏற்பட்டு, குற்ருலத்து அருவியும் வற்றியபோது குற்றல நாதர் அபிஷேகத்துக்குச் சேண்புலத்திலிருந்து நீர் கொணரச் செய்தான். தென் காசியில் காசி விசுவநாதருக்குக் கோயில் கட்டினன். கோயில்களனைத்திலும் ஆகம விதிப்படி நித்திய நைமித்தியங்களை நடத்தச் செய்தான்.

5 இச் சாசனத்தின் நோக்கம்:—இப் பாண்டியன் தக்ஷிண காசியில் விசுவநாதருக்குப் பெருங்கோயிலொன்று

கட்டி, அதில் அப்பெருமானைப் பிரதிஷ்டை செய்வித்தான். மேலும் அப்பெருமானுக்கு அர்த்தமண்டபம், மகாமண்டபம், சோபானம் இவைகளைக் கட்டி, திருப்பள்ளி நாச்சியார் முதலாக உள்ள பல திருமேனிகளைப் ப்ரதிஷ்டை செய்வித்தான். விசுவநாதரின் வழிபாட்டிடிற்கும், பல நித்ய நியமங்களுக்கும், பல விசேஷ பூஜைகளுக்கும், திருநாட் செலவுகளுக்குமாக தன் ஆட்சியின் 25-ம் ஆண்டில் தென்காசி, வாயுளான், குன்றக்குடி, நல்லூர், பைம்பொழில் ஆகிய ஊர்களைத் தேவதானமாகக் கொடுத்தவன், இப்போது (29-ம் ஆண்டில்) புலியூர், வீரபாண்டிய நல்லூர் என்ற இரு ஊர்களை அக்கோயிலுக்கு அளித்தான்.

சுபமஸ்து[2]. பூமிசை வனிதை[3] மார்பினிற் பொலியநாமிசை[4] கலைமகள் நலனுற விளங்கப் புயவரை மீது சயமகள் புணரக்[5] கயலிணை[6] யுலகின் கண்ணெனத் திகழ[7] சந்திரகுலத்து வந்தவதரித்து முந்தையோர் தவத்தின் முளை யென வளர்ந்து தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து மன்பதை புரக்க[8] மணிமுடி புனைந்து சங்கரசரண பங்கயஞ் சூடிச்[9] செங்கோலோச்சி

---

[2] நன்மை உண்டாகுக. [3] இலக்குமி. [4] நாவின் மீது.

[5] மலைபோன்ற புயங்களில் வீர இலக்குமி சேர.

[6] கயலிணை - ஒரு சோடி மீன்கள். பாண்டிய மன்னர்கள் தங்களுடைய கொடியில் இரண்டு மீன்களைப் பொறித்து வைத்தனர். [7] அவ் விரு மீன்களும் உலகின் இரு கண்களெனத் திகழ்ந்தன.

[8] மக்கள் கூட்டத்தைப் பாதுகாக்க.

[9] சங்கரனாகிய சிவபெருமானின் திருவடிகளாகிய தாமரைகளைத் தன் முடிமேல் சூடி.

வெண்குடை நிழற்றி வானவாரியு[10] மன்னருள் வாரியும்[11] தானவாரியுந்[12]தப்பா தளித்து மறக்களை பறித்து[13] நல்லறப் பயிர் விளைத்துச்[14] சிங்கையிலனுரையி[15] லிராசையிற்[16] செண்பையில்[17] விந்தையி[18] லறந்தையில் * முதலையில்[19] வீரையில்[20] வைப்பாற்றெ......ன்னரை வென்கண் டெப்பாற்றிசையு மிசைவிளக்கேற்றிப்[21] பதினெண்......கம்போற்றப் பதினெண்பாஷைப் பார்த்திபரனை வருந் திறையுஞ் சின்னமு முறை முறை முணர்ந்து குறைபல விரந்து குரை கழலிறைஞ்ச வவரவர் வேண்டிய தவரவர்க் கருளி[22] அந்தணரனேகர்

---

[10] மழையின் வளமும். [11] நிலைபெற்ற இரக்கமாகிய மழையும். [12] தருமமாகிய மழையும். [13] பாவமாகிய களைகளைப் பறித்து.

[14] நல்ல தருமமாகிய பயிரை விளைவிக்க பாவமாகிய களைகளைப் பறித்தானென்க.

[15] சிங்கை, அனுரை என்பன இரு ஊர்கள்; திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளன.

[16] இராசை - இது இக்கால சங்கரநயினர் கோயில்.

[17] சண்பை - இது திருக்குற்றாலம் என்ற ஊராகும். சண்பகவனம் என்றும் இதற்குப் பெயருண்டு. * அறந்தை - இது திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஊர்.

[18] விந்தை - இது செங்கோட்டை தாலுகாவிலுள்ள விந்தனூராகும்.

[19] முதலை - இது திருநெல்வேலி ஜில்லா நாங்குனேரி தாலுகாவிலுள்ள முதலைக்குளம் என்ற ஊராகும்.

[20] வீரை - இது ௸ ஜில்லா, செங்கோட்டை தாலுகாவிலுள்ள வீரகேரளம்புதூராகும்.

[21] எத்திசையிலும் புகழாகிய விளக்கை ஏற்றி.

[22] பதினெண்......அவர்க்கருளி - பதினெட்டு மொழியைப் பேசும் பார்த்திபர் (அரசர்) அனைவரும் திறையும் சின்னமும்

செந்தமிழோம்ப விந்தை முதல் அகரம் ஐந்திடத்தி யற்றிச்[23] சிவநெறியோங்கச் சிவார்ச்சனை புரிந்து மருதூ ராற்கு[24] மண்டபமமைத்து முன் ஒருதூர் மூங்கிலுள்[25] புக்கிருந்த சிற்பரர்[26] தம்மைத் திருவத்தசாமத்துப் பொற் கலத்தமுது பொலிவித்தருளிச்[27] சண்பகவனத்துச் சங்கரர் தமக்கு[28] மண்டபமமைத்து மணி முடி சூட்டி விழாவணி நடாத்தி விரைப் புனலாடல் வழாவகை நடாத்த[29] நின்மன்னருள் தனால்[30] வற்றா வருவியும் வற்றி வற்கடமுற்ற விக்காலத் துறுபுனல் நல்கென வேண்டி யப்பொழுதே வேறிடத்தின்றிச் சேண்டருபுனலிற் செழும்புனலாட்டி[31] மின்கால் வேணி[32] விஸ்வநாதர்க்குத்

---

கொண்டுமுறைப்படி வந்து தங்கள் குறைகளைச் சொல்லி அவன் பாதங்களில் வணங்க. இச்செய்தி மிகைபடக் கூறப் பட்டதாகும். ஏனெனில் இவன் காலத்தில் பாண்டியர் வலிகுன் றியிருந்தனர். [23] விந்தனூரிலிருந்து ஐந்து இடங்களில் பார்ப் பனச் சேரிகளை உண்டாக்குவித்து.

[24] பாண்டி மண்டலத்திலுள்ள திருப்புடைமருதூர் என்ற ஊரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு.

[25] முன் ஒரு தூர்மூங்கிலில் > முன் ஒரு மூங்கில் தூரினுள் - முன் காலத்தில் ஒரு மூங்கில் புதரினுள்ளே.

[16] புக்கிருந்த சிற்பரர் - மறைந்திருந்த சிவபெருமான்.

[27] மேற் கூறிய சிவபெருமானுக்கு நடு இரவில் நடக்கும் பூசைக்கான திருவமுதுக்கு இவன் ஏற்பாடு செய்தான்.

[28] திருக்குற்றால நாதர்க்கு.

[29] மணமிக்க நீரைக்கொண்டு (வழாவகை) தவறாதபடி அபிடேகம் செய்வித்து. [30] நின்னுடைய நிலைபெற்ற அருளால்.

[31] வற்றா அருவியும்......புனலாட்டி - வற்றுதல் இன்றிப் பெருகிவரும் திருக்குற்றால அருவியும் வற்றி பஞ்சம் உண்டான அக் காலத்திலும் நீராட்டுதற்கு ஆகும் திருமஞ்சன நீரினைக் கொண்டு வருக என வேண்டி, அப்பொழுது வேறு (அருகி லுள்ள) இடங்களிலும் இல்லாமற்போக வெகுதூரத்திலிருந்து கொண்டுவந்த நீரைக்கொண்டு அபிடேகம் செய்வித்து.

[32] மின்னலைக் கக்குகின்ற சடையையுடைய.

தென்காசிப் பெருங்கோயில் செய்து நல்லாகமவழி[33] நைமித்திகமுடன் எல்லா பூசையும் எக்கோயிலினும் பொருள் முதலனைத்தும் புரையற[34] நடாத்தித் திருமலி[35] செம்பொற் சிங்காசனமிசை உலகமுழுது முடையாருடனே இலகு கருணை யிரண்டுருவென்ன[36] அம்மையும் அப்பனுமாயனைத்துயிர்க்கும் இம்மைப் பயனு[37] மறுமைக் குறுதி[38] யுமேம்பட நல்கி வீற்றிருந்தருளிய ஸ்ரீ அரி...... தேவரான பராக்ரமபாண்ட்ய தேவற்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது[39]......ற்று இருபத்தொன்றுந் தியதியும் பூர்ணையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சோதி நாள்[40] தென்வாரிநாட்டு[41] சித்ரநதி உத்தரதிரத்தில்[42] தக்ஷிணகாசியிலே[43] உடையார் விஸ்வநாதனுக்கு அபிநவமாக[44] உபாநாதிஸ்தூபி பய்யந்தமுந்[45] திருப்பணிசெய்து உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டித்து[46] அர்த்த

---

[33] நல்ல வேத வழியிலே. [34] குற்றம் நீங்க.

[35] செல்வம் பொலியும்; வினைத்தொகை.

[36] இலகு கருணை இரண்டுருவென்ன - விளங்குகின்ற கருணையே இரண்டு உருவம் பெற்றது என்பதை ஒத்து.

[37] இம்மைப்பயன் - புகழ். [38] மறுமைக்குறுதி - முத்தி அல்லது வீடுபேறு.

[39] 29-ம் ஆண்டு [40] சுவாதி நட்சத்திரம்.

[41] தென்வாரி நாடு - இது பாண்டி மண்டலத்தின் உட்பகுதி. தென்காசி, குற்றாலம் முதலியன இந்நாட்டைச் சேர்ந்தனவாம்.

[42] தென்காசியில் ஓடும் சித்ராநதியின் வடகரையில்.

[43] தக்ஷிண காசி - தென் காசி. [44] புதிதாக.

[45] உபாநாதி ஸ்தூபி பரியந்தம் - அஸ்திவாரம் முதல் கலசம் வரையில்.

[46] எழுந்தருளச் செய்து. [47] அர்த்த மண்டபமாகிய இடைநாழிகை. இடை நாழிகை யென்பது அர்த்தமண்டபம் என்பதற்கான தமிழ்ச் சொல்.

மண்டபம் இடைநாழிகை[47] மஹாமண்டபம் ஸோபாநம்[48] இவையுந் திருப்பணி செய்து திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாக உள்ள திருவுடம்புகளும் ஏறி[49] அருளப்பண்ணுவித்து[50] ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து[51] மேல் உடையார் விஸ்வநாதந் பூஜைக்கு அமுதுபடி சாத்துப்படி[52] திருமாலைத் திருப்பரி வட்டந்[53] திருவிளக்கு உட்பட்ட பலநித்ய நியமங்களுக்கும் பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும் முன்னாள் இரண்டாவதின் எதிர் இருபத்துமூன்றாவது முதலுக்கு[54] நாம் தேவதானமாக விட்ட பற்று[55] களில் தென்வாரி நாட்டுத் தென்காசிக்குப் பெருநான்கெல்லையாவது கீழ் எல்லை[56] புலியூற் பற்றான காராண் குளத்தில் நீர் நக்கலுக்கும் பரிம்புக்கும் புலியூர்[57] அகரப் பற்றில் புஞ்சைக்கும் நாராயண

---

48 ஸோபாநம் - படிகள்.

49 திருவுடம்புகள் - பிறதெய்வங்களின் திருமேனிகள்.

50 ஏறி அருளப்பண்ணுவித்து - பிரதிஷ்டை செய்து.

51 மதில்களும் கோபுரம் முதலியவைகளும் தொடங்கி வைத்து; இவை இவனால் கட்டத் தொடங்கப்பெற்று, இவன் தம்பியான குலசேகர பாண்டியனால் முடிக்கப்பெற்றன.

52 அலங்காரம். 53 திருப்பரிவட்டம் > திருப்பரிசட்டம் - கடவுளுக்கு அணிவிக்கும் ஆடை.

54 இரண்டாவதன் எதிர் இருபத்து மூன்றாவது முதலுக்கு இருபத்தைந்தாம் ஆண்டின் முதலில்.

55 தேவபத்திகளில்; ஊர்களில்.

56 எல்கை - எல்லை. எல்கை என்ற சொல்லே இக்காலத்தில் மருவி வழங்குகிறது.

57 புலியூர் :—இது இராசகுலராமநல்லூர் என்றும் பெயர் பெறுவது. திருநெல்வேலி ஜில்லா தென்காசி தாலுகாவிலுள்ளது.

ஸ்ரீபாதங்கள்[58] மடப்புறத்தில்[59] மேல் எல்கைக்கு மேற்கும், தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கு, மேல் எல்கை குன்றக்குடிப் பரிம்பு[60] க்குக் கிழக்கும் வ...... சென்னுப் பொற்றைக்கும் குத்துக் கல்லுக்கும் தெற்கும் ஆக இன்னுன் கெல்......ட்டபற்றும், இந்த நதிக்கு தக்ஷிண தீரத்தில் வாயுளான் குடிப்பற்றுக்குப் பெரு நான்கெல்கையாவது, கிழ் எல்கை புலியூர் அணைக்கும் திருச்சாலைக்குடிப் பற்றுக்கும் ஆழங்காலுக்கு மேற்கும், தென் எல்கை திருச்சாலைக் குடிப் பற்றுக்கும் பராக்ரம பாண்டிய சதுர்வேதிமங்கலத்து பட்டகள் அகரப்பற்றில் வடவெல்கைக்கும் உடையார் திருக்குற்ருல முடைய நாயனுர் பழந்தேவதானத்துக்கு வடக்கும், மேல் எல்கை வாயுளான் குடி அணைக்குக் கிழக்கும் வட எல்கை சித்ரநதிக்குத் தெற்கும், ஆக இன்னுன் கெல்கைக்குட் பட்ட பற்றும் குன்றக்குடி பற்றுக்குப் பெருநான்கெல்லை யாவது, கீழ்எல்கை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும், தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கும் மேல் எல்கை செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூற் குப்[61] போகிற பெருவழிக்குக் கிழக்கு வடஎல்லை கடமர் குளத்துக்குத் தெற்கு, ஆக இன்னுன் கெல்லைக்குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற் ருலமுடைய நாயனுர் தேவ தானமான நிலம் ஒன்பது மா முந்திரிகை[62] யின் மூன்று மா முக்காணியும்[63] நீங்கலாகப் உள்ளபற்றும் பராக்கிரம

---

[58] ஒரு வைணவத் துறவி.

[59] மடப்புறம் :—மடங்களுக்கு இறையிலியாக விடப்பட்ட நிலம்,

[60] பரிம்பு - பாழிடம். [61] தென்காசிக்கருகில் செங்கோட்டை தாலுகாவிலுள்ள ஒரு ஊர்.

[62] முந்திரிகை - $\frac{1}{320}$. [63] முக்காணி.

பாண்டிய நல்லூர் பற்றுக்குப் பெரு நான்கெல்கையாவது, கீழ் எல்கை இலுப்பைத் தொண்டிற் பெருவழிக்கு மேற்கும் தென்எல்கை இக்குளத்தின் நீர்நக்கலுக்கு[64] வடக்கும், மேல் எல்கை உடையார் திருக்குற்றால முடை......ா பழந்தேவதானமான திருச்சாலைகுடிப் பற்றுக்குக் கிழக்கும் வடஎல்கை சித்ர...... தெற்கும். ஆக இன்னான்கெல்கைக்குட்பட்ட பற்றில் இருங்கிண்டி[61] ஸ்ரீபத்மநாபன் தான இறையிலி நிலமிரண்டுமாவும் நீங்கலாக உள்ள பற்று நல்லூற் பற்றில் வள்ளை முட்டமும் இக்குளத்தில் நீர் பாயும் நிலமாய் வடவூற் பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்றுமா அரையும் ஆக இப் பற்றுக்குப் பெரு நான்கெல்லையாவது கீழ் எல்கை காடேற்றிப் பற்றுக்கு மேற்கும் தென் எல்கை வடவூற் பற்றிற் செங்குளத்தில் நீர்பாயு நிலத்துக்கும் தஞ்சாவூற் பெருங்காலுக்கும் அனுபோக மழகியான் குளத்தில் நீர் பாயும் பற்றுக்கு வடக்கும் மேல் எல்லை இக்குளத்தில் நீர் நக்கலுக்கும் தவணைப் பற்றுக்குங் கிழக்கு வடஎல்கை தஞ்சாவூரில் நின்றும் தவணைக்குப் போகிற பெருவழிக்குத் தெற்கும ஆக இன்னான்கெல்கைக் குட்பட்டபற்றும் வடவாரிநாட்டுப் பைம்பொழிற்[65] பற்றில் நல்லாண் பிள்ளைப் பெற்றானுக்கும் விஸ்வநாதப் பேரேரி[66] க்கும் பெரு நான்கெல்கையாவது கீழ்எல்கை செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூற்குப்[67] போகிற பெருவழிக்கு மேற்கு தென்

[64] வாய்க்கால்.

[65] தென்காசி தாலுகாவில் உள்ள ஒரு ஊர்.

[66] இது பராக்ரம பாண்டியனால் வெட்டப்பட்ட ஏரியாகும்.

[67] இப்போது வீரபாண்டிய மெனப்படும்; திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாங்குனேரி தாலுகாவிலுள்ளது.

எல்கை ஆற்றுக்கு வடக்கு மேல் எல்கை பைம்பொழி லில் நின்றும் நல்லூற்குப் போகிற பெரு வழிக்கும் முழங்கால் முட்டிப் பாறைக்குங் கிழக்கு வடஎல்கை தேனீடு பொற்றைக்குத் தெற்கு ஆ......ன் கெல்கைக் குட்பட்ட பற்றும் முப்பதாவது மேஷ ஞாயிற்று இருபத்தெ ...... தியதியும் பூர்வபக்ஷத்து பஞ்சமியும் திங்கட்கிழமையும் பெற்ற புணர்பூசத்து நாள் நாம் முன்பு விட்ட பற்றுக்கள் நீங்கலாக நாளது பூஜைச் சிலவுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுல ராமநல்லூரான புலியூர் பற்றுக்கும் வீரபாண்டிய நல்லூர்ப்[67] பற்றுக்கும் பெரு நான்கெல்லையாவது புலியூர்ப் பற்றுக்குப் பெருநான்கெல்கைக் கீழ் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சி[68]ப் பற்றுக்கு மேற்கு தென் எல்கைச் சிற்றாற்றுக்கு வடக்கு மேல் எல்கை பழந்தேவதானமான தென்காசிப் பற்றுக்குக் கிழக்கு வடஎல்கை ஆயக்குடி[68] பற்றுக்குத் தெற்கு ஆக இன்னான் கெல்கைக் குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்றால முடைய நாயனார் தேவ தானமும் உடையார் விக்ரமபாண்டீஸ்வரமுடைய நாயனார் தேவதானமும் நயினார் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டமும்[69] ஸ்ரீக்ருஷ்ணன் திருவிடையாட்ட மும் பராக்ரமபாண்ட்ய நல்லூரில் நயினார் திருவேங்கட நாதன் திருவிடையாட்டமும்[69] முகந்தானத்து நாராயண ஸ்ரீபாதங்கள் மடப்புறமும் அகரப்பற்றும் நீங்கலாக

---

[68] இது தென்காசி தாலுகாவிலுள்ள ஒரு ஊர்.

[69] திருவிடையாட்டம் :—திருமாலுக்கு அளிக்கப்பட்ட நிலம். திருவேங்கடநாதன் திருவிடையாட்டம், ஸ்ரீ கிருஷ்ணன் திரு விடையாட்டம் என்றது காண்க.

இன்னான் கெல்கைக் குட்பட்ட பற்றும் வீரபாண்ட்ய நல்லூருக்குப் பெரு நான்கெல்கையாவது கீழ் எல்கை தட்டான்குளத்துப் பரிம்புக்கு மேற்கு தென் எல்கை திருச்சிற்றம்பலத்துக் காலான இராசகுலரா...... காலுக்கும் நயினார் திருவிருந்தபெருமாள் திருவிடையாட்டமான ஆகவராம...... துக்கும் வடக்கு மேல் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக்குறிச்சிப் பற்றுக்குக் கிழக்கு வட எல்கை விந்தனூர் பெருவழிக்குத் தெற்குஆக இன்னான்கெல்கைக் குட்பட்ட பற்றும் ஆக இப்பற்றுகளில்ப் பெரு நான் கெல்கைக் குட்பட்ட நஞ்செய் புஞ்சை மாவடை[70] மரவடை[71] பட்டடை[72] கொடித்தோட்டம்[73] செக்கிறை[74] மற்றுமுள்ள ஸமஸ்த ப்ராப்திகளும்[75] முப்பதாவது பசான[76] முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இம்மரியாதியிலே இவ்வோலை பிடிபாடாகக்[77] கொண்டு ஆசந்த்ரதாரவத்[78] இவ்வாலையம் உள்ள அளவும் கையாண்டு[79] கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வற நடத்திப் போதவும் பாற்க. இவை கிடாரத்தாருடையான் எழுத்து. உ. துல்யம்.[80]

---

[70] மரத்துக்கு உரியவரி; பெருவழி ஓரமுள்ள பழங் கொடுக்கும் மரமுமாம்.

[71] சிற்றூர்களிலுள்ள கால்நடைகள் அடையும் இடம்.

[72] இறைப்புப் பாசனமுடைய நன்செய் வயல்கள்.

[73] வெற்றிலைத் தோட்டம். [74] செக்கிறை - செக்குக்கு விதிக்கப்பட்ட வரி.

[75] ஸமஸ்தப்ராப்திகளும் - சகல பேறுகளும்.

[76] பசானம் - வருடம். [77] பிடிபாடு - ஆதரவு.

[78] சந்திரனும் நட்சத்திரங்களும் உள்ளவரைக்கும்.

[79] கையாண்டு - அனுபவித்து. [80] துல்யம் - அரசன் கையெழுத்து (The sign manual of the King).

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. **அரிகேசரி தேவன்:**—இவன் அரிகேசரி பராக்ரம பாண்டியதேவன் என்று அழைக்கப்படுவான். மிருக சீர்ஷ நட்சத்திரத்தில் பிறந்தவன். இவனது மெய்க் கீர்த்திகள் 'பூமிசை வனிதை' என்று தொடங்குவன. இவன் நரசநாயக்கன் என்னும் மதுரை நாயக்க அரசனால் வெற்றிகொள்ளப்பட்டவனுயின் மதுரையை இவன் தன் கீழ் பல்லாண்டுகள் வைத்திருந்தவ னுதல் வேண்டும். இவன் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பல சிறு ஊர்க ளில் வாகை சூடினான். இவன் சிறந்த சிவபக்தன். இவன் செய்த திருப்பணிகளிலெல்லாம் மிகச் சிறந்தது இவன் தென்காசியில் கட்டிய விசுவநாதர் ஆலயமாகும்.

2. **'முன்னொரு நூறு மூங்கிலுள் புக்கிருந்த சிற்பரர்' என்ற தொடரிலுள்ள கதை:**—முகம்மதியர் படையெழுச்சியின் போது திருநெல்வேலிமக்கள் அவ்வூர்க் கோயிலிலுள்ள சிவனை ஒரு மூங்கில் புதரின் கீழ் புதைத்து வைத்திருந் தனர். பல ஆண்டுகள் வரை விக்கிரகம் இவ்வாறு மூடப் பட்டிருந்ததால் நாளடைவில் அச்செய்தியே யாருக்கும் தெரியாது போயிற்று. பின்னர் அங்கிருந்த மூங்கிலும் அழிந்துவிட, அவ்விடம் சமதரையாகி, நடைவழியும் ஏற்பட்டது. அதன்வழியே பால் கொண்டு சென்ற ஒரு ஆயர்குல மங்கை அவ்விடத்தைக் கடக்கும்போது தடுக்கி விழ, பால் பூமியில் ஊற்றிப் போயிற்று. இது அடுத் தடுத்து நடந்தமையால், இதை அறிந்த அம்மங்கையின் கணவன், அவ்விடத்தை அகழ்ந்து நோக்க அங்கு விக்ரகத்தைக் கண்டு, அதைக்கொண்டு சென்று கோயி லில் வைத்தான். 'வேயின்ற மேனிதனை வெட்டினனே இடையன்' என்ற இரட்டைப் புலவர் பாட்டும் இச் செய்தியை வலியுறுத்தும். சிவனுக்குத்தாய் மூங்கி லென்றதும் இதனாலாகும்.

## 19. பராக்கிரம பாண்டியதேவர் சாசனம்[1]

1. இக்கல்வெட்டு இருக்குமிடம்:— திருவாங்கூர் இராச்சியத்திலுள்ள செங்கோட்டைச் சிவன் கோயிலின் கர்ப்பக் கிரகத்திலுள்ள தென்புறச் சுவரிலாகும்.

2. இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்:—குலசேகர தேவரான பராக்கிர பாண்டியராகும். இவனுடைய ஆட்சிக்காலம் கி. பி. 1542 முதல் 1551 வரையாகும்.[2]

3. இக்கல்வெட்டுத் தோன்றிய காலம்:— சகம் 1467. அதாவது கி. பி. 1545-ம் ஆண்டிலாகும்.

4. இச் சாசனத்தின் நோக்கம்:—இப் பாண்டியதேவன் தென்னாரிநாட்டு செங்கோட்டையிலுள்ள குலசேகர முடைய நாயனாருக்கு, இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட நன்னிலில், முன் இருந்த நிலம் அரை மாவுடன், தானும் மூன்று துண்டுகளாக உள்ள அரை மா நிலத்தைச் சேர்த்துக் கொடுத்தான்.

சுபமஸ்து[3] ஸ்வஸ்திஸ்ரீ புவநேக வீரசந்த்ரகுல ப்ரதீப[4] கோ ஜடில வர்ம்ம[5] த்ரிபுவநச் சக்ரவர்த்தி

---

[1] Travancore Archaelogical Series Vol, I, p 103

[2] இவனுடைய ஆட்சிக் காலத்தை K. A. N. சாஸ்திரியார் கி. பி. 1543 முதல் 1551 வரை யென்பர். இவன் தம்பி குலசேகரன் 1550-லேயே அரசு பெற்றிருக்க வேண்டும் (See 276 of 1908).

[3] நன்மை உண்டாவதாக.

[4] புவந ஏகவீர சந்திரகுலப்ரதீப-பூவுலகத்தில் ஒரே வீரனும், சந்திரகுலத்துக்கு விளக்குப் போன்று இருப்பவனும்.

கொண்டான்[6] பெருமாள் அபிராம பராக்ரம பாண்ட்ய தேவர் நந்தநரான[7] ஸ்ரீபெருமாள் குலசேகரதேவரான பராக்ரம பாண்ட்ய தேவற்கு யாண்டு சகாப்தம் ௲௪௱௬௰௭-ல் மூன்றாவது[8] விஸ்வாவஸு வர்ஷம்[9] அற்பசி மாஸம் முப்பதாந்தியதியும் அபர பக்ஷத்து ஏகாதசியும் சுக்ரவாரமும் வைத்ருதியோகமும்[10] ஸிம்ஹ கரணமும்[11] பெற்ற உத்திரத்து நாள் தென்னாரிநாட்டு[12] செங்கோட்டையில் உடையார் குலசேகரமுடைய நயினாற்கு தேவதானம் பாட்டமாக[13] குடுத்த நிலம் அரை மாவுக்கு[18] நாம் சேர்த்துக் கொடுத்த நிலமாவது, மேற்படி நாட்டு மேற்படியூரில் மேற்படியார் அஞ்சாலியில்[14] மேல்

---

[5] ஜடிலவர்மன்-சடையவர்மன். இது பட்டப்பெயர்.

[6] இதுவும் பராக்ரமன் தரித்த ஒரு விருது ஆகும். தனக்கு ஒப்பான அரசர்கள் வேறு ஒருவருமில்லை என்பது இதன் பொருளாம்.

[7] நந்தனரான-மகனான. இப்பாண்டியனின் தந்தை அபிராம பராக்ரமனாவன்.

[8] ஆண்டு சகாப்தம் 1467-ல் மூன்றாவது, என்றது பராக்கிரம பாண்டியர் ஆட்சி பெற்ற மூன்றாம் ஆண்டில் சகாப்தம் 1467-ம் ஆண்டு எனப் பொருள்படும். எனவே அவர் ஆட்சிப் பெற்றது இதற்கு மூன்று ஆண்டுகட்கு முன்னராகும். அதாவது 1467-3-1464சக ஆண்டிலாகும். இது கி. பி. 1542-க்குச் சமம்.

[9] விச்வாவசு தமிழ் ஆண்டுகளுள் 39-வது ஆண்டாம்.

[10] வைத்ருதியோகம்-27-யோகங்களில் ஒன்று.

[11] ஸிம்ம லக்கனம்.

[12] இது பாண்டிமண்டலப் பிரிவுகளுள் ஒன்று. செங்கோட்டையும் அதைச் சார்ந்த இடமும் இந்நாட்டிலிருந்தன.

[13] வரியைக் கோயிலார் வசூலித்துக் கொள்வதாக.

[14] அஞ்ஞாலியில்-நெல்லில்.

மேலவாரம் தவிர்த்துக் குடுத்த குளப்பரவு[15] பதினொன்ருங் கண்ணாறு[16] தடி[17] ஆறுநிலம் அரைக் காணி[18] முந்திரிகை[19] பன்னிரண்டாங் கண்ணாறு தடி எட்டு நிலம் அரைக் காணி முந்திரிகை பதின்மூன்ருங் கண்ணாறுதடி அஞ்சுநிலம் அரைக்காணி இதுவும் ஆக நிலம் அரைமாவும்[20] நாளது முதலுக்கு நாங் கொள்ளும் முறைபாடு எப்பேர்ப்பட்டதும் நம் வரியிலார்[21] கணக்கிலும் தவிர்த்து ஆசந்த்ரதாரவற்[22] செம்பிலும் சிலெயிலும் வெட்டி கைய்யாண்டு கொள்ளவும்[23] துல்யம்[24] பாற்க. இவை......

---

[15] குளப்புரவு-வயலின் பெயர்; வரிநீக்கப்பட்ட குளம் நிலமாக்கப்பட்டது போலும்.

[16] கண்ணாறு-நிலங்களின் தொகுதி. (Group of fields)-Dr உல்ஷ்.

[17] தடி-துண்டு வயல்; இப்போது தளி என்று வழக்கத்திலுள்ளது.

[18] மா = 100 குழி நிலம். ஒரு வேலியில் $\frac{1}{20}$ பகுதி யாகும்.

[19] அரைக்காணி = $\frac{1}{160}$. [20] முந்திரிகை = $\frac{1}{320}$.

[20] 11-ம் கண்ணாற்றில் நிலம் = $\frac{1}{160} + \frac{1}{320}$ வேலி ; 12-ல் $\frac{1}{160} + \frac{1}{320}$ வேலி ; 13-ல் $\frac{1}{160}$ வேலி. இவற்றைக் கூட்டினால் $\frac{1}{2}$ மா வரும்; $\frac{1}{160} + \frac{1}{320} + \frac{1}{160} + \frac{1}{320} + \frac{1}{160} = \frac{2+1+2+1+2}{320} = \frac{8}{320} = \frac{1}{40}$ வேலி. அதாவது $\frac{1}{40} \times \frac{20}{1} = \frac{1}{2}$ மா.

[21] நிலவரிக் கணக்குகளை எழுதுவோர் (Revenue Accountants).

[22] சந்திரனும் நட்சத்திரங்களும் உள்ளவரை.

[23] அனுபவித்துக்கொள்ளவும். [24] துல்யம்; அரசனின் கையெழுத்து. (The Sign Manual of the King.)

பராக்ரம பாண்டிய தேவன் :—இவன் அபிராம பராக்ரம பாண்டிய தேவனின் மூத்தமகனுவான். இவன் தம்பியான திருநெல்வேலிப் பெருமாள் குலசேகரன் 1551-லிருந்து 1564-வரை அரசாண்டான். இந்த குலசேகரன் மகன் 1563-1605 வரை அரசாண்டான். குலசேகரன் பேரன் அபிராம அதிவீரராமனுக்குப் பிறகு பாண்டியர் ஆட்சி முடிவுக்கு வந்துவிடுகிறது. இதன் பிறகு வந்தவர்கள் எல்லோரும் விசுவநாதநாயக்கர் வழி வந்த மதுரை நாயக்க அரசர்களுக்கு உட்பட்ட மன்னர்களாக விஜயநகர நாயக்கர்கள் விருதுகளையும் வைத்துக்கொண்டு ஆண்டதாகத் தெரிகிறது. (Pandyan Kingdom, p. 252, l. 16) எனினும், இவர்கள் பழங்கால பாண்டியரின் வீரச் செயல்களையும் தங்கள் பெயர்களுடன் புனைந்து கொண்டிருந்தனர்.

## 20. வாலக்காமயர் சாசனம்[1]

1. இக் கல்வெட்டு இருக்குமிடம் :- திருச்சிராப்பள்ளிக்கு வடதிசையில் காவிரி நதியை யடுத்துள்ள ஜம்புகேஸ்வரம் என்னும் திருவானைக்காவிலுள்ள சிவன் கோயிலின் இரண்டாம் பிரகாரத்து வடபுறச் சுவரிலாகும்.

2. கல்வெட்டில் குறிக்கப்பட்டவர்:— வாலக்காமயர் என்று கூறப்படும் அக்கலராச நாயனுர். இவர் வாழ்ந்த காலம், கி. பி. 15-ம் நூற்றுண்டின் பிற்பகுதியாகும்.

3. இக் கல்வெட்டுத் தோன்றிய காலம்:—சகம் 1403; அதாவது, கி. பி. 1481-ம் ஆண்டிலாகும்.

4. இக் கல்வெட்டின் நோக்கம் :- திருவானைக்காவுடைய தேவர், வடகரை வெண்கோன்குடி யென்ற ஊரில் திருவேட்டையாக எழுந்தருளுகிற திருநாள் மண்டபச் சிறப்

[1] Travancore Archaelogical Series, Vol. I., p 103.

புக்கும், அகிலாண்ட நாயகியார்க்குக் காலசந்தியாக அமுதுசெய்தருளி தருமத்திற்கு விநியோகம் செய்வதற்குமாக ஒரு தளிகை அமுதுபடிக்கும், திருமார்கழிச் சிறப்பு அமுதுக்கும், நந்தவனம் பயிரிடுகின்றவனுக்கு அளிக்கும் கூலிக்குமாக, வெண்கோன்குடி என்னும் சிற்றூரிலுள்ள இராஜாவிபாடன் என்னும் பெயருள்ள நிலத்தில் ஒரு வேலி பரப்புள்ள நிலத்தை, வாலக்காமயர் அளித்தார்-

சுபமஸ்து[2] ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் ௲சா௱ இதன் மேல் செல்லா நின்ற பிலவ ஸம்வத்ஸரத்து[3] கும்ப நாயற்று[4] பூர்வ பக்ஷத்து[5] பூறணையும்[6] ஆதித்த வாரமும்[7] பெற்று மகத்துநாள் ஸிம்ம பிரஹஸ்பதி[8] மஹாமக புண்யகாலத்திலே[9] ஸ்ரீமந் மஹா மண்டலேச்வரந்[10] சோமூர் பீமந் சோமநாராயணன்[11] உரையூர்[13] பூர்வ

---

[2] நன்மை உண்டாகுக. [3] பிலவ என்னும் பெயருடைய வருடத்து.

[4] மாசி மாதத்து. [5] முதல் பட்சத்து. [6] பௌர்ணமியும்.

[7] ஞாயிற்றுக்கிழமையும். [8] சிம்மராசியில் குரு வரும் போது (வரும்).

[9] மகா மக புண்ணியகாலம்:—மாசி மாதத்தில் சிம்மராசியில் குரு வரும்போது மகா மக புண்ணியகாலம் வரும். இவ்வாறு கோள்கள் சேருவது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழுமாதலின் அது சிறந்த காலமெனக் கருதப்படும்.

[10] இது தன்கீழுள்ள மண்டலத் தலைமை வகிப்பவர்களுக்கு விசயநகர மன்னர்களால் அளிக்கப்படும் பட்டமாகும்.

[11] சோமூர்களுக்குள் வீமனை ஒத்த புயபலம் படைத்தவன்.

[12] சோழ நாராயணன் என்பது இயற்பெயர்.

[13] இது திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஒருகல் தொலையில் உள்ளதொரு ஊர். சோழர்களின் பழங்காலத் தலைநகரம்.

ராதீச்வரந்[14] வாலக் காமயர் ஆக அக்கலராசர் நாயனர் அழகிய திருவாணைக்காவுடைய நாயனர் கோயில் ஆதி சண்டேச்வர தேவர் கன்மிகளுக்கு[16] குடுத்த தன்ம சாதனப் பட்டையம். நாயனர் அழகிய திருவானைக் காவுடைய நாயனர் வடகரை வெண்கோன் குடியில்[17] திருவெட்டை[18] ஆக எழுந்தருளுகிற திருநாள் மண்டபச்[19] சிறப்புக்கும் நாச்சியார் அகிலாண்ட நாயகியாற்குத் கால சந்தியாக[20] அம்முது செய்தருளி தன்ம வெச்சமாக[21] நடக்கிற ஒரு தளிகை[22] அமுதுபடிக்கும் திருமார்கழிச் சிரப்பு[23] அம்முது[24] செய்யவும் திரு நன்தவனம்[25] பயிர் செய்கிற தோப்பு ஆள் இலக்கைக்கு மாக[26] நம்முடைய

---

[14] பூர்வீகமாக உடையவன்.

[15] இவர் தான் இத்தருமம் வழங்கியவர்.

[16] தேவருக்குப் பூசை செய்வோர்களுக்கு; பூசாரிகளுக்கு.

[17] வெண்கோன்குடி:— இது காவேரியின் வடகரையில் திருவானைக்காவிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இப்போது வெங்கங்குடி என்று பெயர் பெற்றுள்ளதாகக் கேள்வி.

[18] திருவேட்டைக்காக சிவபெருமான் எழுந்தருளும் நாள். இது புரட்டாசி மாதத்தில் நவராத்திரியை அடுத்து வரும் விஜயதசமி நாளில் நடைபெறும்.

[19] மண்டபப்படி என்று இப்போது வழங்கும்.

[20] மாலைக்கால பூசை.

[21] தரும விநியோகமாக. [22] ஒரு தளிகை அமுது – ஒரு பானையளவு சோறு; தளிகை—உண்கலம். [23] சிறப்பு.

[24] அமுது - சோறு. [25] கடவுளுக்காகும் மலர்கள் கொள்ள வளர்க்கும் பூந்தோட்டம்.

[26] கூலிக்குமாக.

நாயகக் கட்டணமான[27] வடகரை வெண் கொன்குடியில் செத்த இராஜவிபாடன்[28] நிலம் வேலி[29] இந்த நிலம் வேலிக்கும் உண்டான கரம்[30] பொன் முதல் நெல்முதல் உண்டானது முன் எழுதின வகைப்படியிலே சந்திராதித்த வரையும் அனுபவித்துக் கொள்ளக் கடவ ராகவும், இந்த தன்மத்துக்கு அகுதம்[31] பண்ணினவன் உண்டானல் கங்கைக் கறையிலே[32] கோவதையைக் கொன்ற[33] பாவத்திலே போகக் கடவாராகவும்.

## விளக்கங்களும் குறிப்புகளும்

1. வாலக்காமயர்:—இவர் விஜய நகர அரசர்களின் கீழ்ச் சேவை செய்தவர். உறையூரார். அரசசேவை காரணமாக வெளியூர்களில் வதிந்தவர். பக்திச் சிறப் புடமையால் அக்கலராச நாயனர் என்று அழைக்கப் பட்டார். இவர் தன்னைச் சோழர்களுள் 'வீமன் என்றுசொல்லிக் கொள்வதனுல் சோழர் வழியில் வந்தவ ரென்று தெரிகிறது. இவன் விஜய நகர மன்னனுன சாலுவ நரசிங்கன் I என்பானின் அரசியல் தலைவனுய்த் திகழ்ந்து, விஜயநகர மன்னர்கள் தரும் பெருஞ்சிறப்புப் பட்டமான 'மஹாமண்டலேஸ்வன்' என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார்.

---

[27] தலைமை வரிசையாக. [28] சேர்ந்த இராஜாவிபாடன் - இது நிலத்தின் பெயர்; விஜயநகர மன்னர்களின் பட்டப் பெயராகவும் இதுவரும்.

[29] நிலம் ஒரு வேலி. [30] வருமானம். [31] கெடுதி (injury).

[32] கங்கைக் கரையிலே. [33] செய்த.

# பிற் சேர்க்கை

## 1. செய்தித் தொகுப்பு

(வளைவிடையுள்ள எண்கள் சாசன எண்களாம்)

1. கல்வெட்டில் வரும் நீட்டலளவைகள் :—8 தோரை (நெல்) = 1 விரல்; 12 விரல் = 1 சாண்; 2 சாண் = 1 முழம். (M. U. 1948) இவை பாடமாக வந்துள்ளவற்றில் இல்லை.

2. நில அளவைக் குறிக்கும் பெயர்கள்;—வேலி, மா, குழி, அரைக்காணி, முந்திரிகை, என்பன. இவற்றுள் வேலி = 20 மா; 1 மா = $\frac{1}{20}$; 100 குழி = 1 மா; அரைக்காணி = $\frac{1}{160}$; முந்திரிகை = $\frac{1}{320}$.

3. காந்தளூர்ச்சாலை கலமறுத்த மன்னர்கள் :— 1. முதலாம் இராசராசன் (1, 2) 2. முதலாம் இராசேந்திரன் (3), 4. முதலாம் இராசாதிராசன் (7) 5. பராந்தக தேவ பாண்டியன் (17).

4. திரிபுவனச் சக்கரவர்த்தி என்ற பட்டத்துடன் ஆண்ட மன்னர்கள் :— முதற் குலோத்துங்கன். 2. விக்ரமசோழன் (11) 3. வீரபாண்டியன் (16)

5. மனுநெறி விளங்கிட அரசாண்டவர்:- இராஜகேசரி பந்மரான உடையார் ஸ்ரீ வீர ராசேந்திர தேவர்.

6 மனுநெறி நின்று அஸ்வமேதஞ் செய்து அரசாண்டவர்:-இராஜ கேஸரி வந்மரான உடையாா ஸ்ரீராஜாதிராஜதேவர்.

7. பழைய சாசனங்களைப் புதுப்பிக்கும் முறை கூறப்பட்ட இடங்கள்:—

(a) திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி ' (12);

(b) ஸ்ரீவிமானம் இழித்துவதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி (15).

8. அரசமாதேவியாரின் பெயர்கள்:— (i) முதற் குலோத்துங்கன் மனைவியர்: 1. உலக முழுதுடையாள் 2. தியாகவல்லி உலகுடையாள். 3. ஏழிசைவல்லபி ஏழுலக முடையாள். (ii)

விக்ரமசோழன் மனைவி: 1. முக்கோக் கிழான் அடிகள் (iii) வீர பாண்டியன் மனைவி. திரைலோக்கிய முழுதுடையாள். (iv) அரி கேசரி பராக்கிரம பாண்டியர் மனைவி: உலகமுழுதுடையாள்.

9. திருமால் (ஆழ்வார்களின்) பெயர்:— (i) காமகோடி விண்ணகர ஆழ்வார் (7) (ii) திரு அத்தியூர் ஆழ்வார்:— அருளாளப் பெருமாள் (18) (iii) வண்துவாராபதிப் பெருமாள். (8) (iv) ஸ்ரீ கிருஷ்ணன் (18) (v) திருவேங்கடநாதன் (18)

10. வீராபிஷேகம் செய்துகொண்ட மன்னன்:—விஜய ராஜேந் திரன் (4) (ii).

11. அரசர் பெயரால் வழங்கும் ஊர்கள்:— (i) வீரபாண்டிய நல்லூர் (ii) பராக்ரம பாண்டிய சதுர்வேதி மங்கலம்.

12. பற்று என வரும் ஊர்கள்:— (i) நல்லூர்ப்பற்று (ii) வட வாரிநாட்டுப் பைம் பொழில் பற்று (iii) புலியூர்ப்பற்று.

13. சோழமன்னர் தானம் கொடுக்கையில் இருந்த இடம்:— பூசிக்கும் அறையும், திருமஞ்சன சாலையும். "தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தானஞ்செய்து அருளா இருந்து" (3); "திருமஞ்சன சாலையில் எழுந்தருளியிருந்து உதகம் பண்ணி யருளின" (7) என வருவன காண்க.

14. தன்மங்களழித்தாருக்கு நேரும் பாவம் கூறப்பட்டவாறு:— (i) இது அழித்தான் கடிகை எழா இருவரையும் கொன்ற பாவத்து படுவான் (13) (ii) இதற்கு விரோதம் செய்தார் கெங்கையிடைக் குமரியிடைச் செய்தார் செய்த பாபங் கொள் வார். (14, 15) (iii) இந்த தன்மத்துக்கு அகுதம் பண்ணினவன் உண்டானால் கங்கைக் கரையிலே கோவதையைக் கொன்ற பாவத்திலே போகக் கடவராகவும். (20)

15. தன்மங்கள் காத்தார் பெறும் புண்ணியம்:— (i) இது காத்தார் அடி என் முடி மேலன. (13, 15)

16. கல்வெட்டில் வந்துள்ள காப்புரைகள்:— (i) இது இவ்வம்சத் துள்ள சைவ ஆசார்யாகளே, இத்தன்மம ரக்ஷிக்க. (3) (ii) இவை பன்மாஹேச்வர ரக்ஷை. (4, 6, 9, 10, 11, 12, 13, 14, 15).

## 2. மெய்க்கீர்த்தியின் இலக்கணம்

சீர்நான் காகி இரண்டடி தொடையாய்
வேந்தன் மெய்ப்புகழ் எல்லாம் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட உரைப்பது சீர்மெய்க் கீர்த்தி

—பன்னிரு பாட்டியல், 312.

நான்கு முதலிய சீர்களை உடைய இரண்டடி ஒரு தொடையாய் அமைந்த பாட்டில் மன்னனுடைய உண்மையாகிய புகழ்கள் எல்லாவற்றையும் சொல்லியும், முடிவின் கண் அவனுடைய வரலாறுகளைச் சொல்லியும், நின் பெருந்தேவியாகிய அவளோடு நீ (இன்புற) வாழ்க என்று சொல்லியும், மற்றவன் இயற்பெயர்க்குப் பின்னர் (உங்கள் ஆயுள்) யாண்டுகள் மேன்மேலும் வளர்வனவாக எனப் பலவகையிற் பொருந்தும்படி பாடப்படுவது சீர் மெய்க் கீர்த்தியாம். இது இன்னும்,

தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற் சீர் அடியால்
எழிலரசா செய்தி இசைப்பா

—என்று வச்சணந்தி மாலையிலும்,

"ஆசிரியம் விரவிய சொற் சீரடிகளால் மன்னரது உண்மைக்கீர்த்தியைத் தொடுத்துப் பாடுவது மெய்க்கீர்த்தியாம்" என்று வரும் அதன் உரையிலும், இலக்கண விளக்கப்பாட்டியலில்,

"சொற் சீரடியால் தொழிற்படு கீர்த்தியைப்
பொற்புற மொழிதல் மெய்க் கீர்த்தி மாலை"

—என்னும்

சூத்திரத்திலும் (10[illegible]), "சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளாற் குலமுறையிற் செய்த கீர்த்தியை அழகுற மொழிதல் மெய்க்கீர்த்தி மாலையாம்" என்று அதன் உரையிலும், கூறப்படும். இச் சீர்மெய்க் கீர்த்தியின் அந்தம், உரையில் முடியும் என்பது கோவூர் கிழார் கூற்று.

# 3. சென்னைப் பல்கலைக் கழகப்பரீட்சை வினாக்கள்

**ஒவ்வொரு கேள்வியிலும் ஒவ்வொரு உட்பிரிவை விடுக.**

## 1946.

1. (a) இராசேந்திரசோழன் ஆகவமல்லனுடன் போர்புரியக் காரணமென்ன? அப்போரில் எவ்வெவ் வரசனை அச் சோழன் விண்ணகத் தேற்றினான்?

(b) சதுர்வேதிமங்கலத்தைப் பற்றி நீவிர் அறிந்ததைச் சுருக்கி எழுதுக.

(c) நாகலை யார்? அவருக்கேற்பட்டதென்ன?

(d) சாசனங்களினின்றும் அக்காலத்து அதிகாரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் என்பதைத் தெரிவிக்க.

(e) கணவதிநல்லூர்ச் சாசனம் எந்த இடத்தில், எந்தக் கோயிலில் காணப்பட்டது? அச்சாசனம் குறிப்பிடுவது என்ன?

2. (a) இராசாதிராசனால் வீரகேரளன், சுந்தர பாண்டியன் வேணாட்டரசர் சாளுக்கியர் ஆகிய இவர்களுக்கு நேர்ந்தவை என்ன?

(b) குலோத்துங்க சோழனோடு சேர்த்துச் சொல்லப்பட்ட அடைமொழிகள் யாவை? அவன் வெற்றிச் சிறப்பைத் தருக.

(c) ஜம்புகேசுவர ஆலயத்தில் பொறிக்கப்பட்ட சாசனத்தின் பெயரும் அதனால் அறியப்படும் செய்தியுமெழுதுக.

(d) திருவத்தியூராழ்வாரைப் பாடியருளின ஆழ்வார்கள் பெயரும் காலமும் தருக.

(e) பொருள் தருக :—நந்தனர், ஆவரணம், மா, தந்திரவாரி கண்ணாறு.

3. (a) நந்தி விக்ரவர்மன் யார்? சாசனங்களினின்றும் அவன் ஆட்சிகாலத்தை முடிவு செய்து சாசனங்கள் எதன் பொருட்டு ஏற்பட்டன என்பதையும் தெரிவிக்க.

(b) தன்ம கட்டளைத் துளை, மன்றப் பெறுவது, தேவ. கன்மிகள், அகுதம் பண்ணினவன், தன்மவெச்சம் - இவற்றை விளக்குக.

(c) தானத்தை அழிப்பவருடைய கதி என்னவாகும்?

(d) வாண மகாதேவியார் யாருடைய மகள்? அவள் எந்த தேவர்க்கு என்ன தானம் செய்தாள்?

(e) வீரபாண்டியனது பெருமையைப் பற்றிச் சாசனம் கூறுவதென்ன?

4. (a) பராந்தக பாண்டியன் செயல்களைக் குறிப்பிடுக.

(b) அரிகேசரிதேவன் யார்? அவனுடைய சிறந்த குணங்கள் எவ்வாறு பாராட்டப்பட்டுள்ளன?

(c) தக்ஷிண காசி எது? அங்கு கோயில்கொண்டுள்ள கடவுள் திருநாமமென்ன? அக்கோயிலுக்குப் பாண்டியன் செய்த திருப்பணி யாது?

(d) குலசேகரதேவன் யாருடைய மகன்? அவர் கொடுத்த தானத்தையும் காலத்தையும் எழுதுக.

(e) வாலக்காமயர் என்பாரைப்பற்றிக் குறிப்பெழுதுக.

5. (a) திருப்பதியம் பாடுவதற்கு இராஜராஜன் செய்த ஏற்பாடென்ன?

(b) புதுக்குப்புறமாச, இறை இழியச்சி, ஆதி நகரவையில், பகட்டரைசு - இவற்றை விளக்குக.

(c) சேரநாட்டுத் தலங்களாகக் குறிப்பிடப்பட்டவை யாவை? யார் யார் காலத்தில் அவை கூறப்பட்டுள்ளன?

(d) முக்கோக்கிழானடிகள், திரைலோக்கியமுடையார், வீர சலாமேகன், விக்கலன் - யார் யார்?

(e) வீரராஜேந்திர சோழன் யாரிடமிருந்து எவைகளை யெல்லாம் பறித்தான்? யாருடைய தலையறிந்தான்? யாரைக் களிற்றால் உதைத்திட்டான்?

# 1947.

1. (a) குலோத்துங்க சோழனைப்பற்றிக் கூறும் சாசனங்கள் எவை? அவைகள் அவனுடைய ஆட்சியில் எக்காலங்களில் ஏற்பட்டன?

(b) மேற்கூறிய சாசனங்களினின்றும் குலோத்துங்க சோழனின் வெற்றிச் செயல்களைத் தருக.

(c) விக்கிரமசோழன், சாசனத்தில், எவ்வாறு புகழப்பட்டுள்ளான்?

(d) பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார்—இவர்கள் பிறந்த நாள் எது? அந்த நாள் எவ்வாறு கொண்டாடப்பட்டது?

(e) "காந்தளூர்ச்சாலை கலமறுத்து" என்னும் பகுதிக்கு எவ்வாறெல்லாம் பொருள் கொள்ளப்பட்டுளது? எந்தப் பொருள் பொருந்தும்?

2. (a) ஜம்புகேஸ்வர ஆலயத்தில் பொறிக்கப்பட்ட சாசனங்கள் எவை? யார் யார் காலத்தில் ஏற்பட்டன? அவைகள் குறிப்பிடும் செய்தி என்ன?

(b) உங்கள் பாடப்பகுதியாக அமைந்துள்ள சாசனங்களில் காணப்படும், பாண்டிய அரசர்கள் யாவர்? அவர்களைக் காலவரை யறைப்படுத்தி எழுதுக.

(c) விசுவநாதசுவாமி கோவிலில் பொறிக்கப்பட்ட சாசனம் யார் காலத்தில் ஏற்பட்டது? அவர் செய்த திருப்பணிகள் யாவை?

(d) திருமந்திரவோலை, வரியிலார், கடிகை, தந்திரவாரி, விடையில் அதிகாரிகள்—இப்பெயர்கள் யார் யாரைக் குறிக்கின்றன?

(e) ஆகவமல்லனைப்பற்றி அறிந்தவற்றைத் தொகுத்தெழுதுக.

3. (a) இராஜராஜ சோழனுக்கும் தேவாரத்திற்கும் உள்ள தொடர்பென்ன?

(b) இராஜேந்திரசோழன் அவனுடைய ஆட்சிக்காலத்தில் பன்னிரண்டாவது பதினேழாவது ஆண்டுகளுக்கிடையில் அடைந்த வெற்றிகளைத் தருக.

(c) துடர்வனவேலிப்படர் வனவாசி, வேலைத்தொல்பெருங் காவல், வாகயம் பொருகடல், கும்பக்கரியோடு மகப் படுத்துரிமையில் பிறக்கிய பெருநெதிப் பிறக்கமும், உபாநாதி ஸ்தூபிபர்யந்தம்—இவற்றின் பொருளை விளக்குக.

(d) மாதவக்கிரமவித்தன் யார்? அவன் செய்த தானம் என்ன? அவன் சாசனத்தின் கருத்தைக் கூறுக.

(e) சாசனத்தினின்றும் வாணமகாதேவியாரைப்பற்றி அறியப்படுவதென்ன?

4 (a) ஸ்தாணுநாதசுவாமி கோவிலிற் பொறிக்கப்பட்ட சாசனம் யாது? அச்சாசனம் அதற்குரியாரைப்பற்றிக் கூறும் பெருமையைக் குறிப்பிடுக.

(b) கன்னிப்போர் செய்த பாண்டிய அரசன் யார்? அவனைப்பற்றி அறியக்கூடிய வேறு செயல்கள் எவை?

(c) அப்பாண்டியன் பிறந்த நாள் எது? அந்நாளைக் கொண்டாடுவதற்கு அவன் செய்த காரியம் என்ன?

(d) பாண்டிய அரசர்களுடைய ஆட்சியைப்பற்றிக் குறிப் பெழுதுக.

## 1948.

1. (a) எவ்வெக் காரணங்களால் சாஸனங்கள் தோன்றலாயின?

(b) அரசர் எங்ஙனம் சாஸனம் செய்வித்தனர்?

(c) நீவிர் படித்த சோழர் சாஸனங்களை அவை தோன்றிய கால முறைப்படி வரிசைப் படுத்துக.

(d) சாஸனங்களில் எவ்வெவ்வரச மரபினர் குறிக்கப் பட்டுளர்? ஒவ்வொரு மரபினர் பெயர்களைக் குறிக்க.

(e) அச் சாஸனங்களைக் கொண்டு தமிழகத்தின் வாழ்வும் தாழ்வும் அறிதல் எங்ஙனம் இயலும்?

2. (a) மெய்க்கீர்த்தி என்பதன் இலக்கணம் என்ன?

(b) மெய்க்கீர்த்திகள் நாட்டு வரலாற்று விளக்கத்துக்கு எங்ஙனம் பயன்படுகின்றன?

(c) மெய்க்கீர்த்தியை முன்னர் எழுதி அதனை அடுத்துச் சாஸனம் தொடங்கும் வழக்கம் யார் காலத்தில் ஏற் பட்டது? அதனைச் சாஸனம் கொண்டு மெய்ப்பிக்க.

(d) மெய்க்கீர்த்தி பெருமலும் சாஸனம் வருதலுண்டு என் பதற்கு இரண்டு சான்றுகள் தருக.

(e) சோழர் மெய்க்கீர்த்திக்கும் பாண்டியர் மெய்க்கீர்த்திக் கும் உள்ள சிறந்த வேறுபாடு யாது? உதாரணம் வேண்டும்.

3. (a) "பூமிசை வனிதை மார்பினிற் பொலிய", "திருவளர் திரள் புயத்து", "திருவளரச் செயம் வளர" என்பன யார் யாருடைய மெய்க்கீர்த்திகளின் முதற்குறிப்புகள்?

(b) இராஜராஜதேவர், இராஜேந்திர சோழதேவர் இவர்தம் மெய்க்கீர்த்திகளின் முதற் குறிப்புகள் எவை?

(c) ஒரே அரசனுடைய மெய்க்கீர்த்திகள் வேறு வேறு முதற்குறிப்புப் பெற்று வருதலும் உண்டு என்பதற்கு இரண்டு சான்றுகள் தருக.

(d) இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களைப் பெற்ற சோழர் பெயர்களை முறைப்படுத்தி வரைக. வீர ராஜேந் திரனுக்கும் குலோத்துங்கனுக்கும் இடையில் அரசாண் டவர் ஒருவரா? இருவரா? நுமது முடிபிற்குக் காரணம் கூறுக.

(e) குலோத்துங்க சோழன், அரிகேசரிதேவர் இவ்விருவரும் தத்தம் தேவியருடன் அரியணையில் இருந்தமை எங்ஙனம் சிறப்பிக்கப்பட்டுள்ளது?

4. (a) திருவாய்க் கேள்வி, திருமந்திரவோலை, விடையி லதிகாரி, வரியிலார், முகவெட்டி - இவர்தம் அலுவல்கள் என்ன ?

(b) 'துடர்வனவேலிப் படர்வனவாசி', 'உடும்போடி ஆமைதவழ்புற்று', 'தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி' 'இரட்டபாடி ஏழரைலக்கம்'.—விளக்குக.

(c) நிவந்தம், நிமந்தம், சாவேறு, பிடாகை, கடையீடு, காராண்மை, தலைமாறு, பிடிபாடு, திருப்படிமாற்று, திருவிடையாட்டம்—பொருள் கூறுக.

(d) கல்வெட்டுகளிற் கண்ட முகத்தல்—நிறுத்தல்—நீட்டல் அளவைப் பெயர்கள் யாவை ?

(e) தேவதானம், பள்ளிச்சந்தம், மடப்புறம், அகரப்பற்று —இவற்றை விளக்குக.

5. (a) சோழ மண்டலம், ஜயங்கொண்ட சோழ மண்டலம் —இவற்றின் உட்பிரிவுகளை, முற்காலத்து வழங்கிய முறைப்படி, பெரியது முதல் சிறியது வரை முறைப் படுத்தி (உதாரணம் காட்டி) வரைக.

(b) தென் இந்தியப் படம் வரைந்து இராஜராஜன் வென்ற நாடுகளைக் குறிக்க. (அல்லது) தென் இந்தியப் படம் வரைந்து அதனில் இரட்டை மண்டலம், வேங்கை மண்டலம், ஜயங்கொண்ட சோழ மண்டலம் இவற்றைக் குறிக்க.

(c) இராஜாதிராஜன் காலத்துச் சாஸனத்தில் மணி மங்கலம் எங்ஙனம் குறிக்கப்பட்டது? அது குலோத் துங்கன் காலத்தில் எவ்வாறு குறிக்கப்பட்டது? இவ் வேறுபாட்டுக்குக் காரணம் என்ன? (மண்டல உட் பிரிவுகளின் பெயர்களைக் காட்டி விடை தருக.)

(d) புதுப்பிக்கப்பட்ட கல்வெட்டுகள் எவை? அவை எவ் வாறு புதுப்பிக்கப்பட்டன? ஏன்? அவை புதுப்பிக்கப் பட்டமைக்குச் சான்று யாது?

(e) சாஸன ஆராய்ச்சியால் அறியப்படும் அரசர் உள்ளிட்ட தமிழர்தம் நாகரிகப் பண்புகள் யாவை?

## 1949.

1. (அ) கல்வெட்டுகளில் காணப்படும் மங்கல மொழிகள் யாவை? அவற்றின் பொருள் என்ன?

(ஆ) அக்கல்வெட்டுகளில் உள்ள ஊர்கள், நாடுகள், கோயில்கள் இவற்றின் பெயர்களை முறையால் கூறுக.

(இ) அவற்றிற் கண்ட மன்னர் பெயரும் மரபும் வகுத்துரைக்க.

[ஈ] கல்வெட்டுகளைச் சாசனங்கள் என்று வழங்க ஏது என்ன?

(உ) அவற்றுட் செய்யுள் நடையில் அமைந்த பகுதிக்கு உரிய பெயரும் இலக்கணமும் என்ன?

2. (அ) 'காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி' - இதன் பொருள் என்ன?

(ஆ) திருப்பதியம் விண்ணப்பம் செய்தல் என்பது என்ன? இதன் நடைமுறையை யாவர் எங்கு எவ்வாறு அமைத்தனர்?

(இ) 'முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரனாரமும்' - கொண்ட வெற்றி எம்மன்னருக்கு எவ்வாறாகியது?

(ஈ) இரட்டபாடி, உத்தரலாடம், கடாரம், மாநக்கவாரம் - இவை தமிழ்நாட்டின் புறம்பே யாண்டுள்ளவை? யாருடையன?

(உ) கொப்பத்துப்போர் எவ்வெக் கல்வெட்டிற் கண்டது? இதன் நிகழ்ச்சியை விவரிக்க.

3. (அ) நாகலை, விக்கலன், வீரகேசரி - இவர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுக.

(ஆ) சோழர் சாஸனத்துட் கண்ட அதிகாரிகளின் பெயர் முறைகளையும், வினை முறைகளையும் கூறுக.

(இ) 'மேவுபுகழி ராமகுட மூவர்கெட முணிந்து' - இதிற் குறித்த செய்தி யாது? தெளிவு செய்க.

(ஈ) கம்பிலி, கூடல் சங்கமம், நங்கிலி, கெங்கைகொண்ட சோழபுரம் - இவ்விடங்களைப்பற்றி குறிப்பு எழுதுக.

(உ) ஆசார்யபோகம், திருநாமத்துக்காணி, ஆடவல்லான் கால், அமாவாசிப்புறம் - இவற்றை விளக்குக.

4. (அ) புகழ்சூழ்ந்த புணரி, திருமகள் மருவிய செங்கோல் திருமாது புவியெனும் பெருமாதர் - இத்தொடக்கமுள்ள சாசனங்கள் யாவருடையன? காலமும் குறிக்க.

(ஆ) ஆழ்வார்களுள் எவ்வெவர் எக்கல்வெட்டுகளில் எதன் பொருட்டு குறிக்கப்பட்டுள்ளனர்? இதனால் அறியும் செய்தி யாது?

(இ) 'திருமண்டபமிழிச்சி எடுப்பதற்கு முன்புள்ள சிலா லேகைப்படி' என்று தொடங்கும் கல்வெட்டு எங்குள்ளது? இதனால் நாம் தெளியும் செய்தி என்ன?

(ஈ) ஆணத்தி, திருவுண்ணாழிகை, கோயில்வாரியம், கிரம வித்தன்—இப்பெயர்களின் பொருள்களை விளக்குக.

(உ) கோட்டம், சதுர்வேதிமங்கலம் என்ற பெயருள்ள இவ்விரண்டிடங்களை எடுத்துக்காட்டுக.

5. (அ) 'வடிம்பலம்ப நின்றருளி' இது எம்மன்னர் செயல்? நூல்வழியே நிகழ்ச்சியைப் புலப்படுத்துக.

(ஆ) வேந்தர் பிறந்த நாளினும், அபிடேக நாளினும் பெருந் தானம் செய்யும் வழக்கு எக்கல்வெட்டுகளில் புலனாகிறது? விளங்க எழுதுக.

(இ) தென்காசிப் பெருங்கோயில் செய்தான் பெருஞ்செயல்கள் கல்வெட்டுள் எவ்வாறு பாராட்டப்பட்டுள்ளன?

(ஈ) சிற்பநூற் பெயர்களும், அளவைப் பெயர்களுமாகக் கல்வெட்டுள் கண்டவை எவை?

(உ) காலக்குறிப்புடன் தொடங்கும் கல்வெட்டுகள் பிற்காலத்தன என்பது எவ்வாறினால் அறியப்படும்? காரணத்துடன் எழுதுக.

## 1950.

1. (a) கோவில்களைப்பற்றிச் சாசனங்களாலறியப்படுஞ் செய்திகள் யாவை?

(b) ஊர்ச்சபைகளைப்பற்றிச் சாசனங்களாலறியப்படுஞ் செய்திகள் யாவை?

(c) கோயில்களில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் சிறப்புச் செய்யப்பெற்றமை யறியப்படுமாறு தருக.

(d) கோயில்களைப் புதுக்குங்கால் கல்வெட்டுக்களழியாது காக்கப்பட்டமை யறியப்படுமாறு குறிக்க.

(e) சாசனங்களாலறியப்படும் அறச்செயல்கள் யாவையென விளக்குக. 30

2. (a) நிசதம், புதுக்குப்புறம், இறையிலி, சதுர்வேதி மங்கலம், ஸ்ரீகாரியம், திருமஞ்சனம் இச்சொற்களுக்குப் பொருளும் வேண்டுழிக் குறிப்புந் தருக.

(b) தன்மங்களழித்தார்க்கு நேரும் பாவம் எவ்வெவ்வாறு சுட்டப்படுகிறது?

(c) இராசகேசரி குலோத்துங்க சோழ தேவனைப்பற்றி நீவிரறிந்தன எழுதுக.

(d) இராஜேந்திர சோழ தேவர் செய்த 'ஆசார்ய போகம்' யாது? எவர்க்குரியது? உரியார் கூறப்படுதலால் விளங்குவதியாது?

(e) கிணறுந் தொட்டியும் சமைப்பித்தமைபற்றிய கல்வெட்டாலறியப்படுஞ் சிறப்புச் செய்திகள் குறிக்க. 24

3. (a) வீரராசேந்திரன் பகைவரை நடத்தியமைபற்றிப் பாக்கூர்ச் சாசனம் அறிவிப்பதெழுதுக.

(b) பராக்கிரம பாண்டியன் செயல்களாகத் தென்காசிச் சாசனம் தெரிவிப்பதியாது?

(c) திருவானைக்காவல் நிலம் விற்றதைக் குறிக்குஞ் சாசனத்தைப் பற்றி விளக்கந்தருக.

(d) மெய்க்கீர்த்தியின் இலக்கணங் கூறி அவ்விலக்கண வமைவு பாடமாயுள்ள சாசனங்களி லொன்றிலிருப்பதை எடுத்துக் காட்டுக.

(e) நிலவிற்பனைபற்றியும், நிலவிற்பனைப் பிரமாணம் பற்றியும் சிறு பழுவூர்ச்சாசனத்தாலறிந்தன எழுதுக. 32

4. (a) மாவேறியதன் வருதினித் தலைவற்ரைக்
குறுகலர் குலையக் கோட்டா றுட்பட
நெறிதொறுநிலைகளிட்டருளி' ப்பொருளெழுதி விளக்குக.

(b) 'செருவிற் சினவி யிருபத்தொருகா
லரசுகளைகட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற்றித்தகு முடியும்'
பொருளெழுதி விளக்குக.

(c) 'திருவாசக் குறுமுனி பாற் செந்தமிழ்நால் தெரிந்தருளித்
தளிரிருங்கை மாதுரிமைச் செங் கோலெங்குந்திசை
நடாத்தி' பொருளெழுதி விளக்குக. 16

## 4. சேர்க்கைக் குறிப்புகள்.

1. வளநாடு நாட்டின் உட்பிரிவா, நாடு வளநாட்டின் உட்பிரிவா என்பதுபற்றி கருத்து வேற்றுமைகள் உள்ளன. கல்வெட்டுகள் இவற்றைக் கூறும் முறையை (வரிசையை) ஆதாரமாகக்கொண்டே நாம் இவற்றை முடிவுசெய்யவேண்டும். அவ்வாறு நோக்குங்கால் முதற் கல்வெட்டில் நாட்டிற்குப்பின் வளநாடும், 4-ம் கல்வெட்டில் வளநாட்டிற்குப் பின் நாடும், கூறப்படுகின்றன. நாடு வளநாட்டின் உட்பிரிவு என்பதையும் இதனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. நீலகண்ட சாஸ்திரியாரவர்கள் வளநாடு, நாடு இவை ஒன்றே என்னும் கருத்துடையார். (See Cholas II P. 242).

2. கண்ணுற்று என்பதே கண்ணறு எனத்திரிந்ததென்பது என் கருத்து. கால்வாய் வாய்க்கால் எனமருவியது போன்று கண்ணுற்று, நாற்றுக்கண் (நாற்று விடுமிடம்) என மருவிவழங்குகிறது., வாய்க்கால் என்று அதற்கும் பொருள் கொள்வது பொருந்துவதா யில்லை. ஏனெனில் வாய்க்காலில் நிலம் இருப்பதில்லை. நாற்றுங்காலைச் சேர்ந்தே நிலம் காணப்படும். கண்ணுற்று என்னும் சொல் இன்றும் தஞ்சை ஜில்லாவிலுள்ள கிராமங்களில் யான் கூறும் பொருளில் வழக்கிலுள்ளது. Dr. உல்ஷ் நிலங்களின் தொகுதி என்று கொண்டதும் இதனால் போலும்!

முற்றும்.

V21:72
N22

# பிழை திருத்தம்

---

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 4 | மேல்ச்சுவற்றிலாகும் | மேலைச்சுவரிலாகும் |
| ,, | 15 | இரட்டப்பாடி | இரட்டபாடி |
| 2 | 27 | நுளம்பப்பாடி | நுளம்பபாடி |
| 3 | 2 | இரட்டப்பாடி | இரட்டபாடி |
| 4 | 24 | வளநாடு நாட்டின் உட் பிரிவு | வளநாட்டின் உட் பிரிவு நாடு |
| 16 | 1 | திருமுறைக் | திருமுறை |
| ,, | 7 | கல்மெட்டு | கல்வெட்டு |
| ,, | 18 | களரகப் பேசப் | களாகப் பேசப் |
| ,, | 20 | இரட்டைப்பாடி | இரட்டைபாடி |
| 19 | 1 | ஷை | ஷை |
| 28 | 12 | ஷை | ஷை |
| 42 | 29 | என்றும் | என்னும் |
| 44 | கடைசி | சூடினான் | சூட்டினான் |
| 55 | 29 | வைச்ச வேதம் | வைச்வ தேவம் |
| 60 | 15 | வீரசாலமேகன் | வீரசலாமேகன் |
| 64 | 27 | வீரசாரலமேகன் | ஷை |
| 70 | 10 | பகைவனான | பகைவரான |
| 132 | 11 | விக்கிர | விக்கிரம |
| 136 | 31 | தூரத்திதிருந்து | தூரத்திலிருந்து |

பக். 28, 29, 32, 35, 39. 45, 46-ல் ஆகமவல்லன் என்றிருப்பதை ஆகவமல்லன் என்று திருத்தம் செய்யவும்.

★